# காப்பிய இலக்கியம்

கூறு – 1 }
கூறு – 2 } – சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் முழுவதும்

கூறு – 3 – மணிமேகலை - பதினொன்றாவது காதை முதல் பதினைந்தாவது காதை வரை

கூறு – 4 – சீவகசிந்தாமணி - குணமாலையார் இலம்பகம்

கூறு – 5 }
கூறு – 6 } – கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டாம் முழுவதும்

கூறு – 7 – பெருங்கதை - சாங்கியத்தாயுரை

கூறு – 8 – சூளாமணி - குமாரகாலச்சருக்கம்

கூறு – 9 – சீறாப்புராணம் - நகரப்படலம், மானுக்குப்பிணைநின்ற படலம்

கூறு – 10 – கண்ணதாசன் - இயேசுகாவியம்

# சிலப்பதிகாரம்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்கள் பலவற்றுள் சிறந்தனவாகக் கருதப்படுவன ஐம்பெரும் காப்பியங்கள். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. அவற்றுள் முதல் இரண்டும் இரட்டைக் காப்பியங்கள் எனப் பெயர் பெறும் சிறப்புடையன. கோவலன், கண்ணகி ஆகியோருடைய அவல வாழ்க்கையைக் கூறுவது சிலப்பதிகாரம், கோவலனுடைய மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவது மணிமேகலை.

ஐம்பெருங்காப்பியங்களும் தமிழ் அன்னையின் அணிகலன்களாக அதாவது சிலம்பாக, மணிமேகலையாக, சிந்தாமணியாக, வளையாக, குண்டலமாக இருந்து அழகு செய்கின்றன.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோஅடிகள். இவர் யாத்த சிலம்பு, தமிழர் பண்பாடு, அரசியல் கலை, நாகரிகம், மொழிநிலை, சமயநிலை ஆகியவற்றைத் தெள்ளத் தெளிய எடுத்துக் கூறும் அறிவுக் கருவூலமாகும்.

இளங்கோவடிகள்

**“அரைசியல் பிழைத்தோருக்கு அறங்கூற் றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்திவந்து ஊட்டும் என்பதூஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்**
**சிலப்பதி காரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்”**

என்றார். சாத்தனாரும் இவ்வரலாறு முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரியதாகலின் அடிகள் நீரே அருளுக என்று வேண்டிக் கொள்ள அடிகள் முத்தமிழ்க் காப்பியத்தை இயற்றினார். சிலம்பில் மதுரைக்காண்டம் முழுமையும் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## மதுரைக்காண்டம்

### வழிகாட்சி அந்தணன்

உறையூரில் உள்ள சமணக்கோவிலான (ஸ்ரீகோவிலில்) உள்ள சந்திரன்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்தது போல் காணப்படும். அங்கு முக்குடையின் கீழ் அருகதேவன் அமா்ந்திருந்தான். அவன் சூரியனைப் போன்ற பிரகாசத்துடனும், செயற்கையாய் செய்த மாலையைப் போன்ற இயற்கையான மாலையணிந்து அடா்ந்த அசோகமரத்தின் நிழலில் அமா்ந்திருந்தான்.

அந்த அருகதேவனை கண்ணகி, கோவலன், கவுந்தி ஆகியமூவரும் வணங்கி நின்றனா். அங்கிருந்த சமணமுனிவா்களிடம் சாரணா் கூறிய அறிவுரைகளை எடுத்துக் கூறினா். கவுந்தியடிகள் பின்பு அம்மூவரும், அம்முனிவா்களின் இருப்பிடத்திலேயே தங்கிவிட்டு விடியற்காலையில் உறையூரைவிட்டு விலகித் தெற்கு நோக்கிச் சென்றனா். அங்கே அந்தணா் ஒருவா் வந்தனன். அவன் செந்தமிழ் வளா்க்கும் செழியனைப் புகழ்ந்து கொண்டே வந்தான்.

**வாழ்க எம் கோ மன்னா்ப் பெருந்தகை**
**ஊழி தொறு ஊழிதொறு உலகம் காக்க!**
**அடியில் தன்னள அரசா்க்குணா்த்தி**
**வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**ப.்.றுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கெங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!**

அந்தணன் தொடா்ந்த இந்திர ஆரம் சூடிய பாண்டியன் புகழையும் மேகத்தையும் சிறையிட்டு அடக்கி மழைபொழியச் செய்து தன் நாட்டின் வளம் பெருக்கிய பாண்டியன் புகழையும் கூறி, ‘‘தீது தீா் சிறப்பின் தென்ன’’ என வாழ்த்தினான்.

பின்னே தீது தீர் பாண்டியன் எனப் பாண்டியனை வாழ்த்தும் மறைவனைப் பார்த்து கோவலன் உம்மூர்யாது இங்கே வந்ததேன்? என வினவினான்.

நான் குடகுமலைக் கருககேயுள்ள மாங்காடு என்னும் ஊரிலிருந்து வருகிறேன்.

திருவரங்கத்தில் திருமால் படுத்திருக்கும் திருக்கோலத்தைக் காட்டுமாறு என் அகக்கண் பனித்தமையால் அது என் உள்ளத்தை வாட்டியெடுத்தது அதனால் தான் நான் இங்கு வந்துள்ளேன்.

பாண்டிய நாட்டின் சிறப்பையும் அந்தச் சிறப்பிற்கே சிறப்பு தரும் தர்ம செயல்களையும் கண்குளிரக் கண்டவாறு வந்தமையால் பாண்டிய மன்னனையும் வாழ்த்தியபடி வந்தேன் என்று மாங்காட்டு மறையவன் கூறினான். நின்ற நிலையிலும் படுத்த நிலையையும் நெடுஞ்சில் நிற்கும்படி இளங்கோ அடிகள் கூறியுள்ளதை காண்கையில் அதனை மீண்டும் ஒருமுறை பயில அவன் திருவருள் பொங்கி நமக்கும் அருள் பாலிக்கும்.

**வீங்குநீா் அருவி வேங்கடம் என்னும்**
**ஓங்கி உயா் மலையத்து உச்சி மீமிசை**
**விரிகதிா் ஞாயிறும் திங்களும் விளங்கி**
**இருமருங்கு ஓங்கிய இடைநிலைக் தானத்து**
**மன்றுக்கோடி உடுத்து விளங்குவில் பூண்டு**
**நல்நிற மேகம் நின்றது போலப்**
**பகை அணங்கு ஆழியும் பால் வெண்சங்கும்**
**தகை பெறுதாமரைக் கையில் ஏந்தி**
**நலம்கினாா் ஆரம் மாா்பில் பூண்டு**
**பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய**
**செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்**

நெடுமால் திருக்கோலங்களின் சிறப்பினை மறையவன் கூறக் கேட்ட கோவலன்: மாமறையில் வல்லவனே! மதுரைக்குச் செல்லும் சிறந்த வழியைத் தெரிவிப்பாயாக எனக் கேட்டான்.

மறையவனும் மதுரைக்குச் செல்லும் வழியினை விளக்கமாகவே கூறினான்.

‘‘காட்டு நிலத்தையுடைய முல்லையும், மலைநிலமான குறிஞ்சியும். ஆறும் அருவியும் மரமும் செடியுமாக குளிர்ச்சியாக இருக்கும். இவையனைத்தும் தம் தன்மையை இழந்து பாலைவனமாக மாற்றிவிடும் கோடைகாலமிது. இத்தகைய கோடை காலத்தில் மென்மையே உருவான பெண்மையோடு பயணம்மேற் கொள்கிறீர்களே என கண்ணகிக்காக இரங்கினான் மறையவன். இவ்விடத்தில் பாலை உருவாவதைப் பற்றி இளங்கோ உரைக்கையில்.

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல் இயல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.**

என விளக்குகின்றார்.

மறையவன் மதுரைச் செல்லும் வழியைப் பற்றி விளக்கிக் கூறுகையில்

இந்தப் பாலையைக் கடந்தால் கொடும்பாளூரின் பெரிய ஏரிக்கரையை அடையலாம். அங்கு சிவபெருமான் கையில் தாங்கியிருக்கும் திரிசூலத்தைப் போன்று வழி மூன்றாகப் பிரிந்து செல்லும். அவற்றின் வலப்பக்கமாக சென்றால், அங்கே இலையின்றி காணும் வெண்கடம்பும் சாய்ந்துவிட்ட ஓமை, பொரிந்த அடிமரம் கொண்டவாகை, காய்ந்த மூங்கிலும் வழியெங்கும் கருங்கிய கள்ளியும் காணலாம். நீர் வேட்கையால் மான்கள் நின்று கதறுகின்ற காட்டையும் வேடர் குடியிருப்பையும் கடந்து சென்றால் மலைச்சாரலில் நெல்லும் கரும்பும் தினையும் வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், கவலைக் கிழங்கும், வாழையும், கமுகும், தென்னையும், மாவும், பலாவும் அடுத்தடுத்து வளர்ந்து அழகுடன் திகழும் சிறுமலையைக் காணலாம். இம்மலை பாண்டியனுக்குச் சொந்தமானது. இம்மலையின் வலப்புறமாகச் சென்றால் மதுரையை அடையலாம். இவ்வாறு வலப்புற வழியை விளக்கிய அந்தணன் இடப்புற வழியையும் எடுத்துக் கூற முற்பட்டான்.

வலப்புறவழியில் செல்லாமல் இடப்புற வழியாக சென்றீர்களானால் குளங்களையும் வயல்களையும் குளிர்ச்சியான சோலைகளையும் கடந்து இடையே வரும் காடுகளையும் கடந்து சென்றால் திருமாலிருஞ்சோலையை

அடைவீர்கள்(அழகர் மலை) அங்கு பயங்கர பாதாள வழி ஒன்று உள்ளது. அவ்வழியில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்று பெயர் கொண்ட மூன்று பொய்கைகள் உள்ளது. இவை ஒவ்வொன்றும் அருகருகாக அமைந்துள்ளது.

நீங்கள் முதல் பொய்கையில் நீராட இந்திரன் அருளிய ஐந்திரம் எனும் சிறந்த இலக்கணத்தை அறிவீர்கள்.

இரண்டாம் பொய்கையில் நீராடினால் உங்கள் மனதில் நினைப்பதை அடைவீர்கள்

அந்தப்பயங்கர பாதாள வழியாகச் செல்ல விரும்பினால் அம்மலையில் எழுந்தருளியுள்ள திருமாலை வணங்கி அவன் திருவடிகளை சிந்தையில் இருத்தி அம்மலையை மும்முறை வலம் வர அங்கு சிலம்பாறு தெரியும் அதன் கரையில் வரோத்தமை எனும் தேவதை தோன்றுவாள். அவள் உங்களிடம் இப்பிறப்புக்கு இன்பம் தருவது எது? மறுபிறப்பிற்கு இன்பம் தருவது எது, என மூன்று கேள்விகளைக் கேட்பாள். இம்மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்பவர்கள் எதைச் சொன்னாலும் கேட்பேன். மேலும் பாதாள வழியின் கதவைத் திறந்து விடுவேன் என்றும் கூறுவாள். அவள் காட்டும் வழியில் சென்றால் நீண்ட வாயிலுடன் கூடின் பலகதவுகள் தெரியும். இரட்டைக்கதவினை உடைய ஒரு வாயிலும் தெரியும். தொடர்ந்து நடந்து சென்றால் அழகியொருத்தி எதிரே தோன்றி முடிவில்லா இன்பம் எது? வென்பதைச் சொன்னால் நீங்கள் விரும்பிய பொருளைப் பெறுவீர்கள் என் கேள்விகளுக்குச் சரியான விடை கூறாவிட்டாலும் துன்பம் விளைக்க மாட்டேன். இந்த நீண்ட வழிக்கு அப்பால் கொண்டு விட்டுவிடுவேன் சரியான விடைகூறுவோர்க்கு முன்பு சொன்ன பொய்கைக்கு வழி காட்டுவேன் என்று கூறும்.

வேதம் கூறும் நமசிவாய எனும் ஐந்தெழத்து மந்திரத்தையும் ஓம் நமோநாராயணய நம எனும் எட்டெழுத்து மந்திரத்தையும் மனம் ஒன்றிக் கூறி நீங்கள் விரும்பும் பொய்கையில் மூழ்கி நீராடினால் நீங்கள் பெறும் பயனை அருந்தவ முனிவர்களாலும் அடைய முடியாது. அவ்வாறு நீங்கள் விரும்பாவிடின் அம்மலை மீத எழுந்தருளும் திருமாலின் திருவடியை சேவியுங்கள். திருமாலின் மலரடிகளும் உங்களை ஏற்றுக் கொள்ளும்

பிறவித்துன்பத்தைப் போக்கும். இவ் இன்பம் யாவும் பெற்று மதுரைக்குச் செல்லுங்கள் என்று மறையவன் கூறினான்.

நான்கூறிய இரண்டும் வழிகளிலும் செல்ல விரும்பாதவர்கள் நடுவழியில் செல்லலாம். அது சிறந்த சோலைகளும், ஊர்களும் இடையிடையே சில காடுகளும் உள்ள வழி. அவற்றைக் கடந்து செல்லும் போது துன்பம் தரும் காட்டுத் தெய்வம் ஒன்று உண்டு. அத்தெய்வத்திடமிருந்து தப்பிச் சென்றால், மூன்று வழிகளும் ஒன்று சேர்ந்த பெருவழியைக் காணலாம் நீங்கள் மதுரை செல்லுங்கள் நான் திருமாலை வணங்கி என் வழியில் செல்கிறேன் என்று மறையவன் மூன்று வழிகளையும் விளக்கிக் கூறினான்.

## மயக்கும் வனதேவதை

மறுநாள் மூவரும் மாங்காடு மறையவன் ஏற்கனவே சொன்னபடியுள்ள முக்கிளைப்பாதையின் நடுவழியை பின்பற்றிச் சென்றனர். நடந்து வந்த களைப்பால் கவுந்தியும், கண்ணகியும் பாதையில் மரநிழலில் இளைப்பாறினர். கோவலன் மிகுந்த நீர்வேட்கையால் ஒரு பொய்கையை நாடி அதன் கரையில் நின்று கொண்டிருக்கையில் முன்பு அந்தணன் சொன்னபடி வனதேவதையொன்று கோவலன் மீது காதலுற்று மாதவியிடம் மனதைபறி கொடுத்த இவன் தம்மையும் நாடுவான் என எண்ணி சூறாவளியில் சிக்குண்ட கொடிபோன்று அவன் காலடியில் வீழ்ந்து கண்ணீர் உகுத்து முறையிட்டது. அத்தேவதை மாதவியின் தோழிவசந்த மாலையின் வடிவத்தில் இருந்தது.

‘‘மாதவி என்னிடம் கோபங்கொண்டாள் தாழம் பூவின் நான் எழுதிய கடிதத்தில் எந்தத் தவறும் இல்லை. நீதான் கோவலனிடம் ஏதோ தவறாகப் பேசியிருக்கிறாய். அதன் காரணமாகவே அவர் திரும்பி வராமலே போய்விட்டார் என்று கூறியவாறு மயக்கமுற்று கீழே வீழ்ந்து துயருற்றாள். கற்ற நல்லறிஞர்களும் கணிகையரைப் பிணியாகக் செல்கிறார்கள். இத்தகைய கணிகையரின் வாழ்ககையே மிகவும் கஷ்டமான வாழ்க்கையாகும் என மாதவி கூறினாள்’’ எனக் கூறிவிட்டு தம் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்களை உதிர்த்தாள் அதோடு மட்டுமின்றி கோபம் மிக என்னிடங் கொண்டு வீட்டை விட்டும் விரட்டிவிட்டாள் நீங்கள் மதுரை நகர் நோக்கிச் செல்வதாக உம்மைப் பார்த்தவர்கள் என்னிடம் வந்து

கூறினார்கள். உடனே வழி நடந்து வந்து உம்மைக்கண்டு கொண்டேன். நல்லவராகிய கோவலரே தாங்கள் எமக்கு என்ன வழி காட்டுகிறீர்கள் என அவ்வன தேவதை கேட்டது இப்பகுதியில் கணிகையின் வாழ்வு பற்றி சுவைபட இளங்கோவடிகள் கூறுவதைக் காணுக

**மேலோர் ஆயினும் நூலோர் ஆயினும்**
**பால்வகை தெரிந்த பகுதியோர் ஆயினும்**
**பிணி எனக் கொண்டு பிறக்கட்டு ஒழியும்**
**கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்**

(போன்ம் - போலும்)

வசந்த மாலை உருவில் வந்த வனதேவதை உரைகளைக் கேட்டதும் கோவலனுக்கு வனதேவதை வழியில் தடுக்கும் என்ற மறையவனின் கூற்று நினைவிற்கு வரவே கோவலன் பொய் வடிவத்தைப் போக்குகின்ற ஒரு மந்திரத்தால் இவள் உண்மையிலேயே வசந்த மாலையா வழிப்போக்கனைத்தடுக்கும் தெய்வமா என்று எண்ணினான் உடனே ஒரு மந்திரத்தை உரைத்தான். அம்மந்திரமானது காளிதேவியின் மந்திரமாகையால் வன தேவதையின் பொய் உருகலைந்து மெய்யான தெய்வமாக காட்சியளித்தாள்.

சுய உருவம் கலைந்த அவ்வனத்தெய்வம் இவன் காளியின் மந்திரம் அறிந்தவனாக இருக்கிறானே என அஞ்சியவாறு நான் இந்தக் காட்டில் திரியும் தெய்வம் உன்னை மயக்கி அடைய விரும்பினேன். எனது இவ்இழி செயலை உனது மனைவியிடமோ, யாரிடமோ சொல்ல வேண்டாம் என்று கூறி மறைந்தது.

கோவலன் பின்பு தம் தாகத்தையும் தணித்துக் கொண்டு தாமரை இலையில் தண்ணீர் எடுத்து வந்து கண்ணகியின் தாகத்தையும் போக்கினான்.

மூவரின் பயணமும் தொடர்ந்தது.

கதிரவன் தனது கொடுமையான வெம்மைக் கதிர்களை பரப்பி நின்றான் அக்கொடிய வெம்மையில் காட்டுவழியில் நடப்பது கடினமெனக் கருதி அம்மரங்கள் நிறைந்த சோலையின் நடுவே அமைந்திருந்த ஒரு கொற்றவை கோவிலைக்கண்டு அங்கு சென்றனர்.

அவ்விடம் குறிஞ்சிப்பாலை நிலமாகையால் அங்கு விளைநிலமோ, வேறு தொழிலோ கிடையாதாகையால் அங்கு வாழ்ந்த வேட்டுவர்கள் வழிப்போக்கர்கள் கொண்டு வரும் பொருட்களை கொள்ளையடித்தே வாழ்ந்து வந்தனர் அவர்கள் கையில் வில்லேந்தியபடி வெற்றிக்காக இந்தக் கொற்றைவையைத் தொழுவார்கள். அவ்விதம் வெற்றி வழங்கும் தெய்வத்திற்கு தம் தலையையே அறுத்துக் காணிக்கையாக்குவார்கள். அவர்கள் அளிக்கும் அக்காணிக்கையை விரும்பியே கொற்றவை அங்கு வீற்றிருந்தாள்.

## கொற்றவையின் சிறப்பு

விழி நூதும் குமரி விண்ணோர் பாவை

மை அறு சிறப்பின் வான நாடி

அவள் நெற்றிக் கண்களை அடைய குமரி தேவர்கள் தொழும் பாவை குற்றமற்ற வானுலகை ஆளும் தேவதை இத்தனை சிறப்பு வாய்ந்த கொற்றவை கோவிலில்தான் மூவரும் தங்கினர்.

## கொற்றவை போற்றதும்

கொற்றவையின் கோவிலை அடைந்த கண்ணகி கொடும் வெம்மையில் நடந்து வந்தமையால் மெல்லிய பாதங்கள் சிவந்து காணப்பட்டது. மேலும் பயணத்தைத் தொடர முடியாதபடி மூவரும் கொற்றவை கோவிலிலேயே தங்கிவிட்டனர்.

கோவலின் முன்பாக மறவர்கள் குழுமியிருந்தனர். அங்கே மறக்குடியில் பிறந்த சாலினி எனும் பெண்மீது சாமியேறியபடியால் அப்பெண் அங்கிருந்த மேடையேறி வீராவேசமாக ஆடினாள்.

வேடர்களே! நீங்கள் கொற்றவைக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளை செலுத்தாவிட்டால் உங்கள் வில்லுக்கு வேண்டிய வெற்றிதனை தரமாட்டாள் நீங்கள் கள்ளுண்டு களிப்பான வாழ்க்கையை வாழவிரும்பினால் கொற்றவைக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளை உடனே செலுத்துங்கள் என்று சாலினி கூறினாள்.

சாலினி இவ்வாறு கூறியவுடன் அங்கு கூடியிருந்தோர் மறக்குடியில் பிறந்த ஒரு பெண்ணிற்கு புள்ளிகளும் வரிகளும் அமைந்த புலித்தோலை உடுத்தி அவள் கையில் கரியவில் ஒன்றை கொடுத்து அவளை கொற்றவையாகக் கருதி வணங்கினர். அவள் பின்னே

வாசனைப்பொடிகளையும் உண்ணும் பொருட்களையும் கையலேந்திய பெண்கள் தொடர்ந்து வந்தனர். பறை துத்தரிக்கொம்பு குழல் மணி ஆகியவை அங்கே முழங்கின. பின்பு வெற்றிக்குக் காணிக்கையாக்கும் பலிபீடத்தை வணங்கினர். கொற்றவையையும் தொழுதனர்.

அப்போது கொற்றவை ஏறிய சாலினி கணவனுடன் ஒருபுறம் ஒதுங்கி நின்று கொண்டிருந்த கண்ணகியைக் கைகாட்டி ஏதோ பேசினாள்.

இவள் கொங்குநாட்டின் செல்வச்சீர்மகள். குடமலை நாட்டை ஆளும் செல்வி. தென்தமிழ் நாட்டின் குணக்குன்று போன்றவள். உலகிற்கு தவத்தின் பயனாக வந்து வாய்த்த தவக்கொழுந்து. இவ்உலகின் ஒப்பற்ற முழுமதி போன்ற வதனம் நிறைந்த அழகிய பெண்மணி இவளோ,

**கொங்கச் செல்வி குடமலையாட்டி!**

**தென்தமிழ்ப்பாவை செய்தத் தவக்கொழுந்து**

**ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமா மணி...**

தெய்வம் ஏறிய சாலினி கண்ணகியின் இப்புகழுரையை அங்கு கூடியிருந்தோர். அனைவரும் அறியும்படியாகவோ கூறினாள். மாற்றார் யாரும் அறியாதபடி ஒதுங்கியிருந்த கண்ணகியை தெய்வமே புகழுரைத்தது.

சாலினியின் புகழுரை கேட்ட கண்ணகியோ நாணினாள். முறிந்த அறிவுடைய இப்பெண்மணி ஏதோ மயக்கத்தால் இவ்வாறு கூறிவிட்டாள் என்று கூறிய கண்மணி தமது கணவன் கோவலன் பின்னே ஒடுங்கி நின்று புதுமை பொருந்திய புன்முறுவல் பூத்து நின்றாள்.

**பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டியென்று**

**அரும் பெறல் கணவன் பெரும் புறத்து ஒடுங்கி**

**விருந்தின் மூரல் அரும்பினாள்.**

சாலினி உரைகேட்டு கண்ணகி நாணினாள். ஆனால் மறக்குடியினர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர் காளி நமக்கு அருள் புரிந்து விட்டாள் என்று மகிழ்ச்சி அடைந்தாள் போற்றுதல்

**அமரி குமரி கவுரி கூலி நீலி**

**மால் அவற்கு இளங்கினை ஐயை செய்யவள்**

**வெய்யவாள் தடக்கை பாய்கலைப் பாவை**

**ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை**

வேட்டுவர்கள் இவ்வாறாக கொற்றவையைத் தொழுதனர். மேலும் அவர்கள் கொற்றவை தெய்வத்தை :

**சுடரோடு திரிதரும் முனிவரும் அமரும்**

**இடர்கெட அருளும் நின் இணை அடி தொழுதோம்**

**அடல் வலிஎயினர் நின அடிதொரு கடன் இது**

**மிடறு உக குருதிகொள் விறல் தரு விலையே**

இந்த வேட்டுவவரியின் ஈற்றிலே பாண்டியனைப் போற்றியும் பகைவர்களைப் போரில் தோற்கச் செய்து வெட்சி மாலைசூடி வெற்றி பெறுவானாக என்றும் வாழ்த்துகிறார்கள்.

**வெண்மதிப்பயணம்**

தேவபிராட்டியின் கோலமும் கூத்தும் முடிவுற்றதும் புண்ணிய கவுந்தியை வணங்கி அவரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தான்

அடிகளோ கதிரவனின் வெம்மையும் தாங்கமாட்டாத இவள் பரல்கற்களை பரப்பியது போன்ற இக்காட்டிலும் இவள் சிறு அடி பதியமாட்டா ஆகையால் யான் உம்மிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

காடுகளில் சுற்றித்திரியும் கரடியும் புற்றுகளைத் தோண்டமாட்டார் வரிகளை உடம்பில் கொண்ட புலிகளும் மான்களும் உறவாடும் பாம்பும் முதலையும் கூட தம்மை அணுகியவர்க்கும் இன்னல்தரமாட்டா ஏனெனில் செங்கோல் நழுவாமல் ஆட்சி செய்யும் பாண்டிய மன்னனின் நல்லாட்சியால் இயல்பிலேயே பிறரைத் துன்புறுத்தும் கொடிய எண்ணங் கொண்ட விலங்குகளும் பிறரைத்துன்புறுத்தாது. அதனால் பகலில் பயணம் செய்வதை விடுத்து இரவில் வெண்மதிவீசும் ஒளியிலேயே பயணம் செய்வது நலம் பயக்கும்.

**கடுங்கதிர் வேனில் இக்காரிகைப் பொறா அன்**

**படிந்தில சீறடி பரல் வெங்கானத்து**

**கோள்வல் உளியமும் கொடும் புற்று அக ழா**

**வாள்வரி வேங்கையும் மான் கணம்மறவா**

**அரவும் சூரும் இரைதேர் முதலையும் உருமும் சார்ந்தோர்க்கு**

**உறுக் செய்யா செங்கோல் தென்னவர்**

**காக்கும் நாடு என எங்கணும் போகிய**

**இசையோ பெரிது**

மேற்கூறிய வரிகளில் இளங்கோ அடிகள் ஐந்நிலத்துப் பொருள்களையும் குறிப்பிடுகின்றார்.

பாண்டியன் ஆட்சியில்கொடுமையானது சுட்டெரிக்கும் வெம்மையே. அக்கொடுமையிலிருந்து விடுபடவே இரவில் பயணம் செய்வது உத்தமம் என்று கோவலன் கவுந்தியடிகளிடம் தமது இரவு நேரப்பயணத்திற்கான கோரிக்கையை முன்வைத்தான்.

கவுந்தி அடிகளும் கோவலனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு பகல் பயணம் செய்யவில்லை. அம்மூவரும் கதிரவன் மறைவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

கதிரவனும் மறைந்தான். வெண்மதி தன்னுடன் எடுத்து வந்த மீன்களை விதைத்துவிட்டு தன் வெண்ணொளிக் கடையையும் வானில் பரப்பினாள். மூவரும் இரவு நடைப்பயணத்தைத் தொடர்ந்தனர் நடந்தாள் கண்ணகி செயற்கை அழகு சாதனங்களை தமது மேனியில் அணிய வில்லையாதலால் நிலவொளி அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கண்ணகியின் மேனியெங்கும் பரவி எழிலுறச் செய்தான்.

**மலயத்து ஓங்கி மதுரையின் வளர்ந்து**
**புலவர் நாவில் பொருந்திய தென்றல்**

இன்பம் சேர்க்கும் தென்றல் கண்ணுக்குத் தெரியாதது. செயற்கை அழகு இவள் அழகுக்கு ஈடு செய்ய முடியாதாகையால் பால்நிலாவின் வெண்கதிர் கண்ணகியின் மீது வீழ்ந்து அவள் விரும்பாவிட்டாலும் விலக்க முடியாத பேரணியாகப் படிந்ததாம்!

மூவரும் நிலவொளியில் நடந்தனர். கண்ணகியோ நடைபயணத்தால் துயருற்றான். கோவலன் அவளுக்கு ஆறுதல் பல கூறினான்.

பேரிடியென முழக்கம் செய்யும் புலிகளும் அலறும் கோட்டான்களும் கொண்ட காட்டிலிருந்து முழங்கும் ஓசையால் கண்ணகி பயப்படுவாள் என்பதால் கண்ணகியின் கரத்தை ஆறுதலாகப்பற்றி அக்கரங்களை தன் தோளின் மீது வைத்துக் கொண்டாள். கவுந்தியடிகள் கூறிவந்த பல்வேறு அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டே நடந்து வந்தனர். இரவுப்பொழுதும் இவ்விதமாய் கழிந்தது.

காட்டுக் கோழிகள் உரக்கக் கூவி கதிரவன் வருகையை அறிவித்தது. அப்பொழுது மூவரும் ஒரு ஊரை நெருங்கிக் கொண்டிருந்தனர். அவ்வூர்

காதல் களிப்பாடல்கள் பாடி வேதம் தவிர்த்து மனித ஒழுக்கத்திலிருந்து நழுவிவாழும் முப்புரிநூல் அணிந்தவர்கள் ஊராகையால் கவுந்தியடிகள் அவ்வூருக்குள் செல்லவிரும்பவில்லை. ஆகையால் மூவரும் அவ்வூரின் ஒதுக்குப்புறத்தில் தங்கியிருந்தனர். அந்த இடத்தில் முள்வேலியும் இடப்பட்டிருந்தது.

கவுந்தியடிகளையும் கண்ணகியையும் அவ்விடத்தில் அமர்த்திவிட்டு கோவலன் மட்டும் அம் முள்வேலியைக் கடந்து நீர் பெறுவதற்காக ஒரு நீர்நிலையைத் தேடிச் சென்றான்.

கண்ணகியை காட்டுவழியே நடைப்பயணமாக கூட்டிவந்ததை நினைத்து கோவலன் மிகமனம் வருந்தி உடல் மெலிந்து காணப்பட்டான்.

நீர்நிலையருகே உடல் சோர்ந்து மெலிந்த கோவலனை கோசிகன் கண்டான். இக்கோசிகனிடம் மாதவி கோவலனிடம் ஒப்படைக்குமாறு ஓலையொன்றை கொடுத்தனுப்பியிருந்தான். இக்கௌசிகனோ ஒரு பிரம்மச்சாரியாகையால் இவனை கௌசிக மணியென்றும் குறிப்பிடுவர் கோவலனைக் கண்ட கோசிகன் இவன் கோவலன்தானா? என ஐயமுற்றான்

கௌசிகன் சற்றே மதி கொண்டவனாகையால் இவன் கோவலன் தானா என்று தெளிவுபடுத்திக் கொள்ள ஓர் யுத்தியைக் கையாண்டான்.

அவனரகே மாதவிக் கொடியொன்று இருந்தது கௌசிகன் அதனருகே சென்று, “கோவலன் தன்னைவஜட்டுப் பிரிந்து சென்றமையால் பெருந்துயரையடைந்த மாதவியைப் போல் கோடை காலத்தில் வாடிய மலர்களை இழந்து தவிக்கின்றாயோ மாதவி”? எனக் கேட்டான்.

மாதவி என்ற பெயரைக் கேட்ட கோவலன் கௌசிகனை நோக்கி நீ இங்கே கூறியதன் பொருள் என்ன? என்று கேட்டான் அதைக் கேட்ட கௌசிகன் கோவலன் நலமாகவே உள்ளான். அவனை நான் கண்டுபிடித்துவிட்டேன் என மகிழ்ச்சியுடன் கூறினான். மேலும் கோவலனிடம் தான் இங்கு வந்து சேர்ந்த வரலாற்றையும் எடுத்துக் கூறினான்.

கோவலா நீ புகார் நகரை விட்டுப் புறப்பட்டுவந்த செய்தி கேட்ட உன் தாய் தந்தையும் அனலில் வீழ்ந்த புழு போல் துடித்தனர். உனது நெருங்கிய உறவினர்கள் செய்வதறியாது திகைத்தனர். உனது தாய் தந்தையர்கள் உயிரற்ற உடம்புபோல உள்ளனர். உன்னைத் தேடிகண்டுபிடிக்க உனது

தந்தை மாசாத்துவான் தமது பணியாட்களை நாற்றிசையும் அனுப்பிவைத்தனர் புகார் நகர மக்கள் உன்னைப் பிரிந்து வாடுகின்றனர்.

தான் கொடுத்தனுப்பிய மடலை வசந்த மாலையிடம் வாங்க மறுத்ததையறிந்த மாதவி மிகுந்த துன்பமுற்று ஒரு பள்ளியறையில் படுத்துப் புலம்பினாள்.

மாதவியின் இத்துயருறுச் செய்திகேட்டு நான் மாதவியைச் சென்று கண்டேன். அப்போது தமது மலர் கரங்களால் ஒரு மடல் எழுதி இலச்சினை பொறித்து என்னிடம் தந்தாள் என் கண்ணான கோவலனிடம் இதனைக் கொடுக்கவும் என்று கேட்டுக் கொண்டாள் அக்கடிதத்துடன் பல இடங்களில் அலைந்து திரிந்து முடிவில் உன்னை இங்கே கண்டேன் என்று கௌசிகன் கூறினான்.

கௌசிகன் இவ்வாறாக கோவலனிடம் எடுத்துக்கூறி இறுதியில் மாதவி தந்த மடலை நீட்டினான்.

முன்பு மாதவி வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பிய மடலை வாங்கமறுத்து அப்போது மாதவியை தூற்றினான் கோவலன். ஏனெனில் கோவலன் அப்போதிருந்த நிலைவேறு. ஆனால் இப்போது கோசிகன் கொண்டு வந்த ஓலையை மனம் ஒப்புக் கொண்டது. மேலும் அம்மடலிலிருந்து ஒருவித நறுமணம் வீசியது. அவ்வாசனை தயக்கத்தைப் போக்கியது.

அவ்வாசனை மாதவியின் சுருள்கேசத்தில் தோய்க்கப்படும் நறுமணம் கொண்ட நெய்யின் வாசம். ஆகையால் அம்மடலை பெற்றுக்கொள்ள கோவலன் மனம் சம்மதித்தது.

**அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்.**
**வடியாக் கிளவி மன்கொளல் வேண்டும்**
**குரவர்பணி அனிறியும் குலப்பிறப்பு ஆட்டியொடு**
**இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது**
**கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்**
**பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி**

அடிகளே நின் திருவடிகள் இருக்கும் திசைநோக்கித் தலை வணங்குகின்றேன் எனது தெளிவற்ற புரியாத சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். பெற்ற தாய் தந்தையர் இப்பணிவிடை செய்யாமல் உயர்குடியில் பிறந்த கண்ணகியோடு இரவோடு இரவாக புகார் நகரைவிட்டுப்

போகுமளவிற்குயாம் செய்த குற்றம் தான் என்ன? என்பதையறிய என் மனம் துடிக்கின்றது. எனது அத்துன்பத்தைப் போக்கியருள வேண்டுமென உம்மைப் போற்றுகின்றேன்.

மாதவியின் மடல் மூலம் அவளது நற்குணங்களை அறிந்து கொண்ட கோவலன் மாதவி எவ்வித குற்றமற்றவள் என்றும் நடந்தவையாவும் தாம் செய்த குற்றத்தால் ஏற்பட்டவையே என்று உணர்ந்து சோர்வு நீங்கி தெளிவடைந்தான்.

கோவலன் அம்மடலை திருப்பி கௌசிகனிடமே கொடுத்தான். இம்மடல் என் பெற்றோருக்கு நான் எழுதியது எனும்படி, சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளமையால் இம்மடலை அவர்களிடமே கொடுப்பாயாக. என் பிரிவால் என் பெற்றோரின் மனவருத்தத்தை மாற்றி அவர்கள் அடைந்த துன்பத்தை போக்குவாயாக என்று கூறிகௌசிகனை அனுப்பிவைத்தான் பின் கோவலன் கண்ணகியும் துறவியும் இருந்த இடம் திரும்பினான். அங்கே வெற்றிக்கடவுள் கொற்றவையை புகழ்ந்து பாணர்கள் பாடிக் கொண்டிருந்தனர். கோவலன் அவர்களிடமிருந்த யாழைக்கேட்டு வாங்கி கொற்றவை தெய்வத்தைப் பற்றி புகழ்ந்து பாடி யாழை அவர்களிடம் திருப்பிக் கொடுத்தான் பின் அவர்களிடம் மதுரை இங்கிருந்து எவ்வளவு காததூரம் உள்ளது என கேட்டறிந்து கொண்டான். அதற்கு பாணர்கள் மதுரை மிக அருகாமையில் உள்ளதென கூறினார்கள். இதனை அவர்கள் தமிழ் நயமிகுபட கூறுவதைக்காணுங்கள்

**காழ் அகில் சாந்தம் கமழ் பூங் குங்குமம்**
**நாவிக் குழம்பு நலங்கொள் தேய்வை**
**மான்மதச் சாந்தம் மணம் கமழ் தெய்வத் தோமென் கொழுஞ்சோறு**
**ஆடி அங்குத் தாது சேர் கழுநீர் சண்பகக் கோதையொடு**
**மாதவி மல்லிகை மனைவளர் முல்லைப்**
**போதுவிரி தொடையல் பூ அணை பொருந்தி**
**ஆட்டில் புகையும் அகல் அங்காடி**
**முட்டாக் மூவியா மோதகப் புகையும்**
**மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த**
**அம்தீம் புகையும் ஆகுதிப் புகையும்**
**பல்வேறு பூம்புகை அளைஇ. வெல்போர்**

**விளங்குபூண் மார்பின் பாண்டியன் கோயிலின்**
**அளந்து உணர்வு அறியா ஆர் உயிர் பிணிக்கும்**
**கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றிப்**
**புலவர் சொந்நாப் பொருந்திய நிவப்பின்**
**பொதியில் தென்றல் போல் அலாது ஈங்கு**
**மதுரைத் தென்றல் வந்தது காணீர்**
**நனிசேய்த்து அன்று அவன் திருமலி மூதூர்**
**தனிநீர்க் கழியினும் தகைக்கு நர் இல்**

மதுரைமிக அருகிலேயே உள்ளதென அறிந்தகோவலன் அன்றிரவே கண்ணகியுடனும் கவுந்தி அடிகளுடனும் பயணத்தைத் தொடர்ந்தான். விடியங்காலைப் பொழுதில் வையை ஆற்றின் கரையை அடைந்தான்.

அக்காலைப் பொழுதில் மதுரையில் ஒலித்த பேரொலிகளும் அந்தணர்களின் வேதமுழக்கமும் வாள்வீரர்களின் வீரத்தை அறிவிக்கும் முரசு முழக்கமும் குதிரைகள் செய்யும் சவாரிகளின் குழப்படி ஓசையும் யானைகளின் முழக்கமும் இம்மூவரையும் வரவேற்றது. இவ்வொலிகளின் மூலம் மதுரையை வந்தடைந்து விட்டோமென்றறிந்த கோவலன் மிக மன மகிழ்ச்சியுற்றான்.

தொடர்ந்து வையையின் கரையை வந்தடைந்தனர். அங்கு வையையின் கரையோரமாக நின்றிருந்த மகிழமரம், வேங்கைமரம், வெண்கடம்புமரம், மஞ்சாடிமரம், மருதமரம், பவளமரம் செண்பகமரம் பாதிரிமரம் அனைத்தும் பூத்துக் குலுங்கி அம்மரங்கள் தம் மலர்களை ஆடையின்றி நாணிக்கோனி சென்று கொண்டிருந்த வையைக்கு ஆடையாக அளித்தது. வைகைத்துறையில் மிதந்து கொண்டிருந்த மரத்தெப்பத்தில் ஏறி சோலைகளால் சூழ்ந்த அதன் கரையை அடைந்தனர். மதில்களின் மேல் பறக்கவிடப்பட்டிருந்த கொடிகள் இவர்களைப் பார்த்து ஏன் இங்கு வந்தீர்களள்? கண்டிப்பது போல் இருந்தது.

**போர் ஊழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி**
**வாரல் என்பன்போல் மறித்துக் கைகாட்ட**

மூவரும் முதுரைநகரின் புறத்தே இருந்த புறஞ்சேரியினை வந்தடைந்தனர். பொழுது புலர்ந்து பாண்டியன் புகழ்பாடும் மதுரை இரவின் அணைப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டது. ஞாயிறு தன் ஆதிக்கத்தை பரப்பத்

தொடங்கினான். மதுரையைச் சூழந்துள்ள கோவில்களிலிருந்து முரசங்களும் பறைகளும் ஒலிக்க ஆரம்பித்தன மதுரைக் கோவில்களைப் பற்றி அடிகள் தம் செந்தமிழ் முத்துக்களால் கோர்த்திருந்கும் வனப்பைப் பற்றி பின்வருமாறு இயம்புகின்றார்.

**நூதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்**
**உவணச் சேவல் உயர்ந்தோன் நியமமும்**
**மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்**
**கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்**
**அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்**
**மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்**
**வால்வெண் சங்கொடு வகை பெற்று ஓங்கிய**
**காலை முரசம் கனைகுரல் இயம்ப ...**

மூக்கண் முதல்வனாம் சிவபெருமான் திருக்கோயில் கருடனை வாகனமாய் கொண்ட திருமாலின் கோவிலிலும் பலராமன் கோவிலும் சேவல் கொடியோன் முருகப்பெருமான் கோவிலிமிருந்தும் முரசுகள் முழங்கின
பொழுது புலர்ந்ததும் கோவலன் கண்விழித்து கவுந்தி அடிகளைக் கைகூப்பித்தொழுதான்.

அத்தோடு அவரிடம் ஒருவேண்டுகோளையையும் விடுத்தான் தவம் மிக்க அடிகளே பூப்போன்ற மனங்கொண்ட எனதருமை கண்ணகியை தவிக்கவிட்டு தவறான வழிகளை நாடிச்சென்ற தப்பானவன் நான் மேற்கொண்டும் அவள் பாதடிகள் நோக இரவெல்லாம் கரடுமுரடான பாதைவழியாக அடிநோக துன்புறுத்தியவன் பழம்பெருமை வாய்ந்த மதுரை மாநகரின் பெரும் வணிகர்களிடம் எனது நிலை பற்றி அறிவித்தவிட்டு மீண்டும் வரும் வரை கண்ணகி உங்கள் பாதுகாப்பிலேயே இருக்கட்டும் இப்பொறுப்பை உங்களிடம் அளிப்பதால் அதன்மூலம் உங்களுக்கு ஏதேனும் இடர்நேரிடுமா என ஒருவினாவையும் தொடுத்தான்
கவுந்தி அடிகள் கோவலனின் நிலை பற்றி முற்றிலும் தெரிந்தே வைத்திருந்தார் எனவே
அடிகள் கோவலனிடம் நடந்ததை யெண்ணி நலிவடையாமல் மதுரை சென்று அங்கு தங்குவதற்குரிய இடத்தையறிந்து திரும்பி வருவாயாக என ஆறுதல் கூறி அனுப்பிவைத்தார்.

**தாதை ஏவலின் மாதுடன் போகிக்**
**காதலி நீங்கக் கடுத்துயர் உழந்தோன்**
**வேத முதல்வன் பயந்தோன் என்பது**
**நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ?**
**வல்லநாடு ஆயத்து மண் அரசு இழந்து**
**மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன்**
**காதலிற் பிரிந்தோன் அல்லன் காதலி**
**தீதொடு படுஉம் சிறுமையன் அல்லள்**
**அடவிக் கானகத்து ஆயிழை தன்னை**
**இடையிருள் யாமத்து இட்டு நீக்கியது**
**வல்வினை அன்றோ மடந்தை தன் பிழை எனச்**
**சொல்லலும் உண்டேல் சொல்லாயோ நீ?**
**அனையையும் அல்லை**
**ஆயிழை தன்னோடு**
**பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றோ**
**வருந்தாது ஏகி மன்னவன் கூடல்**
**பொருந்துழி அறிந்து போது ஈங்கு**

இராமனும் நளனும் தம் மனைவியைப் பிரிந்து காட்டுக்குச் சென்று துன்புற்றனர். ஆனால் நீயோ மனைவியைப் பிரியாதது பெரும்பேறே என்று கவுந்தி அடிகள் கூறினார்.

கவுந்தி அடிகளின் ஆறுதல் வார்த்தைகளால் மனம் தேறிய கோவலன் மதுரையில் வணிகம் செய்து அதன்மூலம் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு கண்ணகியுடன் மனமகிழ்ச்சிவோடு வாழலாம் என்ற கனவுகளோடு மதுரையை நோக்கிச் சென்றான். கோட்டை வாயிலைக் கடந்து உள்ளே சென்றான். அங்கே மதுரை மூதூர் கொட்டிக்கிடக்கும் செல்வக் களஞ்சியம் போல் திகழ்ந்தது.

மதுரையில் உள்ள பரத்தையர் வீதி கலைகள் பல அறிந்தோர் வாழும் வீதி அங்காடி வீதி நவமணிக் கடைவீதி பொன்கடைவீதி துணிக்கடைகள் தானியங்கள் விற்கும் கூலக்கடைவீதியென எங்கும் சுற்றியலைந்தான்.

**பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்**
**அந்தியும் சதுக்கமும் ஆவண வீதியும்**

**மன்றமும் கவலையும் மறுகும் திரிந்து**
**விசும்பு அகடுதிருகிய வெங்கதிர் நுழையாப்**
**பசுங்கொடிப் பதாகை பந்தர் நீழல்**
**காவலன் பேரூர் கண்டு மகிழ்வு எய்திக்**
**கோவலன் பெயர்ந்தனன் கொடி மதில் புறத்தே**

மதுரை நகரின் அமைப்பையும் வனப்பையும் வீதிகளையும் நகர் நல மன்றங்களையும் கலைக் கூடங்களையும் சிறு கொடிக்கும் பெருங்கொடிக்கும் படர்ந்து சூரிய கதிர்களை தாங்கி நிழல் கொடுக்கும் வழிநடந்து மதுரை மூதூர் ரசித்தபடியே புறஞ்சேரிக்கே மீண்டும் வந்தடைந்தான் அவர்கள் தங்குவதற்குரிய இருப்பிடத்தை ஏற்பாடு செய்யாமலேயே திரும்பி வந்தான்.

**கோவலனும் மாடலனும்**

மதுரையில் கோவலன் கண்ட காட்சியைப் பற்றி இளங்கோவடிகள்

**கௌரியர் பெருஞ்சீர்க் கோலின் செம்மையும்**
**குடையின் தண்மையும் வேலின் கொற்றமும்**

என விவரிக்கின்றார்

கோவலன் மதுரை மூதூரில் இருந்தாலும் அவ்வூர் அவனுக்கு ஓர் புது இடமாகத் தெரியவில்லை. புகார் நகரிலேயே வாழ்ந்து வருவது போன்ற எண்ணமே தோன்றியது. மேலும் பாண்டியனின் நீதி நழுவா செங்கோலும் வெண்கொற்றக்குடையின் குளிர்ச்சியும் வெற்றித் திருமகளின் நடனத்தையும் கண்டு இன்புற்றதாக கவுந்தி அடிகளிடம் கூறிக்களிப்புற்றான். அழகுமிகு அரவத்திடம் விடம் உறைவது போன்று அழகிய மதுரை அவர்க்கு அவலம் அளிக்கப்போவதை அறியாத கோவலன் மதுரையைப் பற்றி வானளாவ புகழ்ந்துரைத்தான்.

கவுந்தியடிகளிடம் மதுரையை புகழ்ந்து கூறிக்கொண்டிருக்கையில் வேதியன் ஒருவன் அங்கு வந்தான். அவன் கோவலனின் நண்பன் அவன் பெயர் மாடலன். அவனது ஊர் புகாரிலிருந்து தென்மேற்காக அமைந்துள்ள தலைச்செங்காடு என்பதாகும். அவன் நான் மறைவேதங்களையும் சுற்றறிந்து கற்ற வழிநடப்பவன். அதன் பயனாக பிறர் நலன் நாடுபவன். அவன் இளைப்பாறுதல் வேண்டி புறஞ்சேரிச் சோலை வந்தடைந்தான். மாடலனைக் கண்ட கோவலன் அவனை வணங்கினான். கோவலனின் நலிந்த தோற்றத்தைக் கண்ட மாடலன் அவனுக்காக மனமிரங்கி பின்வருமாறு கூறினான்.

கோவலா நீ இறப்பிலும் புண்ணியங்களையே பல செய்திருக்கின்றாய் அப்புண்ணியங்களைப் பற்றி நானறிந்த மட்டும் சொல்கிறேன்.

கரிகால் வளவனிடம் சீரும் சிறப்பும் பெற்ற மாதவி உன்னிடம் கூடியமையால் பெண்மகவொன்றை ஈன்றாள். பிரசவத்தீட்டு நீங்கியதும் சித்திராபதி போன்ற முதிர்ந்த கணிகையர் ஒன்று கூடி குழந்தைக்கு என்ன பெயர் சூட்டலாம் என கேட்கையில் நீ இவ்வாறு கூறினாய்.

ஒரு சமயம் எமது மூதாதையர் ஒரவர் கப்பல் வாணிபம் செய்து வரும் வேளையில் நள்ளிரவில் அக்கப்பல் உடைந்து சிதறியது அப்போது அவர் துன்பக்கடலில் நீந்தி சோர்ந்து கரைகாணாது தத்தளித்துக் கொண்டிருந்தார். அவர் முற்பிறப்பில் பலவிதமான புண்ணியங்களையும் தானதருமங்களையும் செய்தவர் அப்போது அவர்முன் ஒரு தெய்வம் தோன்றி நான் இந்திரன் கட்டளையால் இந்தக் தீவில் வாழ்ந்து வருகின்றேன். நடுங்காதே உனது புண்ணியபலனாக நான் உன்னைக் காக்கின்றேன். என்பெயர் மணிமேகலை என்று சொல்லிய அத்தெய்வம் தமது சக்தியால் அவரை கரை சேர்த்தது அவரது துயர் துடைத்தது. ஆதலால் எமது குலதெய்வமான மணிமேகலையின் பெயரையே குழந்தைக்கு இடுக.

மேகலையணிந்த கணிகையர் அவ்வாறே பெயரிட்டு தான தருமங்கள் பல செய்தும் பொன்மாரிபொழிந்தும் சிறப்பித்தனர். அப்போது தான தருமங்கள் பெற்றுக்கொள்ள கம்பூன்றி ஒரு முதிய அந்தணன் ஒருவன் தள்ளாடி வருகையில் மதங்கொண்ட யானையொன்று பாகனுக்கும் அடங்காமல் அம்முதிய அந்தணனை வளைத்துப்பிடிக்க நீ உடன் ஓடிச்சென்று பயங்கொள்ளாது அவ்யானையின் பிடியிலிருந்து அவ் அந்தணனை பாதுகாத்த வீரனன்றோ நீ!

மறையோன் ஒருவனும் தமது தர்மபத்தினியுமான இல்லறம் இனிதே நடத்தி வருகையில் கீரிப்பிள்ளையொன்றை அன்புடன் வளர்த்து வந்தாள். நீண்ட நாட்களுக்குப் பின்பு அத்தம்பதிகட்கு பிள்ளையொன்று பிறந்தது. ஒரு நாள் மறையோன் மனைவியானவள் அன்புபிராணியான கீரிப்பிள்ளையை தம் குழந்தைக்கு காவலாக வைத்தவிட்டு தண்ணீர்மொண்டு வரவெளியே சென்று விட்டாள். அப்போது வீட்டிற்குள் வந்த பாம்பினை கீரிபோரிட்டு தன் வாயால் துண்டு துண்டாக்கி கொன்றுவிட்டது. அதன் காரணமாக குழந்தையின் தொட்டிலிலும் மற்றும் வீட்டின் அறையெங்கும் இரத்தம் படிந்து கிடந்தது.

தண்ணீர் மொண்டு விட்டு வீட்டிற்குள் வந்த அம்மறையோன் மனைவி கீரிப்பிள்ளை தன் குழநதையை கொன்று விட்டதாக நினைந்து தன் இடுப்பில் உள்ள தண்ணீர் குடத்தினை கீரிப்பிள்ளையின் மீது கோபத்துடன் எறியவே அன்புபிராணியான கீரிப்பிள்ளை நசுங்கி இறந்தது. பின் அவள் வீட்டினுள் சென்று குழந்தை உயிருடன் இருப்பதும், பாம்பு அறுபட்டு இறந்து கிடப்பதையும் கண்டபின்னே உண்மை நிலையென்ன என்பதை உணர்ந்து கொண்டபின்பு நன்மை செய்த அப்பிராணியை கொன்று பழிபாவம் தீர்த்துக் கொள்ள தானதருமங்கள் செய்ய வேண்டி, தனம் படைத்தோரிடம் பொருளுதவி வேண்டி நிற்கையில் நீதானே அவர்களுக்கு வேண்டியபொன்னும் பொருளும் கொடுத்து உதவியமையால் அத்தம்பதியினர் மகிழ்வுடன் வாழ்கின்றனர் நீயே தருமன்.

நீ இவ்வாறு நல்வினைகள் பல செய்ததை யாமறிவேன் உனது பத்தினியான கண்ணகியுடன் நீ இவ்விடம் வந்து சேர்ந்தது உனது முன் வினைப்பயனே என்று கூறினான்.

இவ்வாறு கோவலனுக்காக வருந்திய மாடலனிடம் கோவலன் தாம் அதிகாலையில் கண்ட கனவு பற்றிக் கூறினான்.

அறத்தின் காவலன் பாண்டியன் ஆட்சி செய்து வரும் இம்மதுரையில் கொடியவன் ஒருவனால் வாசைன மலர் மணங்கமழும் கூந்தலையுடைய கண்ணகி துன்பமுற்றாள். நான் உடுத்த ஆடையை மாற்றார் பறித்தனர். நான் எருமைக்கடாவின் மீதேறி மோட்சத்தை அடைந்தேன். மாதவியோ தன் மகள் மணிமேகலையை போதி அறவோன் முன் வைத்தாள். யான்கண்ட இக்கனவால் தீங்கு விரைவில் நேரிடும்.

புறஞ்சேரி இருப்பிடத்தைப் பற்றி கவுந்தியும் மாடலனும் நன்கு அறிந்தவர்கள் அவ்விடம் சம்சாரிகள் வாழ ஏற்ற இடமன்று மாசாத்துவன் மகன் என்றுசொன்னலே மதுரை வணிகர் உன்னை ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே சூரியாஸ்தமனத்திற்குள்ளாக நின் மனைவியுடன் சென்று நகரில் குடியிருக்க ஒரு இடம் பார்த்துவா என்று கூறினார்கள். அதுவரை கண்ணகியை எங்கே தங்கச் செய்வது என யோசிக்கையில் அங்கே முதியவளான மாதரி வந்து சேர்ந்தாள்.

**பண்பான மாதரி**

மாதிரி என்பாள் பண்பின் வடிவம் அவள். பெண்சமணத் துறவிக்கு வழக்கமாக பாற்சோறு படைக்க வருகையில் கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினாள். அவள் பசுவைக்காத்து பால் அளிக்கும் இடையர் குலப் பெண்ணாவாள்.

**ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும்**

**கோவலர் வாழ்ககையோர் கொடும்பாடில்லை**

இவளிடம் கண்ணகியைப் பொறுப்புடன் ஒப்படைக்கலாம் என்றெண்ணி கவுந்தியடிகள் சொன்னார்.

மாதரி இவர் உத்தம பெருங்குடியில் பிறந்த பெருஞ் செல்வர். கற்பின் அணியாளான பத்தினி தெய்வத்திற்கு ஒப்பானவர். இவர் மூத்தோர் மாசாத்துவான் பெயர் கேட்டாலே இவரை இருகரங்கூப்பி வரவேற்று தம் இல்லம் அழைத்துச்சென்று உபசரிப்பர். அத்தகைய சிறப்புடையோரை உன்னிடம் அடைக்கலம் அளிக்கின்றேன் ஏற்றுக்கொள். என்னுடன் சேர்ந்து வந்த இவ்விளங்கொடியானவள் காதவழி கூட நடந்தறியாள் கணவனைப் பிரியாள். நீர் வேட்கை எமக்கு ஏற்பட்டால் தன் துயர் பாராது என்நீர் வேட்கை தணிக்கை நலங்குணமுடையாள். இப்படிப் பட்ட பத்தினிகள் இருக்கும் நாட்டில் வான்பொய்க்காது. வளமைகுன்றாது வேந்தனின் அறம் சிதையாது அவன்புகழ் பெருகும் என்பதை நீ அறிவாய் தவத்தினர் தரும் பொருள் சிறிதெனினும் பெரிதென நீ கொள்ளுவாய்

**என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்**

**வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்**

**கடுங்கதிர் செம்மையிற் காதலன் றனக்கு**

**நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்**

**தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி**

**இன்றுணை மகளிர்க்கின்றி யமையாக்**

**கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது**

**பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்**

**வானம் பொய்க்காது வளம் பிழைப் பறியாது**

**நீணிலவேந்தர் கொற்றஞ் சிதையாது**

**பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும்**

**அத்தகு நல்லுரை அறியா மோநீ?**

**தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்**

**மிகப்பேரின்பந்தருமது கேளாய்!**

இதைத் தொடர்ந்து அடைக்கலத்தின் சிறப்பினை ஒரு குரங்கின் கதை மூலமாக விளக்குகிறார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் எட்டி என்னும் பட்டத்தையுடைய சாயலன் என்பவனும் அவன் மனைவியும் வந்தோரை உபசரித்து அமுதளிக்கும் பண்புடன் வாழ்ந்து வந்தனர். சாயலன் மனைவியளித்த உணவை உண்ட மாதவன் தான் அன்புடன் வளர்த்து வந்த குரங்கு ஒன்றை அளித்தான். சாயலன் மனைவியும் அதனை தன் குழந்தை போன்று அன்புடன் வளர்த்து வந்தாள். அக்குரங்கு இறந்தபின்பும் அதன்தீய பிறவி நீங்குக என்று தான தருமம் பல செய்து வந்தாள். அக்குரங்கும் மறுபிறப்பில் மனிதனாகப் பிறந்தது. பிறந்த அம்மனிதனும் அழகும் அறிவும் ஆற்றலும் கொண்டு திகழ்ந்தான். தமது முப்பத்திரெண்டாம் வயதில் இறந்து போனான். இறந்தவுடன் அவன் தேவவடிவம் பெற்றான். தேவவடிவம் பெற்றாலும் முற்பிறப்பில் தான் ஒரு குரங்காக இருந்ததை உணர்ந்தமையால் ஒரு கை குரங்கு கையுடன் வாழ்ந்துவந்தான்.

சாயலன் மனைவி செய்த தானத்தின் பயனாக முற்பிறப்பில் குரங்காயிருந்த நான் தேவனாகப் பிறந்தேன் என்பதை அறிவிக்கும் வகையில் சாரணர் முன்பாக தோன்றினான். தானதருமம் பல செய்த சாயலன் தம்பதியர் வீட்டுப் பேற்றைப் பெற்று பேரின்பத்தை அடைந்தனர். இக்கதையைக் கூறி கவுந்தி அடிகள் தானப்பயனை கேட்டு அறிந்தீர்கள் அதனால் கண்ணகியுடன் காலந்தாழ்த்தாது உன் இல்லம் செல்க என்று கூறினாள்.

மாதிரி அடைக்கலமாகப் பெற்ற கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக் கொண்டு அந்திப் பொழுதில் மீனாட்சி ஆட்சி செய்யும் கூடல் பதியாம் மதுரையை சென்றடைந்தாள்.

## பத்தினியின் பணி

கண்ணகியை ஏற்றுக்கொண்ட மாதிரி நல்லாள் மனம் மிக மகிழ்ந்தாள் அப்பத்தினி நங்கையை ஆயர்கள் வாழும் இடத்தில் குடியிருக்கச் செய்யாமல் செம்மண் பூசி முற்றத்தில் பந்தல் இடப்பட்டிருந்த சிறிய எழில் மிகுந்த வீட்டில் தங்கவைத்தாள்.

ஆயர்குலப்பெண்கள் கண்ணகியை நீராட்டி அழகூட்டினர் ஒப்பனை எதுவும் செய்யாமலேயே எழில் மிகுந்து காணப்படும். கண்ணகியின் வனப்பினைக் கண்டு மாதரி உளம் பூரித்தாள். இதனை செய்யாக் கோலமெனும் குறிப்பிடும் இளங்கோ பின் வருமாறு உரைக்கின்றார்

**கூடல் மகளிர் கோலம் கொள்ளும்**

**ஆடகப் பைம்பூண் அருவிலை அழிப்பச்**

**செய்யாக் கோலமொடு வந்தீர்**

மேலும் கண்ணகியை அழைத்த மாதரி என்மகள் ஐயை உனக்குப் பணிவிடைகள் செய்வாள். உம்மைப் பொன்போல் போற்றிபாதுகாப்போம் இனி உனக்கு எந்த கலக்கமும் வேண்டாம் சிறந்த முனிவரான கவுந்தியடிகள் உம்மை எத்தீங்கும்வாராது பாதுகாத்து, எவ்வித குற்றமற்ற இவ்விடத்தில் சேர்த்துள்ளார். இனி உன் கணவனுக்கு எவ்விதகவலையும் உளதோ? என்றாள் மாதரி

பின்பு மாதரி பெண்களிடம் அமுது படைக்க வேண்டிய பாத்திரங்களை உடனடியாக கொண்டு வந்து கொடுக்கும்படியாக உத்தரவிட்டாள் மாதிரியின் உத்திரவிற்கிணங்க இடைக்குலப் பெண்கள் சமையலுக்கான பாத்திரங்களைக் கொண்டு வந்து கொடுத்தனர்.

அதனுடன் பூவாமல் காய்க்கும் பலாக்காயினை இளங்கோவடிகள் எப்படி அழைக்கிறாரென்றால் மாண்புடைய மரபுடையது என்கிறார் இளங்கோவடிகள். அத்துடன் வெள்ளரி, மாதுளை, மாங்கனி, வாழைப்பழம், தம் குலத்திற்கே சிறப்பளிக்கக் கூடிய பால், தயிர், நெய் போன்றவற்றையும் உவந்தளித்தனர்.

இடைக்கால மங்கையர் உவந்தளித்த காய்களை அரிவாள் மனையில் தன் பூப்போன்ற கரங்களால் நறுக்கியதால் அக்கரங்கள் சிவந்தன முகம் வியர்த்து கண்கள் செம்மிளகாய்போல் சிவந்தன. கண்ணகி மூட்டிய அடுப்பிலிருந்து புகை ஏராளம் வந்தமையால் ஐயை அங்கு சென்று கண்ணகியின் சமையலுக்கு உதவிகள் புரிந்தாள். கண்ணகியும் தன் கணவனின் சுவைக்கேற்றார் போன்று பல்வேறு வகைகளை சமைத்து முடித்தாள்

பின்பு பனை ஓலையால் வேயப்பட்ட தடுக்கை விரிக்க கோவலன் அதன் மீதமர்ந்தான் பொற்குடத்தில் நீர் கொண்டுவரும் கண்ணகி

மட்குடத்தில் நீர் கொண்டு வந்தாள். மட்குடநீரினால் தன் கணவனின் பாதங்களை கழுவி வீழ்ந்து வணங்கி, அந்நீரினை நிலத்தில் தெளித்து மெழுகி, அதன்பின் வாழையின் குருத்தை கோவலன் முன்னே விரித்தாள். அதில் வெண்சோறு படைத்து தன் கணவனை உண்ணுமாறு அன்புடன் பணித்தாள்.

**தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்**
**கைவல் மகடு உக்**
**கவின் பெறப் புனைந்த**
**செய்வினைத் தவிசில்**
**செவ்வன இருந்த பின்**
**கடிமலர் அங்கையில்**
**காதலன் அடிநீர்**
**சுடுமண் அங்கையின்**
**தொழுதனள் மாற்றி,**
**மண்ணக மடந்தையை**
**மயக்கு ஒழிப் பனள்போல்,**
**தண்ணீர் தெளித்துத்**
**தன்கையால் தடவிக்**
**குமரி வாழையின்**
**குருத்தகம் விரித்து,**
**ஈங்க அமுதம் உண்க**
**அடிகள் ஈங்கு என....**

கோவலன், ஒரு அரசனுக்கு அடுத்தாற் போன்ற வணிகர்கள் உண்கையில் என்னென்ன செய்தபின்பு உண்ண வேண்டுமென வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, அனைத்தையும் செய்து முடித்த பின்பே உண்ணத் தொடங்கினான் அதனை மாதரியும், ஐயையும் கண்டு ரசித்தனர்.

கோவலன் உண்கின்ற காட்சியையும், கண்ணகி அதனைப் பரிமாறும் காட்சியையும் கண்ட ஆயர்குலப் பெண்கள் இருவரையும் கண்ணனாகவும், நப்பின்னையாகவும் நினைந்து புகழ்ந்தனர்.

**ஆயர்பாடியின் யசோதை பெற்றெடுத்த**
**பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ**

**நல்லமுது உண்ணும் நம்பி ஈங்கு**
**பல்வளைத் தோளியும் பண்டு நம் குலத்துத்**
**தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை**
**விழுமம் தீர்த்த விளக்குக் கொல்லென**
**ஐயையும் தவவையும் விம்மிதம் எய்திக்**
**கண்கொளா நமக்கிவர் காட்சி ஈங்கு என.**

கோவலன் உண்டு முடித்ததும் மெல்லிய தாம்பூலம் சுருட்டிக் கொடுக்க, கோவலன் கண்ணகியை உடல்நோகா வண்ணம் அணைத்தபடி,

“கூரியபடுக்கை போன்ற கற்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் நடந்துவர இப்பாதங்கள் வலிமை பெற்றிருந்தனவோ?” என்று கேட்டபடி மனம் வருந்தியவனாய் தமது பேச்சினை மேலும் தொடர்ந்தான்.

உன்னை இவ்வாறு வருத்தி அழைத்து வந்ததை எண்ணி என்தாய் தந்தையர் எத்துனை துயர் கொண்டனரோ? நான் செய்த செயல்கள் யாவும் ஏதோ ஒரு மாயையால் ஏற்பட்டதாகும். அச்செயல்கள், எப்படி ஏற்பட்டதென என்னால் அறிய முடியவில்லை. நான் பிறர் சொல் கேட்டலைந்து, பரத்தையர் பின் அலைந்தேன்’ ஏனையோர் என்னை ஏளனம் செய்தும் எள்ளி நகையாடும் படியும் என் செயல்களால், என் தலையாய கடமைகளை புறந்தள்ளினேன். உனக்கும் தீங்கிழைத்தேன் உன்னைக் காட்டு வழியே அழைத்து வந்து உன்னை நோகச் செய்தேன்.

“மதுரைக்குச் செல்ல என்னுடன் வா வென்றழைத்தும் உடனே எழுந்து வந்து விட்டாயே! எத்தகைய பெருந்தவறினை செய்துவிட்டாய்?”

மேலும் கவலை தோய்ந்தவனாய் :

**கல்லதர் அத்தம் கடக்க யாவதும்**
**வல்லுந கொல்லோ மடந்தை மெல்லடி என**
**வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி**
**எம்முது குரவர் என் உற்றனர் கொல்!**
**மாயம் கொல்லோ! வல்வினை கொல்லோ!**
**யானுளம் கலங்கி யாவதும் அறியேன்!**
**வறுமொழியாளரொடு வம்பப் பரத்தரொடு**
**குறுமொழிக் கோட்டி, நெடுநகை புக்குப்**

**பொச்சாப்பு உண்டு, பொருள் உரையாளர்**

**நச்சு கொன்றோர்க்கும் நன்னெறி உண்டோ?**

**இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்**

**சிறுமுதுக்குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்**

**வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கி ஈண்டு,**

**எழுகென எழுந்தாய்! என்செய் தனை?"**

கோவலன் தான் செய்த பிழைகளைப் பற்றிப் பேசியதோடல்லாமல், நான் தான் ஏதோ மயக்கத்தால் மதிகெட்டுப் போய் மதுரைக்குப் புறப்படு என்றவுடன் நீயாவது மறுத்திருக்கலாமே என்று கூறிய குற்றச்சாட்டினை கண்ணகியால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

அதன் காரணமாக தம்மனத்துள் தேங்கிய மனக்குமுறலை கடல் மடை திறந்தாற் போன்று மடமடவென வெளியிட்டாள். நிறுத்தாமல் பேசினாள். சட்டென தம் மனக்குமுறலை வெளிக்கொட்டி விட்டாள்.

ஐயா அறவாணர்களுக்கும் அந்தணர்களுக்கும் அமுதளித்த நமது மூதாதையர் செய்து வந்த தலையாய பணியானது தங்கள் பிரிவால் தடைபட்டது. என்னை உங்கள் தாயும் தந்தையும் காணவந்த போது தங்கள் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தை அவர்கள் தெரியாதவாறு மறைத்துக் கொண்டேன். அவர்கள் என் துன்பத்தை உணர்ந்து அவர்கள் அடி உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட அன்பினால் ஆறுதலான, அருள் நிறைந்த சொற்களால் என்னைப் பாராட்டுவார்கள். உடனே நான் நகை புரிவேன். அந்நகையே பொய்ப்புன்னகையென்று உணர்ந்து மன வேதனையுடன் செல்வார்கள். இவ்வாறு உங்களை ஈன்றோர் துன்புறும் படி ஒழுக்கமற்ற செயல்களைச் செய்தீர்கள். அப்பொழுதும் நான் உங்கள் சொல்லை மீறியதில்லை. ஆதலால் 'எழுக' என்று தாங்கள் சொன்னதும் அச்சொல்லை ஏற்று உங்களுடன் மதுரை வந்து சேர்ந்தேன்'' என்றாள்.

கண்ணகி உரைத்தக் கவின் மொழி :

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**

**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**

**விருந்து எதிர் கோட்டலும் இழந்த என்னை, நும்**

**பெருமகள் தன்னோடு பெரும் பெயர்த் தலைத்தாள்**

**மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்**
**முந்தை நில்லா முனிவு இகந்தன்னா**
**அற்பு ஊகம் சிறந்த ஆங்க அருள்மொழி அளைஇ**
**என்பா ராட்ட, யான் அகத்து ஒளித்த**
**நோயும் துன்பமும் நொடிவது போலும்: என்**
**வாய் அல் முறுவர்க்கு அவர் உள்ளகம் வருந்தப்**
**போற்றா ஒழுக்கம் புரிந்தீர்! யாவதும்**
**மாற்றா உள்ள வாழ்க்கையேன், ஆதலின்**
**ஏற்று எழுந் தனன்யான்!....”**

தாம் பல்லாண்டு காலமாய் மாதவியுடன் வாழ்ந்த போதும், எழுக என்றதும் மாற்றுப் பேச்சேதுமின்றி தம்முடன் வந்த கண்ணகி, தான் திருந்தி வந்ததும் ஏதும் பேசாத கண்ணகி, தாம் எதிர்பாராத தருணம் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்’ என்றதும் கோவலன் தேள் கொட்டியது போன்று துடித்தான், கூடவே திகைத்தான்.

**வளைந்தது செங்கோல் :**

கண்ணகியின் சுடு சொற்களை கேட்ட கோவலன் சினமுறாமல், மாறாக கண்ணகியைப் புகழ்ந்தான். நல்மொழிகளால் பாராட்டினான். கண்ணகியின் கோபத்தைத் தணிக்க ஆறுதல் மொழி பல உரைத்தான்.

‘கண்ணகி உன் சுற்றத்தையும், நட்பையும் பிரிந்தாய். ஆனால் அச்சம், மடம், நாணம், கற்பு எனும் நற்பண்புகளைப் பிரியாமல், உன்னுடன் என்னைப் பிணைத்துக் கொண்டு என்னுடன் வந்தாய். என் இடர்துடைத்தவளே! பூங்கொடியே, தேனினும் இனிய நல்மொழி பல பகற்பவளே! இருள் நீக்க வந்த ஒளிவிளக்கே! உன் பூம்பாதம்தனை எழிலூட்டி வந்த இருசிலம்புகளில் ஒன்றினை விற்று வருகிறேன். அதுவரை எவ்வித கலக்கமுமின்றி இங்கேயே இருப்பாயாக’’ என்று கூறினான்.

**குடிமுதல் சுற்றமும் குற்றினையோரும்**
**அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி**
**நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்**
**பேணிய கற்பும் பெருந்துணையாக**
**என்னோடு போந்து ஈங்கு என்துயர் களைந்த**

**பொன்னே கொடியே புனை பூங்கோதாய்!**
**நாணின் பாவாய்! நீன்நில விளக்கே!**
**கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!**
**சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான்போய்**
**மாறிவருவேன் மயங்காது ஒழிக.**

கோவலன் வரும் இடரை முன்கூட்டியே அறிந்தது போன்று வறியனாய் செல்லும் யான் வளம் மிக்கவனாய் திரும்பி வருவேன் என்று சொல்லாமல் ‘‘மாறி வருவேன்’’ என்று அமங்கலமாய் சொல்கின்றான். இவ்வாறு விடைபெறும் கோவலன் கண்ணகியை கட்டித்தழுவியவாறு விடைபெறுகின்றான். துணைக்கென்று யாருமில்லாகையால், கண்ணகியைத் தனியே விட்டுச் செல்ல மனம் வருந்தினான். தம் கண்ணில் முட்டிநின்ற கண்ணீரைக் கண்டால் கண்ணகியும் கலங்குவாள் என்றெண்ணி, கண்ணீரை அடக்கிக் கொண்டு, துயர் பல சுமையால் தாளாத உடல் தள்ளாடியவாறு சென்றான்.

அவன் அவ்வாறு செல்கையில் திமிலை நிறைந்த காளையொன்று அவன் மீது சீறிப்பாய்ந்து, அபசகுனத்தை எடுத்துக்காட்டியது. ஆனால் நடந்து விட்ட தீவினைகளுக்கு முன்பாக இச்சகுனம் ஒரு பொருட்டாகத் தெரியாமையால் கோவலன் தொடர்ந்து நடந்தவனாய் கடைவீதிக்குள் நடந்து சென்றான்.

அவ்வீதியில் எருது மீதேறி எமன் வருவது போன்று, அரண்மனைப் பொற்கொல்லன் தன் சகபொற்கொல்லர்கள் புடை சூழவந்து கொண்டிருந்தான். பொற்கொல்லனைக் கண்ட கோவலன் அவனிடம்,

**‘‘காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி**
**நீ விலையிடுதற்கு ஆதியோ?’’**

என்று கேட்டான்

அரசமாதேவியும் அணியத்தக்கவகையில் ஒரு காற்சிலம்பை நீ மதிப்பிட்டுக் கூறும் திறன் உள்ளவனோ? என வினவினான். கோவலனின் கேள்வியின் உட்பொருளை உணர்ந்து கொண்ட பொற்கொல்லன் :

அரசி அணியும் காற்சிலம்பு முதற்கொண்டு, மன்னன் முடியில் வீற்றிருக்கும் மகுடம் வரை மதிப்பிட்டுக் கூற தம்மால் முடியுமென தமது

தொழில் பிரஸ்தாபத்தைப் பற்றி பெருமை படக்கூறினான். பொற்கொல்லனின் திறன் பற்றி அறிந்து கொண்டே கோவலன் தன்னுடன் கொண்டு வந்திருந்த மூட்டையின் முடிச்சினை அவிழ்த்து, அதனுள்ளிருந்த சிலம்பினையெடுத்து பொற் கொல்லனிடம் கொடுத்தான்.

விலை மதிப்பிடமுடியாத அச்சிலம்பு சிறந்த பொன்னால் செய்யப்பட்டு, தலைசிறந்த மாணிக்க மணிகளும் வயிரமணிகளும் பதிக்கப்பட்டு அழகிய வேலைப்பாடுகள் பல மிகுந்த அச்சிலம்பின் சிறப்புகள் பற்றி பொற்கொல்லன் வியந்தான். இத்தனைச் சிறப்பு மிகு சிலம்பு அரசமாதேவிக்கன்றி வேறுயாருக்கும் பொருந்தாது. எனவே இதைப்பற்றி வேந்தனிடம் அறிவித்து வரும் வரை இங்கேயே இருங்கள் என்று பொற்கொல்லன் தனது வீட்டைக் காட்டிவிட்டு விரைந்தான்.

கோவலன் அவன் கூறியதை ஏற்றுக்கொண்டு அவன் வீட்டில் தங்காமல், அதன் அருகே அமைந்திருந்ததேவ கோட்டத்தின் மதிலினுள் சென்று தங்கினான்.

பொற்கொல்லன் மனிதனுள், தேவியின் சிலம்பினை தான் திருடியது வெளிப்படும் முன்பாக வேற்று நாட்டினைச் சேர்ந்த இப்புதியவன் மீது பழியைச் சுமத்தி, தனது திருட்டை மறைத்துக் கொள்ளலாம் என்று எண்ணியவனாய் பொற்கொல்லன் அரசனை நாடி ஓடினான்.

அச்சமயம் பாண்டியன் தம் அவையில் ஆடல், பாடல் போன்ற கேளிக்கையில் ஈடுபட்டு காதுக்கும், கண்ணுக்கும் விருந்தளித்துக் கொண்டிருந்தான். அத்தோடு ஆடல் நங்கையரின் அழகையும் ரசித்துக் கொண்டிருந்ததை கண்ணுற்ற கோப்பெருந்தேவி மன்னனுடன் ஊடல் கொண்டு, தலைவியென, கூறி அவையிலிருந்து எழுந்து அந்தப்புரம் நோக்கி நடந்தாள்.

அரசி எழுந்து சென்றபின் நிலைமையை உணர்ந்த பாண்டியன், அரியணையிலிருந்து எழுந்து பணிப்பெண்கள் பின் தொடர அந்தப்புரம் நோக்கிச் சென்றான். அரசன் அந்தப்புரத்தின் வாயிலை அடைகையில் பொற்கொல்லன் மன்னவன் காலில்வந்து வீழ்ந்தான்.

“அரசே! கன்னக்கோல் வைக்காமல், தன்புகழையே வாழ்நாளெல்லாம் உச்சரிக்கும் வாயிற்காப்போரையும் மதி மயங்கச் செய்து, தேவியின் கால்களை அலங்கரித்த சிலம்பினை அபகரித்துச் சென்ற கள்வன், நமது

மாநகரக் காவலர்களால் கூட கண்டுபிடிக்கமுடியாத அக்கள்வன், எனது சிறிய வீட்டில் உள்ளான்'' என்று கூறினான்.

இதுகேட்டு, வேப்பமாலையை மார்பில் அணிந்திருந்த பாண்டியமன்னன், என் தேவியின் கால்களைத் தழுவிய சிலம்பினைத் திருடிய, இவன் கூறிய கள்வனின் கையிலிருந்தால் ''அவனைக் கொன்று சிலம்பினை கொண்டு வருக'' என்று காவலர்களை அழைத்துச் சிறிதும் ஆராயாமல் கட்டளையிட்டான்.

**வினை விளைகாலம் ஆதலின், யாவதும்**
**சினை அலர் வேம்பன் தேரோன் ஆகி,**
**ஊர்காப் பாளரைக்கூவி, ஈங்குஎன்**
**தாழ்பூங் கோதை தன் கால் சிலம்பு**
**கன்றிய கள்வன் கையது ஆகில்**
**கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு**

அச்சிலம்பைத் தந்து தேவி தன் மீது கொண்ட ஊடலைத் தணிக்கக் கருதிய மன்னன் ''கள்வனைக் கொல்லச் சிலம்புடன் கொண்டு வாருங்கள்'' என்பதற்குப் பதிலாக வாய்த்தவறி அவ்வாறு சொன்னான். விதியின் கொடுமை இதுவன்றோ! இது. மன்னவன் சித்தம் போல நடக்கின்றேன் என்று விரைந்தான் பொற்கொல்லன்.

**மாபாதகம்**

பார்போற்றும் பாண்டியன் வேறு பொருள்படும்படி ஏன் கூறினான்? அதற்குரிய காரணங்கள் என்ன?

அவை நடுவே பாண்டி மாதேவி இவனுடன் ஊடல் கொண்டு பிரிந்து சென்றது.

அத்தருணத்திலும் அரசன் அவையிலேயே இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதது. அவ்வாறு அவன் அவையிலேயே இருந்திருப்பின், பொற்கொல்லன் அவையிலேயே அறிவுள்ளோரும், ஆன்றோரும், அமைச்சரும் வீற்றிருக்கும் மத்தியில் அப்பொய்குற்றச் சாட்டைக் கூறியிருப்பின், அவையோர்கள் அப்பொய்யுரையை அலசி ஆராய்ந்து உண்மை நிலையை வெளிப்படுத்தியிருப்பார்கள். பாண்டியனும் தவறியிருக்க மாட்டான்.

அமைச்சர் சுற்றம் சூழாது, பணிப்பெண்கள் புடை சூழ சென்றமையால், மன்னனிடம் இவைபற்றி கருத்துச் சொல்ல முடியாது.

மன்னனின் நீதி தளர்ந்து காமம் தலைதூக்கியதால், அக்காமத்தை தன் தேவியிடம் தெரிவிக்க சிலம்பு ஒரு காரணமாயிருக்குமென உணர்ந்து பாண்டியன் நீதி தவறி சிந்தியாமல் கட்டளையிட்டான்.

ஆடவர்கள் யாருமின்றி, பணிப்பெண்கள் மட்டுமே உள்ள சமயத்தில் அந்தப்புரவாயிலில் அரசனை பொற்கொல்லன் சந்தித்தான். அதனால் பாண்டியன் பிழைத்திருந்த யாருமற்ற சூழ்நிலை அமைந்துவிட்டது.

அக்காலம் வினைவிளை காலமென்பது எல்லாவற்றிற்கும் மேலான முக்கிய காரணமாகும். வினை விளைவிக்கும் விபரீதத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

எனவே பாண்டியன் பிழை சொல் உரைத்து பழிசேர்த்துக் கொண்டான்.

பொற்கொல்லன் தனது சூழ்ச்சி வலையில் பாண்டியனை விழவைத்துவிட்ட மகிழ்ச்சியுடன் கோவலனைக் கொல்லவே ஆணைபெற்றுவிட்டான். அதனால் காவலர்களுடன் திரும்பி வந்தான்.

தீவினை விரித்தப் பாழ்வலையில் சிக்குண்ட கோவலன் வேறெங்கும் செல்லாமல் முன்பிருந்த இடத்திலேயே காத்திருந்தான். பொற்கொல்லன் தாம் அழைத்து வந்த காவலாட்களை கோவலனிடம் காண்பித்து,

“இவர்கள் மன்னவனால் அனுப்பிவைக்கப்பட்ட வீரர்கள் உன்னிடமுள்ள சிலம்பை பார்வையிட வந்துள்ளனர்” என்று கூறினான்.

கோவலனிடமிருந்த சிலம்பை வாங்கிய பொற்கொல்லன், காவலாட்களை தனியிடத்திற்கு அழைத்துச் சென்று சிலம்பினை காண்பித்து, இது தேவியின் சிலம்பு என்று அவர்களை நம்பவைத்தான்.

பொற்கொல்லன் சொன்னதை கேட்ட பின்பு காவலன்

**“இலக்கண முறைமையின் ருந்தோன் ஈங்கு இவன்**

**கொலைப்படும் மகன் அலன்”**

என்று கூறினார்.

தான் பின்னிய சூழ்ச்சிவலை அறுபடுமோ என எண்ணிய பொற்கொல்லன், கள்வர்களைப் பற்றியும் அவர்கள் செய்யும் கபட நாடகங்களைப் பற்றியும் காவலர்களிடம் எடுத்துக் கூறினான்.

பொற்கொல்லனின் பொய்யுரைகளைக் கேட்ட காவலர்களில் ஒருவன், அவன் கூறியவற்றையெல்லாம் ஆமோதித்தவனாய், ‘‘நாம் இவனைக் கொல்லாமல் திரும்பிச் சென்றால் அரசன் நம்மைத் தண்டிப்பான். எனவே நாம் இப்போது செய்ய வேண்டியதை உடனடியாக சொல்லுங்கள்’’ என மற்ற வீரர்களிடம் கூறினான்.

உடனே அவ்வீரர்களுள் ஒருவனான கல்வி அறிவற்ற, மூடனும் குடிகார வீரனொருவன் தன்வாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினான்.

இக்கோரச் சம்பவத்தைக், குலை நடுங்கும் பாதகச்செயலை சிலம்பு கண்ணீர் சிந்தியபடி கூறுகிறது.

**‘‘கல்லக் களிமகன் ஒருவன் கையில்**
**வெள்வாற் எறிந்தனன், விலங்கு ஊடு அறுந்தது**
**புண்உமிழ் குருதி பொழிந்து உடன்பரப்ப**
**மண்ணக மடந்தை வான்துயர் கூரக்**
**காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்**
**கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து என்.**

உலகம் சமைந்த காலந்தொட்டு பாண்டியன் செங்கோல் வளைந்தது கிடையாது. அது தலைச்சங்க காலமாயினும்சரி. இடைச்சங்க காலமாயினும் சரி. இக்காலங்களில் வளையாதசெங்கோல் கடைச்சங்ககாலத்தில் வினைசெய்த விளைவால் வளைந்தது.

**தீச்சகுனங்கள்**

பாண்டியன் அரண்மனையில் காலைமுரசு முழங்கியது. அன்று அரண்மனைக்கு நெய்யளக்கும் முறையாதலால் ஐயையை அழைத்து, தயிர்கடையச் சென்றாள். தாழியைத் திறந்து பார்க்கையில், பால் உறையவில்லை. பட்டியலில் கட்டிய காளைகள் கண்ணீர் சொரிந்தது. நேற்று எடுத்து வந்த வெண்ணெய்யும் உருகவில்லை. ஆட்டுக்குட்டிகள் துள்ளிவிளையாடாமல் சோம்பிக் கிடந்தன. பசுக்கள் உடல்நடுங்கி நின்றன. அவற்றின் கழுத்து மணிகள் அறுத்து வீழ்ந்தன. இவற்றையெல்லாம் கண்ணுற்ற ஐயை இன்றேதோ துன்பம் நிகழப்போகிறது என அஞ்சினாள்.

இதனைக் கண்ணுற்ற மாதிரி அவளைத் தேற்றினாள். ஐயையின் அச்சத்தை மாதிரி தீய நிமித்தங்கண்டு மனம் நொந்து பேசினாள்.

**மாதரி தீய நிமித்தங்ககண்டு மனம் நொந்து பேசினாள்**

**குடப்பால் உறையா:குவி இமில் ஏற்றின்**

**மடக்கண் நீர் சோரும் :வருவது ஒன்று உண்டு**

**உறிநறு வெண்ணெய் உருகா உருகும்:**

**மறிதெறித்து ஆடா:வருவது ஒன்று உண்டு**

**நான்முலை ஆயம் நடுங்குபு நின்று இரங்கும்**

**மான்மணி விழும் : வருவது ஒன்று உண்டு.**

மாதரிதான் கண்டதீக்குறிகளை தன்மகள் ஐயையிடம் தெரிவிக்கின்றாள்.

மகளே! தீங்குவரப்போகிறது. அதற்காக மணங்கலங்க வேண்டா. ஆயர்பாடியில் கண்ணன் பலராமனுடன் ஆடிய நாடகங்களில் ஒன்றான குரவைக்கூத்தை ஆடுவோம் 'பசுக்களும் கன்றுகளும் இடர் நீங்கி வாழ்க' எனக்கூறி நாம் ஆடிக்காட்டுவோம்'' என்று கூறி குரவைக் கூத்தை அரங்கேற்றினார்கள். மாயவன் திருமாலின் பெருமை சொல்லற்கரியது அவன் அழகைக்கண்டு மயங்கும் மகளிர், அவனது புல்லாங் குழலோசையைக் கேட்டு மயங்கினர்.

**கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்**

**இன்றுநம் ஆனுள் வருமெல், அவன்வாயில்**

**கொன்றை அம் தீங்குழல் கேளாமோ தோழீ!**

**பாம்பு காயிறாக் கடல் கடைந்த மாயவன்**

**ஈங்கு நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்**

**ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழி!**

**கொல்லை அம்சாரல் இருந்து ஒசித்த மாயவன்**

**எல்லைநம் ஆனுள் வருமேல், அவன் வாயில்**

**முல்லை அம்தீங்குழல் கேளாமோ தோழி!**

வஞ்சனையால் கன்று வடிவில் பசுக்கூட்டத்துக்குள் நின்ற ஒருவன் அதை அறிந்தான். கண்ணன் அந்தக் கன்றைப்பற்றி யெடுத்து அதையே குறுந்தடியாகப் பயன்படுத்தினான். வாசுகியெனும் பாம்பைக் கயிறாக்கி மேரு மலையைமத்தாகப் பிணைந்து பாற்கடைலைக் கடைந்த கண்ணன் அவன் நம் பசுக்கூட்டத்தின் நடுவே வந்தால் அவன் ஊதும் ஆநிரைமேய்த்து,

குருந்த மரத்தையும் முறிந்த திருமாலே இந்தப்பாண்டியன் ஆவான் என்று கூறுவதுண்டு.

**கோவாமலை ஆரம், கோத்த கடல் ஆரம்**
**தேவர் கோன் பூண் ஆரம் தென்னர்கோன் மார்பினவே,**
**தேவர்கோன் பூன் ஆரம்பூண்டான், செழுந்துவரைக**
**கோகுலம் மேய்த்துக் குருந்து ஒசித்தான் என்பரால்**

பொன்மய இமயமலை சிகரத்தில் புலிச்சின்னத்தினைப் பொறித்து அம்மலைக்குத் தெற்கேயுள்ள நிலம் முழுவதையும் ஆட்சி செய்தவன் சோழனாவான். போரில் சிறந்த அழகிய சக்கரப்பட்டையை உடையவன் திருமால் என்று கூறுவார்கள்.

**பொன் இமயக் கோட்டுப்**
**புலிபொறித்து மண் ஆண்டான்**
**மன்னன் வளவன்**
**மதில் புகார் வாழ்வேந்தன்,**
**மன்னன் வளவன்**
**மதில் புகார் வாழ்வேந்தன்,**
**பொன் அம்திகிரிப்**
**பொருபடையான் என்பரால்,**

கடலின் உள்ளே புகுந்து சென்று என்றும் இளமையான வஞ்சி நகரில் வாழ்கின்ற சேரமன்னன் ஆவான் வளமான வஞ்சி வாழசேரன் மலைபோன்ற தோள்களை திரட்டி பாற்கடற்கடைந்த திருமால் ஆவான் என்று கூறுவதுண்டு.

முந்நீரின் உன்புக்கு மூவாக் கடம்பு எறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னலில் தோள் ஓச்சிக் கடல் கடைந்தான், என்பரால்

குரவையாடும் குமரிப்பெண்கள்தாம் வணங்கும் கண்ணனை முன்னிலைப்படுத்திப் போற்றிப்பாடுகிறார்கள்.

தேவர்கள் தொழுகின்ற திருமாலே, உன்செங்கமலப்பாதம் இண்டால், முன்று உலகங்களும் இருள் நீங்கும்படி நடந்தாய், இவ்வாறு நடந்த அதே பாதங்கள் பாண்வருக்காக தூது சென்றன. நரசிங்கரூபத்தில் பகையை அழித்த திருமாலே, என்னே நின்மாயம்!

இவ்வாறு இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றிப் பாடியவர்கள், திருமாலைப்படர்கையில் பாராட்டிப் பாடி பரவச நிலையை அடைந்தவர்கள்.

**மூவுலகும் ஈரடியான்**
**முறைநிரம்பா வகைமுடியத்**
**தாவியசே வடிசேப்பத்**
**தம்பியொடும் கான்போந்து**
**சேர அரனும் போர்மடியத்**
**தொல் இலங்கை கட்டழித்த**
**சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே!**
**திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே!**
**பெரியவனை மாயவனைப்**
**பேர் உலகம் எல்லாம்**
**விரிகமல உந்தியுடை**
**விண்ணவனைக் கண்ணும்**
**திருவடியும் செய்ய**
**திவாயும் செய்ய**
**கரியவனைக் காணாத**
**கண் என்ன கண்ணே!**
**கண் இமைத்துக் காண்பார்தம்**
**கண் என்ன கண்ணே!**
**மடம்தாகும் நெஞ்சத்துக்**
**கஞ்சனார் வஞ்சம்**
**கடந்தானை, நூற்றுவர் பால்**
**நாற்றிசையும் போற்றப்**
**படர்ந்து ஆரணம் முழங்கப்**
**பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை ஏத்தாத**
**நாஎன்ன நாவே!**
**நாராயணா என்ன நா**
**என்ன நாவே!**

திருமாலே நீர் கேட்பதே செவி. கேளாதது செவியென்று குறிப்பிடலாமா? மணிசெவிகேளாது. மரச்செவி, மண்செவி, கல் செவியென்று இகழ்கிறார் அடிகளார். காணாத கண்ணும், நவிலாத நாவும் கூட இங்கு கேளாத செவியைப் போன்றதே, அவை மனித உறுப்புகள் அல்ல மர – மண்கல் உறுப்புகளாகும்.

திருமாலைக் கண்டும் கேட்டும் புகழாத உறுப்புகள், புகழும் உறுப்புகள் புனிதமானவை.

**“கோத்த குரவையுள் ஏத்தியதெய்வம் நம்**
**ஆத்தலைப்பட்ட துயர்தீர்க்க”**

என்று பாண்டியனின் புகழ்பாடி ஆய்ச்சியர் குரவையை முடிக்கின்றனர் மாதரியும் ஏனையோரும்.

குரவைக் கூத்துபாடிய தெய்வங்கள் நம் பக்தர்களின் குறையை போக்குக என்று கூறி குரவையை முடிக்கின்றனர். முடிக்குமென நிரம்புகின்றனர்.

## கற்புக்கரசியின் கண்ணீர்

கோவலன் கொலையுண்ட செய்தி, காட்டுத் தீ போன்று ஊரெங்கும் பரவியது. புறஞ்சேரியில் கூத்து முடிந்ததும் மாதரி வையை நதியில் நீராடி திருமால் கோயிலுள் சென்று வழிபடச் செல்லும் நேரத்தில், ஊர்ச்செய்தி கேட்ட ஐயை விரைவாக ஓடிவந்து, தன் தாயிடம் தெரிவித்தாள். ஆய்ச்சியரிடையே இத்தீச் செய்தி விரைந்து பரவியது அனைவரும் செய்வதறியாது திகைத்தனர் திடுக்கிட்டனர். கண்ணகியின் இளமையும், வனப்பையும், அழகையும், நற்குணத்தையும், கற்பையும் கண்டு இப்பேரெழில் நங்கைக்கு இவ்வாறு நேர்ந்து விட்டதேயென பொருமியழுது நின்றனர்.

ஊர் சொல்லாவிட்டாலும் உள்ளம் தெரிவிக்காமலாப் போய்விடும்? வீடு விட்டுச் சென்ற மணாளன் திரும்பாததால் கண்ணகி மனம் மிக கலக்கமுற்றவளாய், தன் மனக்கலக்கத்தை ஐயையிடம் தெரிவிக்கின்றாள்.

**“காதலற் காண்கிலேன்! கலங்கிநோய் கைம்மிரும்**
**ஊதுலை தோற்க, உயிர்க்குமென் நெஞ்சென்றே**
**ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்,**
**ஏதிலார் சொன்ன தேவன் வாழியோ தோழி!”**

**"நண்பகற்போதே, நடுக்குநோய் கைம்மிகும்:**
**அன்பினைக் காணாது அலவுமென் நெஞ்சென்றே**
**அன்பனைக் காணா தலவுமென் நெஞ்சாயின்,**
**மன்பதை சொன்னதேவன் வாழி யாதோழி!"**
**"தஞ்சமோ தோழி! தலைவன் வரக்காணேன்!**
**வஞ்சமோ வுண்டு: மயங்குமென் நெஞ்சன்றே**
**வஞ்சமோ வுண்டு மயங்குமென் நெஞ்சாயின்,**
**எஞ்சலார் சொன்னதெவன் வாழியோ தோழி!"**

இவ்வாறு கண்ணகியின் கலக்கத்தைக் கண்ணுற்ற ஐயை கோவலன் கொலையுண்ட செய்தியை மனந்திறந்தே சொல்லிவிட்டாள்.

ஆயிரம் மின்னல்கள் உடலெல்லாம் பரவியது போலானாள் கண்ணகி. என் செய்வாள் அம்பத்தினி. துயரத் தூண்டிலில் சிக்கினாள் ஏந்திழையாள். துயர வேள்வியில் மூழ்கினாள். நாட்டியக்கணிகை மாதவியின் மோகத்தின் தன் கணவன் வீழ்ந்தமையால், சுகமிழந்தாள், சொத்து இழந்தமையால் கணவன் வறியவனானான். தம் வீடு வாசலையெல்லாம் விட்டொழிந்து, சிலம்பு விற்றுப் பிழைக்கலாமென்று காடு, மேடு, கழனியெல்லாம் கடந்து முட்களையும் கற்களையும் தாங்கி துயருற்று மதுரை சென்று சிலம்பு விற்றுப் பிழைக்கலாம் மென்று தன்னை அணைத்து விடைபெற்றுச் சென்ற உத்தமக் கணவன், நலமொன்றேயறிந்தே அக்கணவன் திருட்டுக் குற்றத்திற்காக கொலையுண்டான் என்றால், யாருமற்ற அப்பத்தினியின் துன்பத்தை வார்த்தைகளால் உரைக்கவும் முடியுமோ. சிலம்பை அரண்மனையில் திருடினான் என்ற பொய்யுரையை அப்பத்தினியால் தாங்கவும் முடியுமோ?

பொங்கினாள் கண்ணகி! "ஆ, எனதருமைக்காதலா" என இடிவீழ்ந்த கொடியென வீழ்ந்தாள். வானத்தில் நடமாடும் கதிரவனே தடுமாறி பூமியில் வீழ்ந்தது போல கண்ணகி வீழ்ந்தாள். செங்கண் மேலும் சிவப்பேற அழுதாள்.

என் தெய்வமே! நீ எங்கு சென்றாய்? என்னுடன் கூடி மகிழ்ந்த உன்னை அக்கினி உண்பதோ? அவ் எரியில் நான் மூழ்காமல் உயிருடன் வாழ்வதோ? நீதி தேவன் தவறிழைத்தான், மன்னவன் தவறிவிட்டான். அறம்

நழுவிய மன்னவனை சும்மா விடுவதோ! அறக்கடவுளே நீயும் அறவிழந்தனையோ? எனக்காக இரங்குவர் யார் உளரோ அந்தோ என் தெய்வமே.

"தம்முது பெருங்கணவன் தழலெரியக மூழ்கக்

கைம்மை கூர் துறைமூழ்குங் கவலையை மகளிரைப் போல செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவழிழைப்ப இம்மையும் இசையொரீஇ இணைந்தேங்கியழிவலோ?"

"தீயசகுனங்கள் கண்டு குறவையாடிய ஆய்ச்சியரே கேளுங்கள்! காய்கதிர்ச் செல்வளே இவ்வுலகின் நடப்பினைப் பற்றி நீமுற்றும் அறிந்தவன். எனவே நீ சொல், என் கணவன் கள்வனா? என்றாள் பத்தினி கண்ணகி.

அப்பொழுது,

**"அல்லன்! கருங்கயற்கண் மாதராய்!**

**ஒள்ளரி யுண்ணுமிவ் வூர்!"**

"உன் கணவன் கள்வனல்ல" கருங்கயற் கண் மாதரசே! அப்படிப் பொய்க் குற்றஞ்சாட்டி உனது உத்தமர் கணவனைக் கொன்ற பாண்டியன் நகரமாகிய இவ்வூர் தீப்பட்டெரியும்" என்ற ஓர் அசரீரி கேட்டது.

## கண்ணகி வழக்கு

வாளாவிருந்தாளா கண்ணகி! மற்றொரு சிலம்பைத்தன் கையிலெடுத்தாள்: ஆயர்பாடியை சென்றடைந்தாள். நகரிலுள்ள மகளிரிடம் சென்று மன்னனின் அநீதியைச் சொல்லி முறையிட்டாள்.

**"முறையில் அரசந்த னூரிலிருந்து வாழும்**

**நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கள் ஈதொன்று**

**பட்டேன் படாததுயரம்: படுகாலை**

**உற்றேன் உறாத துறுவனே யீதொன்று:**

**கள்வனோ அல்லன்: கணவன் என் காற்சிலம்பு**

**கொள்ளும் விலைபொருட்டாற் கொன்றாரே ஈதொன்று**

**மாதர்த் தகைய மடவார்கள் முன்னரே**

**காதற்கணவனைக் கண்டால் அவன் வாயில்**

**தீதறு நல்லுரை கேட்பனே ஈதொன்று**

**தீதறு நல்லுரை கேளா தொழிவனேல்**

**நோதக்க செய்தானென் றெள்ளல் இதுஒன்று"**

"நியாயத்தைப்பாராமல், சிந்தனையற்றுஒரு பிழையும் செய்யாத என் புண்ணியனைக் கொன்றானே உமது மன்னன்! அந்த முறைகெட்ட மன்னவன் கீழ்வாழும் பத்தினிப் பெண்களே என் முறையீட்டைக் கேளுங்கள். என் வாழ்வில் நான் பட்டப்பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல! வேதனைகள் எல்லாவற்றையும் பொறுத்தேன். மேலும் என்னால் தாளாத துயரத்தில் ஆழ்ந்தேன். என் கணவன் கள்வனல்லன்: அவன் மேற்குடியில் பிறந்த உத்தமன். என் காற்சிலம்பில் ஒன்றை விற்க இந்நகருக்கு வந்தான். இதோ அதன் இணையான மற்றொரு சிலம்பு என்னிடம் உள்ளது. நான் என் கையால் ஈன்ற அச்சிலம்பு எங்ஙனம் பாண்டியமா தேவியின் சிலம்பாகும்? என் கணவன் எப்படித் திருடனாவான்? அந்தோ அநியாயமாய் என் கணவனைக் கொன்று விட்டார்களே. இனி என் கண்ணாளனைக் காண்பது எப்போது? என் கற்பின் திறனால் அவன் உயிர் பெற்றெழச் செய்து, நல்லுரை கேட்பேன். அவ்வாறு நிகழாது போனால் பின் என்னைத் தீயென்று இகழ்ந்து பேச அதுவே நல்ல காரணமாகிவிடும்.

இவ்வாறு துயருற்று இடர்பட்டு அழும் கண்ணகியைப் பார்த்து மதுரை வாழ்மக்களும் கண் கலங்கினர். இப்பத்தினித் தெய்வத்திற்கு பாண்டியன் இழைத்த கொடுமையால், மன்னவன் நீதி கெட்டது. வளையாத கோலும் வளைந்தது. மேற்கொண்டு என்னென்ன நடக்குமோ? தென்னவன் கொற்றம் வீழ்ந்தது.

**"களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி**

**வளையாத செங்கோல் வளைந்த திது வென்கொல்!**

**மண்குளிரச் செய்யு மறவேல் நெடுந்தகை**

**தண்குடை வெள்ளம் விளைந்த திது வெண்கொல்!**

**செம்பொற் சிலம்பொன்று கையேந்தி தம் பொருட்டால்,**

**வம்பப் பெருந்தெய்வம் வந்த திது வென்கொல்!"**

பலர் நீதி தவறிய பாண்டியனைத் தூற்றினர். சிலர் கோவலன் வெட்டுண்டு கிடக்கும் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்று காட்டினர்.

கண்ணகி வெட்டுண்டு இரத்த சகதியில் கிடக்கும் தன் கணவனின் பூ உடலைக் கண்டாள். கதிர் வீசிய கதிரவன் தன் கதிர்களை சுருக்கி அஸ்தமன் கிரியில் போய் மறைந்து கொண்டான், இக்கொடுமையை காணச்சகியாது. பூங்கோதையின் அரற்றலால் ஊரே அழுதது.

அந்தோ என்னே பரிதாபம்! இன்று வையறைப் பொழுதில் மார்புற அணைத்துக் கொண்ட என் கண்ணாளனின் பூவுடல் புழுதியில் புரள்வதோ, என் துயரைக் காணீரோ! நான் இடர்படுவேனென்றோ கண்மூடிக்கிடக்கின்றீர். மன்னன் இக்கொலைத் தொழிலைச் செய்தானோ! என் முற்பயன் தீவினையால் இப்பிறவியில் இத்துயர் ஏற்பட்டதென்று இப்பூவுலகில் உள்ளோர் விளம்புவார்களோ!

**யாருமில் மருண்மாலை, இடருறு தமியேன் முன்**
**தார்மலி மணி மார்பந் தலைமூழ்கிக் கிடப்பதோ**
**பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப,**
**ஈர்வதோ வினை காணா இது வென வரையாரோ!**

இவ்வூரில், பத்தினிப் பெண்டிரும், சான்றோரும் தெய்வமுண்டோ? உண்டானால் இந்த அநியாயம் நடக்குமோ?

**“பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?**
**கொண்ட கொழுநர் உறுகுரை தாங்குறூ உம்**
**பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?**
**சான்றோரும் உண்கொல் சான்றோரும் உண்டுகொல்**
**ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூ உம்**
**சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?**
**தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?**
**வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்**
**தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?”**

கண்ணகி இவ்வாறு முறையிட்டழுது புலம்பினாள். கணவனின் மார்பை இறுகத்தழுவினாள். உடனே இறந்த கோவலன் எழுந்தான்!” அந்தோ உன் முழுமதி போன்ற உன் முகம் கன்றியதே என விசனித்து அவள் கண்ணீரை மாற்றினான். கண்ணகியின் அழுதேங்கியவதனத்தை வருடினான். அவள் கரம்

பற்றினான் அவன் “ நீ இருக்க” என்று சொல்லித் தேவர் குழுவுடன் சேர்ந்தான்.

“என்ன மாயமிது என் தெய்வமே! என்ன இது? கணவன் எழுந்தான்! விழுந்தான்! மறைந்தானே! நான் அவனைத் தேடுவேன்: அவனைக் கூடுவேன். எனினும் நான் கொண்ட சினம் தணிந்த பின்பே கணவனைக் கூடுவேன். அந்த மன்னனைப் பார்த்து என் கணவனை ஏன் அநியாயமாகக் கொன்றாய்? என கேட்பேன். இவ் அநீதியைக் கேளாமல் விடேன் - இதோ செல்கிறேன் என எழுந்தாள் - விரைந்தாள்.

தான் கண்ட தீக்கனவை நினைந்தாள். கண்ணீர் சொரிந்தாள்: நின்றாள்: தன்பக்கம் உள்ள நியாயத்தை உணர்ந்தாள். வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். மன்னவன் வாயில் சென்றடைந்தாள்.

## கோப்பெருந்தேவியின் கனவு

கண்ணகி பாண்டியன் அவையை அடையும் முன்னர், அந்தப்புரத்தில் கோப்பெருந்தேவி ஒரு தீக்கனா ஒன்றைக் கண்டாள். அக்கனா பற்றி தேவி தம் தோழியரிடம் உரைக்கவில்லை.

“தோழி நம் கொற்றவன் வெண்குடையும், செங்கோலும் வீழக்கண்டேன். அரண்மனை வாயிலில் உள்ள ஆராயச்சி மணி தொடர்ந்து ஒலித்ததையும் கனவில் கண்டேன். அவ்வொலி ஆயிரம் பேரிடிகள் என் தலைமீது வீழ்ந்தது போல் உணரக்கண்டேன். எல்லா திசைகளும் அதிர, கதிரவனை இருள் விழுங்கியது. நடுநிசியில் வானவில் தோன்றியது. ஒளிமிக்க விண்மீன்கள் பகற்பொழுதிற் வீழக்கண்டேன். நான் கண்ட கனவினால் ஏதோ இடர் நிகழப் போகிறது எனத் தெரிகிறது. இதனை உடனே மன்னனிடம் சென்று தெரிவிப்போம்.

**“செங்கோலும் வெண்குடையும் செறிநிலத்து மறிந்து வீழ்தரும்**
**நம்கோன்தன் கொற்றவாயில் மணிநடுங்க, நடுங்கும் உள்ளம்**
**இரவு வில்லிடும் பகல்மீன் விழும்**
**இருநான்கு திசையும் அதிர்ந்திடும் வருவது ஓர் துன்பம் உண்டு**
**மன்னர்கு யாம் உரைத்தும்...”**

கோப்பெருந்தேவி அரசிக்குரிய பரிவாரங்களுடன் புறப்பட்டாள். உடன் வந்த மகளிர்: பாண்டிமா பெருந்தேவி வாழ்க'' என வாழ்த்தொலி எழுப்பினார்கள். மரணம் அவளையும் அவள் கணவன் பாண்டியனையும் தழுவ இருப்பதை அறியாது அவர்கள் வாழ்த்தினார்கள்.

அவையை அடைந்த தேவி தமக்குரிய அரியணையில் அமர்ந்தவாறு தான் கண்ட தீக்கனாவினைப் பற்றி பாண்டியனிடம் தெரிவித்தாள். அரசி கூறி முடிக்கும் நேரத்தில் அரண்மனை வாயிலில், கண்ணகி, ''வாயிலோயே! வாயிலோயே!'' என்று கூவி அழைத்தாள்.

## <u>யானோ அரசன்? யானே கள்வன்?</u>

வாயிலை அடைந்த கண்ணகி தான் யார் என்பதையும் தான் மன்னனைக் காண வந்திருப்பதையும் கூறினாள்.

''வாயில் காப்போனே! வாயில் காப்போனே! அறமற்ற, அறிவற்ற, நீதிபிறழச் செய்த அரசனின், வாயிலை காத்து நிற்போனே, பரல்களை உடைய சிலம்பொன்றினை கையில் தாங்கிய கணவனை இழந்த பெண்ணொருத்தி வாயிலில் வந்து நிற்கிறாள் என்பதை உன் அரசனிடம் அறிவிப்பாயே! அறிவிப்பாயே!

**''வாயி லோயே! வாயிலோயே! அறிவு அறை போகிய**
**பொறி அறு நெஞ்சத்து இறை முறை பிழைத்தோன்**
**வாயிலோயே!**
**இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்**
**கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று**
**அறிவிப்பாயே! அறிவிப்பாயே!''**

கண்ணகி இருமுறை வாயிலோயே என்றும் அறிவிப்பாயே! என்றும் கூறியதால் கண்ணகியின் அவசரத்தை உணர்ந்த வாயிற்காப்போன், கண்ணகியின் தோற்றத்தையும் கண்டு அஞ்சிய அவன், நொடியும் தாமதியாமல் வாயிலை விட்டுக் கோயிலுக்குள் நுழைந்து கோவேந்தன் முன்பு நின்றான்.

**''வாழி என் கொற்கை வேந்தே வாழி!**
**தென்னம் பொருப்பின் தலைவ வாழி!**

**செழிய வாழி! தென்னவவாழி!**

**பழியொரு படராப் பஞ்சவ வாழி!”**

இவ்வாறாக மரபு பிழையின்றி வாழ்த்தி, பிறகு செய்தியை தெரிவிக்கின்றான். வாசலில் வீராவேசத்துடன் பெண் ஒருத்தி வந்திருக்கின்றாள். அவர் மகிஷாசுரமர்த்தினியான, வெற்றிவேல் பிடித்த கொற்றவையல்லள்: அவள் ஆறு சக்திகளுக்கும் இளைய பிடாரியும் அல்லள்: தாருகன் மார்பைக் கிழித்தெறிந்த கொடிய வீரமாகாளியுமல்லள். ஆனால் அவளைக் காண்கையில் பயங்கர தோற்றம் கொண்டவளாயிருக்கிறாள். அவள் முகத்தில் வெறுப்பே மேலோங்கி நிற்கிறது. அவள் மனத்துள் சினம் கொழுந்து விட்டெரிகிறது. கையில் வேலைப்பாடுகள் மிகுந்த சிலம்பொன்று உள்ளது. கணவனை இழந்த அவள் நமது கடைவாசலில் நிற்கின்றாள்!”.

அதர்மம் முன்பு, தருமதேவதை போன்றும், பொய்யின் முன்பாக மெய்யாகவும், தீராப்பழிமுன்பு, அறம் போன்றும் குற்றமற்ற கோவலனைக் கொல்லக் காரணமாயிருந்த பாண்டியன் முன்பே வீரபத்தினி கோபம் கொப்புளிக்க நின்றாள். பாண்டியன் அப்பத்தினியை உற்று நோக்கினான்.

பாண்டியன் - மடக்கொடியே, நீர்சொரியும் கண்ணியே!

என்முன் இக்கோலத்துடன் நிற்கும் நீ யார்? பாண்டியனின் இனிமையும், கனிவும் கண்ணகியின் இதயத்தைத் தொடவில்லை. ‘யார்?’ என்று கேட்டதே அவளுக்கு கோபத்தை மூட்டியது. பாண்டியன், சிலம்பு காரணமாக தான் நிகழ்த்திய கொலையை முற்றும் மறந்தவனாய் நீ யார் என்றன அழைக்கின்றாய் நான் யாரென்று தெரிந்து கொள்ளாத மன்னனே என்றும் என் கணவன் சிலம்பு திருடினானா என்பதை ஆராய்ந்து பார்க்காத மன்னனே எனும் பொருள் பட அழைக்கும் கண்ணகி தொடர்ந்து பேசினாள்.

**தேரா மன்னா செப்புவது உடையேன்**

**என் அறு சிறப்பின் இமையவர் வியப்பப்**

**புள்உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்**

**வாயில் கடைமணி நடுநா நடுங்க**

**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான்தன்**

**அரும்பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன்**

**பெரும் பெயர்ப் புகார் என்பதியே**

ஆராய்ச்சியற்ற மன்னனே சொல்கிறேன் கேள் : சோழ மன்னனை நீயறிவாய். அவன் முன்னோற் பெருமை சொல்லற்கரியது. ஒரு புறாவின் உயிரைக்காக்க தனது ஊனை அறுத்துக் கொடுத்தான் சிபி சக்ரவா்த்தி. ஒரு பசு ஆராய்ச்சி மணியை அடித்தது பசுவின் கண்ணில் நீா்வழிய கண்ட அரசன் அப்பசுவின் கன்று இளவரசன் தெரில் வீதி உலா செல்கையில் தோ்க்கால்பட்டு இறந்தது எனக் கேள்வியுற்றான். இப்பசு தன் கன்றினை இழந்து வாடுதற்போன்று எனது ஒரே புதல்வனை இழந்து நான் வருந்துவேன். அதுவே நீதி என்று தமது புதல்வனை தோ்க்காலில் இட்டுப் பசுவுக்கு நீதி செய்தான் மனுநீதி கண்ட சோழன். அத்தகைய நீதிபதியானை புகாரே எனது ஊா்.அவ்வூரில் மாசற்ற சீரும் சிறப்பும்பெற்றுத் திகழும் பெருங்குலவணிகன் மாசாத்துவான் என்போரின் மகனே கோவலா் ஆவாா். கோவலா் ஊழ்வினையால் தாழ்நிலையுற்றாா். ஊரைத்துறந்தாா் உன் நகா் புகுந்தாா். என் காற்சிலம்புகளில் ஒன்றைவிற்றுப் பிழைப்பு நடத்த அதைவிலை பேசவே இங்கு வந்தாா் உன்னால் படுகொலையுற்றாா். கொடுங்கோல் அரசே நான் அந்த கோவலன் மனைவி என் பெயா் கண்ணகி

பாண்டியன் : பெண்ணணங்கே, ஒரு கள்வனைக் கொல்வது கொடுங்கோலன்று அதுவே அரசநியதி

கண்ணகி : யாா்கள்வன்? என் கணவரா கள்வன்? தீவழியிற்சென்ற அரசே சிலம்போ என்னது அதை விற்கவந்த என் கணவா் கோவலரோ உத்தமா்

பாண்டியன். : அச்சிலம்பு என் தேவியின் சிலம்பன்றோ? என்னதென்று எப்படி சொல்வாய்?

கண்ணகி : அரசே இதோ அச்சிலம்பின் இணை என்னிடம் உள்ளது: உமது அரசியின் சிலம்பிற்கும் எனது சிலம்பிற்குமுள்ள வேற்றுமையைப் பாா்த்துப்பிறகு பேசு எனது பொற்சிலம்பிற் குள்ளிருப்பது மாணிக்கப்பரல்

பாண்டியன் : எனது தேவியின் சிலம்பினுள்ளிருப்பது முத்துப்பரல். அம்மா நீ சொல்வது சரி இதோ என்தேவியின் சிலம்பு உன் சிலம்பைக்கொடு இரண்டையும் சோதிப்போம்.

கண்ணகி : என் சிலம்பை உடைக்கிறேன் பாா்

கோவலனிடமிருந்து கவா்ந்த சிலம்பை அரசன் பத்தினி முன் வைக்கிறான் கண்ணகி அதை உடைத்தாள். அதிலிருந்து மணிதெறித்து மன்னன் முன் வீழ்ந்தது மன்னவன் சோா்ந்தான்.

பாண்டியன் : ஆ அறக்கடவுளே என் புகழ் முடிசாய்ந்தது. எனது செங்கோல் வளைந்தது. என் குடைதாழ்ந்தது. என் அரியணை ஆடுகிறதோ? பொற்கொல்லனின் பொய்யுரை கேட்டுப்பழுதற்ற ஒரு புண்ணியனைக் கொன்றுவிட்டேன். பழுதற்றப்பத்தினிக்குத் தீங்கிழைத்தேன். மாசற்ற மறம் கொண்ட பத்தினியே உன் கணவன் கள்வனல்லன். ஆ உனக்குத் தீங்கிழைத்தயானே களவன். உனது காற்சிலம்பை எனதெனக் கூறி பழி சுமத்தியயானே கள்வன். அநீதனாகிக் குலப்புகழைக் கெடுத்தயானே கள்வன்

**யானோ அரசன் யானே கள்வன்**

**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**

**என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்**

அறம் நழுவிய பின் நான் இருந்தென்ன? ஆராயாது நின் கணவனைக் கொன்ற கொலைப்பழி இதோ என்னையும் கொன்றது.

‘‘என்னால் கணவனையிழந்து கோவலன் பத்தினிவருந்துகிறாள் கோவலனின் உயிருக்கு இக்காவலன் உயிர் ஈடு செய்க. என் மதிகெட்டது. என் குலங்கெட்டது என் அறங்கெட்டது. கெடுக என் ஆயுள்’’.

மயங்கினான் மன்னவன் அரியணையிலிருந்து வீழ்ந்தான். கீழே விழுந்து இறந்தான். கோப்பெருந்தேவியோ மனங்குலைந்தாள் உயிர் நடுங்கினாள்.

‘‘கணவனே இழந்தோர்க்கு யாரும் ஆறுதல் உரைக்க இயலாது பத்தினியே நீயே வீரபத்தினி உம் மனத்துயரே இப்பழி வாங்கியது உன் போன்றுயானும் துயருற்றேன். பத்தினித் தெய்வமே உன் திருவடி பற்றித் தொழுகின்றேன்’’.

இவ்வாறு ஓலமிட்டுக்கொண்டு கண்ணகியின் பாதத்தில் வீழ்ந்து தொழுதாள் கோப்பெருந்தேவி. கண்ணகியோ பதறினாள்.

கோவேந்தன் தேவியே பாவியேன் யாதுமறியேன் எனினும் அல்லவை செய்தாற்கு அறம் கூற்றம் என்றே பெரியார் சொல்பழுதாகுமோ?

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும்**

பத்தினிமார் போந்த ஊரிற் பிறந்தவள் யான் யானும் பத்தினியென்பது உண்மையானால் சும்மாவிடமாட்டேன் பழி வாங்குவேன் அரசோடு மதுரையை

ஒழிப்பேன். என் கணவனுக்கு உனது கணவன் செய்த வஞ்சத்தால் என்ன விளையுமென்று நீ காண்பாய் என்று சினத்தீ மூள வெளிநடந்தாள் கண்ணகி

கண்ணகியின் இவ்சூளுரை கேட்கும் முன்பாகவே கோப்பெருந்தேவி தன்னுயிர் நீத்தாள்

**நான் இட்டதீ மூழ்க மூழ்க**

வெளியேறிய கண்ணகி அங்கே மதுரைமாநகர் மக்களே மகளிரே மைந்தர்களே வானத்துத் தேவர்களே வையத்து முனிவர்களே யாவரும் நான் கூறுவதைக் கேளுங்கள் என் ஆருயிர் கணவனைக் கொன்ற மாநகர் இது. நான் இந்நகர் மீத கோபங்கொள்கின்றேன். என் கோபம் குற்றமற்றமையால் எனது செயலும் குற்றமன்று என்று கூறி தனது இடது புற மார்பை திருகி எடுத்துக் கொண்டு மதுரை நகரை மும்முறை வலம் வந்தாள் மயங்கினாள் தேன் நிறைந்த மதுரைத் திருவீதியில் வஞ்சினங் கூறி அம்மார்பைச் சுழற்றி எறிந்தாள்

**நான் மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்**
**வானக் கடவுளரும் மாதரும் கேட்டீமின்**
**யான் அமர் காதலன் தன்னைத் தவறு இழைக்க**
**கோநகர்ச் சீறினேன் குற்றம் இ லேன்யான் என்று**
**இடமுலை கையால் திருகி மதுரை**
**வலமுறை மும்முறை வாரா அலமந்து**
**மாட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து**
**விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்**

கண்ணகி இப்படி எறிந்ததும் அவள் முன் அக்னிதேவன் தோன்றினான் நீலநிறமும் பால்போன்ற வெண்பற்களையும் கொண்ட அவன் பார்ப்பன வடிவில் தோன்றிய அத்தீக்கடவுள் கேட்டான்.

**மாபத்தினி நின்னை மாணப் பிழைத்த நாள்**
**பாய் எரி இந்தப்பதி ஊட்டப்பண்டே ஓர்**
**ஏவல் உடையேனால் யார் பிழைப்பார் ஈங்கு?**

கற்புக்கரசியே உனக்குப் பெரியதொரு தீங்கிழைத்த அன்றே இந்நகரை எரியூட்டுமாறு ஓர் பணியை நான் பெற்றுள்ளேன். இத்தீயில் உயிர்பிழைக்க உகந்தவர்கள் யார்? எனக் கேட்டான் தீத்தேவன்

நெருப்புக்கு இரையாகாமல் தப்பிப்பிழைப்பதற்கு உரியர் யார்? கண்ணகி பட்டியலிடுகிறார்.

**பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்**
**மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க என்று காய்த்தி**
**பொற்கொடி ஏவப் புகை அழல் மண்டிற்றே**
**நல்தேரான் கூடல்நகர்**

அந்தணர் அறவோர் ஆக்கள் பத்தினிப்பெண்டிர் முதலியோர் குழந்தைகள் ஆகிய இவர்களை விட்டுவிடுக தீயகுணம் பெற்றவரிடம் சென்று அவர்களை அழிப்பாயாக என்றாள் புகார் நகரத்துப் பொற்கொடி அவளால் ஏற்பட்ட தீ மதுரை நகரத்துத் தீயோரை சுட்டுப்பொசுக்கப் புகையோடு வேகமாகப் பரவியது

தீக்கடவுளின் எரிக்கும் திறன் கொண்ட தீ நாக்குகள் எண்டிசையும் பரவின நகர் காக்கும் தெய்வங்கள் தம் காவல்தொழிலைக் கைவிட்டு நகரை விட்டு வெளியேறின

பாண்டியன் செய்த தவறு அவன் உயிர் பிரிதலால் வளைந்த செங்கோல் நிமிர்ந்தது. அரசியும் உயிர்நீத்தாள்.

இதனை அறியாகுரவர் தலைமைச் சோதிடன் ஓலை எழுதுவோர்களோடு அரண்மனைப் பெண்டிரும் எதுவும் இயங்காத நிலைகொண்டனர். வேந்தன் வாயிலில் வெந்தணல் கோரத்தாண்டவமாடுவதைக் கண்ட தேர்ப்பாகர், யானைப் பாகன், குதிரைப்பாகன், வாளேந்திய மறவர்கள் யாவரும் அங்கிருந்து விரைவாக அகன்றனர்

நகரத்திலிருந்த ஆதிப்பூதம் அரசபூதம் வணிகபூதம் வேளான்பதம் ஆகிய பூதகணங்கள்

**கோமுறை பிழைக்க நாளில் இந்நகர்**
**தீமுறை உண்டு என்பது ஆம் முறையாக**
**அந்தனம் ஆதலின் யாம்முறை போவது**
**இயல்பு அன்றோ?**

எனக்கேட்டுவிட்டு நகரைவிட்டு வெளியேறியது அருளாளரான அறவாணரை அணுகாத தீ தீயோரின் சேரியை பொசுக்கியது.

பசுக்களும் கன்றுகளும் தீயில் சிக்காமல் அறவாழ்வு கொண்ட ஆயர்கள் வாழும் தெருக்களைச் சென்றடைந்தன. களிறுகளும் குதிரைகளும் பாதுகாப்பான இடங்களைச் சென்றடைந்தன

கண்ணகியின் சினம் பற்றி ஊரில் உள்ளோரால் பலவாறு பேசப்பட்டது. சிலர் இது கொடுமை என்றனர். சிலர் அல்ல என்றனர். பத்தினிப்பெண்டிர் கண்ணகி தன் சிலம்பில் அரசனை வென்றாள். தன் கணவனைக் குற்றமற்றவன் என விளக்கினாள். பின் தம் கொங்கையைப் பறித்தறிந்து போர்விளைத்தாள் அதுகொடிதன்று நியாயமே என்று தீக்கடவுளை வணக்கம் செய்தனர்.

**மதுராபதி**

ஒருமுலை திருகி மதுரை மீது விட்டெறிந்து தீக்கனல் எழுப்பிய, அலமரும் திருமாபத்தினியின் முன்பாக மதுராபதி தோன்றினாள். அவள் பாண்டியன் குலமுதற் கிழத்தியாவாள். அத்தேவதை கண்ணகியின் முன் நில்லாமல், பின்னே நின்று கொண்டு, ‘‘நங்கால், நீவாழி! என்குறையைக் கேட்டருள்’’ என்றாள்.

கண்ணகி தன்வாடிய திருமுகத்தைத் திருப்பி, ‘‘என்னைப் பின்தொடர்ந்து வரும் நீயார்?’’ என வினவினாள்.

உடனே மதுராபதி: ஏந்திழையே நின் துயர்நானறியேன். நான் இம்மதுரையைக் காத்துவரும் மதுராபதியாவேன் உனக்கொரு உண்மை சொல்வேன் என்று தொடர்ந்தவள், உன் கணவனின், விளைப்பயனை எடுத்துரைப்பேன், கேள் என்றது அத்தேவதை.

கலிங்கநாட்டில், வசு, குமரன் என இரண்டு வேந்தர் இருந்தனர். வசு சிங்க புரத்தரசன். குமரன் கவில புரத்தரசன். இருவரும் தாயவேந்தர், தம்முட் பகைத்து. தமது நாட்டெல்லையினிடையே ஒருவரையொருவர் எதிர்த்துப்போர் புரிந்தனர். ஒருவர் எல்லையில் மற்றொருவர் ஆட்கள் செல்வதில்லை. மீறிச்சென்றால் தண்டனை ஏற்படும். ஒருநாள் சங்கமன் என்ற தனவணிகன், தனது காதலி நீலியுடன், அணிகலன் கொண்டு, சிங்கபுரக்கடைத் தெருவில் விலை கூறினான். ‘பரதன் எனும் சேவகன்’ சங்கமனைச்சிறை செய்து, ‘‘இவன் நமது பகைரசின் ஒற்றன்’’ என்று பொய்புகார் கூறி அரசன் முன்பு நிறுத்தினான். ஒற்றனைக் கொலை செய்து வரும்படி அரசன்

ஆணையிட்டான். பரதன் சூழ்ச்சியால் சங்கமன் கொலையுண்டான். அவன் மனைவி நீலி, நகைவிற்க வந்த என் கணவனை ஒற்றன் என்று கூறி கொலை செய்து விட்டனரே. இப்படி ஓர் அநீதியைக் கண்டதுண்டா? அந்தோ? இது அடுக்குமா? என்று அரசன் மன்றிலும், ஊர்மருங்கிலும் அலறிமுறையிட்டாள். நாட்கள் பதினான்கு சென்றபின், ஒரு மலையுச்சி மீதேறி,

**"எம்முறு துயரம் செய்தோ ரியாவதுந்**

**தம்முறு முயர மிற்றாகுக!"**

"எமக்கு இத்துயர் விளைவித்தவர், இதே துன்பத்தை அனுபவிக்கக்கடவர்" என்று சபித்தவாறு உயிர்நீத்து விண்ணுலகிற்கேகிக் கணவன் ஆவியுடன் கூடினாள். அவள் இட்ட சாபம் கிட்டியதன் பலனாக, பரதனே கோவலானகப் பிறந்துதான் செய்வினையை அனுபவித்தான்.

**"உம்மை வினைவந்த துருத்த காலைச்**

**செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது"**

இன்றிருந்து பதினான்காம் நாள் மாலையில், நீயும் உன் கணவனை வானவர் வடிவில் (மானிட வடிவில்லை) கண்டு கூடுவாய்" என்று தெய்வமாபத்தினிக்கு மதுரை மாத்தெய்வம் சொல்லி மறைந்தது.

**"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது**

**இருத்தலுமில்லேன், நிற்றலு மிலனே!"**

என்று கண்ணகி, துர்க்கை வாசலின் முன்பாக, தனது கை வளையலை தகர்த்தெறிந்தாள்.

**"கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்**

**மேற்றிசை வாயில் வறியேல் பெயர்க!"**

என்று மதுரை மேற்கு வாசல் வழியாகத் தனிவழிச் சென்றாள். இரவு பகலன்றி மேடுபள்ளம் பாராமல் வைகைக்கரை வழியே மேற்கு நோக்கி நடந்து திருச்செங்கோட்டு மலைமேலேறினாள்.

**மதுரைக்காண்டம் முற்றிற்று**

**சிலப்பதிகாரத்தில் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்**

சிலப்பதிகாரம் ஒரு வரலாற்று நாடகக் காப்பியமாக இருப்பதால், அதில் அக்கால மக்களின் சக அமைப்புக் குறித்துப் பல கருத்துகள் இடம் பெற்றுள்ளன. இலக்கியம் காலங் காட்டும் கண்ணாடி அல்லவா? இங்கு மதுரைக் காண்டத்தில் காணலாகும். அக்கால நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் காண்போம்.

## நம்பிக்கைகள்

உண்மையா பொய்யா என்று ஆராயாமல் முன்னோர் கூறியவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வது நம்பிக்கையாகும். மதுரைக் காண்டம் கீழ்வரும் பல நம்பிக்கைகளைக் குறிப்பிடுகிறது.

### கடவுள் சார்ந்த நம்பிக்கைகள்

மாங்காட்டு மறையோன் மதுரைக்கு வழி கூறும்போது

**ஊரிடை இட்ட காடு பல கடந்தால்**
**ஆரிடை உண்டு ஓர் ஆர்அஞர்த் தெய்வம்**
**நடுக்கம் சாலா நயத்தின் தோன்றி**
**இடுக்கண் செய்யாது இயங்குநர் தாங்கும்**

என்பதாலும் வயந்தமாலை வடிவில் அத்தெய்வம் கோவலன் முன் தோன்றியது ஆதலாலும் அக்காலத்தே மோகினிப் பிசாசு வேண்டிய உருவெடுத்து வரும் என்ற நம்பிக்கை இருந்ததை அறியலாம்

வேட்டுவ வரியில் சாலினி மேல் தெய்வம் வருகிறது இதை

**வழங்குவில் தடக்கை மறக்குடித் தாயத்து**
**பழங்கடன் உற்ற முழங்குவாய்ச் சாலினி**
**தெய்வம் உற்று மெய்ம்மலர் நிறுத்துக்**
**கையெடுத்து ஓச்சி கானவர் வியப்ப**

பல செய்திகளைக் கூறுவதாக வரும் பகுதியால் அறியலாம். மேலும் வஞ்சிக் காண்டத்திலும் தேவந்திமேல் பாசண்டன் வந்து பல செய்திகளைக் கூறுகிறான். எனவே மக்கள் மேல் தெய்வம் வந்து குறி சொல்லும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ஆய்ச்சியர் குரவையுள் மாதரி

வருவதோர் துன்பம் உண்டென மகளைநோக்கி

**மனம் மயங்காதே மண்ணில் மாந்தர்க்கு**
**அணியாகிய கண்ணகியும்தான் காண..**

**குரவை ஆடுதும் யாம் என்றாள் கறவை**

**கன்று துயர் நீங்குக எனவே**

என்பதால் ஆயர்பாடியில் பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் துன்பம் வருங்கால் குரவை ஆடினால் அத்துன்பம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை இருந்ததை அறியலாம்.

**ஊழ்வினை நம்பிக்கை**

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பது நூல் நோக்கத்துள் ஒன்று

**தீதுடை வெவ்வினை உருத்த காலை**

**பேதமை கந்தாப் பெரும்பேது உறுவர்**

என்ற கவுந்தி கூற்றாலும்

**வினைவிளை காலம் ஆதலின் யாவதும்**

**சினையலர் வேம்பன் தேரானாகி**

என்ற இளங்கோ கூற்றாலும் மக்களுக்கு ஊழ்வினை மேல் மிகுந்த நம்பிக்கை இருந்ததை அறியலாம்.

**பழம் பிறப்பில் நம்பிக்கை**

சென்ற பிறவியில் ஒருவன் செய்த வினைக்குத் தக அவனுக்கு அடுத்த பறவி அமையும் என்ற நம்பிக்கையும் இருந்தது. இதனை மதுராபதி தெய்வம் கண்ணகி முன் தோன்றி கோவலன் முற்பிறவியில் பரதன் என்ற பெயரில் வீரனாகப் பணிபுரிந்தான் என்றும் அவன் சங்கமன் என்ற வணிகனை ஒற்றன் என்று காட்டிக் கொடுத்தான் என்றும் அவன் மனைவி நீலி என்பாள்

**எழுநாள் இரட்டை எல்லை சென்ற பின்**

**தொழுநாள் இதுஎனத் தொன்ற வாழ்த்தி**

**மலைத்தலை ஏறி ஊர் மால் விசும்பு ஏணியில்**

**கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றோள்**

**எம்முறு துயரம் செய்தோர் யாவதும்**

**தம்முறு துயரம் இற்றாகுக என்றே**

சபித்தாள் அதன் விளைவே இது என்பதால் பழம் பிறப்பு நம்பிக்கையை அறியலாம் வஞ்சிக்காண்டத்துள்ளும் கோவலன் கண்ணகியின் தாயர் திருவனந்தபுரத்தில் பிறப்பெடுத்ததாகக் கூறப்பட்டுள்ளதும் காண்க

**சகுன நம்பிக்கை**

**வெட்சி மலர் புனைய வெள்வாள்**
**உழத்தியும் வேண்டின் வேற்றூர்க்**
**காட்சியுள் காரி கடிய குரலிசைத்துக்**
**காட்டும் போலும்**

என்ற வேட்டுவவரி அடியால் காரி என்ற பறவை குரல் இசைப்பது தீநிமித்தம் (சகுனத்தடை) என்று நம்பியதை அறியலாம் புறநானூறும் புறப்பொருள் வெண்பா மாலையும் இக் காரியின் தீ நிமித்தம் குறித்துக் கூறுகின்றன.

**பல்லான் கோவலர் இல்லம் நீங்கி**
**வல்லா நடையின் மறுகில் செல்வோன்**
**இமில் ஏறு எதிர்ந்தது இழுக்கென அறியான்**
**தன்குலம் அறியும் தகுதியன்று ஆதலின்**

எனவே மாடு முட்ட வருவது தீ நிமித்தமாக நம்பினர். அது தெரியாத கோவலன் சிலம்பு விற்கச் சென்றான்.

**நிமித்தம் வாய்த்தடின் அல்லது யாவதும்**
**புகற்கிலர் அரும்பொருள் கைவந்து புகினும்**

என்ற பொற்கொல்லனின் கூற்று இதனை உறுதிப்படுத்தும்

**குடப்பால் உறையா குவி இமில் ஏற்றின்**
**மடக்கண் நீர் சோரும் வருவது ஒன்றுண்டு**
**உறிநறு வெண்ணெய் உருகா நிற்கும்**
**மறிதெறித்து ஓடா வருவது ஒன்றுண்டு**

என்பதால் இவையும் தீய சகுனங்களானக் கூறப்பட்டுள்ளன. மதுரைக் காண்டத்தில் நற்சகுனம் ஏதும் இல்லை போலும்

**கனவு நம்பிக்கை**

அடைக்கலக் காதையில் மாடலனிடம் கோவலன் தான் கண்ட கனவைக் கூறுகிறான் அது வருமாறு

வேந்தன் நகரில் யான் ஓர் குறுமகனால் கண்ணகி துயர் கொள்ளும்படி கூறை கொள்ளப்பட்டுப் பன்றி மேல் ஊர்ந்ததாகவும் கண்ணகியோடு துறவியர் பெறும்பேறு பெற்றதாகவும் மாதவி மணிமேகலையைப் போதி அறவோன் முன் அளிப்பதாகவும் கனவு கண்டேன் என்கிறான் அப்போது அவன்.

**நனவுபோல நள்ளிருள் யாமத்துக்**

**கனவு கண்டேன் கடிது ஈங்குறும்**

என்கிறான். அதாவது விடியல் கருக்கலில் கனவு கண்டால் உடனே பலிக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது என்று அறியலாம். கோப்பெருந்தேவியும் கனவு கண்டாள் எல்லாம் தீக்கனவாகவே உள்ளன.

## IIபழக்கம் வழக்கங்கள்

பழக்கம் வழக்கம் என்பது ஒரு பொருள் இரு சொல். இதற்கு முன்னோர்கள் செய்த ஒரு செயலைக் காரனம் அறிந்தோ அறியாமலோ பின் வந்தோர் தொடர்ந்து செய்வது என்பது பொருள். மதுரைக் காண்டத்தில் வரும் மக்களின் பழக்கம் வழக்கங்கள் வருமாறு

**குடும்பம் சார் பழக்க வழக்கங்கள்**

கணவனுக்கு அழுது படைக்கும்போது அவன் கால்களைக் கழுவுதலும் இலை போடும் முன் தரையில் தண்ணீர் தெளிப்பதும் அன்றைய பழக்கமாக இருந்தன என்பது

**கடிமலர் அங்கையுள் காதலன் அடிநீர்**

**சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி**

**மண்ணக மடந்தையை மயக்கொழிப்பனள் போல்**

**தண்ணீர் தெளித்து தன் கையால் தடவிக்**

**குமரி வாழையின் குருத்தகம் விரித்து**

என்பதால் அறியலாம்.

**உண்டு இனிது இருந்த உயர்பேராளவிற்கு**

**அம்மென் திரையலோடு அடைக்காய் ஈத்த**

என்பதால் உண்டபின் வெற்றிலை போடும் பழக்கமும் இருந்ததை அறியலாம்

**மாந்தளிர் மேனி மாதவி மடந்தை**

**பால்வாய்க் குழவி பயந்தனள் விடுத்து**

**வாலமை நாள் நீங்கிய பின்னர்**

**மாமுது கணிகையர் மாதவி மகட்கு**

**நாம நல்லுரை நாட்டுதும் என்று**

என மாடலமறையோன் கோவலன் பெருமையை கூறுவதால் குழந்தை பிறந்த சில நாள் சென்றபின் பிறப்புத் தீட்டுக் கழித்துப் பின்னர் பெயர் சூட்டும் வழக்கம் இருந்ததை அறியலாம்.

**2.அரசியல் பழக்கவழக்கம்**

கடக்களிறு அடக்கிய கருணை மறவனாம் கோவலனைப் பற்றி மாடலன் கூறும்போது

**பாகு கழிந்து யாங்கணும் பறைபட வரூஉம்**

**வேக யானை வெம்மையின் கைக் கொள**

என்பதால் மதம் பிடித்து யானை ஓடும்போது மக்கள் விழிப்பாயிருக்க பறை அறைதல் அன்று வழக்கமாக இருந்துள்ளது.

**வாழ்க எங்கோ மன்னர் பெருந்தனை**

**என்று மாங்காட்டு மறையோனும்.**

**வாழி எம் கொற்கை வேந்தே வாழி**

என்று வாயிலோனும் கூறுவதால் அன்று மன்னனைப் பற்றியோ அல்லது மன்னனிடமோ பேசும்போது அவனை வாழ்த்துதல் என்பது பழக்கமாக இருந்துள்ளது. இதனை வஞ்சிக் காண்டத்துள் பரக்கக் காணலாம்.

**கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று**

**வெல்வேல் கொற்றம் காண்**

எனப் பாண்டியன் கூறுவதால் திருட்டுக் குற்றத்துக்கு மரண தண்டனை கொடுத்தல் செங்கோலாகக் கருதும் வழக்கம் இருந்ததை அறியலாம்

மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் பாண்டியனின் பெருமை பேசும்போது வார்த்திகன் மனைவிக்கு ஏற்பட்ட துன்பத்தால் அடைத்த கொற்றவைக்கோயில் கதவு நீதி வழங்கத் திறந்ததால் மன்னன் மகிழ்ந்து

**சிறைப்படு கோட்டம் சீமின் யாவதும்**

**கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின்**

என்று ஆணை இடுவதால் இன்று போல் அன்று இருந்ததை அறியலாம்

**3.சமுதாயப் பழக்க வழக்கம்**

வஞ்சின மாலையில் கண்ணகி ஏழு பத்தினிப் பெண்களின் கதையைக் கூறி

**.............அவள் போல்வார் நீடிய**

**மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்**

**பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்**

**ஒட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையும்**

என்பதால் பத்தினி வழிபாடு அன்றே வழக்கத்தில் இருந்துள்ளது என்பதை அறியலாம்.

புகார் நகரத்தை விட்டுக் கோவலனும் கண்ணகியும் வெளியில் வந்து பின்புதான் கவுந்தியின் தொடர்பு கிடைக்கிறது. மதுரையிலும் கவுந்தி புறஞ்சேரியில் தங்கிக் கோவலனை ஊருள் அனுப்புகிறாள் மாடமலையோனும் கோவலனிடம்,

**அறத்துறை மாக்கட்கு அல்லது இந்தப்**

**புறச்சிறை இருக்கை பொருந்தாது**

என்பதால் அன்று துறவிகள் ஊருக்குள் நுழையா வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

**பொலந்தெரி மாக்கள் கலந்களுர் ஒழித்தாங்கு**

**இலங்கு கொடி எடுக்கும் நலங்கிளர் வீதி**

என்று மதுரை வருணிக்கப்படுவதால் அன்று கடைகளில் பொருள் விற்பனைக்குத் தக கொடி கட்டுதல் வழக்கமாக இருந்தது என்பதை அறியலாம்.

கவுந்தி அடைக்கலத்தின் சிறப்பைக் கூறும்போது சாயலன் என்ற வணிகனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அச்சாயலன் எட்டிப் பட்டம் பெற்றவன். எனவே வணிகருக்கு எட்டிப் பட்டம் வழங்குதல் அன்றைய பழக்கம்

‘அடிகள் முன்னர் யான் அடி விழுந்தேன்’ என்ற தொடங்கும் மாதவியின் கடித ஓலையைக் கௌசிகாமணி கோவலனிடம் கொடுக்கின்றான். எனவே அக்காலத்தே கடிதம் எழுதி ஆள் மூலம் அனுப்பும் பழக்கமும்

**உடன் உறை காலத்து உரைத்த நெய்வாசம்**

**குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்தி**

என்பதால் கடிதத்தில் இலச்சனை இடுதல் உண்டு என்றும் அறியலாம் பெருந்துன்பத்தில் இருக்கும் ஒருவரை அணுகி ஏன் ஒரு மாதிரி இருக்கின்றீர் என்று வினவினால் அவர் தம் துன்பத்தைக் கூற முடியாச் சூழலில் ஒன்றுமில்லை லேசாகத் தலை வலிக்கிறது என்பார் இதுவும் அக்காலத்தே இருந்துள்ளதை.

**“ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்து**

**தலைநோய் வருத்தம் தன்மேலிட்டு**

**குல முதல் தேவி கூடாது ஏக"**

என்பதால் அறியலாம்

மேலும் பல தெய்வ வழிபாடும் தெய்வங்களுக்குப் பலி கொடுத்தலும் அக்காலத்திலேயே வழக்கத்திலிருந்தன.

கண்ணகி பதின்நான்காம் நாள் கணவனைக் கூடினாள் என்பதால் ஒருவர் இறந்த பிறகு காரியம் என்ற சபசுவீகாரம் அன்று வழக்கத்தில் இருந்துள்ளது.

இவ்வாறு மதுரைக் காண்டம் அக்கால மக்களின் நம்பிக்கையையும் பழக்க வழக்கங்களையும் கதை கூறும் போக்கில் பலவற்றை எடுத்துக்காட்டிக் செல்கிறது.

## II.முன் அறிவிப்பு உத்தி

புலவன் தான் படைக்கும் இலக்கியத்தின் சுவை மேலோங்கப் பல்வேறு இலக்கிய உத்திகளைப் பின்பற்றுவான். அவற்றுள் ஒன்று முன்அறிவிப்பு அல்லது முன்னோட்ட உத்தி. இவ் உத்தியைப் பொதுவாக நாடக காப்பிய இலக்கிய ஆசிரியர்கள் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். முத்தமிழ்க் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகார மதுரைக் காண்டத்துள் இவ் உத்தியை இளங்கோ வடிகள் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்று இனிக் காண்போம்.

பின்னால் நிகழப்போகும் ஒரு செயலை அச்செயல் நடக்கும் முன் குறிப்பாக அறிவிப்பதே முன் அறிவிப்பு உத்தி ஆகும். இவ்உத்தி மதுரைக் காண்டத்துள் உடன்பட்டு முன் அறிவிப்பாகவும் எதிர்மறை முன் அறிவிப்பாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### அ.உடன்பாட்டு முன் அறிவிப்பு உத்தி

பின்னால் நிகழ இருக்கும் ஒன்றை முக்கிய நிகழ்ச்சியை அது நடக்கும் முன்பே பாத்திரக் கூற்றாகவோ ஆசிரியர் கூற்றாகவோ இயல்பாய் வெளிப்படுத்தும் உடன்பாட்டு முன் அறிவிப்பு உத்தி ஆகும்.

கோவலன் முதலிய மூவரும் மதுரைக்குச் செல்லும் வழியில் ஐயைக் கோட்டத்தில் வந்து தங்கிய போது தெய்வம் வந்த சாலினி கண்ணகியைச் சுட்டி,

**இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி**

**தென் தமிழ்ப் பாவை தெய்வக் கொழுந்து**

**ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய**

**திருமா மணி**

என்று கூறுகிறாள். இது கண்ணகி குடமலை நாடாகிய சேர நாடு செல்வதும் அங்கு அவளுக்குப் பாவை (சிலை) எடுக்கப்படுவதும் அவள் தெய்வமாவதும் உலகோரால் (பல நாட்டினர்) பாராட்டப் படுவதும் ஆகிய பின் நிகழ இருக்கும் செய்திகளை முன் அறிவித்தாகவே உள்ளது.

2. சமண துறவியாகிய கவுந்தி கண்ணகியை மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கும்போது

**இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்**

**கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது**

**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்**

என்று கூறுகிறார். பின்னால் கண்ணகி கற்புத் தெய்வமாகப் போற்றப்படுகின்றாள்

மாதரி வீட்டில் வந்து தங்கிய பின் கண்ணகி உணவு படைக்க கோவலன் உண்ணும் காட்சியைக் கண்ட மாதிரியும் ஐயையும்,

**ஆயர் பாடியில் யசோதை பெற்றெடுத்த**

**பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ**

**பல்வளைத் தேளியும் பண்டுநம் குலத்துத்**

**தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை**

**விழுமம் தீர்த்த விளக்கு கொல்**

என விம்மிதம் அடைகின்றனர். பின் இருவருமே தெய்வமாகின்றனர்.

காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன் என்று கண்ணகி கேட்க அதற்கு விடையாக,

**கள்வனோ அல்லது கருங்கயல்கண் மாதராய்**

**ஒள் எரி உண்ணும் இவ்வூர்**

என்றது ஒரு குரல் கேள்விக்கு விடை மட்டும் அல்லாது மதுரை எரி உண்ணும் என்ற செய்தியும் கூறப்படுகிறது. பின்பு ஊர் சூழ் வரி வழக்குரைகாதை வஞ்சின மாலை அடுத்து அழல்படு காதையில்தான் மதுரை எரிகிறது.

கண்ணகி வாயில்காப்போனிடம் கணவனை இழந்தாள் கடையகத்தாளே என்று அறிவிப்பாய் என்றாள். அவனோ மன்னனிடம் சென்று,

**கணவனை இழந்தாள் கடையகத்தாளே**

**கணவனை இழந்தாள் கடையகத்தாளே**

என்று இருமுறை சொல்கிறான். குறிப்பாகப் பாண்டியமாதேவியும் கணவனை இழக்கப் போகின்றாள் என்பதனை இது முன் கூட்டியே உணர்த்துகிறது.

**ஆ.எதிர்மறை முன் அறிவிப்பு உத்தி**

பின்னால் நிகழ இருக்கும் முக்கிய நிகழ்ச்சிக்கு முன் நேர் எதிரான செய்தியைப் பாத்திரக் கூற்றாகவோ ஆசிரியர் கூற்றாகவோ வெளிப்படுத்துவது எதிர்மறை முன் அறிவிப்பு உத்தி ஆகும்.

இவ் உத்திச் செய்தியை முன்னால் படிக்கும்போது அறிய முடியாது முன் சொன்னதிற்கு எதிரான நிகழ்ச்சி பின் நிகழ்வதைப் படிக்கும்போது தான் இரண்டையும் ஒப்பிட்டு இவ்உத்திமூலம் ஆசிரியன் காட்டுகிறான் என்று அறிய முடியும்.

மதுரைக் காண்டத்தின் தொடக்கத்தில் கோவலன் முதலிய மூவரும் ஓர் இளமரக்காவில் தங்கி இருந்தபோது அங்கு வரும் மாங்காட்டு மறையோன் பாண்டியனை மிக நீண்டதாக வாழ்த்தி வருகிறான்.

**வாழி எங்கோ மன்னர் பெருந்தகை**

**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி...**

**ஆரம் பொங்கொளி மார்பில் பூண்டோன் வாழி**

**மழை பிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க**

என நான்கு முறை வாழ்க என வாழ்த்துகிறான். கண்ணகி வழக்குரைக்க வந்தபோது அதனை மன்னவனுக்கு அறிவிக்க உள்ளே சென்ற வாயில் காப்போன்.

**வாழி எம் கொற்கை வேந்தே வாழி**

**தென்னம் பொருப்பின் தலைவ வாழி**

**செழிய வாழி தென்னவ வாழி**

**பழியோடு படராப் பஞ்சவ வாழி**

என ஆறுமுறை வாழ்த்துகிறான். இவ்வாறு பாத்திரங்கள் வாழ்த்த அவனோ வழக்குரைக் காதை இறுதியில்,

**மன்பதைக் காக்கும் தென்புலக் காவல்**

**என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்**

என மயங்கி விழுந்து இறக்கின்றான்.

தீது தீர் சிறப்பின் தென்னவன் என்று பாண்டியனை இளங்கோ காடு கண் காதையில் குறிப்பிடுகிறார் பழியோடு படரா பஞ்சவ என்று வாயிலோன் குறிப்பிடுகிறான். ஆனால் பின் பகுதியில் தென்னவன் நன்மை அற்றவனாக 21 ஆம் நூற்றாண்டு வரை பழிபடர்ந்தவனாக உள்ளான்.

மதுரையைச் சுற்றி பார்த்து வந்த கோவலன் அது குறித்து கவுந்திக்குக் கூறும்போது

**கௌரியர் பெருஞ்சீர்க்**

**கோலின் செம்மையும் குடையின் தண்மையும்...**

**மாதவத்தாட்டிக்குக் கோவலன்**

கூறுகிறான் ஆனால் பின்னால் மன்னன் சாகின்ற போது தன்னையே பழித்து

தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்

என்று மன்னனே கூறுகின்றான்

**பதியெழு அறியாப் பண்பு மேம்பட்ட**

**மதுரை மூதூர்**

என்று மதுரையைக் கோவலனே புகழ்கின்றான். இறுதியில் அம் மதுரையிலிருந்து ‘நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர்கிறது’. மேலும்

**திதலை அல்குல் தேன்காழ் குழலியர்**

**குதலைச் செய்வாய்க் குறுநடைப் புதல்வரொடு**

**பஞ்சார் அமளியில் துஞ்சுதுயில் எழுப்பி**

**வால்நரைக் கூந்தல் மகளிரொடு போத**

அதாவது இளம்பெண்கள் குழந்தைகளோடும் முதியோரோடும் மதுரையை விட்டு வெளியேறுகின்றனர். அடுத்து

**மறவெங் களிறும் மடப்பிடி நிரைகளும்**

**விரைபரிக் குதிரையும் புறமதில் பெயர்த்தன**

இவ்வாறு மதுரை பதியே இல்லா வறியதாகியதாகக் காட்டப்படுகிறது.

புறஞ்சேரியில் இருந்தபோது மாதவத்தாட்டியும் மாடல மறையோனும்

**அறத்துறை மாக்கட்கு அல்லது இந்தப்**

**புறச்சிறை இருக்கை பொருந்தாது ஆகலின்**

**அரைசர் பின்னோர் அகநகர் மருங்கினில்**

**உரையின் கொள்வர் இங்கு ஒழிக நின் இருப்புக்**

**காதலி தன்னோடு கதிர் செல்வதன்முன்**

**மாட மதுரை மாநகர் புகுக**

என உரைத்தனர். அவனும் கண்ணகியுடன் அன்று மாலையே மதுரையுள் புகுந்தான் விளைவு துன்பமாகிவிட்டதே

இவ்வாறு முன் அறிவிப்பு உத்தியை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் அமைத்து இளங்கோவடிகள் காப்பியச் சுவையைக் கூட்டியிருப்பதுடனும் ஒப்பிட்டுப் படிக்கவும் நினைவில் வைக்கவும் இதனைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் தெளிவாகிறது

## துணைப் பாத்திரப் படைப்புகள்

'இவன் வெற்றி பெற்றான் என்றால் அவன் தோல்வி அடைந்தான்' என்பது நியதி அவ்வண்ணமே காப்பியம் நாடகம் நாவல் திரைப்படம் போன்றவற்றில் தலைமைப் பாத்திரப் படைப்பு என்றால் துணைப் பாத்திரங்கள் கட்டாயம் இடம்பெறும்.

எனவே சிலம்பினும் பல துணைப் பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மதுரைக் காண்டத்தில் இடம் பெற்றுள்ள துணைப்பாத்திரங்கள் குறித்து மட்டும் இங்குக் காண்போம்.

### கவுந்தி அடிகள்

கவுந்தி என்ற சொல்லே சமண தவப்பெண்ணைக் குறிக்கும் என்று திவாகரம் கூறுகிறது. சிலம்பில் அடிகள் என்றும் உறுதவத்தீா் என்றும் விளிக்கும் விழுப்பத்திற்கு உரியவர் மக்கள் தொழும் பெற்றியர் கோவலன் இவரைத் தொழுததை 'கவுந்தி ஐயைக் கண்டுஅடி தொழலும்' என்று இளங்கோ கூறுவதால் இவர் இயற்பெயர் ஐயையாக இருக்கலாம். ''போதுவல் யானும் தொடிவளைத் தோளி துயர் தீர்த்தேன்'' என்று உவந்து கூறி கோவலன் கண்ணகிக்கு வழித்துணையாக வந்தவர். மதுரைப் புறஞ்சேரியில் கோவலன் மனவேதனைப்படும் போது இராமன் நளன் போன்று இல்லாமல்,

**அனையையும் அல்லை ஆயிழை தன்னோடு**

**பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றோ**

என்று அவனது உளத்திற்கு ஆறுதல் கூறுகின்றார். அங்கு வந்த மாடமறையோன் புறஞ்சேரியில் தங்காதே மாநகர்க்குள் செல் என உரைத்த

போது கவுந்தியும் அவனை உடனே செல்ல வேண்டும் என்று கூற கோவலன் சோகமாக இருந்ததால்,

**மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு**
**ஏதம் இன்றென எண்ணி**
**ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்**
**தாயும் நீயே ஆகித் தாங்கு**

என அடைக்கலம் கொடுக்கின்றாள்

சமண சமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்ட கவுந்தி

**இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்**
**கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்**

என்று கண்கண்ட தெய்வமாகக் கண்ணகியைப் போற்றுகிறார். அடைக்கலப் பொருளின் சிறப்பைச் சாயலன் மனைவி மூலம் விளக்கிஅறம் காக்கின்றார். அன்பு நெறி தழைத்தோங்கச் செய்கின்றார். இறுதியில் கோவலன் வெட்டுண்ட செய்தி கேட்டு உயிர் விட்டார். இதனை,

**தவம் கரு சிறப்பின் கவுந்தி**
**என்னோடு இவர் வினை உடுத்ததோ? என**
**உண்ணா நோன்போடு உயிர்ப்பதிப் பெயர்த்ததும்**

என்று மாடலன் கங்கைக்கரையில் செங்கட்டுவனுக்குக் கூறுவதால் அறியலாம்.

**அரிய கற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு (குறள் -503)**

என்பார் வள்ளுவர் அதற்கு ஒருவகையில் கவுந்தி எடுத்துக்காட்டாக விளங்குகிறார் எனலாம்

பெரும் தவம் செய்தவர் மாதவத்தாட்டி எனப்படுவர் முள்ளுடைக் காட்டில் முது நரியாகுக என சபிக்கும் ஆற்றல் பெற்றவர் என்றாலும் அவரிடம் சில குற்றங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

உறையூரை அடுத்த சோலையில் மூவரும் தங்கி இருந்த போது அங்கு வந்த மாங்காட்டு மறையோனிடம் கோவலன் பேச்சுக் கொடுக்கின்றான். திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தையும் வேங்கடத்தில் நின்ற

கோலத்தையும் காணச் செல்வதாகக் கூறுகிறான். அவனிடம் கோவலன் மதுரைக்குச் செல்ல வழி கேட்கிறான். அவன் திரிசூலம் போன்ற மூன்று வழியைக் கூறுகின்றான். வலப்புற நெறியில் தண்ணீருக்குத் தவிக்கும் காட்டையும் எயினா ஊரும் கடந்து சிறுமலை சென்று மதுரை அடையலாம் என்றும் இடப்புறவழியில் காடு பல கடந்து அழகர் மலை அடைந்து அங்குள்ள சரவணம் பவகாரணி இட்ட சித்தி ஆகிய குளங்களில் ழ்கினால் முறையே ஐந்திர அறிவு பழம்பிறப்பு வேண்டிய அடைத்தல் பெறலாம் அவை கடந்து மதுரை அடையலாம் என்றும் நடுவழி மோகினித் தெய்வம் உடையது அதனிடம் தப்பி மதுரை அடையலாம் என்றும் கூறுகிறான் கோவலனும் மறையோனும் உரையாடுகின்றனர். இடையில் புகுந்த கவுந்தி மூன்று குளங்களில் மூழ்கத் தேவை இல்லை என்று கூறியதோடு காமுறு தெய்வம் கண்டு பணிய நீபோ என்று கூறிவிடுகிறார்.

நடுவழியில் செல்லும்போது மறையோன் கூறியதுபோல மோனித் தெய்வம் வருகிறது. எனவே அவன் கூற்று உண்மையாகிறது மூன்று குளங்கள் உள்ள வழியில் சென்றிருந்தால் கோவலனுக்கும் கண்ணகிக்கும் இக்கதி நேர்திருக்காதோ எனப் படிப்பவர் உள்ளம் நினைக்கிறது கெடுத்தவர் கவுந்தி கவுந்தியின் இயல்பே அது போலும் அதனால்தான்

**காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு**

**நாமம் அல்லது நவிலாது என்நா**

என்று பிற கடவுளைப் பரவேன் என்ற எதிர்மறைக் குணமே அவரிடம் மேலோங்கி உள்ளதை நாடு காண்காதையில் காண்கிறோம். மேலும் வழிப்போக்கரை விளையாட்டாகப் பேசியவரை முதுநரியாகச் சபிக்கின்றார்.

புறஞ்சேரியில் தங்கி இருந்தபோது கோவலனை மதுரையுள் சென்று உன் இனத்தவரிடம் (வணிகர்) பொருந்தும் இடம் அறிந்து வரச் சொல்கிறார். அவன் அதனைச் செய்யாது வர அன்றே உடனே மாதரியிடம் அடைக்கலப் படுத்துகிறார். சற்றுப் பொருத்திருந்தால் கோவலன் மதுரை வணிகரிடமே சென்றிருப்பானோ என்று தோன்றுகிறது.

இவ்வாறு கவுந்தி பாத்திரம் பெருமை பலவும் சிறுமை சிலவும் கலந்த பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

**பொற்கொல்லன்**

கண்ணுள் வினைஞரும் நுண் வினைக் கொல்லருமாக நூற்றுவர் பின்வர மெய்ப்பை புக்குப் பொற்கொல்லன் வருவதாக அறிமுகப் படுத்துகிறார் இளங்கோ

**தோற்றத்தைக் கண்ட கோவலன்**

தென்னவன் பெயரோடு சிறப்புப் பெற்ற கொல்லன் இவனே எனத் தேறுகிறான். எனவே அவன் தோற்றம் செம்மையானதாக உள்ளது அவனிடம் காவலன் தேவிக்குப் பொருந்தும் காலணியை நீ விலையிடுவாயா? என்று கோவலன் கேட்கிறான் அதற்கு கொல்லன்

**அடியோன் அறியேன் ஆயினும் வேந்தர்**

**முடிமுதல் கலங்கள் சமைப்பேன்யான்.**

எனக் கூறுகிறான் பேச்சிலும் பொடி வைத்துப் பேசுகிறான் அழகான உருவம் வஞ்சகப் பேச்சு அதனால்தான் இளங்கோவே இவனைக் கூற்றுத்தூதன் என்கிறார் கோவலன் சிலம்பைக் காட்ட

**சித்திரச் சிலம்பின் செய்வினை எல்லாம்**

**பொய்த்தொழில் கொல்லன் புரிந்துடன் நோக்குகிறான்.**

அதாவது அவன் நெஞ்சம் குற்றம் சுமத்தலை நோக்க அவன் கண்கள் சிலம்பின் வேலைப்பாட்டை நோக்குகின்றதாம்

**பிறகு மன்னனிடம் கூறும்போது இவனே**

**கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்**

**துன்னியம் மந்திரம் துணைஎனக் கொண்டு**

**வாயிலாளரை மயங்குதுயில் உறுத்துக்**

**கோயில் சிலம்பு கொண்ட கள்வன்**

எனத் தீர்ப்புக் கூறுகின்றான். மன்னனும் தேராது தண்டனை கொடுக்க ஊர்க்காப்பாளரும் கோவலனிடம் வருகிறான். அவர்களின் ஒருவன் கோவலனைக் கண்டு இவன் கொலைப்படு மகன் அலன் என்று கூற உடனே பொற்கொல்லன் கள்வரின் இயல்பு குறித்தும் அதற்குச் சான்று காட்டியும் மிக விரிவாக எடுத்துக் கூறுகிறான். இதனால் கோவலன் வெட்டுண்டு மடிகிறான்.

ஆக இவன் (பொற்கொல்லன்) தோற்றம் செம்மை பணிவு அழகு ஆனால் எண்ணமும் செய்கையும் வஞ்சம் இவன் இயல்பைக் கூற்றத்தூதன்

பொய்த்தொழில் கொல்லன் கடுந்தொழில் கொல்லன் கருந்தொழில் கொல்லன் எனக் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக ஒருவர் தம்முள் தம்மைப்பற்றி நினைக்கும்போது பன்மையில் தான் நினைப்பார். அதனால்தான் வள்ளுவர் கூட

**உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு (குறள் - 1122)**
**ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா (குறள் - 1329)**

என்று கூறுயிருத்தல் காண்க. இவன் மிகக் கீழ்மகன் ஆதலால் நினைக்கும்போது கூட

**கரந்துயான் கொண்ட காலணி ஈங்குப்**
**பரந்து வெளிப்படா முன்னம் மன்னற்குப்**
**புலம்பெயர் புதுவனின் போக்குவான் யான் எனக்**
**கலங்கா உள்ளம் கரந்தனன் செல்வோன்**

என ஒருமையில் நினைப்பதாகக் கூறுகிறார். தீயோனாகிய இவன் கொலைக் களக்காதை என்று ஒரு காதையில் மட்டுமே வந்து படிப்போர் உள்ளத்தில் நீங்கா இடம் பெறும்படி படைக்கப்பட்டுள்ளான்.

**பாண்டிய வேந்தன்**

நீதி தவறாத பொற்கைப் பாண்டியனின் மரபினன் இவன் மிகச் செம்மையாக ஆட்சி புரிந்து வந்தவன் இதனைப் பல இடங்களில் இளங்கோ பலர் மூலம் கூறுகிறார்.

மாங்காட்டு மறையோன் தென்னவனை வாழ்த்தியதற்குக் காரணம் கேட்ட கோவலனிடம்

**தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்**
**கண்மணி குளிப்பக் கண்டேன் ஆதலின்**
**வாழ்த்தி வந்திருந்தேன்.**

என்று கூறுகிறான்

**கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா**
**வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா**
**அரவும் சூரும் உறுகண் செய்யா**

**செங்கோல் தென்னவன் காக்கும் நாடு என**

**எங்ஙனம் போகிய இசையோ பெரிது**

என்று கோவலன் கூறுகிறான் மேலும் ஆய்ச்சியோ குரவை இறுதியில் பாண்டியனைப் போற்றுகின்றனர்.

**மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கிக்**

**களையாத துன்பம் இக் காரிகைக்குக் காட்டி**

**வளையாத செங்கோல் வளைந்தது இது எவன்கொல்?**

என்று உள்ளூர் மக்களே மயங்குகின்றனர் என்றால் தென்னவன் செங்கோல் திறத்தை நன்கு அறியலாம்.

பாண்டியன் மீது சுமத்தும் குற்றம் அவனது தீர்ப்பு என்பர் கூர்ந்து நோக்கின் தீர்ப்பில் குற்றமில்லை என்பதை உணரலாம்

**வினைவிளை காலம் ஆதலின் யாவரும்**

**சினையலர் வேம்பன் தேரானாகி**

**ஊர்க்காப்பாளதைக் கூவி ஈங்கு என்**

**தாழ்பூங் கோதை தன் கால் சிலம்பு**

**கன்றிய கள்வன் கையது ஆகில்**

**கொன்று அச் சிலம்பு கொணர்க ஈங்கு**

என்பதே தீர்ப்பு இதில் 1. வினைவிளைகாலம் 2. தேவியின் காற்சிலம்பா என்று பாருங்கள் 3. அவன் கள்வனாகன்றிய கள்வனா என்று பாருங்கள் 4.அச்சிலம்பு அவன் கையில்தான் உள்ளதா என்று பாருங்கள் 5. இருந்தால் கொன்று கொணர்க என்றான். இதன்படி பார்த்தால் தீர்ப்பில் தவறு இல்லை தவறு எங்கு என்றால் இதனை ஆராய அமைச்சரை அனுப்பாமல் ஊர்க்காப்பாளரைப் பொற்கொல்லனுடன் அனுப்பியதுதான்.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல் (குறள் 517)**

என்பார் வள்ளுவர் இதில்தான் சினையலர் வேம்பன் தேராது செய்தான் வினைவிளை காலம் மன்னனுக்கா கோவலனுக்கா மதுரைக்கா? அனைத்திற்கும் பொருந்துமாறு உள்ளது.

அவன் சிறந்த செங்கோலன் என்பது மதுராபதி தெய்வம் அவன் பெருமையைக் கண்ணகிக்குக் கூறுவதிலிருந்து அறியலாம். மேலும் அக்கினி பகவான் கண்ணகி முன் தோன்றி

**மாபத்தினி நின்னை மாணப் பிழைத்த நாள்**
**பாயெரி இந்தப்பதி ஊட்டப் பண்டே ஓர்**
**ஏவல் உடையேனால் யார் பிழைப்பார் ஈங்கு**

என்பதால் இது கோவலன் கண்ணகி இருவரையுமே சார்ந்த விதி என்பது தெளிவு

ஆக இது விதியால் நடந்ததுதான் எனினும் வேந்தன் கண்ணகிதன் வாதத்தின் உண்மை அறிந்து 'தென்புலக் காவல் என் முதல் பிழைத்தது கெடுக' என் ஆயுள் என்று உயிர் கொடுத்து வளைந்த செங்கோலை நிமிர்த்துகின்றான். ஆக பாண்டியன் என்ற பாத்திரம் மேலோட்டமாகப் பார்க்க தவறு செய்தவன் போன்றும் கூர்ந்து நோக்கும்போது தவறற்றவன் போன்றும் படைக்கப்பட்டுள்ளது.

மதுரைக்கு வழி சொல்லவும் கவுந்தியின் சமயப் பொறை இன்மையை வெளிப்படுத்தும் மூலமாகவும் மாங்காட்டு மறையோன் என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

புகார் நகரத்தில் கோவலன் மாதவியுடன் வாழ்க்கையையும் அவனது பெருமைகளையும் வெளிப்படுத்திய அதன் மூலம் அவலச் சுவையை மிகுவிக்கும் நோக்கில் மாடலி மறையோன் என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

கோவலன் பண்பு நலப் புலப்பாட்டில் காப்பிய உத்தியின் பயன்பாடு

உய்த்து உணர வைப்பது உத்தி இதனை நன்னூல் ''உய்த்துணர வைப்பென உத்தி எண்ணான்கே'' என்று கூறும் இலக்கியத்திலும் புலவர்கள் இதனைப் பயன்படுத்தும்போது அது இலக்கிய உத்தி எனப்படுகிறது. இங்கு உத்தி என்பது நுட்பம் (Technique) என்ற பொருளில் வழங்குகிறது. இலக்கியத்திற்கு உத்தி பொதுவாயினும் சில சிறப்புக் காரணமாக காப்பிய உத்தி நாடக உத்தி என வகைப்படுத்தப்படுகின்றது. இங்கு மதுரைக் காண்டத்துள் காப்பிய உத்திகளைப் பயன்படுத்தி இளங்கோவடிகள் கோவலனின் பண்பு நலனை எங்ஙனம் புலப்படுத்தியுள்ளார் என்பதனைக் காண்போம்.

**வான்குரல்**

ஆய்ச்சியர் குரவையின் இறுதியில் கண்ணகிக்குக் கோவலன் கொலையுண்டதனை ஒருத்தி கூறுகின்றாள். இதனால் துன்பம் அடைந்த கண்ணி மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறு இழைத்து விட்டதாகக் கூறி அழுகின்றான். நாடு விட்டு நாடு சென்று யாருமில்லா அநாதையாகி நிற்கின்றாள். நாடு விட்டு நாடு சென்று யாருமில்லா அநாதையாகி நின்கின்றாள் கொலை செய்தவனோ அந்நாட்டு மன்னவன் இந்நிலையில் கண்ணகிக்கு ஆறுதலாக மன்னனுக்கு எதிராக யார் வருவார்கள்? அதனால்தான் ஆயர் மகளிர்கூட அவளுக்கு ஆறுதல் சொல்லவில்லை இந்நிலையில் தான்

காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்? என்று கேட்கிறாள். இக்கேள்விக்கு விடை மக்கள் யாரும் சொல்லக்கூடிய நிலையில் இல்லாததால் இளங்கோவடிகள்

**கள்வனோ அல்லன் கருங்கயல்கண் மாதராய்**

**ஒள்ளெரி உண்ணும் இவ்வூர் என்றது ஒரு குரல்**

என்று வான்குரலை (அசரீரி) சான்றாக்குகின்றார். அதாவது வான்குரல் உத்தியை உரிய இடத்தில் பயன்படுத்திக் கோவலன் குற்றமற்றவன் என்று புலப்படுத்துகிறார்.

**முன்கதை கூறல்**

மாங்காட்டு மறையோன் கூறியது போன்று கானுறை தெய்வம் வயந்த மாலை வடிவில் தோன்றித் தனித்துயர் உழந்தேன் பாத்தரும் பண்ப நின் பணிமொழி யாது? என வினவுகிறது. இங்கு மாதவி தன்கை கைவிட்டதையும் கூறுகிறது. மதுரைக் காண்டத்துக் கோவலன் திருந்தியவன் ஆதலின் பாய்கலைப் பாவை மந்திரம் சொல்லி விலக்குகின்றான். இதன் லம் இளங்கோ உணர்த்தும் கோவலன் பண்பு இரண்டு 1. கோவலன் முன்போல் பெண் பித்துக் கொண்டவன் அல்லன் என்பது மட்டுமல்ல மன உறுதி கொண்டவன் என்றும் புலப்படுத்துகிறார் 2.மந்திரம் கூறித் தீயதை விலக்கும் சக்தி படைத்தவன் என்றும் கூறுகிறார் அதாவது ஒருவகையில் ஆசாரம் உடையவன் என்கிறார்.

அடுத்து புறஞ்சேரியில் தங்கியிருந்தபோது மாடலமறையோன் வந்து புகார் நகரத்தில் கோவலன் செய்த நற்செயல்களை எல்லாம் கருணைமறவன்

செல்லாச் செல்வன் இல்லோர் செம்மல் என்று பட்டியலிட்டுக் கூறி இம்மை செய்தன யான்றி நல்வினை என்றும் கூறுகிறான். இவ்வாறு இவன் பண்பு நலனைப் புலப்படுத்தும் இளங்கோவடிகள் மேலும் ஓர் உத்தியைப் பயன்படுத்துகிறார் அடுத்துக் ரொகலைக்களக் காதையில் கோவலன் இறக்கப் போகிறான் அதற்கு முன் கோவலன் பண்புகளை ஓர் மறையவன் லம் புலப்படுத்துகிறார். இதனால் படிப்போர் உள்ளத்தில் கோவலன் மீது இரக்கத்தை உண்டாக்குகிறார் எனலாம் இவ்வாறு புகார் நகரச் செய்திகளை மதுரைக் காண்டத்துள் கூறுவதன் லம் கோவலனின் பல பண்புகளையும் இளங்கோவடிகள் புலப்படுத்துகிறார்.

**மனைவி ஏத்தும் மாட்சி**

குதிரை பாரம் அறியும் கொண்டவள் குணமறிவாள் என்பது பழமொழி ஒருவனின் குணத்தை அவன் மனைவியே நன்கு அறிவாள் என்பதாம் கோவலன் மாதவியிடம் சென்றதற்காகக் கண்ணகி வருந்தியதாக இளங்கோ எங்கும் குறிப்பிடவில்லை. இல்லில் இருந்து செய்யும் அறத்தைச் செய்யாமல் போனதால் போற்றா ஒழுக்கம் புரிந்தீர் என்று வெகுள்கிறாள் ஆனால் அவளே

**அன்பனை இழந்தேன் யான் அவலம் கொண்டு அழிவலோ**
**நறைமலி வியன்மார்பன் நண்பனை இரந்தேங்கி**

என்கிறாள் கோவலனை அன்பன நண்பன் என்றெல்லாம் கூறுகிறாள். இதன் லம் கோவலன் மனைவியிடம் எவ்வாறு அன்பும் நட்பும் கொண்டிருந்தான் என்பதனை இளங்கோ புலப்படுத்தகின்றார் மேலும் இறந்த கணவனைக் கண்டு

**என் உறு துயர் கண்டும் இடர் உறும் இவள் என்னீர்**
**பொன்னுற நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ**

என்று அழும்போதும் அவன் எவ்வாறெல்லாம் கண்ணகியைக் போற்றி வாழ்ந்துள்ளான் என்று தெரிகிறது. இவ்வாறு மனைவி அளிக்கம் சான்று லம் அவனின் நற்பண்புகளைப் புலப்படுத்துகின்றார்.

**கூறாது உணர்த்தியன**

இதுவரை தெய்வத்தின லமாகவும் அறிந்தோர் கூற்று லமாகவும் கோவலனின் பண்புகளைப் புலப்படுத்தியதைப் பார்த்தோம் அவன் செய்கை லம் புலப்படுத்தும் பண்புகளையும் காண்போம்.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**

**கருமமே கட்டளைக் கல் (குறள் 505)**

கோவலன் மாங்காட்டு மறையோனிடம் மதுரைக்குச் செல்லும் வழி கேட்கும்போது அவன் மூன்று வழிகளைக் கூறி அவற்றின் தன்மைகளையும் சொல்கிறான். கோவலன் எந்த வழியில் செல்வது நலம் என்று முடிவு செய்வதற்கு முன்பாகவே கவுந்தி அடிகள் இடையே புகுந்து மாங்காட்டு மறையோனுக்கு விடையிறுத்தது மட்டுமல்லாது செல்லும் வழியையும் முடிவு செய்து விடுகிறார். அப்போது கோவலன் யாதொன்றும் கூறாமல் அமையாக இருக்கின்றான் இதன் மூலம் அவன் பொறுமைக் குணத்தைப் புலப்படுத்துகிறார்.

கோசிகமாணி கொண்டுவந்து கொடுத்த மாதவியின் முடங்கலைப் படித்து அது தன் பெற்றோருக்கு ஏற்புடையதாக உள்ளமை அறிந்து அதனையே தன் கடிதமாகக் கொடுத்து அனுப்புகிறான். இதனால் அவன் கல்வி நலனின் மேன்மை புலப்படுகிறது.

**மாமறை முதல்வன் மாடலான் என்போன்**

**கவுந்தி இடவின் புகுந்தோன் தன்னைக்**

**கோவலன் சென்று சேவடி வணங்க**

என்பதால் கோவலனின் பணிவைப் புலப்படுத்துகிறார். வேட்டுவ வரியில் வேடுவர்களுடன் யாழ் மீட்டிப் பாடிப் பின் மதுரைக்கு வழி கேட்டலால் அவன் இயல்பாகவே எல்லாருடனும் பழகும் குணம் கொண்டவன் என்பதைக் காட்டுகிறார்.

கண்ணகியின் மேன்மையை நன்கு உணர்ந்தவன் ஆதலில் அவள் மேனி வாட்டம் கண்டு வேதனைப்படுகின்றான். நாவறட்சி ஏற்பட்டபோது தாமரை இலையைக் குவளைபோல் செய்து அவளுக்கு நீர் கொண்டு வந்து தருகின்றான். அவளைப் பிரிந்து சென்றதற்காக அவள் போற்றா ஒழுக்கம் புரிந்தீர் என்று வெகுளும் போதும் அவன் பொறுமையாகவே

**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி**

**சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டு யான் போய்**

**மாறி வருவன் மயங்காது ஒழிக**

என ஆறுதல் கூறுகிறான். அவள் நிலை கண்டு வருந்தி அதனால் வெளிப்படும் தன் கண்ணீரை அவளுக்குத் தெரியாமல் மறைக்கிறான்.

**உழையோர் இல்லா**

**ஒரு தனி கண்டு தன் உள்ளகம் வெதும்பி**

**வருபனி கரந்த கண்ணனாகி**

என்பார் இளங்கோ.

ஒருவன் உண்மையிலே திருந்துகின்றான் என்றால் தன் குற்றத்தை ஒத்துக் கொள்ளுதல் வேண்டும் இதுவே அடிப்படை புகார் நகரத்துக் கோவலன் கலைஞனாக இருப்பினும் இழிஞனாகவே காட்சி அளிக்கிறான். அவன் உள்ளம் திருந்திவிட்டான் அதனால்தான்

**கோவலன் சென்று கொள்கையில் இருந்து**

**கவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி**

**நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி**

**அறியாத் தேயத்து ஆரிடை உழந்து**

**சிறுமையுற்றேன் செய்தவத்தீர் யான்**

என்று கவுந்தியிடம் கூறுகிறான்.

**வறுமொழி யாளரோடு வம்பப் பரத்தரொடு**

**குறுமொழி கொட்டி நெடுநகை புக்கு**

**பொச்சாப்புண்டு பொருளுரை யாளர்**

**நச்சுக் கொன்றேற்கும் நன்னெறி உண்டோ?**

**இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்**

**சிறுமுது குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்**

**வழுவெனும் பாரேன்**

என்று தன் மனைவியிடமும் தன் தவற்றை ஒத்துக் கொள்ளும் பண்புடையவனாகக் காட்டுகிறார் இளங்கோவடிகள்

**அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்**

**இன்மை அரிதே வெளிறு (குறள் 503)**

என்பார் வள்ளுவர் அரிய கற்றவர்களுக்கே அந்த நிலை என்றால் கோவலன் எம்மாத்திரம்?

புறஞ்சேரியில் இருந்தபோது மதுரையுள் சென்று தன் வணிகப் பெருமக்களைக் கண்டு வருகிறேன் என்று சொல்லிச் சென்றவன்.

மதுரையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறான். இவன் அறஞ்சார நல்குரவு அடைந்தவன் ஆதலால் நாணப்பட்டவன் ஆதலால் அவ்வாறு செய்தான் போலும்

இவ்வாறு பல்வேறு காப்பிய உத்திகளைப் பயன்படுத்திக் கோவலனின் பண்பு நலன்களை இளங்கோவடிகள் மதுரைக்காண்டத்துள் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

**சிலம்பின் பாடுபொருள் மூன்றும் மதுரைக்காண்டத்துள் இடம் பெற்றுள்ளன**

**அரைசியல் பழைத்தோர்க்கு அறங் கூற்று ஆவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்**

ஆகிய ன்றுமே சிலம்பின் பாடுபொருள் என்பர் இம் மூன்றுமே அதன் மதுரைக் காண்டத்தில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. அவ்வாறு இடம்பெற்றுள்ள பாங்கினை எடுத்துக் காட்டுவதே இங்கு நோக்கம்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும்.

**இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின் (குறள் 547)**

என்பார் வள்ளுவர் எனவே முறை ஆகிய அறத்தை மன்னன் முட்டாது செய்யும்போது அவ்அறம் அவனைக் காக்கும் என்பதால் அறத்திற்கு முட்டுப்பாடு ஏற்படும்போது அவ் அறமே அவனைக் கொன்றுவிடும் என்பது நியதி.

**மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அ.்.தின்றேல்**
**மன்னாவாம் மன்னர்க்கு ஒளி (குறள் 556)**

என்பதும் அதனை நோக்கியே கூறப்பட்டதாகும். வள்ளுவரின் இக்குறட்பாக்களின் கருத்தையே இளங்கோவடிகள் அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்று ஓரடி நீதியாக ஓதியுள்ளார். அதனை மதுரைக் காண்டத்துள் மூன்று இடங்களில் வெளிப்படுத்தி யுள்ளார்.

கூடல் நகரத்து ஆடல் மகளிரின் முகத்தோற்றமும் ஆடல் தோற்றமும் காவலன் உள்ளம் கவர்ந்தன என்று அவன் குலமுதல் தேவி கூடாது செல்ல அவளை ஊடல் தீர்க்கும் பொருட்டுச் செல்லும் மன்னனிடம்

பொற்கொல்லன் கோயில் சிலம்பு கொண்ட கள்வன் என் சிறுகுடில் அருகே உள்ளான் என்று கூற

**வினை விளை காலம் ஆதலின் யாவதும்**

**சினை அலர் வேம்பன் தேரானாகி**

**ஊர்க்காப் பாளரைக் கூவி ஈங்கு என்**

**தாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு**

**கன்றிய கள்வன் கையது ஆகில்**

**கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு**

என்கிறான் கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்றுதான். ஆனால் சிலம்பை ஆய்வதற்கும் கன்றிய கள்வனா என்பதை முடிவு செய்வதற்கும் ஊர்க்காப்பாளரை (கூர்க்கா) அனுப்புகிறான்.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன் கண்விடல் (குறள் 517)**

என்ற இலக்கணத்தை மறந்து இப்பொறுப்பினை அமைச்சரிடமோ ஊர்ப்பெருமக்களிடமோ ஒப்படைக்காமல் ஊர்க்காப்பாளரிடம் ஒப்படைத்து தான் அவன் செய்த பிழை அரசியல் பிழை அதற்குத்தான் இறுதியில்.

**தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்**

**பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட**

**யானோ அரசன் யானே கள்வன்**

**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**

**என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்**

எனக் கூறி இறக்கின்றான்.அவன் தேவியும் மடிகின்றாள். அதனால் தான்

**அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றாகுமாம் என்றும்**

**பல்லவையோ சொல்லும் பழுதன்றே – பொல்லா**

**வடுவினையே செய்த வயவேந்தன் தேவி**

**கடுவினையேன் செய்வதூஉம் காண்**

என வழக்குரைகாதையின் இறுதி வெண்பா கூறுகிறது.

அடுத்து மதுராபதி தெய்வம் பாண்டியனின் பெருமையைக் கண்ணகிக்குக் கூறும்போது வார்த்திகன் என்ற மறையோனின் கதையைக் கூறுகிறது. அதில்

**புனையவும் பூண்பவும் பொறாஅர் ஆகி**
**வார்த்திகன் தன்னைக் காத்தனர் ஓம்பிக்**
**கோத்தொழில் இளையவர் கோமுறையன்றிப்**
**படுபொருள் வவ்விய பார்ப்பான் இவன்என**
**இடுசிறைக் கோட்டத்து இட்டனர்**

அதனால் வார்த்திகன் மனைவி கலங்கினாள் அது கண்டு ஐயை கோயில் தகவு அடைத்துக் கொள்ள விசாரித்த மன்னன்,

**நீர்த்தன்று இது என நெடுமொழி கூறி**
**அறியா மக்களின் முறைநிலை திரிந்த என்**
**இறைமுறை பிழைத்தது பொறுத்தல் நும் கடன்**

என வேண்டி வார்த்திகன் முன் நிலத்தில் விழுந்து வணங்கினான். இதனால் கலைஅமர் செல்வி கோட்டத்துக் கதவு திறந்தது. ஆட்சியாளர்களுக்குப் புகழ்கேடும். கூற்றம் ஆகையால் இதனையும் அரைசியல் பிழைத்தோர்க்கும் அறம் கூற்றாகும் என்பதாகக் கொள்ளலாம்.

பொற்கை பாண்டியனின் வரலாற்றையும் மதுராபதி தெய்வம் கூறுகிறது. இது எதிர்நிலை விளக்கம். அதாவது அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும் என்றால் பிழையாதார்க்கு அறம் வாழ்விக்கும் தர்மம் தலைகாக்கும் என்பது எதிர்நிலை விளக்கம் பொற்கைப் பாண்டியன்.

**வச்சிரத் தடக்கை அமரர் கோமான்**
**உச்சிப் பொன்முடி ஒளிவிளை உடைத்தகை**
**குறைத்த செங்கோல் குறையா கொற்றத்தை**

உடையவன் ஆதலின் அவன் தன் கையையே குறைத்துக் கொண்டாலும் அறம் அவனுக்குப் பொற்கையைக் கொடுத்தது.

இவ்வாறு மதுரைக்காண்டத்தில் மூன்று இடத்தில் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்று பாடுபொருள் வற்புறுத்தப்பட்டுள்ளது.

**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்**

“சான்றோர் சான்றோர் பலர் ஆவர்” என்பதால் உயர்ந்தோர் உயர்ந்த பத்தினியையே ஏத்துவர் இப்பாடுபொருள் மதுரைக் காண்டத்துள் பல இடத்தில் வலியுறுத்தப்படுகிறது. அவை வருமாறு

மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலன் முதலிய மூவரும் கொற்றவைக் கோயிலில் தங்குகின்றனர். அப்பொது வேடுவ மகளான சாலினி மீது தெய்வம் வந்து கண்ணகியைச் சுட்டி

**இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி**
**தென்தமிழ்ப் பாவை தெய்வக் கொழுந்து**
**ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய**
**திருமா மணி**

துறவியாகிய கவுந்தியடிகள் கண்ணகியை அடைக்கலம் கொடுக்கும்போது மாதரியிடத்தில்

**என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்**
**வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்**
**கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு**
**நடுங்கு துயர் எய்தி நாப்புலர வாடித்**
**தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி**
**இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்**
**கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்**

என்று ஏத்திக் கூறுகின்றார்.

தீதுஇலள் முதுமகள் செவ்வியல் அளியளாகிய இடைக்குல மடந்தை மாதரியும் மகள் ஐயையும் கண்ணகியைக் கண்டு

**பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்**
**தொழுவனை ஆற்றினுள் தூமணி வண்ணனை**
**விழும் தீர்த்த விளக்குக்கொல்**

எனப் புகழ்ந்துரைக்கின்றார்.

**தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (குறள் 55)**

என்பார் வள்ளுவர் இதன் ஒருபொருள் பத்தினிப் பெண்களுக்கு இயற்கையம் தெய்வமும் ஏவல் செய்யும் என்பதாம் கணவனை இழந்த கண்ணகி மதுரையை எரிக்க வேண்டி முலை தருகி எறிந்தபோது

**மாலை எரிஅங்கி வானவன் தான்தோன்றி**
**மாபத்தினி நின்னை மாணப் பிழைத்த நாள்**

**பாயெரி இந்தப் பதி ஊட்டப் பண்டே ஓர்**

**ஏவல் உடையேனால் யார் பழைப்பார் ஈங்கு?**

என்று கண்ணகியின் ஏவலுக்குக் காத்திருக்கின்றது. அவள் ஏவலிடச் செய்து முடிக்கிறது. நெருப்புத் தேவனாகிய அக்கினி.

இவ்வாறு உரைசால் பத்தினியாம் கண்ணகியைப் பலரும் ஏத்த அந்தப் பத்தினி புகார் நகரில் வாழ்ந்த ஏழு பத்தினிப் பெண்களின் சிறப்பை எடுத்துக் கூறி

**அவள் போல்வார் நீடிய**

**மட்டார் குழலார் பிறந்தபதிப் பிறந்தேன்**

**பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்**

**ஓட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையும்**

என்று பத்தினிப் பெண்கள் மீதுதான் சத்தியம் செய்கிறாள் கண்ணகி. இவ்வாறு பல இடங்களில் 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்' என்ற பாடுபொருள் மதுரைக் காண்டத்தில் பல இடங்களில் வருகிறது.

**3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**

பெருமுயற்சி செய்தும் பலன் விளையாத போதும், விளைவுகளுக்குக் காரணம் தெரியாத போதும் மனிதன் ஊழ்வினை குறித்துச் சிந்திக்கின்றான். மதுரைக் காண்டத்துள் ஊழ்வினை பற்றி நிலைகளில் குறிக்கப்படுகிறது. அவை வருமாறு :

1. **அறிவுரையாகக் கூறல்**

புறஞ்சேரியில் தங்கியிருந்தபோது கண்ணகி நிலை கண்டு கோவலன் கவுந்தியிடம் வருந்தியபோது அவர் விதிவலி கூறித் தேற்றுகின்றார்.

மறத்துறை நீங்குமின் வல்வினை ஊட்டும் என்று

**அறத்துறை மாக்கள் திறத்தில் சாற்றி**

**நாக்கு அடிப்பாக வாய்ப்பறை அறையினும்**

**யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்**

**தீதுடை வெவ்வினை உருத்த காலைப்**

**பேதமை கந்தாப் பெரும்பேது உறுவர்**

என்று கூறுகின்றார். இதற்குச் சான்றாக,

**அடவிக் கானகத்து ஆயிழை தன்னை**

**இடையிருள் யாமத்து இட்டு நீக்கியது**

**வல்வினை அன்றோ?**

என்று நளனின் வாழ்க்கையைக் கூறுகின்றார்.

**2. கட்டளையாகக் கூறல்**

மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் பேசும்போது முற்பிறப்புச் செய்தி கூறியபின் நீலியின் சாபமே வந்து உற்றது என்று கூறி அவளிடம்,

**உம்மை வினைவந்து உருத்த காலைச்**
**செம்மை இலோர்க்குச் செய்தவம் உதவாது**

என்று கூறுகிறது. அதாவது முற்பிறப்பு வினை வந்து சேரும்போது இப்பிறப்புத் தவம் உதவாது என்று ஆணையாகக் கூறுகிறது.

**3. கதையோட்டத்துடன் கூறுதல்**

கோவலன் மற்ற இருவருடன் புறஞ்சேரியில் இருந்தபோது அங்கு வந்த மாடல மறையோன் கோவலனைச் சந்தித்து அவனின் கருணைக் குணம் போன்ற உயர்ந்த குணங்களை எல்லாம் பாராட்டி இறுதியில்,

**இம்மை செய்தன யானறி நல்வினை**
**உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்து இத்**
**திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது**

என்று வருந்துகிறான். நல்லவன் துன்பப்படும்போது காரணம் காணாது மறையோன் 'உம்மைப் பயன்' என்கிறான். கண்ணகியிடம் காற்சிலம்பு பெற்றுச் செல்லும் கோவலன், 'நம் துன்பத்திற்குக் காரணம்,

**மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ**
**யான்உளங் கலங்கி யாவதும் அறியேன்**

என்று துன்பத்திற்குக் காரணம் வினை என்கிறான்.

மன்பதைக் காக்கும் தென்புலக் காவலன் பாண்டியன் வளையாத செங்கோலன், அறந்தவறாத பொற்கைப் பாண்டியன் மரபில் வந்தவன். அவன் தீர்ப்புத் தவறாகிறது - இதற்குக் காரணம் தெரியாததால் இளங்கோவடிகளே,

**வினைவிளை காலம் ஆதலின் யாவதும்**
**சினைஅலர் வேம்பன் தேரா னாகி**

என்கிறார். அவ்வாறே, கோவலன் இப்பிறப்பில் நல்லவன்தான். அவன் துன்பப்பட்டு இறக்கின்றான். துன்பத்தின் காரணத்தை மாடலனும், கோவலனும் நேரே கூறினர். அவன் இறப்புக்குக் காரணத்தை இளங்கோவே,

**தீவினை முதிர்வலைச் சென்றுபட்டிருந்த**
**கோவலன் தன்னைக் குறுகினன் ஆகி**

என்றும்,

**காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்**
**கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென்**

என்றும் கூறுகிறார்.

**பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும் (குறள் - 319)**

என்பது வள்ளுவ நீதி. அதனை ஏற்று இவ்வாறு கூறினர் போலும்.

இவ்வாறு சிலம்பின் மதுரைக் காண்டத்தில் அதன் பாடுபொருள் என்றும் மிகச் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளன.

**மதுரைக்காண்டம் அவலச் சுவை நிறைந்தது**

மங்கல வாழ்த்துக் காதை எனத் திருமணத்துடன் தொடங்கும் சிலப்பதிகாரம், புகார்க்காண்டம் முழுவதிலும் பெரும்பாலும் உவகைச் சுவை மேலோங்கும் வண்ணம் செல்கிறது. எனினும் அவலச் சுவைக்கான வித்துகள் பலவும் காண்ட இறுதியில் விதைக்கப்படுகின்றன. அவை வளர்ந்து மதுரைக் காண்டத்தை அவலச்சுவை நிறைந்த காண்டமாக ஆக்கிவிடுகின்றன. இனி, மதுரைக் காண்டம் எங்ஙனம் அவலச்சுவை நிறைந்ததாக உள்ளது என்பதைக் காண்போம்.

அவலம் என்ற அழுகைச்சுவை குறித்துத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலுள்,

**இளிவே இழவே அசையே வறுமை என**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே**

எனக் கூறியுள்ளார். இந் நான்கையும் பேராசிரியர் தன்கண் தோன்றியனவும் பிறன்கண் தோன்றியனவும் என எட்டாக்கி விளக்குவார். இத்தகு அவலச் சுவை பலவும் மதுரைக் காண்டத்துள் உள்ளன.

**இளிவு**

இளிவு என்பது தன் நிலை தாழ்தல் இழிநிலைக்குச் செல்லுதலாம் இதனால் அழுகை தோன்றும் அரசு விழை திருவின் அங்காடிகள் நிறைந்த மதுரையைத் தலைநகராகக் கொண்டு மன்பதைக் காக்கும் தென்புலக் காவலனான பாண்டியன் கண்ணகி எடுத்துரைத்த வழக்குரையில் தோற்றபோது நீதி காக்கும் மன்னன் என்ற நிலையிலிருந்து இழிந்ததால்

**தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்**

**பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட**

**யானோ அரசன் யானே கள்வன்**

**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**

**என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்**

என்று சொல்லி இறக்கின்றான். இங்கு இளங்கோ அவன் அழுதான் என்று சொற்களால் சொல்லவில்லையே ஒழிய மன்னன் பயன்படுத்திய சொற்கள் மூலமே அவன் அழுதான் என்பதைப் புலப்பட வைக்கின்றார். கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கிக் கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் என்று சொல்லி இறப்பதும் இதன் பாற்படும்.

**இழவு**

பொருள் இழப்பு வாழ்க்கை இழப்பு, உயிர் இழப்பு, என்ற மூன்று இழவுகள் மூலம் மதுரைக்காண்டம் அவலம் நிறைந்ததாகிறது.

புகார் நகரில் சிலம்புள கொண்ம் எனக் கண்ணகி கூற அதற்குக் கோவலன்

**இச் சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு**

**உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் மலந்தசீர்**

**மாட மதுரை அகத்து**

என்று சொல்லி அவளுடன் மதுரை வந்தான். புறஞ்சேரியில் மாதரி வீட்டில் உண்டு இனிது இருந்தபோது அவன்

**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி**

**சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டுயான்போய்**

**மாறி வருவன்**

எனக் கூறிக் செல்கின்றான். இழந்த வாழ்க்கையை மீட்க உள்ள ஒரே மூலப்பொருள் அச் சிலம்புதான் அதுவும் புலைமகனாம்

பொற்கொல்லனால் கள்வன் எனப் பழி சுமத்தப்பட்டுப் பறிக்கப் படுகிறது. இவ்வாறு பொருள் இழப்புக் காரணமான அவலம் கொலைக்களத் காதையின் செம்மையாக அமைந்துள்ளது.

இடைக்குல மடந்தையாம் மாதிரி வீட்டில் கோவலனும் கண்ணகியும் உரையாடும்போது எழுக என எழுந்தாய் என் செய்தனை என்று கோவலன் வினவியபோது

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை...**

என விடையிறுத்துச் சொல்கின்றாள் கண்ணகி. இதன் கண் புகார் நகரத்தில் கண்ணகி வாழ்க்கையை இழந்துவிட்டாள் என்பதனை இளங்கோ மதுரைக் காண்டத்துள் தெற்றெனப் புலப்படுத்துகின்றார். அதாவது புகார் நகரத்தில் வாழ்க்கையை இழந்த கண்ணகி மதுரை வந்து கைப்பொருளையும் இழந்து பின் கணவனையும் இழக்கின்றாள் என்பதாம். உயிர் இழப்பு என்று பார்க்கும் போது பொதுவாக ஆண்களே உயிர் இழக்கின்றனர். இதனை மூன்று இடங்களில் இளங்கோ சுட்டிக் காட்டுகின்றார். தென்புலக்காவல் என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள் என்று கூறித் தென்னவன் உயிர் விடுகின்றான். அவன் மனைவி.

**கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்**
**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று**
**இணையடி தொழுது வீழ்ந்தனள்**

எனவே தன் கணவன் இழப்பைக் கண்டு அது ஈடு செய்ய முடியாதது என்று அவளும் உயிர் விடுகின்றாள் கோவலன் இறந்ததால் கண்ணகி படும் துயரம் துன்ப மாலை ஊர் ஊழ்வரி வழக்குரை காதை வஞ்சினமாலை கட்டுரைக் காதை ஆகிய காதைகளில் இளங்கோ விரிவாகப் பாடுகிறார் கோவலன் இறந்தான் என்று ஆய்ச்சி ஒருத்தி கூற

**நறைமலி வியன்மார்பன் நண்பனை இழந்தேங்கித்**
**துறைபல திறம்மூழ்கித் துயருறு மளிரைப் போல்**
**மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப**
**அறனெனும் மடவாய் யான் அவலம் கொண்டு அழிவலோ**

என்று தர்ம தேவதையிடம் தன் குறை கூறி அழுகின்றாள் வெட்டுண்ட கணவனைக் கண்டு

**யாருமில் மருள் மாலை இடர் உறு தமியேன் முன்**
**தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ**
**பார் மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப**
**ஈர்வதோர் வினை காணா இது என உரையாரோ**

என்று அழுகிறாள் வழக்குரைக்கச் செல்லும் முன் மதுரை மக்களிடம்

**பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்**
**கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறுஉம்**
**பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்**

என்று அழுகின்றாள். பின் எல்லாம் முடிந்தபின் கொற்றவை வாயிலில் பொற்கொடி உடைத்து இருத்தலும் நிற்றலும் இல்லாமல் நடக்கின்றாள்

**கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்**
**மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு**
**என மனம் நொந்து செல்கின்றாள்.**

அடுத்து மதுராபதி தெய்வம் முற்பிறவிச் செய்தியைக் கூறும்பொது நீலி என்பவளின் கணவனான சங்கமனை பரதன் காட்டிக் கொடுக்க அவன் இறக்கின்றான் நீலியும் கணவனை இழந்து வேதனை அடைகின்றாள்

**அசைவு**

அசைவு என்றால் தளர்ச்சி இதன் காரணமாகவும் அவலம் தோன்றும் என்பதாம் மதுரை நோக்கிச் செல்லும்போது கோவலன்

**காதலி தன்னொடு கானகம் போந்ததற்கு**
**ஊதுஉலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி**
**உள்புலம்பு உறுதலின் உருவம் திரியக்**
**கண்புல மயக்கத்துக் கௌசிகன்**

என்பது பிறர் அசைவு கண்ட அவலம். மதுரையில் கோவலன்

**மாயம் கொல்லோ வல்வினை கொல்லோ**
**யான் உளங் கலங்கி யாவதும் அறியேன்**

என்று கண்ணகியிடம் கூறுதல் தன்கண் தோன்றிய அவலம்

**வறுமை**

“கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை” என்றாள் அவ்வை.

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதென்றும் கண்பாடு அரிது (குறள் 1040)**

என்றார் வள்ளுவர் மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் பாண்டிய மரபின் சிறப்புக் கூறும்போது வார்த்திகன் பற்றிக் கூறுகிறது. வார்த்திகன் வறுமையாளன் அவன் மகன் மந்திரம் ஓதி பராசரரிடம் நன்கலம் பெற்று வருகிறான். ஆனால் வறுமைக் குடும்பம் பெருங்கலன் அணிந்தால் ஐயந்தானே? அதனால்தான்

**நன்கலம்**

**புனையவும் பூண்பவும் பொறாஅர் ஆகி**
**வார்த்திகன் தன்னைக் காத்தனர் ஓம்பிக்**
**கோத்தொழில் இளையவர் கோமுறை யன்றிப்**
**படுபொருள் வவ்விய பார்ப்பான் இவன்என**
**இடுசிறைக் கோட்டத்து இட்டனர்**

அவன் சிறைபட்டதற்கு வறுமையே காரணம். இவ்வாறு சிலம்பில் நான்கு வகை காரணமாக அவலம் தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது.

**உத்தி முறையும் அவலச் சுவையும்**

மதுரைக் காண்டத்துள் அவலத்தை மிகுவிக்க இளங்கோஅடிகள் சில உத்திமுறைகளைக் கையாண்டுள்ளார்

1. துன்ப நிகழ்ச்சியைப் பல காதைகளில் விரித்துக் கூறுதல் கொலைக்களக் காதை ஆய்ச்சியர் குரவை துன்பமாலை ஊர்சூழ் வரி என்ற நான்கிலும் ஒரு நாள் நிகழ்ச்சியே கூறப்படுகிறது
2. இரவேறு காட்சிகளைக் காட்டல் ஊர் காண் காதையில் மதுரை நகரின் வளத்தினைப் புலவர் பலவாறு விரித்துக் கூறுகிறார். அந்நகரம் இரண்டு நாள்களில் அழல்படு காதையில் அழிந்து நாசமாகிறது வளத்தையும் அழிவையும் அடுத்தடுத்துக் காட்டி அவலத்தை மிகுவிக்கின்றார்.

3. இலக்கிய அணியைப் பயன்படுத்துதல் வாழ்தல் வேண்டி மதுரை வரும் கோவலனையும் கண்ணகியையும்

**போர் உழந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி**

**வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட**

அவர்கள் புறஞ்சேரி புகுவதைத் தற்குறிப்பேற்றம் மூலம் உள்ளத்தில் அவல விதை விதைக்கின்றார்

இவ்வாறு மதுரைக்காண்டத்தில் பெரும்பாலும் அவலச் சுவையே மிகுந்துள்ளமையைப் பரக்கக் காணமுடிகிறது.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினா:

1) மாங்காட்டு மறையோன் கோவலனிடம் கூறிய கெடுமால் திருச்கோலச் சிறப்பினைக் கூறுக?
2) தெய்வம் ஏறிய சாலினி, கண்ணகியைப் புகழ்ந்துரைத்த விதம் யாது?
3) கோசிகமானி கோவலனை எவ்வாறு இனங்கண்டுகொண்டான்?
4) மாதவி வீட்டில் கண்ணகி கோவலனுக்காகச் சமைத்து பரிமாறிய விதம் யாது?
5) கோப்பெருந்தேவியின் கனவினை விளக்கு?

### நெடுவினா:

1) மாங்காட்டு மறையோன் கூறிய மதுஜர செல்லும் வழியினை விரித்துரைக்க?
2) அடைக்கலத்தின் சிறப்பு பற்றி கவுந்தியடிகள் கூறியவற்றை விளக்கி வரைக?
3) ‘எடுகென எழுக்தாய் என் செய்தனை’? என்ற கோவனுக்கு கண்ணகி கூறிய பதிலுறையினை கட்டுரைக்க?

4) ‘வினைவினைவிக்கும் விபரீதத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது’ என்பதனை விளக்கி வரைக?
5) சிலம்பில் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் குறித்து கட்டுரை வரைக?

# மணிமேகலை

ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார். விழாவறை காதை முதல் பவத்திறம் அறுக என பாவை நோற்ற காதை முடிய முப்பது காதைகளைக்

கொண்டுள்ளது. இளங்கோவடிகள் அருகிருந்து கேட்க இந்நூலைச் சாத்தனார் இயற்றியதாகப் பதிகம் குறிப்பிடுகின்றது. தமிழின் முதலிரண்டு காப்பியங்கள் மட்டுமே தமிழகத்தைப் பின்னணியாகக் கொண்டு அமைகின்றன. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக மணிமேகலை அமைகிறது. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தோன்றிய பௌத்த நூல் என்பர். சிலப்பதிகாரம் போன்று சமயப் பொறையின்றிப் பிற சமயங்களைத் தாக்குகின்றது. பெண்ணின் பெயரில் அமைந்த முதற்காப்பியம் இதுவாகும். இந்நூலின் பதிகம் இந்நூலினை மணிமேகலைத் துறவு என்றே குறிப்பிடுகின்றது. இதில் நும்பாடப்பகுதியாக பாத்திரம் பெற்ற காதை முதல் பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை வரை ஐந்து காதைகள் இடம்பெற்று உள்ளன.

**பாத்திரம் பெற்ற காதை**

மணிமேகலைக்கு தீவதிலகை கோமுகி என்னும் பொய்கையில் எழுந்த பாத்திரம் கொடுத்த பாட்டு. தன் பழம்பிறப்பு உணர்ந்தும் மந்திரம் பெற்று நின்ற மணிமேகலையின் முன்னர்த் தீவதிலகை தோன்றினாள். அமுதசுரபி அன்று வந்து தோன்றுவது பற்றி அவள் கூற அதுவும் அங்ஙனம் வந்து மணிமேகலையை அடைகிறது. அதனைப் பெற்ற அவளுக்குத் தருமம் செய்வதன் சிறப்பினைத் தெய்வம் கூறுகிறது. உணவுத் தானமே உயரிய தானமெனவும் சொல்லுகிறது. பின்னர் மணிமேகலையும் வான்வழியாகப் புகாரையடைந்து தன் தாய்மாரைச் சந்திக்கின்றாள்.

**யார் நீ என்றனள்!**

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மலர்ப் பொய்கையும் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதம் திரியக் கடவுட் கோலத்துத்
தீவதிலகை செவ்வனம் தோன்றிக்
கலங்கவிழ் மகளிரின் வந்தீங்கு எய்திய
இலங்குதொடி நல்வாய் யார் நீ என்றலும்

மணிமேகலா தெய்வம் நீங்கின பின்னர் மணிபல்லவத் தீவினை மணிமேகலை சுற்றிப் பார்க்கத் தொடங்கினாள். வெண்மை யான மணற்குன்றமும் மலர்விரிந்துள்ள மலர்வனங்களும் குளிர்ச்சியான மலர்ப்பொய்கைகளும் ஆகியவற்றை எல்லாம் மெல்லென நடந்து சென்றவளாக நோக்கினாள்.

அங்ஙனம் அவள் ஒரு காவத தூரம் வரை பார்த்தவாறே சென்றனள். அவ்வேளை கடவுட் கோலத்துடனே தீவதிலகை என்பவள் செவ்விதான முறையிலே வந்து அவள் முன்னர்த் தோன்றினாள். மரக்கலம் கவிழ்ந்து போகத் தப்பி வந்த ஒரு பெண்ணினைப் போல வந்து இவ்விடத்தை அடைந்திருக்கின்றவளே தொடி விளங்கும் நல்லவளே நீதான் யாரோ? என்று தீவதிலகை கேட்டாள்.

**என் வரம் இது**

என்பிறப் பகத்துள் யார்நீ என்றது?
பொற்கொடி அன்னாய் பொருந்திக் கேளாய்
போய பிறவியில் பூமியங் கிழவன்
இராகுலன் மனையான் இலக்குமி என்பேர்
ஆய பிறவியில் ஆடலங் கணிகை
மாதவி யீன்ற மணிமே கலையான்
என்பெயர்த் தெய்வம் ஈங்கெனைக் கொணரஇம்
மன்பெரும் பீடிகை என்பிறப்பு உணர்ந்தேன்
ஈங்கென் வரவீதீங் கெய்திய பயனிது
பூங்கொடி அன்னாய் யார் நீ என்றலும்

யார் நீ என்று கேட்டனை. அது என்னுடைய எந்தப் பிறப்பகத்தினுள்ளேயோ? பொற்பொடி போன்றவளே மனம் பொருந்திக் கேட்பாயாக சென்று பிறப்பிலே ஒரு நாட்டிற்கு உரிமையாளனாக இருந்ததோனான இராகுலன் என்னும் மன்னகுமாரனின் மனைவியாக இருந்தவள் யான் இலக்குமி என்பது அப்போது என்பெயர். இப்பிறப்பிலோ அழகிய ஆடற்கணிகை மாதவி பெற்றெடுத்த மணி மேகலையான் என் பெயர்த் தெய்வம் இவ்விடத்தே என்னைக் கொணர்ந்தது. இந்தப் பெருமை பொருந்திய பீடிகையால் என் பழம் பிறப்பினையும் அறிந்தேன். என் வரவானது இவ்வாறு யான் அடைந்த பயனும் இதுவாகும் மலர்க்கொடி போன்றவளே நீ யார்? என்றலும்

**தீவதிலகை யான்**

ஆயிழை தன் பிறப்பு அறிந்தமை அறிந்த

தீவ திலகை செவ்வனம் உரைக்கும்:
ஈங்கிதன் அயலகத்து இரத்தினத் தீவத்து
ஓங்குயா் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடுஉம்
அறவ நாவாய் ஆங்குளது ஆதலின்
தொழுதுவலங் கொண்டு வந்தேன் ஈங்கும்
பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவா்கோன் ஏவலிற் காவல் பூண்டேன்
தீவ திலகை என் பெயா் இது கேள்

மணிமேகலை தன்னுடைய முற்பிறப்பினைப் பற்றி அறிந்திருந்ததனைத் தீவதிலகையும் அறிந்தாள். செவ்வையான தன்மையுடன் அதன்மேற் சொல்லத் தொடங்கினாள். இந்த மணிபல்லவத் தீவின் அயலிடத்தே இரத்தினத்தீவகம் என்பது உள்ளது. அதனிடத்தேயுள்ள மிகவுயா்ந்த சமந்தகம் என்னும் மலையினது உச்சிமேலாக அறத்திலே நிற்கும் உரிமை உடையவனாகிய புத்ததேவனின் இணையடிகளாகிய பிறவி என்னும் பெருங்கடலினின்றும் தன்னை அடைந்தாரைக் கரை சோ்விக்கின்ற அறத்துடன் கூடிய மரக்கலமாகிய பாதபீடிகையொன்றும் உள்ளது. அதனை வலங்கொண்டு பணிந்தபின் யான் இவ்விடத்துக்கு வந்தேன். பழுதற்ற தோற்றத்தினையுடைய நன்மை தருகின்ற இந்த மாணிக்கப் பீடிகையைத் தேவா் கோமானின் ஏவலினாலே காவல் செய்திருக்கும் பணியினை மேற்கொண்டவள் யான் என் பெயா் தீவதிலகை என்றனள்

(தீவதிலகை – தீவிற்கொரு திலகம் போன்றவள். சமந்தகம் இலங்கையின் விசகொளிபாத மலை என்பாா்கள். அங்குப் புத்தபாத பீடிகை இன்றும் உளது. அது பலராலும் பணிந்து போற்றப் பெற்றும் வருகின்றது. சமனெலை எனவும் சமந்தகூட மெனவும் பெயருள்ளவொரு மயலயம் உளவென்பா்.

### தீவதிலகையின் போற்றுதல்

தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்லறம் பிறழா நோன்பினா
கண்டுகை தொழுவோா் கண்டதற் பின்னா்ப்
பண்டைப் பிறவியா் ஆகுவா் பைந்தொடி

அரியர் உலகத்து ஆங்கவர்க்கு அறமொழி

உரியது உலகத்து ஒருதலையாக

ஆங்஑னம் ஆகிய அணியிழை இதுகேள்

தருமத் தலைவனாகியவன் புத்ததேவன் அவன் தருமநெறிகளில் தலைமையுடையதாகக் கூறியது பெருமைமிக்க நல்லறத்தினைப் பேணிவருதலாகும். அதனின்றும் தவறுதலற்ற நோன்பினை உடையவர்கள் மட்டுமே இப்பாதபீடிகையைக் காண்பதற்கும் கைதொழுவதற்கும் உரியவர் ஆவர் அங்஑னம் அவர்கள் வந்து தரிசித்த பின்னர் தம்முடைய பழம்பிறப்பினையும் அவர்கள் உணர்வார்கள். அத்தகைய தன்மை உடையவர்கள் இவ்வுலகத்திலே மிகவும் அரியரேயாவர் அப்படிப்பட்ட அரிய நிலையினர் ஆகியவர்கட்கே தருமபதமும் உரிமை உடையதாகும் என்பது உறுதி அத்தகைய நிலையினள் ஆகிய அணியிழையே யான் கூறப்போகின்ற இதனையும் கேட்பாயாக.

**அமுதசுரபி தோன்றும்**

ஈங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது

மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய

கோமுகி என்னம் கொழுநீர் இலஞ்சி

இருதள வேனிலில் எரிகதிர் இடபத்து

ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்

மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்

போதித் தலைனோடு பொருந்தித் தோன்றும்

ஆபுத் திரன்கை அமுத சுரபியெனும்

மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்!

இவ்விடத்திலே பெரும் புகழினையுடைய இப்பீடிகையின் முன்பாக இருப்பது நீர் நிறைந்துள்ள பெரிதான குவளை மலர்களும் நெய்தல் மலர்களும் நிறைந்து தம்முட் கலந்தனவாகித் திகழ்கின்ற கோமுகி என்னும் பொய்கையாகும் அதனிடத்தே இளவேனிற் பருவமாகிய சித்திரை வைகாசி ஆகிய மாதங்களுள் சூரியன் மிகவும் வெப்பத்தைச் செய்கின்ற மாதம் வைகாசியாகும். அதன்கண் இருபத்தேழு நட்சத்திரங்களுள் கார்த்திகை முதலாகத் தொடங்கும் பதின்மூன்றும் கழிந்தபின் பதினான்காவதாயிருப்பதும் இருபத்தேழின் நடுநட்சத்திரமாகியதுமான விசாக நட்சத்திரத்தன்று அமுதசுரபி

வெளிப்பட்டுத் தோன்றும் போதிநாதனாகிய புத்தபெருமான் தோன்றிய நாளும் அதே வைகாசி பௌர்ணமி நாள் தான். அவனைப் போன்றே அதுவும் அந்நாளிலே பொருந்திக் தோன்றும் அ∴து ஆபுத்திரன் என்பவனிடமிருந்த பெருமை மிகுந்த பாத்திரமாகும் இளங்கொடியே இன்னமும் கேட்பாயாக.

(அசுவனி முதலாக நட்சத்திரங்களை எண்ணும் வழக்கம் வராக மிஹிரராலே ஏற்பட்டது. அதற்கு முன்பாகக் கார்த்திகை முதலாகக் கணக்கிடும் வழக்கமே நிலவியது. அதனையொட்டிக் கூறப்பட்டது இது. எனவே மணிமேகலையின் காலமும் வராகமிஹிரரின் காலமான இரண்டாம் விக்கிரமாதித்தனின் காலத்துக்கு முற்பட்டதாக வேண்டும்.)

### இந்நாள் அந்நாள்

அந்நாள் இந்நாள் அப்பொழுது இப்பொழுது
நின்னாங்கு வருவது போலும் நேரிழை
ஆங்கதிற் பெய்த ஆருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான் தொலைவு இல்லாத் தகைமையது ஆகும்
நறுமலர்க்கோதை! நின்னூர் ஆங்கண்

அந்த வைகாசி பௌர்ணமி நாளும் இன்றேயாகும். அமுதசுரபி வரும் வேளையும் இதுவே தான். நேரிழையே அது நின்னிடத்திற்கே வருவது போன்றிருக்கின்றது. அதிற் பெய்த ஆருயிர்க்கு மருந்தாகிய உணவானது எடுக்க எடுக்கப் பெருகிக் கொண்டேயிருக்கும். வாங்குபவர்களின் கைகள் வாங்கி வாங்கி ஓயமாட்டாது வருந்துவனமாகுமே அல்லாமல், அது தன்னளவிலே எப்போதும் குறைவில்லாததாகவே விளங்கும் நறுமலர்க் கோதையே நினது ஊரிடத்தேயுள்ள அறவணனிடத்தே இதன் வரலாற்றைக் கேட்பாயாக.

### பாத்திரம் பெற்றது

என்றவள் உரைத்தலும் இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடும் கூடிக்
கோமுகி வலஞ்செய்து கொள்கையின் நிற்றலும்
எழுந்து வலம்புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுந்தகை மரபிற் பாத்திரம் புகுதலும்

இவ்வாறு உரைத்தனள் தீவதிலகை மணிமேகலையும் அதனை அடைய விரும்பினாள். மிகப் பெருமையுடைய பாத பீடிகையினைத் தொழுது வணங்கியவாறே தீவதிலகையோடு கூடிக் கோமுகியையும் வலம் செய்தாள். பின் நியமத்தோடும் நின்று கொண்டிருந்தாள். அமுதசுரபியும் அப்போது பொய்கையினின்றும் நீர்மேல் எழுந்தது. வலஞ்செய்து நின்ற மணிமேகலையின் கையிலே தொழுது போற்றுதற்கான சிறப்பினையுடைய அப்பாத்திரமும் சென்று புகுந்தது.

**வணக்கமும் வாழ்த்தும்**

பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி
மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோர் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக்கு அடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தலென் நாவிற்கு
அடங்காது என்ற ஆயிழை முன்னாப்

அந்தப் பாத்திரத்தை பெற்ற பசுமையான கொடியினையுடைய இளையோளான அவள் அளவற்ற மனமகிழ்ச்சி அடைந்தனள். மாரனை வெற்றிகொள்ளும் வீரனே தீய நெறிகளான கடும்பகைகளை நீக்கியோனே ஏனையோருக்கும் அறவாழ்வு வாய்ப்பதற்கு முயல்கின்ற பெரியோனே சுவர்க்கத்தையும் விரும்பாத தொன்மையாளனே மக்களின் எண்ணங்கள் பின்னடையும்படியாக அதற்கு எட்டாத மேம்பட்ட நிலையினை அடைந்திருப்பவனே ஞானக்கண்களைப் பிறருக்கு அளிக்கின்ற அருள்நோக்கமுடைய மெய்ஞ்ஞான மூர்த்தியே தீயோரின் தீய பேச்சுகளைக் கேட்க மறுத்த செவிகளை உடையோனே. வாய்மையான பேச்சக்களால்

சிறப்புற்ற நாவினை உடையோனே பாவிகளின் துயரங்கள் நீங்குமாறு அவர்களிடையேயும் செல்லுகின்ற அருளாளனே நரகர்களின் துயரங்களையும் போக்குபவனே நின் திருவடிகளை வணங்குதல் செய்தலே என்னால் இயலாது வாழ்த்துதல் என்பது என் நாவிற்கும் அடங்காத செயலாம் என்று போதிமாதவனைப் போற்றித் துதித்தனர். (மாரன் காமதேவன் புத்தர் அவனை வென்று மேம்பட்டனர் கண் பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் என்பதற்கு புத்த பகவான் முற்பிறப்பிலே தம்பால் யாசித்த இந்திரனுக்குத் தம் கண்களைக் கொடுத்த அருளடைமையைக் குறித்ததாகவும் பொருள் கூறுவர். நரகர் துயர் தீர்த்ததும் கருடனாகிய நாகனுக்கு அருளறம் உபதேசித்ததும் புத்தரின் அருட்செயல்கள் ஆகும்.

**பசி தீர்த்தோர்**

போதி நிழற் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக்கு உரைக்கும்

குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது

புத்தர்பிரானை மணிமேகலை போற்றுதலைக் கண்ட தீவ திலகையும் போதி நிழலுடனே பொருத்தித் தோன்றும் நாதனின் பாதங்களை உலகெங்கும் துயர்கெட அருளுமாறு வேண்டிப் போற்றினாள் அதன்பின் சொல்வாள். பசிப்பிணி ஒருவரின் குடிப்பிறப்பினால் வந்த தகுதியை அழித்துவிடும். தூய்மையான இயல்புகளைச் சிதைத்துவிடும் வாழ்வுக்குப் பற்றுக்கோடாகப் பற்றிக் கொண்ட கல்வியாகிய பெரிய புணையையும் போக்கிவிடும். நாணமாகிய அணியினையும் நீக்கிவிடும். மேன்மை பொருந்திய அழகினை எல்லாம் சீர்குலைக்கும் பூண் அணிந்த முலைகளையுடைய மனைவியரோடும் கூடிப் பிறரின் கடைவாயிலிலே சென்று இரந்து நிற்கவும் செய்யும். அத்தகையை பாவியது கொடுமையைப் போக்க வேண்டும். அங்ஙனம்

போக்கியவர்களைப் பற்றி எழும் புகழ் மொழிகளை அளவிட்டுக் கூறுவதற்கு என் நாவும் நிமிராது. அத்துணை அளவிறந்த புகழுடைய செயல் அதுவாகும்.

**நாய்க் கறி தின்றான்**

புன்மரம் புகைய் புகையழல் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்
இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்
அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாவின் தின்னுதல் உறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளம் தருதலின் மன்னுயிர் ஓங்கிப்
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ?

புல்லும் மரங்களும் வெம்மையினாலே கருகிப் புகையுமாறு எங்கணும் அழல் புகைந்து பொங்கியது. அதனால் நிலைபெற்ற உயிர்கள் அனைத்தும் பசியினால் மடியலாயின. மழை வளமும் அறவே நீங்கிப் போயிருந்தது. அரசப் பொறுப்பினின்றும் விலகி அரிய மறையோதும் அந்தணனாகிய விசுவாமித்திரன் இப்பெரிய உலகத்து எப்புறத்தும் சுற்றித் திரிபவனானான். நீங்குவதற்கும் அரிய தாகிப் போன பெரும்பசியினைப் போக்குவதற்கு எதனையும் காணாதவனுமாயினான். பொருந்தாத நாயின் ஊனையும் தின்னுவதற்குத் தொடங்கினான். தின்னுமவன் முதற்கண் தேவபலியினைச் செய்தான். அப்போது அவன் முன்பாக வானவர் கோமானாகிய இந்திரன் தோன்றி மழை வளத்தினைத் தந்து உதவினான். அதனால் மன்னுயிர்கள் மீண்டும் பெருகலாயின. தப்பாத விளை பொருள்களும் உலகில் மிகுந்தன.

**நல்லறம் காண்பாய்**

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே

உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்

கயக்க றுநல்லறம் கண்டனை என்றலும்

கைம்மாறு செய்யும் மனம் உடையவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பவர் அறத்தினை விலை கூறி விற்பவராவர். கைம்மாறு செய்வதற்கும் இயலாத ஏழைகளின் பெரும் பசியினைப் போக்குபவரே உண்மையாக அறம் செய்பவர்கள். மெயந்நெறியோ கூடிய வாழ்க்கை என்பதும் கொடுத்து மகிழும் அத்தனையோரின் வாழ்க்கையேயாகும். அணுச்செறிந்த இந்த உலகத்திலே வாழ்பவர்களுக்கு எல்லாம் உயர்வு கொடுத்தவர் எவரோ அவர்தாம் உயிர் கொடுத்தவரும்ஆவர்.அப்படி உயிர்வழங்குதலை மேற்கொண்ட உறுதியுடையவள் நீயும் ஆயினை கலக்கமற்ற நல்லறத்தினையும் அறிந்தனை என்றனள். தீவதிலகை அவள் அங்ஙனம் சொல்லலும் மணிமேகலை கூறுவாள்.

**அறத்தின் பயன்**

விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்

திட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி

உயிரோடு வேவேன் உணர்வொழி காலத்து

வெயில்விளங் கமையத்து விளங்கித் தோன்றிய

சாது சக்கரன் தனையான் ஊட்டிய

காலம் போல்வதோர் கனாமயக் குற்றேன்

ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்

ஈங்கிப் பாத்திரம் என்கைப் புகந்தது

முன்பிறப்பிலே யான் நேசித்த காதலனாகிய இராகுலன் திட்டிவிடம் தீணடப்பெற்று இறந்தனன். அவன் உயிர் போன காலத்திலே நெருப்பிலே குதித்து வேகின்றவள். என் உணர்வுகள் ஒடுங்கிய சமயத்திலே உச்சிப் பொழுதிலே வந்து தோன்றிய சாது சக்கரனை யான் முன்னர் உணவூட்டிய காலத்தைப் போன்றதோர் கனவினை உடையவளாகி மயக்கமும் அடைந்தேன். என் உயிரும் அப்போது பிரிந்தது. அந்தக் கனவின் பயனே போலும் அரியய உயிர்களைக் காக்கும் மருந்தாக இவ்விடத்து இப் பாத்திரமும் என் கையிலே வந்து சேர்ந்தது.

**தாயாகப் பேணுவேன்**

நாவலொடு பெரிய மாபெருந் தீவத்து

வித்தி நல்லறம் விளைந்து அதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்து முன்
அறங்கடை நில்லாது அயர்வோர் பலரால்
ஈன்ற குழவி முகங்கொண்டு இரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
அகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேன் என

நாவல் என்னும் பெயருடைய இம் மாபெரும் சம்புத் தீவத்தின் கண்ணே நல்லறத்தை விதைத்து விளைந்த அதன் பயனாகிய செல்வத்தை அநுபவித்துக் கொண்டிருப்போரின் வீடுகளிலே சிதைவுற்றப் போன துணியை உடுத்துக்கொண்டு வயிற்றைக் காய்கின்ற பெரும் பசியானது துன்புறுத்துவதற்காகப் பெரிதும் இரக்கப்பட்டு வெயிலாயிற்றே என வெறுத்து இராமலும் மழையாயிற்றே எனச் சோம்பி இராமலும் அவர்தம் கடைவாயில்களிலே முற்றவும் நிலை பெற்றிராத காரணத்தை நினைந்து அயர்கின்றவர் பலராவர். தான் பெற்றெடுத்த குழந்தையின் பசியால் வாடிய முகத்தைக் கண்டதும் அதற்கு இரங்கி இனிதான பாலைச் சுரப்பவள் தாய். அத்தாயின் முலைபோன்றே சுரந்து பெருகி உணவை உதவுவது இத்தெய்வீகஉப் பாத்திரம். இதன் அகன்ற உள்ளிடத்தே பெய்த ஆருயிரினைப் பேணும் உணவான மருந்து பசித்தவரின் முகத்தைக் கண்டதும் சுரத்தலைக் காணும் விருப்பமுடையேன் யான் என்றனள் மணிமேகலை.

### மறந்தேன் ஒன்று

மறந்தேன் அதன்திறம் நீயெடுத்து உரைத்தனை
அறம்கரியாக அருள்சுரந்து ஊட்டும்
சிறந்தோர்க்கும் அல்லது செவ்வனம் சுரவாது
அங்ஙனம் ஆயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின் றெழுவாய் என்றவள் உரைப்பத்

அதன் திறத்தினை விளக்குவதற்கு யான் மறந்து விட்டேன். நீ எடுத்துக் கூறினாய் அறம் ஒன்றே காட்சியாக அருள்சுரந்து அனைவரையும் அது உண்பிக்கும். சிறப்புடையவர்களுக்கு அல்லாமற்பிறருக்கு அது நல்லபடியாகச் சுரப்பதும் செய்யாது. அதன் பயன் அவ்வாறு என அறிந்தவளும் ஆயினை இப்போது அதனைச் செயலாற்றவும் எண்ணினை ஆதலின் இவ்விடத்தே நின்றும் நின் நகருக்கு இனிச் செல்வாயாக என்றனள் தீவதிலகை.

**புறப்பட்டாள்**

தீவ திலகை தன்னடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்கையின் ஏந்திக்
கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு
வானூடு எழுந்து மணிமே கலைதான்

தீவதிலகையின் திருவடிகளை வணங்கி மணிமேகலை விடை பெற்றாள். மிக்க சிறப்புடைய அமுதசுரபியைத் தன் மலர்கையிலே ஏந்தியவளாக வானத்து வழியாக மேலெழுந்து புகாரை நோக்கியும் புறப்பட்டாள்.

**அற்புதம் சொல்வாள்!**

வழுவறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழுநாள் வந்தது என் மகள் வாராள்
வழுவாய் உண்டென மயங்குவோள் முன்னர்
வந்து தோன்றி அவர் மயக் கங்களைந்து
அந்தில் அவர்க்கோர் அற்புதம் கூறும்

உரைக்கும் சொற்களிலே பிறழ்தலற்ற மணிமேகலா தெய்வம் உறுதியாகக் கூறியதான ஏழாம் நாளும் வந்தது. என் மகள் இன்னமும் வராமலிருக்கின்றாளே! தெய்வத்தின் சொற்களும் பிழையாதல் உண்டுபோலும் என எண்ணிக் கலககங் கொண்டிருந்தாள் மாதவி. அவள் முன்பாக மணிமேகலையும் அப்போது வந்து தோன்றினாள். அவள் துயரையும் சுதமதியின் கவலையினையும் போக்கினாள். பின்னர் அவ்விடத்தே அவர்களுக்கு ஓர் அற்புதத்தையும் சொல்ல லானாள்.

**பழம்பிறப்பு உரைத்தல்**

இரவு வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி

அழுத பதிவயிற்று அரிதில் தோன்றித்

தவ்வைய ராகிய தாரையும் வீரையும்

அவ்வையர் ஆயினீர் நும்மடி தொழுவேன்

இரவிவன்மன் என்பவனுடைய ஒப்பற்ற பெருமையுடைய புதல்வியே குதிரைப்படையினை உடைய துச்சயன் என்பவனின் தேவியே அமுதபதியின் வயிற்றிடத்தே அருமையாகத் தோன்றி அப்போது என் தமக்கையராயிருந்த தாரையும் வீரையும் என்போரே இப்பிறப்பிலே நீர் என் தாய்மார் ஆயினீர் நும் திருவடிகளை யான் வணங்குகின்றேன் என மணிமேகலை மாதவி சுதமதி ஆகியோரை வணங்கினாள்.

**உம் பிறப்பு அறுக!**

வாய்வ தாக, மானிடயாக்கையில்

தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்கீங்கு:

அறவண அடிகள் தம்பாற் பெறுமின்,

செறிதொடி நல்லீர்! உம்பிறப்பு.

இந்த மானிட யாக்கையிலேயே தீவினைகளை அறுத்துப் பேறெய்தும் தகைமை நுமக்கும் வந்து வாய்ப்பதாக அதற்குச் செய் வதற்கான தவநெற்களை, இவ்விடத்தே அறவணவடிகளிடத்தே கேட்டு அறிந்துகொண்டு, அதன்படியே செய்வீராக செறிந்த வளை யணிந்த நல்லோர்களே! உம் பிறப்பின் தன்மை இதுவேயாகும்.

**பாதம் பணிவோம்!**

ஆபுத் திரன்கை அமுத சுரபியெனும்

மாபெரும் பாத்திரம்:நீயிரும் தொழுமெனத்

தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்,

பழுதறு மாதவன் பாதம் படர்கேம்:

எழு’கென,எழுந்தனள்-இளங்கொடி தானென்.

“இப் பெருஞ் சிறப்புடைய பாத்திரம் அமுதசுரபி என்பது. ஆபுத்திரன் என்பானின் கையிலே முன்னர் இருந்தது. இதனை நீவீரும் வணங்குவீராக’ என, அதனையும் அவர்கட்குக் காட்டிச் சொல்ல, அவர்களும் அங்ஙனமே அதனை வணங்கிப் போற்றினர். தூய்மையாகப் பேசுபவரான அத் தாய்மார் இருவருடனும், “குற்றம் அறுத்த மிக்க பெருந்தவன் ஆகிய அறவண

அடிகளின் பாதங்களைப் பணிந்து வருவோம்: எழுங்கள்'' எனக் கூறியவாறே மணிமேகலையும், அறவணர்பாற் செல்லுவதற்கு எழுந்தனள.

## அறவணர்த் தொழுத காதை

-மணிமேகலை பாத்திரங்கொண்டு தன்னூர் அறவணர்த் தொழுத பாட்டு- (மணிமேகலை,மாதவி,சுதமதி ஆகியோர் அறவணரைச் சென்று தொழுகின்றனர், மணிமேகலை, தனக்கு நிகழ்ந்த பலவித நிகழ்ச்சிகளையும் அவருக்குச் சொல்லுகின்றாள். அவர் சுதமதி,மாதவி முதலியோரின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறி அவர்கட்கு அறநெறி பற்றிய போதனையினையும் செய்கின்றார்)

### அறவணரை வணங்கினாள்

ஆங்கவர் தம்முடன் 'அறவண அடிகள்
யாங்குளர்?' என்றே இளங்கொடி வினாஅய்
நரைமுதிர் யாக்கை, நடுங்கா நாவின்
உரைமூ தாளன் உறையிடம் குறுகி-
மைம்மலர்க் குழலி மாதவன் திருந்தடி
மும்முறை வணங்கி: முறையுளி ஏத்தி-

சுதமதி மாதவி ஆகியோருடன், 'அறவண அடிகள் எங்கே இருக்கின்றனர்?' என வினவித் தெரிந்துகொண்டு,நரை கொண்டு முதிர்ச்சி அடைந்த உடலும், பேச்சுத் தடுமாற்றம் இல்லாத நாவும் உடைய, புகழ்பெற்ற பெரியோனாகிய அந்த அறவணர் தங்கியிருக்கும் இடத்தையும் அவர்கள் அடைந்தனர். மலர்கள் விளங்கும் இருண்ட கூந்தலினளான மணிமேகலை, அந்தப் பெருந்தவனின் திருவடிகளை மும்முறை வணங்கி, முறைப்படி துதித்தும் போற்றினாள்.

### அநுபவம் கூறினாள்.

புதுமலர்ச் சோலை பொருந்திய வண்ணமும்:
உதய குமரனாங் குற்றுரை செய்ததும்:
மணிமேகலா தெய்வம் மணிபல் லவத்திடை
அணியிழை தன்னை அகற்றிய வண்ணமும்:
ஆங்கத் தீவகத்து, அறவோன் ஆசனம்
நீங்கிய பிறப்பு நேரிழைக்கு அளித்ததும்:

அளித்த பிறப்பின் ஆகிய கணவனைக்
களிக்கயல் நெடுங்கட் கடவுளிற் பெற்றுதும்:
‘தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
வெவ்வினை உருப்ப, விளிந்துகே டெய்தி,
மாதவி யாகியும்,சுதமதி யாகியும்:
கோதையஞ் சாயல் நின்னொடும் கூடினர்:
ஆங்கவர் தம்திறம் அறவணன் தம்பால்
பூங்கொடி நல்லாய்! கேள்’ என்று உரைத்தலும்-

தானும் சுதமதியும் மலர் கொய்வதற்காகப் புது மலர்களையுடைய உவவனத்திற்குச் சென்றதும்: உதயகுமரன் அவ்விடத்தே வந்து சொல்லியதும்: மணிமேகலா தெய்வம் தன்னை மணிபல்லவத் தீவினிடத்தே கொண்டு சேர்த்ததும்:அத் தீவிலுள்ள புத்தர்பிரானின் பாதபீடிகை பழம் பிறப்பினைக் தனக்கு அறிவித்ததும்: பழம் பிறப்பின்கண் கணவனாயிருந்தவனைக், களிகொண்ட கெண்டை மீனைப் போன்று பிறழ்கின்ற நெடிய கண்களை உடையவளான மணிமேகலா தெய்வத்தினாலே அறிந்ததும்: “நின் தமக்கையராக அப்பிறப்பிலே விளங்கிய தாரையும் வீரையும் கொடிய ஊழானது வந்து ஊட்டுதலாற் கேடுற்று, மாதவியாகவும் சுதமதியாகவும்,அழகிய கூந்தலையும் மென்சாயலையும் உடைய நின்னோடும் வந்து சேர்ந்துள்ளனர். அவர்கள் உய்யும் திறத்தினை, பூங்கொடி போன்ற நங்கையே! நீ அறவண அடிகளிடம் கேட்பாயாக” என்று, அத்தெய்வம் சொன்னதும் ‘கேடெய்தி’ என்றது மாதவி கோவலனை இழந்ததும்: சுதமதி விஞ்சையனாற் கைவிடப் பெற்றதும் ஆகியவற்றை வணங்கி உரைத்தாள்

உரைத்த பூங்கொடி ஒருமூன்று மந்திரம்
தனக்குரை செய்துதான் ஏகிய வண்ணமும்:
தெய்வம் போயபின், தீவ திலகையும்
ஐயெனத் தோன்றி, அருளொடும் அடைந்ததும்:
அடைந்த தெய்வம், ஆபுத் திரன்கை,
வணங்குறு பாத்திரம் வாய்மையின் அளித்ததும்:
‘ஆபுத் திறன்திறம் அறவணன் தன்பால்
கே’ ளென்று உரைத்துக் கிளரொளி மாதெய்வம்

போ’ கென மடந்தை போந்த வண்ணமும்:

மாதவன் தன்னை வணங்கினள் உரைத்தலும்-

அவ்வாறு உரைத்த மலர்கொடி போன்ற மணிமேகலா தெய்வமானது,ஒப்பற்ற மூன்று மந்திரங்களைத் தனக்கு உபதேசம் செய்து விட்டுச் சென்றதும், அத்தெய்வம் போயின பின்னர்த் தீவதிலகை விரையத் தோன்றி, அருளுடன் தன்பால் அடைந்ததும், அடைந்த அத்தெய்வம் ஆபுத்திரனின் கையிலிருந்ததான வணங்கத்திற்குரிய சிறந்த பாத்திரத்தினைத் தனக்கு அளித்ததும்: ‘அந்த ஆபுத்திரனின் ஒளி விளங்கும் பெருந்தெய்வம் ஏகுமாறு சொன்னதும்: தான் அங்ஙனமே திரும்பி வந்ததும் ஆகிய செய்திகளை, அறவணரின் பாதங்களை வணங்கி, மணிமேகலையும் அறவணர்க்கு எடுத்து உரைத்தனள்.

**துச்சயன் கண்டேன்**

மணிமே கலையுரை மாதவன் கேட்டுத்
தணியா இன்பம் தலைத்தலை மேல்வரப்
‘பொற்கொடி மாதர்! நற்றிறம் சிறக்க:
உற்றணர் வாய்நீ, இவர்திறம் உரைக்கேன்:
நின்னொடுந’ தெய்வம் நினக்கொடுத்து உரைத்த
அந்நாள் அன்றியும்: அருவினை கழுஉம்
ஆதி முதல்வன் அடியிணை யாகிய
பாதபங் கயமலை பரவிச் செல்வேன்:
கச்சயம் ஆளும் கழற்கால் வேந்தன்
துச்சயன் தன்னையோர் சூழ்பொழிற் கண்டேன்:

மணிமேகலை சொன்னவற்றை மாதவரான அறவணர் கேட்டனர்.’குறைவற்ற இன்பம் மென்மேலும் பெருகிப் பொற்கொடி போன்ற இப் பெண்களின் நல்ல ஊழின் கூறுபாடுகள் சிறப்புறுவதாக’ என வாழ்த்தினர். ‘அவர் வரலாற்றைச் சொல்வேன். கேட்டு அறிந்து கொள்வாயாக’ என, மணிமேகலையை நோக்கிக் கூறலானார். ‘நின்னுடைய உயர்வான தெய்வம் நினக்கு எடுத்துச் சொல்லிய அந்நாளிலே சென்ற தல்லாமலும், அரிய வினைகளைக் கழுவிப்போக்கும் ஆதிமுதல்வனாகிய மலையினைப் போற்றப், பின்னரும் யான் அடிக்கடி செல்வேனாயினேன். அப்படிச் சென்ற ஒரு சமயம், கச்சய

நாட்டை ஆட்சி செய்துவந்த வீரக்கழல் அணிந்தோனான துச்சயன் என்பவனை ஒரு பொழிலிடத்தே யான் கண்டேன்.

**துச்சயன் சொன்னது,**

‘மாபெருந் தானை மன்னவ!நின்னொடும்
தேவியர் தமக்கும் தீதின் றோ?’ என,
அழிதக உள்ளமொடு அரற்றினன் ஆகி,
ஒளியிழை மாதர்க்கு உற்றதை உரைப்போன்:
புதுக்கோள் யானைமுன் போற்றாது சென்று,
மதுக்களி மயக்கத்து வீரை மாய்ந்ததூஉம்:
ஆங்கது கேட்டோர் அரமியம் ஏறித்
தாங்காது வீழ்ந்து தாரைசா வுற்றதூஉம்:
கழிபெருந் துன்பம் காவலன் உரைப்பப்
‘பழவினைப் பயன்,நீ பரியல்’ என்று எழுந்தேன்:-

“மிக்க பெரும் படையணிகளை உடைய மன்னவனே! நின்னோடும் நின் தேவியார்க்கும் தீதின்றோ?” என, அவனை யான் நலம் கேட்டேன். அவனோ, அழிந்துபோன உள்ளத்து வேதனையோடும் தனக்கு நேர்ந்ததையும் எனக்கு உரைப்பவனாயினான்:

புதிதாகப் பிடித்துக்கொண்டு வரப்பெற்ற ஒரு யானையின் முன்பாக, மதுவுண்டு வெறியேறிய மயக்கத்தினாலே பாராட்டாதவளாகிச் சென்று, வீரை ஒருநாட் சாவுற்றதும்: அந்தச் செய்தியைக் கேட்டுத் துயரந் தாங்காத தாரை, ஒரு நிலா முற்றத்தே ஏறிநின்று கீழே வீழ்ந்து சாவுற்றதுமாகிய, மிகப் பெருந்துன்பச் செய்தியைத் துச்சயன் சொன்னான், சொல்லவும், ‘அது அவர்களுடைய முன்வினைப் பயனினாலே நேர்ந்தது: நீ அதுகுறித்து வருந்தாதே’ எனக் கூறிய பின். யான் வானிலே எழுந்து சென்றேன்.

**சொல்லியும் அமையான்**

‘ஆடுங் கூத்தியர் அணியே போல,
வேற்றோர் அணியொடு வந்தீரோ?’ வென:
மணிமேகலைமுன் மடக்கொடி யார்திறம்
துணிபொருள்மாதவன் சொல்லியும் அமையான்-

‘அங்ஙனம் சாவுற்ற நீவிர். ஆடுகின்ற அரங்கக் கூத்தியர் கொள்ளும் உரு மாற்றங்களைப்போல, இப்போது வேறொரு அணியுடன் கூடியவராகி என் முன்னர் வந்தீர்களோ?’’ என்ற, மாதவி சுதமதி ஆகியோர் வரலாற்றினை மணிமேகலை முன்பாக அவர்க்கும் தெரிய உரைத்தனன் அம்மாதவன்.துணியப்படும் உறுதிப் பொருளினை அடைந்தோனான அறவண முனிவன் அங்ஙனம் சொல்லியும் அமையாதனாக, மேலும் கூறத் தொடங்கினான்:-

## உயிர்கள் செல்லும் நெறி

‘பிறவியும்அறவியும்பெற்றியின்உணர்ந்த
நறுமலர்க்கோதாய்!நல்கினை கேளாய்:
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைச்சால் நல்லறம் பெருகா தாகி
இறுதியில் நங்கதி செல்லும் பெருவழி
அறுகையும்நெருஞ்சியும்அடர்ந்துகண்ணடைத்தாங்குச்
செயிர்வழங்குபெருநெறிஒருதிறம் பட்டது:
தண்பனி விழுங்கிய செங்கதிர்மண்டிலம்
உண்டென உணர்தல் அல்லது யாவதும்
கண்டினிது விளங்காக்காட்சி போன்றது:-65

முன் செய்த நல்வினைப் பயனாலே, முற்பிறப்பின் வரலாற்றையும், அறநெறியின் தன்மையையும் தகுதியுடனே உணர்ந்தவளே! நறுமலர்க் கோதையான மணிமேகலையே! யான் கூறும் இதனையும் கேட்பாயாக:-

‘‘தருமங்களின் முதல்வனானவன் புத்ததேவன்: அவன் தலைவனாக இருந்து, பெருமை சிறந்த நல்ல அறநெறியினை உலகுக்கு உரைத்தனன் அது உலகிலே பெருகாதாயிற்று. அழிவில்லாத நற்கதிக்குச் செல்லும் பெருநெறியோ, அறுகம் புல்லும் நெருஞ்சிமுள்ளும் அடர்ந்து இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் காடுபோல இருக்கிறது. துன்பத்தைத் தருகின்ற தீக்கதிக்குச் செல்லும் வழியே நன்றாகத் திறந்து கிடக்கின்றது. அதுவே ஆருவாரத்துடன் உயிர்கள் சென்று வரும் பெருநெறியாகயும் ஒரு பெற்றினை உடையதாக ஆயிற்று. ‘குளிர்ந்த பனியினாலே மூடி மறைக்கப்பட்டிருக்கும் சிவந்த கதிர்களையுடைய ஞாயிற்று மண்டிலம் ஒன்று உண்டு’ என்று

உணர்ந்தே நம்மால் அறியக்கூடியதாகும். அங்ஙனமின்றிக் கண்ணாற் சென்று காணுதலுற்று, அது இனிதாக நமக்கு ஒருபோதுமே விளங்க மாட்டாது.அறநெறியும், ஆன்றோர் உணர்த்தவே உணரப்படுவதாகும்: நேரிற்காணக் காட்டப்படுவது அன்று.

## தெளியாத மக்கள்

சலாகைநுழைந்தமணித்துளைஅகவையின்
உலாநீர்ப்பெருங்கடல்ஓடாதாயினும்,
ஆங்கத்துளைவழிஉகுநீர் போல,
ஈங்குநல்லறம்எய்தலும்உண்டெனச்
சொல்லலும் உண்டு:யான் சொல்லுதல் தேற்றார்,
மல்லன்மாஞாலத்து மக்களே:யாதலின்,

'சலாகை நுழைந்ததனால் ஏற்பட்ட சிறுதுறையின் உள்ளாக, அலையுலாவும் நீரையுடைய பெருங்கடல் ஓட மாட்டாது: ஆனாலும்,அதைப்போலவே,இந்த உலகத்திலே நல்லற நெறியானது சென்று சிறுகச்சிறுக அடையப்படுதலும் உளதாகும்' என்று யான் சொல்வதும் உண்டு நான் அவ்வாறு சொல்லுவதைக் கேட்டுத் தெளிவு கொள்ளாதவர்கள், வள மிகுந்த இவ்வுலகின் கண்ணுள்ள மக்களே யாவர். ஆதலினாலே, நல்லறம் கேட்டு மக்கள் அறவோர் ஆகாதிருந்தாலும், சிறிதாவது ஞானத்தை அடைவர் என்பதாம்.

## புத்தன் தோன்றுதல்

சக்கரவாளத்துத்தேவர்எல்லாம்
தொக்கொருங்குஈண்டித்துடிதலோகத்து
மிக்கோன்பாதம்விழுந்தனர்இரப்ப:
இருள்பரந்துகிடந்தமலர்தலைஉலகத்து
விரிகதிர்ச்செல்வன்தோன்றினன்என்ன,
ஈரெண் ணூற்றோடுஈரெட் டாண்டில்
பேரறிவாளன் தோன்றும்: அதற்பிற்பாடு,
பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல,
அளவாச் சிறுசெவி அளப்பருநல்லறம்

உளமலி உவகையொடுஉயிர்கொளப்புகூஉம்-

சக்கரவாளத்திலேயுள்ள தேவர்கள் அனைவரும் தொகுதிப்பட்டு ஒன்றாகக் கூடினர். துடிதலோகத்திலுள்ள 'பிரபாபாலன்' என்னும் பெரியோனின் பாதங்களிலே சென்று விழுந்து வணங்கி அவனை இரந்தும் நின்றனர், இருள் எங்கணும் பரவிக் கிடந்த அகன்ற இடத்தினையுடைய உலகத்திலே, விரிந்த கதிர்களையுடைய ஞாயிற்றுச் செல்வன் தோன்றியதும் ஒளி நிறையும். ஞாயிறு தோன்றினாற் போலவே, இற்றைக்கு ஆயிரத்து அறநூற்றுப் பதினாறாம் ஆண்டிலே புத்தனாகிய பேரறிவாளனும் உலகிலே தோன்றுவன் அதன் பின்னர், பெரிய குளத்தின் மதகாகிய சிறுவழியூடு, மிகப் பெரிய வெள்ளமும் நுழைந்து செல்வது போலப், போளாவில்லாத சிறிதான செவித் துளைகளின் வழியேயும், அளவிடற்கு அரிய நல்லுனற்வுரைகள், உள்ளத்திலே பெருகும் உவகையினோடு உயிர்களைத் தன் கொள்ளுதற்காகப் புகுந்து நிறைந்து விளங்கும்.

(இக் காலவரையறையைக் கொண்டு மணிமேகலை புத்தர் பிறப்புக்கு முற்பட்டுத் தோன்றியது என்பார்கள்)

**நல்லன நடத்தல்**

கதிரோன் தோன்றுங் காலை, ஆங்கவன்
அவிரொளி காட்டும் மணியே போன்று,
வைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்-
திங்களும் ஞாயிறும் தீங்குறா விளங்கத்,
தங்கா நாண்மீன் தகைமையின் நடக்கும்:

வானம் பொய்யாது: மாநிலம் வளம்படும்:
ஊனுடை உயிர்கள் உறுதுயர் காணா:
வளிவலம் கொட்கும்: மாதிரம் வளப்படும்:
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம்:
கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்:
பறவை பயன்துய்த்து, உறைபதி நீங்கா
விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும்:
கலங்களுர் நரகரும் பேயும் கைவிடும்:

கூனும், குறளும், ஊமும், செவிடும்,

மாவும், மருளும், மன்னுயிர் பெறாஅ:

கதிரவன் தோன்றும் பொழுது, அவனுடைய விளங்கும் ஒளியினைச் சூரியகாந்தக் கற்கள் மிகுதியாக்கி எதிரொலித்துக் காட்டும். அதனைபோலவே, அடர்ந்து இருண்ட மனமாசாகிய அறியாமையிருள் நீங்கமாறு, புத்த ஞாயிறு வெளிப்பட்டுத் தோன்றும்போது, திங்களும் ஞாயிறும் தீமையுறாமல் அருள் பொழிவனவாகவே விளங்கும். ஓரிடத்தே தங்குதலின்றிச் சுழன்று கொண்டே இருக்கின்ற விண்மீன்கள், தம் கேடொழிந்தவைகளாகப் பண்புடன் நடந்துகொள்ளும். அதனால், மழை பெய்யாமற் பொய்ப்படாது. பெரிய நிலவுலகம் எல்லாமே வளம் உடையதாகும். ஊன்பிண்டமாகிய உடலினையுடைய உயிரினங்கள் எல்லாம் தமக்கு நேர்கின்ற துயரங்களை அறியவாகும். காற்று வலமாகஎழுந்து வீசும். நான்கு திசைகளும் செழுமை அடையும். செறிந்த நீரினையுடைய கடலும், கடல்படு பொருள்களான நன்மை பலவற்றைத் தரும்.பசுக்கள், தம் கன்றுகளை உண்பித்துவிட்டுக் கறக்கும் பாத்திரமும் நிறையுமாறு பாலினைப் பொழியும். பறவையினங்கள் பயன் நுகர்ந்து தாம்தாம் தங்கும் இடங்களினின்றும் நீங்காவாயிருக்கும். விலங்கினமும், தாம் அஞ்சுவதற்குக் காரணமான தத்தம் பகைகள் நீங்கியவையாக அமைதியுடனே வாழும். கலங்குவதற்குக் காரணமான துன்பத்தை இழைக்கும் தம் கொடுந்தன்மையினை நரகரினமும் பேயினமும் கைவிட்டு விடும். கூனாயினவும், குட்டையாயினவும், ஊமையாயினவும், செவிடாயினவும், விலங்காயினவும், மயங்கியிருப்பனவும் ஆகிய பழுதுள்ள பிறவிகளை மக்களுயிர்கள் ஒருபோதுமே அடையமாட்டா!

**மறவேன் யான்**

அந்நாள் பிறந்து அவன் அருளறம் கேட்டோர்

இன்னா பிறவி இகந்தோர் ஆகலின்

போதி மூலம் பொருந்திய சிறப்பின்

நாதன் பாதம் நவைகெட ஏத்துதல்

பிறவி தோறும் மறவேன் -

அங்ஙனம் புத்தன் அறம் உரைக்கும்’ காலத்திலே பிறந்து, அவனுடைய அருளறத்தினைக் கேட்டவர்கள், இன்னாத பிறவித்துயரினைக் கடந்தவராவர்,

ஆதலினால், போதி மரத்தடியிலே பொருந்திய சிறப்பினையுடைய நாதனின் திருவடிகளை, என் குற்றம் நீங்கப் போற்றுதலைப் பிறவிதோறும் யானும் மறவேன்.

**நின் சிறப்பு!**

மாதர்! நின்னால் வருவனஇவ்வூர்
ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள,
ஆங்கவை நிகழ்ந்த பின்னர் அல்லது,
பூங்கொடி மாதர்! பொருளுரை பொருந்தாய் -

இளங்கொடியே! மாதரசியே! நின்னால் இவ்வூர்க்கண் வருவதாகிய ஏது நிகழ்ச்சிகள் யாவும் பல உள்ளன. அவை நிகழ்வுற்ற பின்னர் அல்லாமல், நீ அறிவுரைகளின்பால் மனம் பொருந்த மாட்டாய்.

**இருவரும் நன்னெறி சேர்வர்**

ஆதிமுதல்வன் அருந்துயர் கெடுக்கும்
பாதபங் கயமலை பரசினர் ஆதலின்
ஈங்கிவர் இருவரும், இளங்கொடி!நின்னோடு
ஓங்கயர் போதி உரவோன் திருந்தடி
தொழுதுவலங் கொண், தொடர்வினை நீங்கப்
பழுதில் நன்னெறிப் படர்குவர் காணாய் -

போக்குதற்கு அரிய துயரங்களையும் போக்கும் ஆதி முதல்வனின் பாபதங்கய மலையினை வணங்கினவர் இவர்கள் இருவரும். இளங்கொடியே! இவர்களம், நின்னோடு கூடி. மிகவுயர்ந்த போதி நீழலினான ஆற்றலுடைய புத்தனின் திருவடிகளைத் தொழுது வலங்கொண்டு, தொடர்கின்ற இருவினைகளினின்றும் நீங்கியவர்களாகக் குற்றமற்ற நன்னெறியிலே செல்வார்கள்.

**தவப்பெரு நல்லறம்**

ஆருயிர் மருந்தாம் அமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம், மடக்கொடி! பெற்றனை,
மக்கள் தேவர் எனவிரு சார்க்கம்
ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்,
‘பசிப்பிணி தீர்த்தல்’’ என்றே அவரும்

தவப்பெரு நல்லறம் சாற்றினர் – ஆதலின்,
மடுத்தீக் கொளிய மன்னுயிர்ப் பசிகெட,
எடுத்தனள் பாத்திரம், இளங்கொடி தானென் -

இதனையும் அறிவாயாக: ‘அரிய உயிர்க்கு மருந்தான அமுத சுரபி என்கின்ற பெருமை பொருந்திய பாத்திரத்தினை நீ இப்போது பெற்றனை. மடக்கொடியே! மக்கள், தேவர் என்ற இருசாரார்க்கும் ஒத்த முடிவினையுடையதான, ஒப்பற்றஅறம் இன்னதென உரைக்கின்றேன். அதனையும் கேட்பாயாக : ‘அதுவே பசிநோயினைப் போக்குதல்’ என்பதாகும்’.

என்றிவ்வாறாக, அறவணரும் மிகப் பெரிய நல்லறத்தினை அவர்கட்குக் கூறினார். ஆதலினாலே. மணிமேகலையும், மாட்டியதீயினாலே கொளுத்தப்பட்டது போன்று வருத்தம் உலகத்து உயிரிகளின் பசிநோயானது நீங்குமாறு, அமுதசுரபி எனும் அப்பாத்திரத்தைத் தன் கையிலே எடுத்தனள்.

## <u>ஆபுத்திரன் திறம் அறிவித்தகாதை</u>

- மணிமேகலைக்கு அறவணர் ஆபுத்திரன் திறம் கூறிய பாட்டு – (மணிமேகலைக்கு, அறவணர், ஆபுத்தினின் வரலாற்றினை உரைக்கின்ற பகுதி இது. அவன் பாத்திரம் பெறுவதற்கு முன்னருள்ள செய்திகள் மட்டுமே இந்தக் காதையில் அறவணரால் கூறப் பெறுகின்றன.)

### சாலி பெற்ற மகன்

‘மாபெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அருளி
ஆபுத் திரன்திறம், அணியிழை! கேளாய்,
வார ணாசியோர் மறையோம் பாளன்,
ஆரண உவாத்தி, அபஞ்சிகன் என்போன்
பார்ப்பனி சாலி காப்புடை கழிந்து,
கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சித்,
தென்திசை குமரி யாடிய வருவோள்,
சூன்முதிர் பருவத்துத் துஞ்சிருள் இயவிடை
ஈன்ற குழவிக்கு இரங்களா ளாகித்
தோன்றாத் துடவையின் இட்டனள் நீங்க –

அணியிழையே! மிக மேன்மை பொருந்திய அமுதசுரபியை மணிமேலைக்கு அருளிச் செய்த ஆதிபுத்திரனனின் வரலாற்றைக் கேட்பாயாக, காசியின்கண் வேதநெறியாளன் ஒருவன் இருந்தான். வேதம் ஓதுவிக்கும் தொழிலினனான அவன் 'அபஞ்சிகன்' என்பவன். அவன் மனைவியான 'சாலி' கற்புநெறியாகிய காவலின் எல்லையைக் கடந்து சென்றவளாயினாள். அதனால், மணந்து கொண்டவனுக்குத் துரோகம் செய்ததற்குரிய தண்டனைக்கு அஞ்சிய அவள், தென்திசைக் குமரியின்கண் நீராடிவிட்டு வந்து கொண்டிருந்தாள். வருபவள், சூல்முதிர்ச்சி அடைந்த பருவத்தே, ஊர்துஞ்சும் இருள் மிகுந்த இரவுப் பொழுதிலே, வழியிடையிலே, தான் பெற்ற குழந்தைக்கும், இரங்காதவளாக, அவ்விடத்துத் தோன்றிய ஒரு தோட்டத்திலே, அதனை இட்டுச் சென்றுவிட்டாள்.

**பாலூாட்டிய பசு**

தாயில் தூவாக் குழவிதுயர் கேட்டோர்
ஆவந்து அணைந்தாங்கு அதன்துயர் தீர,
நாவால் நக்கி, நன்பால் ஊட்டிப்,
போகாது எழுநாட் புறங்காத்து ஓம்ப –

தாயாற்றுப் பசியினாலே அழுதுகொண்டிருந்த அக்குழந்தையின் துயரக்குரலினைக் கேட்ட ஒரு பசுவானது, அதனருகே சென்று சேர்ந்தது. அதன் துயரம் தீருமாறு நாவினாலே நக்கிக் கொடுத்து, நல்ல பாலும் அதற்குச் சுரந்து ஊட்டிற்று. அந்தக் குழந்தையை விட்டு அகலாமல், ஏழு நாட்கள் அது பாலூட்டி அதனைப் பாதுகாத்தும் வந்தது. (தூவா – உண்ணா, புறங்காத்தல் - பாதுகாத்தல்)

**இளம்பூதி எடுத்தான்**

வயனங் கோட்டிலோர் மறையோம் பாளன்,
இயவிடை வருவோன், இளம்பூதி என்போன்
குழவி ஏங்கிய கூஉக் குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்தாங்கு,
"ஆமகன் அல்லன், என்மகன் என்றே,
காதலி தன்னொடு கைதொழுது எடுத்து –

வயனங்கொடு என்னும் ஊரினனான ஒரு மறையோம்பும் பார்ப்பனன், இளம்பூதி என்போனாகிய அவன், குழந்தை ஏங்கி அழுகின்ற குரலினைக் கேட்டான். தன் உள்ளத்தே நிரம்பிய துன்பத்தோடு அதன் நிலைமைக்குக் கண்ணீர் சொரிந்தான். இவன் ஆமகன் அல்லன், இவன் என் மகன்' என்று சொல்லி, அவனைத் தனக்குக் காட்டித் தந்த இறைவனுக்குக் கைகுவித்தனாகத், தன் மனைவியுடனும் கூடி அதனை வாஞ்சையுடன் எடுத்தான்.

## குழந்தை வளர்ந்தது

"நம்பி பிறந்தான்: பொலிக, நம்கிளை!"யெனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடும் கூடி:
மார்பிடை முந்நூல் வனையா முன்னர்,
நாவிடை நன்னூல் நன்கனம் நவிற்றி,
ஒத்துடை அந்தணர்க்கு ஒப்பவை எல்லாம்:
நாத்தொலைவு இன்றி, நன்கனம் அறிந்தபின் –

'நமக்கோர் மகன் பிறந்தான் : நம் கிளை இனிச் சிறப்புறும்' என்று மகிழ்ந்து, தம் ஊருக்குச் சென்று, தம் உறவினரோடும் கூடி அவர்கள் களிப்புற்றனர். அந்தச் சிறுவனின் மார்பினிடத்தே முப்புரி நூலினை அணிவியாததன் முன்பாகவே, அவனுடைய நாவினாலே வேத வேதாந்தங்களை நல்ல முறையில் ஓதப் பயிற்றுவித்தான் இளம்பூதி.

மறையோதுபவரான அந்தணர்களுக்குப் பொருந்துபவை எல்லாம் நாப்பிறழ்ச்சியின்றி, அச்சிறுவனும் நல்லபடியாக ஓதுவதற்கு அறிந்தனன். அதன் பின்னர் -

## கொலை வேள்வி கண்டான்

அப்பதி தன்னுளோர் அந்தணன் மனைவயின்
புக்கோன்-ஆங்குப் புலைசூழ் வேள்வியில்,
குருஉத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி,
வெரூஉப்பகை அஞ்சி, வெய்துயிர்த்துப் புலம்பிக்
கொலைநவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி,

வரையிடைப் பட்ட மானே போன்றாங்கு,
அஞ்சிநின்ற அழைக்கும் ஆத்துயர் கண்டு –
நெஞ்சுநடுக் குற்று, நெடுங்கணீர் உகுத்துக் –

அச்சிறுவன், ஒரு சமயம், அவ்வூரிலுள்ளவோர் அந்தணின் வீட்டிற்குச் சென்றான். அவ்விடத்தே, ஊனுண்ணலைக் கருதுகின்ற வேளிவிச்சாலையைக் கண்டான். அங்கே, நிறம் பொருந்திய மாலை கொம்பிலே சுற்றப்பட்டதாக, அச்சந்தருகின்ற பகைக்கு அஞ்சி, வெவ்விதாக நெடுமூச்செறிந்து கதறிக் கொண்டிருந்தது ஒரு பசு. கொலைத் தொழிலைச் செய்கின்ற வேட்டுவருடைய கொடூரமான வில்லிற்குப் பயந்து ஓடிச் சென்று, வலையினிடத்தே அகப்பட்டுத் துடிக்கின்ற மானைப் போன்று, அங்கே அச்சத்தோடு நின்ற கதறும் அப்பசுவின் துயரத்தைக் கண்ட அச்சிறுவன், நெஞ்சம் நடுக்க முற்றான். மிகுதியான கண்ணீரைச் சொரிந்து வருந்தினான்.

## பசுவைக் கடத்திப் போதல்

'கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட,
நள்ளிருட் கொண்டு நடக்குவன்' என்னும்
உள்ளம் கரந்தாங்க, ஒருபுடை ஒதுங்கி
அல்லிடை ஆக்கொண்டு, அப்பகுதி அகன்றோன்,
கல்லதர் அத்தம் கடவா நின்றுழி –

"இப் பசுவினது கடுமையான துன்பமெல்லாம் பாழ்படுமாறு, திருட்டுத் தொழீலினாலே, இதனை நள்ளிரவிலே பற்றிக் கொண்டு செல்வேன்' என்று, தன் உள்ளத்திற் கொண்ட எண்ணத்தை ஒளித்துக் கொண்டவனாக, அவ்விடத்தே ஒரு பக்கமாக அவன் ஒதுங்கி நின்றான். இரவிலே, தான் குறித்தபடியே பசுவினைக் கைப்பற்றிக் கொண்டு, அவ்வூரை விட்டும் அவன் நீங்கினான். அப்படி நீங்கியவன், பருக்கைக் கற்கள் பொருந்திய வழியினைக் கடந்து சென்று கொண்டிருந்த போது –

## அந்தணரின் சீற்றம்

அடர்க்குறு மாக்களொடு அந்தணர் எல்லம் -
கடத்திடை ஆவொடு கையகப் படுத்தி,
"ஆகொண்டு இந்த ஆரிடைக் கழிய,
நீசமகன் அல்லாய்: நிகழ்ந்ததை உரையாய்:

புலைச்சிற மகனே: போக்கப் படுதி'' யென்று:
அலைக்கோல் அதனால் அறைந்தனர் கேட்ப –

தவறு செய்தாரை நெருக்கி வருத்துதலைச் செய்கின்ற காவல் மாக்களொடு, அந்தணரெல்லாம் கூடி, அருநெறியின் இடையிலே பசுவோடு அச்சிறுவனையும் கைப்பற்றினர். 'ஆவைத் திருடிக் கொண்டு, இந்த அருநெறியிடையே போவதற்குத் துணியும் நீசமகன் அல்லாதவனே! நிகழ்ந்ததைச் சொல்வாயாக! கீழ்த்தரமான சிறுவனே! நீ இனி அந்தணரினின்றும் விலக்கி வைக்கப்படுவாய்' என்று சொல்லித் துன்புறுத்தும் கோலினாலே அவனை அடித்து, மற்றும் கேள்விகளும் கேட்டனர்.

## பசுவின் செயல்

ஆட்டிநின்று அலைக்கும் அந்தணர் உவாத்தியைக்
கோட்டினிற் குத்திக் குடர்புயத்து உறுத்துக்:
காட்டிடை நல்லாக் கதழ்ந்து கிளர்ந்தோட –

அங்ஙனம் அவனை அடித்து வருத்திய பார்ப்பனர்களின் உவாத்தியைச், சினங்கொண்டு தன் கொம்பினாற் குத்தி, அவன் குடரினைப் பிடுங்கிக் கொண்டு, அந்த நல்ல பசுவானது காட்டினிடையே விரைந்து ஓடியும் போய்விட்டது.

## ஆபுத்திரனின் கேள்வி

ஆபுத் திரன்தான் ஆங்கவர்க்கு உரைப்போன்,
"நோவன செய்யன்மின்! நொடிவன கேண்மின்:
விடுநில மருங்கின் படுபுல் ஆர்ந்து,
நெடுநில மருங்கின் மக்கட்கு எல்லாம்,
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந்து ஊட்டும்
இதனோடு வந்த செற்றம் என்னை?
முதுமறை அந்தணிர்! முன்னியது உரைமோ?"

அப்போது, ஆபுத்திரன் அங்குள்ளவர்க்குச் சொல்வான்: "பிற உயிர்கள் வருத்தமுறும் செயலைச் செய்யாதீர்கள். யான் சொல்லுவனவற்றைக்

கேளுங்கள். மேய்தற்கு என்று விடப்பட்ட நிலத்திலே புல்லை மேய்ந்து, இவ்வுலகில் உள்ள மக்கட்கு எல்லாம், அவர் பிறந்த நாள் தொடங்கிச் சிறந்த தான தன் இனிய பாலினை, தர்மம் புரியும் உள்ளத்தோடு அருள் கனிந்து ஊட்டி வரும் பசுவினோடு நுமக்கு வந்த பகைமையும் யாதோ? பழமறைகளை ஓதும் அந்தணர்களே! உம் எண்ணத்தை உரைப்பீராக'' என்றான்.

## பார்ப்பார் இகழ்தல்

''பொன்னணி நேமி வலங்கொள்சக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகனெமக்கு அருளிய
அருமறை நன்னூல் அறியாது இகழ்ந்தனை:
தெருமரல் உள்ளத்துச் சிறியை நீயவ்
வாமகன் ஆதற்க ஒத்தனை: அறியாய்
நீமகன் அல்லாய், கே'' ளென இகழ்தலும் -

''பொன்னாலாகிய அழகிய வட்டத்தையுடையதும், வெற்றி கொள்ளும் ஆற்றலுடையதுமான சக்கரப்படையினைக் கையிலே தாங்கியவன், நிலைபெற்ற உயிர்கட்கு முதல்வனாகிய திருமால் அவன் மகனான பிரம்மதேவன் எனக்கு அருளிச் செய்த, அரிய மறைகளான நன்னூற்களை ஓதியறியாதே, நீ, இகழ்ந்து பேசினாய். சுழலுகின்ற உள்ளத்தினையுடைய சிறுவன் நீ. அந்தப் பசுவின் மகனாக ஆவதற்கே பொருத்தமாயிருக்கின்றனை! அறியாமை உடையவனே! நீ எம் பார்ப்பன மகன் ஆகவே மாட்டாய். கேட்பாயாக'' என்று பார்ப்பனர்கள் அவனை இகழ்ந்து பேசினர்.

## முனிவர்களின் பிறப்பு

''ஆன்மகன் அசலன்: மான்மகன் சிருங்கி,
புலிமகன் விரிஞ்சி: புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ கேச கம்பளன்?
ஓங்குயர் பெருஞ்சிறப்பு உரைத்தலும் உண்டால்
ஈங்கிவர் நுங்குலத்து இருடி கணங் களென்று:
ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ:
நான்மறை மாக்காள்! நன்னூல் அகத்து? என –

‘ஆமகன்’ எனத் தன்னை அவர்கள் இகழ்தலும், அவன் சொல்வான்: “அவல முனிவனோ ஒரு பசுவின் மகன். சிருங்கி முனிவனோ ஒரு மானின் மகன். விரிஞ்சி முனிவனோ ஒரு புலியின் மகன். மேலான சான்றோர் போற்றும் கேசகம் பளனோ ஒரு நரியின் மகன். இவர்கள் நும்குலத்து வந்த முனிவர் கணங்கள் என்று மிக உயர்ந்த பெருஞ் சிறப்புக் கூறுதலும் உண்டல்லவோ? அதனால் நான்மறை மாக்களே! உங்களுடைய நல்ல நூல்களினுள்ளே, பசுவினோடு வந்த இழிகுலம் யாதும் உளதாமோ!” என்றான் ஆபுத்திரன்.

## அந்தணன் சொன்னது

ஆங்கவர் தம்முளோர் அந்தணன் உரைக்கும்:
ஈங்கிவன் தன்பிறப்பு யானறி குவ!” னென –
“நடவை வருத்தமொடு நல்கூர் மேனியன்
வடமொழி யாட்டி மறைமுறை எய்திக்
குமரி பாதம் கொள்கையின் வணங்கித்
தமரில் தீர்ந்த சாலியென் போள்தனை,
‘யாது நின்னூர்? ஈங்கென் வரவு?’ என,
மாமறை யாட்டி வருதிறம் உரைக்கும்:
“வார ணாசியோர் மாமறை முதல்வன்.
ஆரண உவாத்தி அரும்பெறல் மனைவி, யான்:
பார்ப்பார்க்கு ஒவ்வாப் பண்பின் ஒழுகிக்
காப்புக் கடைகழிந்து, கணவனை இழந்தேன்:
எறிபயம் உடைமையின், இரியல் மாக்களொடு
தெற்கண் குமரி யாடிய வருவேன்
பொற்றேர்ச் செழியன் கொற்கையும் பேரூர்க்
காவதம் கடந்து கோவலர் இருக்கையின்,
ஈன்ற குழவிக்கு இரங்கேன் ஆகித்,
தோன்றாத் துடவையின் இட்டனன் போந்தேன்:
செல்கதி உண்டோ தீவினை யேற்கு?” என்று,
அல்லலுற்று அழுத அவள்மகன் ஈங்கிவன்:

சொல்லுதல் தேற்றேன், சொற்பயம் இன்மையின்:

புல்லலோம் பன்மின், புலைமகன் இவ''னென-

அவ்விடத்தே இருந்தவர்களுக்குள்ளே ஒரு மறையவன், ''இவனுடைய பிறப்பின் இரகசியத்தை யானறிவேன்'' என்று அதனைச் சொல்லத் தொடங்கினான்.

''வழி நடந்த வருத்தத்தோடு இளைத்த ஓடலினளான பார்ப்பனி ஒருத்தி, வேதவிதிப்படி சென்று குமரிப் பெருந்தெய்வத்தின் பாதங்களை முறையோடும் வணங்கித், தன் உறவினரினின்றும், நீங்கியவளாக வந்து கொண்டிருந்தாள். அவள் பெயர் சாலி. அவளை, 'நின்னூர் யாது? இங்கு நீ வருவது எதுபற்றி?'' என்றேன். எனவும், அந்த மறையவள், தான் வருகின்ற வரலாற்றை எனக்கு உரைப்பாளாயினாள் -

''வாரணவாசி நகரத்திலேயுள்ள, சிறந்த வேதங்களிலே முதன்மை யாளனாகவும், வேதமோதுவிக்கும் உபாத்தியாகவும் விளங்கும் ஒரு பார்ப்பானின் பெறுவதற்கு அரிய மனைவியான். பார்ப்பாருக்குத் தகாத வழியிலே நடந்து கொண்டேன். கற்பாகிய காவலைக் கைவிட்டுப் பிசகிச் சென்றேன். அதனால், என் கணவனையும் இழந்தேன். அவர்கள் அடித்துத் துன்புறுத்துவார்கள் என்ற பயம் உடையவளுமாயினேன். அதனால் விரைந்து செல்லும் மக்களுடனே கூடியவளாகத் தென் திசைக் குமரித் துறையாடுவதற்கு வந்தேன். குமரியாடி வந்து கொண்டிருந்த யான் -

''பொற்றேரினையுடைய பாண்டியனின் கொற்கையாகிய பேரூர்க்கு ஒரு காவததூரம் கடந்தவளாக, ஆயர்களின் இருப்பிடத்திற்கு அருகே வந்தேன். அங்கே ஒரு குழந்தையையும் பெற்றேன். பெற்ற குழந்தைக்கு இரக்கம் உள்ளமில்லாதவளாகி, அவ்விடத்தே கண்ணில் தோன்றிய ஒரு தோட்டத்தினுள்ளே அதனைப் போட்டு விட்டும் வந்துவிட்டேன். ''இனி, செல்லுவதற்கான ஒரு நற்கதியும் தீவினையாட்டியாகிய எனக்கு உண்டோ?'' என்று துன்பமுற்று அழுதனள்.

அவளுடைய மகனே இவ்விடத்துள்ள இவன். என் சொல்லால் விளையும் பயன் ஏதும் இல்லாமையினால், இதுவரை இதனைக் கூறுவதற்குத் துணிவின்றி இருந்தேன். இவனைத் தீண்டாது போவீராக! இவன் இழிந்த மகன்'' என்றனன்.

## சிரித்தான் அவன்!

ஆபுத்திரன், பின்பு அமர்நகை செய்து,
"மாமறை மாக்கள் வருங்குலம் கேண்மோ:
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்!
புரிநூன் மார்பீர்! பொய்யுரை யாமே?
சாலிக்கு உண்டோ, தவறென உரைத்து,
நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப-

அவன் சொன்ன தன் பிறப்பு வரலாற்றைக் கேட்ட பின்னர், ஆபுத்திரன் சிறிதாக நகைத்தான். பின்னர், "பெரிய வேதங்களை உணர்ந்த வேதியர்கள் வருகின்ற குலமரபினைக் கேளுங்கள். ஆதி மறைகட்கு முதல்வனாகிய பிரமனுக்கு எதிரே தோன்றிய தேவதாசியாகிய திலோத்தமையின் காதற்சிறுவர்கள் அல்லரோ, அரிய மறை முதல்வர் என நீவிர் போற்றுகின்ற அந்தணர்கள் இருவருமான வசிட்டரும் அகத்தியரும்! முப்புரி நூலணிந்த மார்பினரே! அது பொய்யுரையாகுமோ? அது உண்மையாயின், சாலிக்கு மட்டும் தவறு ஏதேனும் உளதாகுமோ?" என்றுற சொல்லியவாறே, அந்த நான்மறை மாக்களைக் கண்டு, இகழ்ச்சியோடும் சிரித்தபடியே நின்றான்.

## அவன் உற்ற துன்பம்

"ஓதல் அந்தணர்க்கு ஒவ்வான்" என்றே
தாதை பூதியும் தன்மனை கடிதர,
"ஆகவர் கள்வ" னென்ற அந்தணர் உறைதரும்
கிராமம் எங்கணும் கடிஞையிற் கல்லிட-
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண் மதுரை தான்சென்ற எய்திச் -

"இவன் மறையோதும் அந்தணர் குடிக்குப் பொருத்த மற்றவன்' என்று, அவனை வளர்த்த தந்தையான இளம்பூதியே, தன் வீட்டினின்றும் அவனை வெளியேற்றிவிட்டான். 'யாகப் பசுவைக் கவர்ந்து போயின கள்வன் இவன்' என்று சொல்லிப் பார்ப்பார் வாழும் கிராமத்து எல்லாம். அவன் பிச்சைப் பாத்திரத்திலே சோறிடாமல் கல்லைப் போட்டார்கள். அவன், அதன்பின்

மிகுதியான செல்வத்தால் விளக்கமுற்றோர்கள் வாழ்கின்ற தென் மதுரையினைச் சென்று அடைந்தான்.

(இரப்போர்க்கு உணவிடாமலிருப்பதே இரக்கமற்ற தன்மை. அங்ஙனமிருப்பவும், பார்ப்பனர் கிராமங்களிலே, அவன் யாகப் பசுவைக் கவர்ந்தவன் என்ற குரோதத்தினாலே, பிச்சைப் பாத்திரத்திலே கல்லையும் போடத் துணிந்தனர். இது, அந்நாளிற் கொலை வேள்விபால் அவர் கொண்டிருந்த வெறிமிகுந்த ஈடுபாட்டைக் காட்டுவதாம்.)

## ஆபுத்திரனின் இரக்கச் சிந்தை

சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து
அந்தில் மூன்றில் அம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்தத் தக்கணப் பேரூர்,
ஐயக் கடிஞை கையின் ஏந்தி,
மையறு சிறப்பின் மனைதொறும் மறுகிக்,
"காணார், கேளார், கால்முடப் பட்டோர்,
பேணுநர் இல்லோர், பிணிநடுக்கு உற்றோர்:
யாவரும் வருக" என்ற இசைத்துடன் ஊட்டி,
உண்டொழி மிச்சிலுண்டு, ஓடுதலை மடுத்துக்,
கண்படை கொள்ளும் காவலன் தானென் -

சிந்தையின் தெய்வமான கலைமகளின் கலைச்சிறப்பு நிறைந்த கோயிலின் முன்வாயிலிடத்தேயுள்ள, பீடிகையையுடைய அம்பலத்தின் கண்ணே தங்கியிருப்பவனாயினான் அவன். அந்தத் தென் மதுரைப் பேரூரிடத்தே, பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவனாகக் குற்றமற்ற சிறப்பினையுடைய வீடுகள் தோறும் சுற்றி வருவான். கிடைத்த பிச்சையாகிய உணவினைக் "கண்ணற்றவரே! செவிடரே! கால்முடம் பட்டவரே! ஆதரிப்பார் இல்லாதவரே! நோயால் துன்புற்றவரே! யாவரும் வாருங்கள்" என்று கூவியழைத்து, அவர்கட்கு முதலில் ஊட்டுவான். ஊட்டியது போக எஞ்சியிருக்கும் உணவினைத் தான் உண்டுவிட்டு, அந்த ஓட்டினைத் தலைக்கு அடியிலே வைத்து கொண்டு கண்ணுறங்குவான், அறங்காப்போனான அந்த ஆபுத்திரன்.

## பாத்திர மரபு கூறிய காதை

- **மணிமேகலைக்கு அறவணர் அமுதசுரபியென்னும் பாத்திரம் சிந்தாதேவி ஆபுத்திரனுக்குக் கொடுத்த வண்ணம் கூறிய பாட்டு :**

(அமுதசுரபி என்னம் தெய்வீகப் பாத்திரம் ஆபுத்திரனுக்குக் கிடைத்ததனை அறவணடிகள் சொல்லும் பகுதி இது. அந்தப் பாத்திரத்தினால் ஆபுத்திரன் செய்த தர்மமும், இந்திரனால் அவன் தன்னுயிரையே நீத்துக் கொள்ள நேரிட்டதும், இந்தப் பகுதியுள் கூறப்படும்).

## ஆபுத்திரனின் அருந்துயரம்

"ஆங்கவற்கு ஒருநாள், அம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய்! புகுந்தது கேளாய்,
மாரி நடுநாள்: வல்லிருள் மயக்கத்து:
ஆரிடை உழந்தோர் அம்பலம் மரீஇத்:
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி,
'வயிறுகாய் பெரும்பசி மலைக்கும்' என்றலும்,
ஏற்றூண் அல்லது, வேற்றூண் இல்லோன்,
ஆற்றுவது காணான்: ஆரஞர் எய்த

பூங்கொடி போன்றவளே!நல்லவளே! அந்த ஆபுத்திரனுக்கு ஒரு நாள், அம்பலப் பீடிகையிடத்தே அந்த அமுதசுரபி என்னும் பாத்திரம் வந்து சேர்ந்த வரலாற்றையும் கேட்பாயாக.

"மழைக்காலத்து நள்ளிரவு ஒன்றிலே, கடுமையான இருளின் மயக்கத்தினாலே, வழியிடையே துன்பம் அடைந்தவர்களான சிலர் அந்த அம்பலத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கே துயில்பவனாகிய ஆபத்திரனை அவர்கள் தொழுதுபோற்றி, 'வயிறு காய்கின்ற பெரும்பசி எம்மை வருத்துகின்றது' என்றனர். பிச்சை ஏற்று உண்ணும் உணவினை அல்லது வேறு உணவு எதுவும் இல்லாதானாகிய அவன், அவருடைய பசித் துயரத்தைத் தீர்த்தற்கு வழியறியாதவனாக, மிகுதியான மனவேதனையை அடைந்தான்.

## சிந்தாதேவியின் அருள்

'கேளிது மாதோ, கெடுகநின் தீ"தென
யாவரும் ஏத்துமு இருங்கலை நியமத்துத்

தேவி சிந்தா விளக்குத் தோன்றி,
ஏடா! அழியல், எழுந்திது கொள்ளாய்,
நாடுவறங் கூறினுமிவ் வோடுவறங் கூறாது,
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலைவு இல்லாத் தகைமையது'' என்றே.

மாதே! இதனையும் கேள், ''நின் துன்பம் கெடுக'' என்று, யாவரும் போற்றிவரும் பெரிய கலைநியமத்துத் தேவியாகிய சிந்தா விளக்கு, அப்போது அவன்முன் தோன்றினாள். ஏடா! வருத்தமுறாதே! எழுந்து இதனைப் பெற்றுக்கொள். நாடே பஞ்சமுற்றாலும் இந்த ஓடு ஒருபோதும் வறுமை அடையாது. உணவினை வாங்குவோரின் கைகள் வாங்கித் தாளாமல் வருத்தமுறுமேயன்றித், தான் அழியாது சுரக்கும் தன்மையினை உடையது என்று சொல்லித், தன் கையிலுள்ள பாத்திரத்தினை, அவன் கையிலே கொடுத்தனர்.

## சிந்தாதேவியின் அருள்

தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தாலும் -
''சிந்தாதேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோர் உற்ற இடர்களை வாய்'' எனத்
தான் தொழுது ஏத்தித் தலைவியை வணங்கி –

''சிந்தையின் தெய்வமே! செழுமையான கலைகள் பொருந்திய கோட்டத்தின் அழியாத் திருவிளக்கே! நாவின் மேல்நின்று இயக்கும் பாவையே! வானோர் தலைவியே! இந்நிலவுலகத்தார்களின் முதல்வியே! இவ்விடத்துப் பசித்தோரான இவர் இடரினைப் போக்குவாயாக'' என்று ஆபுத்திரன் சிந்தாதேவியைத் தொழுது போற்றி, வணக்கமும் செய்தான்.

## உயிர் பேணிய அறம்

ஆங்கவர் பசிதீர்த்து, அந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்,
மக்களும் மாவும் மரஞ்சேர் பறவையும்,

தொக்குடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ

பழுமரத் தீண்டிய பறவையின் எழூஉம்
இழுமென் சும்மைஇடையின் றொலிப்ப –

அவ்விடத்து உணவு கேட்டவர்களின் பசியத்துரை உடனே போக்கினான். அதன்பின், அந்நாள் தொடங்கி, வாங்குகின்ற கைகள் வருந்துமாறு உணவளித்து, செறிந்த உயிரினங்களைப் பசியினின்றும் காத்தும் வந்தான். ஆதலினால் மக்களும், விலங்குகளும், மரங்களைச் சேர்ந்திருக்கும் பறவைகளும் ஆகிய உயிரினம் எல்லாம், அவனிடத்தே தொகுதியாக வந்து உணவிற்காகத் திரண்டன. பழுத்த மரத்திலே கூடியுள்ள பறவைகளால் எழுகின்ற இழுமென்னும் ஆரவாரத்தைப் போன்றதோர் ஆரவாரமும், அவ்விடத்தே இடையறாது ஒலித்துக் கொண்டே இருந்தது.

## இந்திரன் வந்தான்

ஈண்டுநீர் ஞாலத் திவன்செயல் இந்திரன்
பாண்டு கம்பளம் துளக்கிய தாகலின்,
தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி,
வளைந்த யாக்கையோர் மறையோன் ஆகி,
மாயிரு ஞாலத்து மன்னுயிர் ஓம்பும்
ஆருயிர் முதல்வன் தன்முன் தோன்றி –
“இந்திரன் வந்தோன், யாது. நின்கருத்து?
உன்பெருந் தானத் துறுபயன் கொள்க” என –

மிக்க நீர்ப்பெருக்கினைக் கொண்ட கடலினாலே சூழப் பெற்றிருக்கின்ற இந்த உலகத்திலே, இவன் செய்துவந்த அறச்செயலானது, இந்திரனது பாண்டு கம்பளத்தினை நடுக்கமுறச் செய்தது. அதனால்

‘தளர்வுற்ற நடையுடையவனாக, தண்டென்னும் காலினை ஊன்றிக் கொண்டவனாக, கூன்விழுந்து வளைந்த உடலினைக் கொண்ட ஒரு முதுமறையவனாக, இந்திரன் உருக்கொண்டான். மிகப்பெரிதான இவ்வுலகத்துச் செறிந்திருக்கும் உயிர்களை எல்லாம் உணவளித்துக் காப்பாற்றும் அரிய உயிரினங்களின் தலைவனாகிய ஆபுத்திரனின் முன்பாகத்

தோன்றினான். தோன்றி, 'இந்திரனாகிய யான் வந்துள்ளேன். நின் கருத்துத்தான் யாதோ? நின் பெரிதான தானத்தினாலே அடைய விரும்பும் பயனைப் பெற்றுக்கொள்வாயாக: என்றான்.

(அறமும் தவமும் இவ்வுலகத்து ஒருவரால் மிக்குச் செய்யப்படின், அதனால் இந்திரனின் பாண்டு கம்பளம் நடுக்கம் உறுமாம். அவன், உடனே, அத்தகையோர்முன் வந்து தோன்றி அவர்க்கு வேண்டும் வரந்தருவானாம். இது புராண மரபு.)

### தேவர் கோமானே!

வெள்ளை மகன்போல விலாவிற நக்கீங்கு
எள்ளினன், போமென் நெடுந்துரை செய்வோன்,
"ஈண்டுச் செய்வினை ஆண்டுநுகர்ந் திருத்தல்
காண்தரு சிறப்பின்நும் கடவுளர் அல்லது,
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்,
நற்றவஞ் செய்வோர், பற்றற முயல்வோர்,
யாவரும் இல்லாத் தேவர்நன் னாட்டுக்கு
இறைவனாகிய பெருவிறல் வேந்தே!

வெள்ளை உள்ளத்தானாகிய ஒரு மனிதனைப் போலத் தன் விலா வெடிக்கும்படியாகச் சிரித்தான் ஆபுத்திரன். 'இவ்விடத்துநும் பேச்சினை யான் இகழ்கின்றேன். நீர் போவிராக' என்றும் எடுத்துக் கூறினான்.

"இவ்வுலகத்திலே செய்துள்ள நல்வினை தீவினைகளின் பயன்களை, அவ்விடத்தே அமர்ந்து அநுபவித்துக் கொண்டு இருத்தலே, காணத்தக்க சிறப்பினையுடைய நும்போன்ற கடவுளர்களின் தன்மையாகும். அ∴தல்லாது, தருமஞ் செய்கின்ற மக்கள், எளியோரைப் பாதுகாத்துப் பேணுவோர், நன்மை தருவதான தவத்தினைச் செய்வோர், இது வினைக்குக் காரணமாகிய பற்றினை அறுத்துக் கொள்ள முயல்வோர், ஆகிய எவரும் இல்லாத தன்மையை உடையது தேவர்களின் நல்ல நாடு. அதற்க இறைவனாகிய, பேராற்றலுள்ள வேந்தனே!

### அருள்வது யாதோ?

வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தவர்
திருந்துமுகம் காட்டுமென் தெய்வக் கடிஞை,

உண்டி கொல்லோ, உடுப்பன கொல்லோ,

பெண்டிர் கொல்லோ, பேணுநர் கொல்லோ,

யாவையீங் களிப்பன, தேவர்கோன்?'' என்றலும்

பசியினாலே வருத்தமுற்று வந்தவர்களின் பொறுத்தற்க அரிய பசியினைப் போக்கி, அவர்களிடம் இனிதான முகத்தினைத் தோன்றுமாறு காட்டுவது என் தெய்வக் கடிஞை. தேவர் கோமான் எனக்குத் தருவன உண்பனவோ, உடுப்பவோ, பெண்களோ, அல்லது வேறு பாதுகாப்பாளரோ?'' என்றான் ஆபுத்திரன்.

## இந்திரனின் சினம்

''புரப்போன் பாத்திரம் பொருந்தூண் சரத்தீங்கு,

இரப்போர்க் காணா தேமாந் திருப்ப,

நிரப்பின் றெய்திய, நீணிலம் அடங்கலும்

பரப்பு நீரால் பல்வளம் சுரக்க!' என –

ஆங்கவன் பொருட்டால், ஆயிரங் கண்ணோன்,

ஓங்குயர் பெருஞ்சிறப்பு உலகோர்க்கு அளித்தலும் -

அதனாற் சினமுற்ற இந்திரன், உயிர்களின் பசியைப் போக்கிக் காப்பாற்றுவோனான ஆபத்திரனின் பாத்திரத்துப் பெய்யப்பட்ட உணவானது பெருகிச் சுரந்தும், அதனை விரும்பி வந்து இரந்து நிற்பவரைக் காணுதற்கில்லாத ஒரு நிலைமை ஏற்பட்டு அவன் ஏக்கமுற்றிருக்குமாறு. ''நெடிது பரந்த நிலவுலகம் எங்கணும். அளவின்றி எய்திய வெள்ளப் பெருக்கினாலே பல்வகை வளங்களும் சுரப்பதாக, என மேகங்களை எவினான். தன்னை இகழ்ந்த ஆபுத்திரனின் பொருட்டாக, ஆயிரங்கண்ணோனான இந்திரன், மிகவுயர்ந்த சிறப்பினை உலகினர்க்கு எல்லாம் அவ்வாறு அன்று அளித்தான்.

## பீடிகை நிலைமை

பன்னீராண்டு, பாண்டி நன்னாடு,

மன்னுயிர்மடிய மழைவளம் இழந்தது,

வசித்தொழில் உதவ, மாநிலம் கொழுப்பப்,

பசிப்புயிர் அறியாப் பான்மைத் தாகலின்,

ஆருயிர் ஓம்புநன் அம்பலப் பீடிகை

ஊணொலி அரவம் ஒடுங்கிய தாகி,
விடரும் தூர்த்தரும் விட்டேற் றாளரும்
நடவை மாக்களும் நகையொடு வைகி,
வட்டும் சூதும் வம்பக் கோட்டியும்
முட்டா வாழ்க்கை முறைமைய தாக-

பாண்டி நன்னாடு, பன்னிரண்டு ஆண்டகளாகச் செறிந்திருந்த உயிரினம் எல்லாம் பசியினாலே மடியும்படியாக மழை வளத்தினை இழந்திருந்தது. அது தீருமாறு, இந்திரனம் மழை பெய்தலாகிய வளமுறுதற்கான செய்வினையினை மேற்கொண்டான். அதனால் மாநிலம் கொழுமையற்றது. அதனால் பசி என்பது உயிர்கள் இன்னதென அறியவியலாத ஒரு தன்மையினையும் உடையதாயிற்று. அங்ஙனம் ஆகவே,

ஆருயிர்களைப் பேணிவந்தவனாகிய ஆபுத்திரன் தங்கியிருந்த அம்பலப் பீடிகையானது, உணவுண்ணலாகிய ஒலியானது ஆரவாரம் ஒடுங்கிப் போயினதாயிற்று. காமுகர்களும் பரத்தரும், வீட்டினின்றம் வெளியேறித் திரிபவரும், வழிநடந்துவரும் மாக்களும் குதூகலத்துடன் தங்கியிருந்து, உருண்டை உருட்டலும், சூதாடலும் வம்பு பேசலுமாகியவற்றிலே ஈடுபட்டவராகக், குறையாதிருக்கின்ற ஒரு வாழ்க்கை முறைமையினையும் அ.்.து உடையதாயிற்று.

## ஆபுத்திரன் வெளியேறினான்

ஆபுத்திரன்தான் அம்பலம் நீங்கி
ஊரூர்தோறும் உண்போர் வினாஅய்,
யாரிவன்?” என்றே யாவரும் இகழ்ந்தாங்கு,
அருந்தே மாந்த ஆருயிர் முதல்வனை,
“இருந்தாய் நீயோ!” என்பார் இன்மையின்
திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
    ஒருதனி வரூஉம் பெருமகன் போலத்,
தானே தமியன் வருவோன். –

ஆபுத்திரனும் அம்பலத்தை விட்டு வெளியேறினான். “உண்போர் உளரோ?” எனக் கேட்டபடியாக ஊர்கள் தோறும் சென்றான் ‘யார் இவன்?’ என்ற சொல்லி யாவரும் இகழ்வாராயினர். ‘பிறரை உண்பிக்க வேண்டும்’

என்ற ஆவல் கொண்டோனான, அரியஉயிர்களின் முதல்வனான ஆபுத்திரனை, ‘இங்கிருப்பது நீர் தாமோ?’ என விசாரிப்பவர் கூட எங்குமே இல்லாது போயினர். அதனால் ‘‘தனது சிறந்த தெய்வத்தினைப் பெருங்கடலானது கவர்ந்து கொண்டதாக, ஒற்றைத் தனியனாக வந்து கொண்டிருக்கின்ற ஒரு செல்வனைப் போலத்’’ தன்னந் தனியாகவே அவனும் சென்று கொண்டிருந்தான். ஒருநாள் - .

## வந்தோர் உரைத்தது

மாநீர் வங்கம் வந்தோர் மணங்கிச்
‘‘சாவக நன்னாட்டுத் தண்பெயர் மறுத்தலின்,
ஊனுயிர் மடிந்த துரவோய்!’’ என்றலும் -

அந்த ஆபுத்திரனின் எதிரே, மிக்க நீரினையுடைய கடலிடத்து மரக்கலத்தினின்றும் இறங்கி வந்தோருட் சிலர் வந்து வணங்கி ‘‘ஆற்றலுடையோனே! சாவகமாகிய நல்ல நாட்டிலே, குளிர்ந்த பெயலாகிய மழையானது பொய்யாது போயினமையால், உடலேடு கூடியிருந்த உயிரினம் எல்லாம் மடிந்தன’’ என்றனர்.

## மரக்கலம் ஏறினாள்

‘‘அமரர்கோன் ஆணையின் அரந்துவோர்ப் பெறாது,
குமரி மூத்தவென் பாத்திரம் ஏந்தி,
அங்கந் நாட்டுப் புகுவதென் கருத்’’தென,
வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்,
மாவிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொருநாள், தானாங் கிழிந்தனன்:
‘‘இழிந்தோன் ஏறினன்’’ என்றிதை யெடுத்து,
வழங்குநீர் வங்கம் வல்லிருள் போதலும் -

‘தேவர் கோமானின் ஆணையின் காரணமாக உணவு அருந்துபவரைப் பெறாது, குமரியாகவே மூப்பெய்திய என் அமுதசுரபியை ஏந்திக்கொண்டு, அவ்விடத்து அந்த நாட்டிற்குச் செல்வது என் கருத்தாகும்’ எனக்

கூறியவனாக, மரக்கலத்தே சாவக நாடு செல்லும் மக்களோடும், ஆபுத்திரன் தானும் கலம் ஏறினான்.

காற்று மிக வேகமாக வீசுதலினாலே வழியிடையே கடல் கலக்குற்றது. அதனால் பெரிய பாய்மரத்தை மணி பல்லவத் தீவினிடத்தே இறக்கிக் கலத்தை நிறுத்தினர். அம் மரக்கலம் அவ்விடத்தே ஒரு நாள் தங்கியது. ஆபுத்திரன், அவ்விடத்தே கரையில் இறங்கினான் 'இறங்கியவன் ஏறி விட்டான்' என்று தவறாகக் கருதிப் பாய் மரத்தை உயர்த்துச் செறிந்த இரவிலே அம்மரக்கலமும் கடலிலே சென்றுவிட்டது.

(குமரி மூத்தது – குமரிப்பெய் மணப்பயன் காணாதே மூத்தது: அதுபோலப் பயனற்றதாகியது பாத்திரம் என்க.)

## மணிபல்லவத்தே வருந்தினான்

வங்கம் போயபின் வருந்துதுயர் எய்தி,
அங்கு வாழ்வோர் யாவரும் இன்மையின்,
''மன்னுயிர் ஓம்பும் மாபெரும் பாத்திரம்
என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்:
தவந்தீர் மருங்கில் தனித்துயர் உழந்தேன்
சுமந்தென் பாத்திரம்?'' என்றனன் தொழுது-

மரக்கலம், அவனைத் தனியே மணிபல்லவத்தே விட்டுப் போய்விட்ட பின்னர், ஆபுத்திரன் மிகுதியான துயரம் அடைந்தான். அங்கே வாழ்பவர் எவரும் இல்லாமையால், 'மக்களின் உயிர்களைப் பேணிக் காக்கும் இந்தப் பெருமை சிறந்த பாத்திரத்தினை வைத்துக் கொண்ட, என் உயிரை மட்டும் காத்து வருவதை யான் பொறுக்க மாட்டேன். இப்பாத்திரத்தினாலேயே உதவுகின்ற தவப்பயன் என்னிடத்திலிருந்தும் தீர்ந்து போயினதால், மிக்க துயரங் கொண்டு நான் வருந்துவேனாயினேன். இந்தப் பாத்திரத்தை யான் வறிதே சுமந்து திரிவதனால் என்ன பயன்?' என்று, அவன் தனக்குள் தானே கூறிக் கொண்டான்.

## ஆபுத்திரன் உயிர்விட்டது

கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சியின்,
''ஓரியாண் டொருநாள் தோன்'' றென விடுவோன்,
''அருளறம் பூண்டாங் காருயிர் ஓம்புநர்

உளரெனின், அவர்கைப் புகுவாய்’’ என்றாங்கு
உண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்ப்புழி –

பின்னர், அதனைத் தொழுது, ‘கோமுகி’ என்கின்ற நிறைந்த நீரினையுடைய பொய்கையிடத்தே, ‘ஒவ்வோர் ஆண்டினும் ஒருநாள் தோன்றுக’ என்று கூறிவிடுபவன், ‘‘அருள் செய்தலான அறத்தை மேற்கொண்டு, அரிய உயிர்களைப் பேணுபவர் எவரேனும் உள்ளாரானால், அவர் கையிடத்தே சென்று சேர்வாயாக’’ எனவும் கூறி, அதனை விடுத்தனன். பின்னர், உண்ணா நோன்பினை மேற்கொண்டோனாகத் தன் உயிரினை விடுகின்ற நேரத்திலே –

## எனக்கு உரைத்தனன்

அந்நாள் ஆங்கவன் தன்பாற் சென்றே
என்னுற் றனையோ?’ என்றியான் கேட்பத்,
தன்னுற் றனபல தானெடுத் தரைத்தனன்

அந்த நாளிலே, அவ்விடத்தே அவன்பால் யானும் சென்றேன். ‘என்ன துன்பம் உற்றனையோ?’ என்று யான் கேட்பவும், அவன், தனக்கு உற்றன பலவும் தானே எடுத்துக் கூறினான்.

## இறப்பும் பிறப்பும்

குணதிசைத் தோன்றிக், காரிருள் சீத்துக்,
குடதிசைச் சென்ற ஞாயிறு போல,
மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத்,
தணியா மன்னுயிர் தாங்கம் கருத்தொடு
சாவகம் ஆளும் தலைத்தாழ் வேந்தன்
ஆவயிற்று உதித்தனன், ஆங்கவன் தானென்.

கீழ்த்திசையிலே, காலையிலே தோன்றி உலகத்துக் காரிருளைப் போக்கி ஒளிபரப்பிய ஞாயிறானது, மாலையிலே மேலைத் திசையிலே சென்றுவிட்டதனைப் போல, மணிபல்லவத் தீவிலே தன்னுடைய மனித உடலைக் கைவிட்ட ஆபுத்திரன் மன்னுயிர்களைக் காக்கும் தணியாத கருத்தோடு, சாவக நாட்டினை ஆளும் மிக்க முயற்சியை உடைய

வேந்தனாகிய பூமிச்சந்திரனது பசுவின் வயிற்றிடத்தே சென்று, மீண்டும் மானிட மகவாகிப் பிறந்தான் - என்க.

(அவன் இறப்பையும் மீளப் பிறந்ததையும், கீழத்திசையிலே தோன்றும் கதிரவன் மீளவும் மாலையில் மேலைத் திரையிடத்தேச் சென்று சேர்வதற்கு ஒப்பாகக் கொள்க. 'வேந்தன் ஆ!'' என்றது, மண்முக முனிவனது ஆவேயானாலும், அது அந்த வேந்தனின் நாட்டகத்தது. ஆதலின், அரசனுக்கும் உரிமையுடையதாகச் சொல்லப் பெற்றது.

மணிமேகலையுள் ஆன்மாக்கள் வினைகட்கு ஏதுவாக மீளமீளப் பிறவி எடுக்கும் செய்திகள் பலவற்றைக் காணலாம். இதனால் உயிரின் நிலைத்த தன்மையும், உடலின் நிலையாமையும் விளங்கும். இந்த அறிவே அறநெறி பேணுதற்கும் உயிர்க்குலங்களைத் தூண்டிச் செலுத்தி வருகின்றது.

## பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை

### -மணிமேகலை பாத்திரங் கொண்டு பிச்சைக்குப் பெருந்தெருப் போய பாட்டு

(ஆபுத்திரன் சாவக நாட்டிலே மண்முக முனிவனின் பசுவின் மகவாகிப் பிறக்கிறான். மகப்பேறு இல்லாதோனாகிய மன்னன் அவனை எடுத்து வளர்த்துத் தனக்குப்பின் அவனையே அரசனாக ஆக்குகிறான். மணிமேகலை பிக்குணிக் கோலத்தோடு அமுதசுரபியைக் கையில் ஏந்தியவளாகப், பிச்சைக்குப் பெரந்தெருவூடு வரக், காய சண்டிகை, ஆதிரை வீட்டைக் காட்டி, அங்குச் சென்று முதற் பிச்சையினை ஏற்குமாறு கூறுகின்றாள்.)

### ஆவின் மறுபிறப்பு

இன்னுங் கேளாய் இளங்கொடி மாதே!
அந்நாள் அவனை ஓம்பிய நல்லாத்
தண்ணென் சாவகத் தவள மால்வரை,
மண்முகன் என்னும் மாமுனி இடவயின் -
பொன்னின் கோட்டத்து: பொற்குளம் புடையது:
தன்னலம் பிறர்தொழத் தான்சென்று எய்தி,
ஈனா முன்னம், இன்னுயிர்க் கெல்லாம்:
தான்முலை சுரந்து, தன்பால் ஊட்டலும் -

இளங்கொடி போன்ற பெண்ணே! இன்னமும் கேட்பாயாக: சாலி என்னும் பார்ப்பனியானவள் ஈன்ற, இரக்கமின்றித் தோட்டத்தில் போட்டுவிட்டுப்

போன நாளிலே, ஆபுத்திரனைப் பாதுகாத்ததல்லவோ ஒரு நல்ல பசு! அது, தன்மையினையுடைய சாவகத்தீவின் பனிமூடிய பெருமலை ஒன்றிலிருந்த பெருந்தவசியான 'மண்முகன்' என்பவனிடத்திலே, மறுபிறப்பிற் போய்ச் சேர்ந்தது. பொன்னைப் போலும் கொம்புகளும் குளம்புகளம் உடையதாகத் திகழ்ந்தது! தன்னுடைய சிறப்பினைத் பிறர் எல்லாம் போற்றித் தொழுமாறு, அது அங்ஙனம் சென்றடைந்திருந்தது. தான் கன்றினை ஈனுவதற்கு முன்பே, இனிய உயிர்கட்கு எல்லாம். தன் மடி சுரந்து, தன் பாலினை அது உண்பித்தும் வந்தது.

## முனிவனின் தீர்க்க தரிசனம்

மூன்று காலமும் தோன்றநன் குணர்ந்த
ஆன்ற முனிவன், ஆதன்வயிற் றகத்து.''
மலைவளம் சுரப்பவும், மன்னுயிர் ஓம்பவும்,
உயிர்கா வலன்வந் தொருவன் தோன்றும்:
குடர்த்தொடர் மாலை பூண்பான் அல்லன்,
அடர்ப்பொன் முட்டை அகவயி னானெனப்-

முக்காலங்களையும் புலப்பட நன்கு அறிந்த, அறிவிற் சிறந்தவன், அம் மண்முகமுனிவன். "அதன் வயிற்றகத்து, மழை வளம் சுரக்கமாறும், செறிந்த உயிர்களைப் பாதுகாக்குமாறும், உயிர்களின் காவலனாக ஒருவன் பிறப்பான். குடர்மாலை பூண்டு பிற உயிர்களைப் போல அவன் பிறக்கமாட்டான். பொற்றகட்டாலான முட்டையின் உள்ளிடத்தே இருந்து வெளிப்போந்து வருவான்'' என்று, அம்மண்முகமுனிவன் கூறினான்.

## உலகு தொழத் தோன்றினான்

பிணிநோய் இன்றியும் பிறந்தறம் செய்ய
மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
தறன்காகத் தளித்த தகையா வதனை
ஒற்கா உள்ளத தொழயான் ஆதலின்,
ஆங்கவ் வாவயிற் றமரர்கணம் உவப்பத்,
தீங்கனி நாவல் ஓங்குமித் திவினுக்கு
ஒருதா னாகி, ஒலகுதொழத் தோன்றினன்:

பிணிக்கும் நோயானது இல்லாதபோதும் மீண்டும் பிறந்து தருமம் செய்ய வேண்டும் என்னும் ஆர்வத்தினாலே, மணிபல்லவத்திலே உண்ணாநோன்பிருந்து தன் உயிரை விட்டவன் ஆபுத்திரன். அவன், தன்னைப் பாதுகாத்து உதவிய தகுதி மிகுந்த பசுவின் செயலினைத் தன் உள்ளத்தே தளர்வின்றி உறுதியாகக் கொண்ட போற்றி, என்றும் அதனைக் கைவிடாதிருந்தான். அந்தப் பற்றின் காரணமாக, அவ்விடத்தே மண்முக முனிவனிடத்திருந்த அப்பசுவின் வயிற்றிடத்தே சென்று மீண்டும் மகவாகப் பிறந்தான். தேவர் கூட்டம் மகிழ்ச்சி கொள்ளுமாறு, இனிய கனியினையுடைய நாவல் என்னும் பெயரோடு புகழ் பெற்ற இத் தீவினுக்குள்ளே, ஒப்பற்ற சிறந்தோனாக, அவன் அங்ஙனம் மீண்டும் பிறந்து தோன்றினான்.

## பிறந்ததன் சிறப்பு

பெரியோன் பிறந்த பெற்றியைக் கேள், நீ:
இருதிள வேனிலில் எரிகதிர் இடபத்து,
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்,
மீனத் திடைநிலை மீனத்து அகவையின்,
போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து,
மண்ணக மெல்லாம் மாரி யின்றியும்,
புண்ணிய நன்னீர் போதொடு சொரிந்தது:
'போதி மாதவன் பூமியில் தோன்றும்
காலம் அன்றியும் கண்டன சிறப்பெனச்
சக்கர வாளக் கோட்டம் வாழும்
மிக்க மாதவர் விரும்பினர் வியந்து,
"கந்துடை நெடுநிலைக் கடவுள் எழுதிய
கந்திற் பாவை அருளும் ஆயிடின்
அறிகுவம்" என்றே செறியிருட் சேறலும்,
"மணிபல் வைத்திடை மன்னுயிர் நீத்தோன்
தணியா உயிருயச் சாவகத்து தித்தனன்:
ஆங்கவன் தன்றிறம் அறவணன் அறியு"மென்று
ஈங்கென் னாவை வருத்தியது: இது கேள்:

பெரியோனாகிய ஆபுத்திரன் பிறப்பெய்திய பேற்றினை உரைப்பேன், நீ கேட்பாயாக: சித்திரை வைகாசியாகிய இளவேனிற் பருவத்திலே, எரிக்கும் கதிரவன் இடபத்ததாகிய வைகாசி மாதத்திலே, கார்த்திகை முதலாக எண்ணப்படும் பதின்மூன்றும் கழிந்த பின்னர், நட்சத்திரங்களுள் நடுவணதாக வரும் வைகாச நட்சத்திரம் வருவதான நாளிலே, போதித் தலைவனாகிய புத்தர் பெருமானோடும் பொருத்தமுடையதான சிறந்த வேளையிலே, ஆபுத்திரனும் பிறப்பு எய்தினான்.

உலகமெல்லாம் மழைவளம் பெறுதல் அல்லாமலும், புண்ணியப் பயனடைய நல்ல நீரானது மலரிதழ்களோடுங் கலந்து அப்போது சொரிந்தது. ‘‘போதி மாதவன் பூமியிலே தோன்றும் காலத்து அல்லாமலும், இக்காலத்தும் சிறப்பு நிகழக் கண்டோம் யாம்!’’ எனச் சக்கரவாளக் கோட்டத்தே வாழுகின்றவரான பெருந்தவம் உடையவரெல்லாம் விருப்பமுடன் வியந்து போற்றினர். ‘குற்றியை உடைய நீண்ட நிலையினதாகிய கடவுள் வடிவம் எழுதிய அவ்விடத்தேயுள்ள கந்திற்பாவை அருள் செய்யுமானால், இந்த அற்புத நிகழ்ச்சிகளின் உண்மையை யாமும் அறிகுவோம்’ என்ற கருதியவாயே, செறிந்த அந்த இருட்பொழுதில்தானே, அவர்கள் அவ்விடத்தைச் சென்றடைந்தனர்.

‘‘மணிபல்லவத்திலே தன் உயிரைத் தானே போக்கிக் கொண்ட ஆபுத்திரன், துயரத்தின் துன்பங்கள் குறையாத உலகத்து உயிர்கள் உய்திபெறுமாறு, சாவகத்திலே இப்போது பிறந்தான். அவன் வரலாற்றினை அறவணன் அறியும்’’ என்று, அத் தெய்வம் அருள்செய்து, அம் முனிவர்களுக்கு அவன் வரலாற்றைச் சொல்லும்படியாக என் நாவையும் வருந்தச் செய்தது. இதனையும் கேட்பாயாக:

## வேந்தன் ஆயினான்

மண்ணாள் வேந்தன் மண்முகன் என்னும்
புண்ணிய முதல்வன் திருந்தடி வணங்கி,
‘மக்கள் இல்லேன் மாதவன் அருளால்
பெற்றேன் புதல்வனை’’ என்றவன் வளர்ப்ப,
அரைசாள் செல்வம் அவன்பால் உண்மையின்
நிரைதார் வேந்தன் ஆயினன், அவன்தான்:

அச் சாவக நாட்டின் அரசனான பூமிச்சந்திரன் என்பவன், மண் முகன் என்னும் புண்ணிய முதல்வனின் திருவடிகளை வணங்கி, ‘‘நான் மக்கட்பேறு இல்லாதவன். மாதவராகிய தங்களருளினாலே ஒரு புதல்வனை இப்போது அடையப் பெற்றேன்’’ என்று கூறிப் பெற்று, ஆவிற்கு உதித்த அந்தக் குழந்தையைத் தானே வளர்த்து வந்தான். அரசாளும் செல்வச் செழுமை அவனிடத்தே உள்ளதனால், அம் மன்னனுக்குப் பின்னர், அவனே மாலையணிந்த மன்னனாக அந்நாட்டிலே விளங்குபவனும் ஆயினான்.

## தர்மம் செய்ய ஏவுதல்

துறக்க வேந்தன் துய்ப்பிலன் கொல்லோ?
அறக்கோல் வேந்தன் அருளிவன் கொல்லோ?
சுரந்து காவிரி புரந்துநீர் பரக்கவும்,
நலத்தகை யின்றி நல்லுயிர்க் கெல்லாம்,
அலத்தற் காலை யாகியது ஆயிழை!
வெண்திரை தந்த அமுதை வானோர்
உண்டொழி மிச்சிலை ஒழித்துவைத் தாங்கு,
வறனோ டுலகின் வான்துயர் கெடுக்கும்
அறனோ டொழித்தல், ஆயிழை! தகா தென –

‘‘துறக்கத்து வேந்தனாய் இந்திரன் அவியுணவு அற்றுப் போய் விட்டானோ? அறம் பிறழாத செங்கோலின்னான நம் சோழ மன்னனும் அருள் அற்றவனாகிப் போய்விட்டானோ? காவிரியானது வளஞ்சுரந்து பெருகி வந்து பேணி நீர்வளத்தினைப் பரவச் செய்தும்கூட, அதனால் பயன் பெருகுதலான ஒரு தன்மை இல்லாமற் போய்விட்டதே? நல்ல உயிர்கள் எல்லாம் வறுமையால் துயருறும் காலமாகவும் ஆகிவிட்டதே?

‘‘ஆயிழையே! வெண்மையான அலைப்பெருக்கத்தையுடைய பாற்கடலானது தந்த அமுதத்தை வானோர்கள் தாம் உண்டதுடன், உண்டதுபோக எஞ்சியிருந்த மிச்சத்தைப் பிறருக்குப் பயன்படாதபடி ஒளித்தும் வைத்தனர். அதனைப் போலவே வறுமையோடு விளங்கும் உலகின் மிக்க துன்பத்தைப் போக்கும் அமுதசுரபியைப் பயன்படுத்தாமல் இருப்பது தகாது’’.

## பெருந்தெரு அடைந்தாள்

மாதவன் உரைத்தலும் மணிமேகலை தான்
தாயர் தம்மொடு தாழ்ந்து பல ஏத்திக்
கைக்கொண் டெடுத்த கடவுட் கடிஞையொடு
பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு அடைதலும்:
ஒலித்தொருங் கீண்டிய ஊர்க்குறு மாக்களும்,
மெலித்துகு நெஞ்சின் விடரும் தூர்த்தரும்,
கொடிக்கோ சம்பிக் கோமக னாகிய,
வடித்தேர்த் தானை, வத்தவன் தன்னை
வஞ்கஞ் செய்துழி வான்தளை விடீஇய
உஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்
உருவுக்கு ஒவ்வா உறுநோய் கண்டு,
பரிவுறு மாக்களின் தாம்பரி வெய்தி:
'உதய குமரன் உளங்கொண் டொளித்த
மதுவர்க் குழலாள் வந்து தோன்றிப்,
பிச்சைப் பாத்திரம் கையின் ஏந்தியது
திப்பியம்' என்றே சிந்தை நோய்கூர:

மாதவனாகிய அறவணடிகள் அங்ஙனம் உரைத்தலும், மணிமேகலை தன்னுடைய அன்னைமார்களான மாதவி, சுதமதி ஆகியோருடன் அவரைப் பணிந்து, பலவாகத் துதித்தனள். பின்னர்த் தன் கையிலே எடுத்துக்கொண்ட தெய்வீகப் பாத்திரமான அமுதசுரபியுடனே, பிக்குணிக் கோலமுங் கொண்டவளாகிப், புகாரின் பெருந்தெருவினைச் சென்று அடைந்தனள்.

அவள் வரக்கண்டதும், ஆரவாரத்துடனே ஒன்றாக வந்து கூடினர். அவ்வூரின் அறிவற்ற சிறியவர்கள் பலரும். அவள் அழகிற்கு மெலிவுற்று நைந்த உள்ளமுடையவரான இளங்காளையருள் தீயொழுக்கம் உடையவரும், தெருவிலே வந்தனர்.

கோடிகள் விளங்குதலையுடைய கோசம்பி நகரத்து மன்னன், திருத்தமுடைய தேர்ப்படைப் பெருக்கத்தையுடைய உதயணனாகியதவத்தவர் கோமான். ஆவனைப் பிரச்சோதனன் என்னும் அரசன் தனக்குத் திறை செலுத்தாததுபற்றிச் சினந்து, சாலங்காயன் என்னும் தன் மந்திரியினாலே யந்திர யானையைக் காட்டி வஞ்சமாகச் சிறைப்படுத்திச் சென்றான்.

ஆப்போது, அவனைச் சிறைவீடு செய்வதற்காகப் பிரச்சோதனின் நகரமாகிய உச்சியினியிலே வந்து தோன்றினான். ‘யூகி’ என்னும் அந்தணன். அவனுடைய உருவத்திற்குப் பொருத்தமற்று நலிந்து தோன்றிய மாற்று உருவத்தைக் கண்டதும், அந்நகர மக்கள் பலரும் மிக்க துன்பங்கொண்டவர்களாகி வருத்தமுற்று, அவனைச் சூழ்வாராயினர்.

அவர்களைப் போன்றே மணிமேகலையைச் சூழ்ந்தோரும் வருத்தம் அடைந்தவராயிருந்தனர். உதயகுமாரனின் உள்ளத்தைத் தன் வயமாக்கிக் கொண்டு மறைந்துபோக, இந்த தேன்பிலிற்றும் மலர்கள் விளங்கும் கூந்தலாள், இத்தெருவிடத்தே இப்படித் தோன்றித், தன் கையகத்தே பிச்சைப் பாத்திரத்தையும் ஏந்தியது ஆச்சிரியமே!’ என்று அவர்கள் அனைவருமே பெரிதும் மனவருத்தமுற்றனர்.

## பெருந்தகவு உடையது

‘மணமனை மறுகின், மாதவி ஈன்ற
அணிமலர்ப் பூங்கொம்பு, ‘அகமலி உவகையிற்,
பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம்
பிச்சை ஏற்றல் பெருந்தக வுடைத்து’ என

மணங்கொண்ட மனையிடத்துக்காக மாதவியாள் கோவலனோடு வாழ்ந்து பெற்றெடுத்த, அழகிய மலர்களையுடைய பூங்கொம்பு போன்றவளாகிய மணிமேகலை, தன் உள்ளத்தே பெருகும் மகிழ்ச்சியினைக் கொண்டவளாகப், ‘பத்தினிப் பெண்கள் பண்புடனே இடுகின்ற பிச்சையினை முதற்கண் அவ்விடத்தே ஏற்றல் பெரிதும் பெருமையுடையதாகும்’ என்றனள்.

## இம்மனை புகுவாய்!

‘குளனணி தாமரைக் கொழுமலர் நாப்பன்
ஒரு தனி ஓங்கிய திருமலர் போன்று,
வான்தரு கற்பின் மனையுறை மகளிரில்
தான்தனி யோங்கிய தகைமையள் அன்றோற
ஆதிரை நல்லாள்! அவள்மனை யிம்மனை,
நீபுகல் வேண்டும், நேரிழை!’ என்றனள்

அதனைக் கேட்டதும், அங்கே நின்றிருந்த காயசண்டிகை, ‘குளத்திற்கு அழகுடன் திகழ்கின்ற தாமரையின் கொழுமையான மலர்கள் பலவற்றிற்கும் நடுவிலே, ஒப்பற்ற தனிச்சிறப்பு உடையதாக உயரமுடன் விளங்கும் ஓர் அழகிய மலரினைப் போன்று, மழைவளம் தரும் கற்புச் செல்வியரான இல்லுறை மகளிருள், தான் தனித்த புகழுடைய தன்மையள் ஆதிரையாள் அல்லவோ! அவள் இரக்கும் மனை இதுவேயாகும். நேரிழையே நீ இதன்கண் புகுவாய்’’ என்றனள்.

## காயசண்டிகை

வடதிசை விஞ்சை மாநகர்த் தொன்றித்
தென்திசைப் பொதியிலோர் சிற்றியாற்று அடைகரை,
மாதவன் தன்னால் வல்வினை உருப்பச்,
சாபம் பட்டுத் தனித்துயர் உறூஉம்
வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதரும்
காயசண் டிகையெனும் காரிகை தானென்

வடதிசை வித்தியாதரர்களின் பெருநகரமாகிய காஞ்சனபுரத்திலே பிறந்து, தென்திசைப் பொதியமலையினிடத்தே, ஒரு சிற்றாற்றின் அடைகரையிலே, பெருந்தவமுனிவன் ஒருவனால், தன் வலிய பழவினையானது வந்து தன் பயனை உறுவிக்கச் சாபம் பட்டுப் பெருந்துயரம் அடைந்தவள், தணிதல் இல்லாத வெம்மையான பசியோடு புகாரில் திரிந்து கொண்டிருந்து காயசண்டிகை என்னும் அழகிய பெண்ணாள். அவளே, அங்ஙனம் சொல்லியவள்.

## பயிற்சி வினாக்கள்

**குறுவினா:**

1) மணிமேகலையின் பழம் பிறப்பு யாது?
2) தீவதிலகை யார்? என்பதனைக் கூறுக?
3) பசிப்பிணி என்னும் பாவி என்னென்ன செய்யும்?
4) மணிமேகலை கூறும் அறத்தின் பயன் யாது?
5) ‘ஆமகன்’ எனத்தன்னை இகழ்ந்தது கேட்ட ஆபுத்திரன் கூறியது யாது?

**நெடுவினா:**

1) அமுதசுரபியின் வரலாற்றினை விளக்குக?
2) ஆபுத்திரன் வரலாற்றினை அறவணன் வாயிலாகக் கூறுக?
3) அமுதசுரபி, ஆபுத்திரனுக்குக் கிடைத்த விதம் பற்றி எழுதுக?
4) ஆவின் மறுபிறப்பினை விளக்கி வரைக?
5) மணிமேகலை, பாத்திரம் பெற்று பிச்சை ஏற்ற விதத்தினை விவரிக்க?

# சீவகசிந்தாமணி

சீவகசிந்தாமணி தமிழ்மொழியில் சிறந்து விளங்கும் பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று, சீவகன் என்னும் அரசன் பிறந்தது முதல் வீடு பெற்றது இறுதியாக உள்ள வரலாற்றைக் கூறுவது. சீவகன் காப்பியத் தலைவன். இவன் பிறக்கும் போது ஜீவ என்ற ஒரு தெய்வம் வாழ்த்தினமையால்

சீவித்தலை உடையவன் எனப் பொருள் படுவது. சிந்தாமணி என்பது ஒரு தெய்வமணி. இந்திரனிடத்து உள்ளது. அனுபவித்தற்கு வேண்டும் பொருள்களை வேண்டியவர் வேண்டியவாறே அளிக்கவல்லது. இது உவமையாகு பெயராய் புலவர் சிந்தித்தனவெல்லாம் தரவல்லதாகிய இந்நூலுக்கு ஆயிற்று. இந்நூலின் ஆசிரியர் திருத்தக்க தேவர். இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 3147 விருத்தப்பாக்களால் ஆகிய பதின்மூன்று இலம்பகங்களை யுடையது. பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களோடு கூடியது. இதில் நும் பாடப்பகுதியாக குணமாலையார் இலம்பகம் கொடுக்கப்பட்டுள்ளது.

## குணமாலையார் இலம்பகம்

### குணமாலையும் சுரமஞ்சரியும் பொழிலில் இருத்தல்

**காவிற் கண்டத் திரைவளைத் தாயிடை**
**மேவி விண்ணவர் மங்கையர் போன்றுதம்**
**பூவை யும்கிளி யும்மிழற் றப்புகுந்து**
**ஆவி யம்துகி லார்அமர்ந் தார்களே**

பல்வேறு சிறப்புகளையுடைய அப்பொழிலில் பலநிறமுடைய திரைகளை அமைத்து வளைத்து, அதனுள்ளே தேவமகளிர் போல அழகுமிக்க பாலாவி போன்ற ஆடை அணிந்த குணமாலையும், சுரமஞ்சரியும் தாம் வளர்க்கும் நாகணவாய்ப்புள்ளும் கிளியும் போல மழலை மொழியில் பேசப்புகுந்து விருப்பத்துடன் அமர்ந்திருந்தனர்.

### சுரமஞ்சரி குணமாலையை எள்ளி நகையாடுதல்

**பௌவ நீர்ப்பவ ளக்கொடி போல்பவள்**
**மௌவ லங்குழ லாள்சுர மஞ்சரி**
**கொவ்வை யங்கனி வாய்க்குண மாலையோடு**
**எவ்வந் தீர்ந்திருந் தாள்இது கூறினாள்.**

**தூமம் சூடிய தூத்துகில் ஏந்து அல்குல்**
**தாமம் சூடியவேல்தடங் கண்ணினாள்**
**நாமம் சூடிய நன்னுதல் நீட்டினாள்**
**காமம் சூடிய கண்ணொளிர் சுண்ணமே.**

**சுண்ணம் என்பதோர் பேர்கொடு சோர்குழல்**
**வண்ண மாலை நுசுப்பு வருத்துவான்**
**எண்ணி வந்தன கூறியவை யோஎன**
**நண்ணி மாலையை நக்கனள் என்பவே.**

கடல் நீரிலே தோன்றிய பவளக்கொடி போன்றவளாகிய முல்லைமலர் அணிந்த கூந்தலையுடைய சுரமஞ்சரி, கொவ்வைக் கனிபோன்ற வாயினையுடைய குணமாலையிடம் வழிவந்த வருத்தம் தீர்ந்து இதனைக் கூறினாள்.

அப்பொழுது அகிற்புகை தங்கிய தூய்மையான ஆடையணிந்த அல்குலையும் மாலையணிந்த வேல் போன்று பெரிய கண்களையும் உடைய குணமாலையின் பெயரைக் கொண்ட அழகிய நெற்றியையுடைய ‘மாலை’ என்னும் தோழி விருப்பம் மிகும், கண்ணுக்கு ஒளிதரும் கண்ணப் பொடியை நீட்டினாள்.

அதனைக் கண்ட சுரமஞ்சரி,’’சரிந்த கூந்தலையுடைய அழகிய குணமாலையே! மெல்லிடையை வருத்து வந்தது போன்றதாகிய என் சுண்ணப்பொடியைப் போன்றதாகுமா உன் சுண்ணப்பொடி? கூறுவாய்’’ என்று குணமாலையை நெருக்கிக் கேலி பேசினாள்.

### சுண்ணத்தின் காரணமாக இருவரும் பகைத்துக் கொள்ளுதல்

**பைம்பொன் நீள்உலகு அன்றிஇப் பார்மிசை**
**இம்பர் என்சுண்ணம் ஏய்ப்ப உளவெனில்**
**செம்பொன் பாவைஅன் னாய்செப்பு நீஎனக்**
**கொம்ப னாளும் கொதித்தஇது கூறினாள்.**

சுரமஞ்சரி எள்ளி நகையாடிக் கூறியதைக் கேட்ட குணமாலை, ‘‘செம்பொன் பாவை போன்ற சுரமஞ்சரியே! பசும்பொன்னுலகாகிய தேவருலகில் அல்லாமல் இம்மண்ணுலகில் என் சுண்ணப் பொடியைப் போன்றது இருக்கிறது என்றால் கூறு’’ என்று கூற பூங்கொம்பு போன்ற சுரமஞ்சரி சினந்து கூறலானாள்.

**‘சுண்ணம் தோற்றனம் தீம்புனல் ஆடலம்**

**எண்ணில் கோடிபொன் ஈதும்வென் றாற்கு’ என**
**வண்ண வார்குழல் ஏழையர் தம்முளே**
**கண்ணற் றார்கமழ் சுண்ணத்தின் என்பவே**

“இச்சுண்ணப் பொடியால் நாம் தோற்றோம் என்றால் நீராட மாட்டோம், மேலும் ஈடாக அருகப்பிரானுக்குக் கோடிப் பொன் கொடுக்கக்கடவோம்.” என்று கூறினாள். அழகிய நீண்ட கூந்தலையுடைய, பேதைப் பெண்கள் இருவரும் இச்சுண்ணப் பொடியின் காரணமாகத் தம்முள் பகைத்துக் கொண்டனர்.

**இட்டிடை யார்இரு மங்கையர் ஏந்துபொன்**
**தட்டிடை அம்துகில் மூடி அதன்பினர்**
**நெட்டிடை நீந்துபு சென்றனர் தாமரை**
**மொட்டன மென்முலை மொய்குழ லாரே.**

சிறிய இடையுடைய மகளிராகிய கனகபதாகை, மாலை என்னும் இருமங்கையரும் சுண்ணப் பொடியை இரு தட்டுகளில் வைத்து அதனை அழகிய துணியால் மூடினர். அதன் பின்னர் நெடுந்தொலைவில் உள்ள மக்கள் கூட்டத்தை நோக்கி, தாமரை மொட்டு போன்ற மென்முலையும் மலர்க்கூந்தலும் உடைய அம்மங்கையர் இருவரும் சென்றனர்.

**சீர்தங்கு செம்பொன் கொடிமல்லிகை மாலை சேர்ந்து**
**வார்தங்கு பைம்பொன் கழல் மைந்தர் கைக்காட்ட மைந்தர்**
**ஏர்தங்கு சுண்ணம் இவற்றின் நலம் வேண்டின் வெம்போர்க்**
**கார்தங்கு வண்கைக் கழற்சீவகற் காண்மின் என்றார்.**

சிறப்புப் பொருந்திய செம்பொன் கொடி போன்ற கனகபதாகையும், மல்லிகை சூடிய மாலை என்னும் தோழியும் கூடி, பொற்கழல் அணிந்த வீரமிக்க இளைஞர்களிடம் அச்சுண்ணப்பொடிகளைக் காட்டினார். அவற்றைக் கண்ட அவ்விளைஞர்கள் “இவையிரண்டுமே சிறந்த சுண்ணப்பொடிகள் என்றாலும் எது சிறந்தது என அறிய விரும்பின், பேராற்றல் மிக்கவனும், கார்மேகம் போன்று கைம்மாறு கருதாது வழங்கும் கைகளையுடையவனும், பொற்கழல் அணிந்தவனும் ஆகிய சீவகனிடம் இவற்றைக் காட்டுவீராக” என்றனர்.

## சீவகனிடத்தில் இருவகைச் சுண்ணப்பொடிகளையும் காட்ட, அவன், அவற்றில் எது சிறந்தது என நிரூபித்துக் காட்டிக் கூறுதல்

**வாள்மின்னு வண்கை வடிநூற்கடல் கேள்வி மைந்தர்**

**தாள்மின்னு வீங்கு கழலான் தனைச்சூழ மற்றப்**

**பூண்மின்னு மார்பின் பொலிந்தாங் கிரந்தான் விசும்பில்**

**கோண்மின்னு மீன்சூழ் குளிர்மாமதித் தோற்றம் ஒத்தே.**

வாள் மின்னும் வளமான கையும், தெளிந்த நூலறிவும் உடைய தோழர்களும் தம்பியரும், ஒளி விளங்கக் கட்டிய பொற்கழல் அணிந்த சீவகனைச் சூழ்ந்திருக்க, அணிகலன்கள் மின்னும் மார்பையுடைய அவன், விண்ணில் கோள்களும் நட்சத்திரங்களும் சூழத்தோன்றும் தண்ணிய முழு நிலவைப் போன்று வீற்றிருந்தான்.

**"சுண்ணம் நல்லன சூழ்ந்தறிந்து எங்களுக்கு**

**அண்ணல் கூறுஅடி யேம்குறை" என்றாலும்**

**கண்ணிற் கண்டு "இவை நல்ல கருங்குழல்**

**வண்ண மாலையீ னீர்" எனக் கூறினான்.**

அவர்கள், "அண்ணலே! இவ்விரு சுண்ணப்பொடிகளில் எது நல்லது என்று தாங்கள் கூறவேண்டுமென்பதே அடியேங்கள் விண்ணப்பமாகும்" என்று கூறினர். அவனும் அவ்விரண்டையும் பார்த்து "கரிய கூந்தலையும் அழகிய மாலையும் உடையீர்! இவை இரண்டுமே நல்லன" என்று கூறினான். அதனைக் கேட்ட அம்மங்கையர்கள், "இப்பெரு நகரில் உள்ள மக்கள் எல்லாருமே தொட்டும், மோந்தும், கண்ணால் கண்டும் ஆராய்ந்து, "இவை இரண்டுமே பொலிவுபெற்ற சுண்ணங்கள்" எனக் கூறினார். ஆனால், "நம்பியே! நீ கற்றதும் அவர்கள் கற்ற அளவு தானோ" என்றார்.

**ஐய னேயறி யும்மென வந்தனம்**

**பொய்ய தன்றிப் புலமை நுணுக்கிநீ**

**நொய்தில் தேர்ந்துரை நூற்கடல் என்றுதம்**

**கையி னால் தொழு தார்கமழ் கோதையார்.**

"இவ்விரு சுண்ணப் பொடிகளின் வேறுபாட்டை ஐயனே அறிந்து கூறத்தக்கவன் என்று பிறர் சொல்லக்கேட்டுத் தங்கள் பால் வந்தோம். எனவே அறிவுக்கடலே! அவர்கள் கூற்றுப் பொய்யாகாதவாறு நின் அறிவால் நுணுகி ஆராய்ந்து விரைந்து தெளிந்து கூறுக என மணம் கமழும் மாலை யணிந்த அவ்விரு பெண்களும் கை கூப்பி வணங்கி வேண்டினர்.

**நல்ல சுண்ணம் இவையிவற் றில் சிறிது**
**அல்ல சுண்ணம் அதற்கென்னை என்றிரேல்**
**புல்லு கோடைய பொற்புடைப் பூஞ்சுண்ணம்**
**அல்ல சீதம்செய் காலத்தின் ஆயவே**

அவர்கள் வேண்டுகோளை ஏற்ற சீவகன் இது நல்ல சுண்ணம் மற்றொன்று இதனைவிடச் சற்றுத் தாழ்ந்த சுண்ணம் என நான் கூறுவதற்குக் காரணம் கேட்பின் ஒன்று நன்மை பொருந்திய அழகிய கோடையில் இடித்துத் தயாரிக்கப்பட்டது. மற்றொன்று குளிர்ச்சி பொருந்திய மாரிக்காலத்தில் தயாரிக்கப்பட்டது என்றான்.

சீவகனுடைய உரையைக் கேட்டு வருந்திய வீரவேல் போன்ற நெடுங்கண்களையுடைய கனகபதாகை "ஒருவர் மேல் அன்பு கொண்டால் அவர் செய்த தீமையும் நன்மையாகத் தோன்றும் அவ்வாறே முற்ற வெறுப்புத் தோன்றும் போது அவர் செய்யும் நன்மைகளும் தீயவையாகவே தோன்றும் இது உலக இயல்பு அல்லவா என்றாலும் நன்றாக ஆராய்ந்து பாரும்" என்று கூறினாள்

**"உள்ளங் கொள்ள உணர்த்திய பின்னலால்**
**வள்ளல் நீங்கப் பெறாய்வளைத் தேன் எனக்**
**கள்செய் கோதை யினாய்கரி போக்கினால்**
**தெள்ளி நெஞ்சினால் தெளி" எனச் செப்பினான்.**

மேலும் அந்நங்கை வள்ளலே நீ அறிய இக்குறையை என் நெஞ்சம் கொள்ளுமாறு கூறனால் அன்றித் தங்களை இங்கிருந்து போக விடாமல் தடுப்பேன் என்றாள். அதற்குச் சீவகன் தேன் சிந்தும் மலர் மாலை அணிந்தவளே இதற்குச் சாட்சி விரும்பினால் நீ உள்ளத்தால் உணர்ந்து அறிந்து கொள்க என்று கூறினான்.

இமைக்கும் கண்களையுடைய மண்ணுலக மாந்தர்களும் கண்ணிமையா விண்ணுலகத் தேவர்களும் கூட அண்ணலே உன் சொல்லைக் கடந்து அறிந்தவர் யாருமில்லை நீ சொன்னதையே தான் சொல்லுவர் மாறுபடார். ஆகையால் தம்மினத்தில் ஒன்றையொன்று அழைக்கும் சொல்லை அறிந்து அதில் பயின்ற பறவைகள் முதலானவற்றில் எவையேனும் தெளிந்து

சுரமஞ்சரியின் சுண்ணத்தை விலக்கினால் நான் அதனை ஏற்றுக்கொள்வேன் என்றாள் கனகபதாகை.

கனகபதாகையின் கருத்தை அறிந்த சீவகன் திருமகள் போன்றவளே இம்மலர்ச் சோலையில் வாழ்பவரில் நால்வர் பறவை இனத்தவர் உள்ளனர். அவர்கள் சான்றாக வருவார்கள் சென்று கேள் என்றான். அதனைக் கேட்ட முத்துவடம் புரளும் மென்மையான முலைகளையுடைய பூங்கொம்பு போன்ற கனகபதாகை கைகூப்பி அவனை வணங்கி எம்பெருமானே தங்கள் கட்டளைப்படியே நடப்பேன் என்றாள்.

**மங்கை நல்லவர் கண்ணும் மனமும் போன்று**
**எங்கும் ஓடி இடறும் சுரும்புகாள்**
**வண்டு காள் மகிழ் தேனினங் காள் மது**
**உண்டு தேக்கிடும் ஒண்மிஞிறு ஈட்டங்காள்**

**சோலை மஞ்ஞை சுரமைதன் சுண்ணமும்**
**மாலை என்றும் மடமயில் சுண்ணமும்**
**சால நல்லன தம்முளும் மிக்கன**
**கோல மாகக்கொண்டு உண்மின் எனச் சொன்னான்**

உடனே சீவகன் மங்கைப் பருவத்து மகளிரது மனமும் கண்ணும் போல எங்கும் நிலையில்லாமல் ஆடித்திரியும் சுரும்புகளே, வண்டினங்களே, தேன் உண்டு திளைத்து மகிழும் தேனினங்காள் மது உண்டு திளைத்து விளங்கும் ஒளி பொருந்திய மிஞிற்றின் கூட்டங்களே

சோலைமயில் எனத்திகழும் சுரமஞ்சரியின் சுண்ணமும் குணமாலை என்னும் இளமயில் போன்றவளின் சுண்ணமும் மிக நல்லனவே என்றாலும் அவைதம்முள் மிகச்சிறந்தது எது என்று அறிந்து கொண்டு அதனை உண்ணுங்கள் எனக் கூறினான்.

இவ்வாறு கூறிய அழகிய நெடிய வில்லேந்திய வள்ளல் சீவகன் இருவர் சுண்ணப் பொடிகளையும் தம் இருகைகளில் வாங்கி விண்ணிலே அவற்றை தூவி விட்டான். மங்கை சுரமஞ்சரியின் சுண்ணம் நிலத்திலே வந்து வீழ்ந்தன. குணமாலையின் சுண்ணத்தையே வண்டு ஞிமிறும் தேனும் சுரும்பும் விரும்பி உண்டன.

தத்தும் அலைகடலில் தோன்றிய பவளத்திடை முத்துக்களைக் கொண்டு வைத்தது போலும் ஒளிமிகு பற்கள் தெரிய புன்முறுவல் பூக்கும் சிவந்தவாயினையுடைய பெண்களே நான் முன்பு கூறியது உண்மை என இப்போது தெரிந்ததா எனத் தோழிகள் இருவரையும் கேட்டு உங்கள் தலைவியர்க்கும் நான் சுண்ணங்களை ஆராய்ந்த விதத்தை அவர்கள் மனங்கொள்ளும்படி சொல்லுங்கள் என்று கூறினான்.

**சீவகனுடைய கருத்தைக் கனக பதாகை**
**ஏற்றுக் கொள்ளல்**

**நீலம் நன்கு தெளித்து நிறங் கொளீஇக்**
**கோல மாக எழுதிய போற்குலாய்**
**ஞாலம் விற்கும் புருவத்து நங்கைகண்**
**போலும் வேலவனை புகழ்ந்தேன் என்றாள்.**

நீலமணியை நன்றாகக் கரைத்து மேலும் அதற்கு நிறம் பெய்து அழகுற எழுதிவைத்தது போல விளங்கும் வளைந்த உலகை விலை கூறும் புருவத்தையுடைய என் தலைவியின் கண்போன்ற கூர்மையான வேலுடைய பெருமானே தாங்கள் தேற்றிய முறையை நான் ஏற்றுப்புகழ்ந்தேன் என்றாள்.

**இதனைக் கேள்வியுற்ற சுரமஞ்சரி மற்ற ஆடவரைக் காணவும் மறுத்து**
**சீவகனையே எண்ணி நோன்பிருந்தல்**

**சோலையஞ் சுரும்பில் சுண்ணம் தேற்றிய தன்னை**
**வேலையம் படுத்த கண்ணார் தொழுதனர் விரைந்து போகி**
**மாலைக்கு வென்றி கூற மழையிடிப் புண்டோர் நாகம்**
**ஆலையத்து அழுங்கி யாங்கு மஞ்சரி அவலம் உற்றாள்**

சோலையில் வாழும் வண்டுகளால் சுண்ணப்பொடியின் மேன்மையைத் தெளிவித்த சீவகனை வேல் தானோ என ஐயத்தை உண்டாக்கும் கண்களையுடைய தோழியர்கள் தொழுது விரைந்து சென்று குணமாலைக்குத் தான் வெற்றி என்று சுரமஞ்சரியிடம் கூறினர். அவ்வுரை கேட்ட சுரமஞ்சரி மேகத்தின் இடியோசை கேட்டுக் கலங்கிய ஒரு நாகம் தான் வாழும் புற்றிலே கிடந்து வருந்தியதைப் போலப் பெரிதும் வருத்தம் உற்றாள்.

**மாற்றம் ஒன்று உரை யாள் “மழை வள்ளல் என்**
**ஏற்ற கண்ணத்தை ஏற்பில என்றசொல்**
**தோற்று வந்து என் சிலம்படி கைதொழ**

**நோற்பல் நோற்றனை நீ" என ஏகினாள்.**

வீழ்ந்திரந் திட்ட குணமாலைக்குப் பதில் ஏதும் கூறாத சுரமஞ்சரி மேகம் போலக் கைம்மாறு கருதாது வழங்கும் வள்ளலாகிய சீவகன் என் சிறந்த சுண்ணத்தை நின்மேல் உள்ள விருப்பத்தினால் தகுதியற்றன என்று கூறிவிட்டான். இனி அந்தச் சொல் தோற்குவாறு வந்து என் சிலம்பணிந்த பாதங்களை அவன் கையால் தொழுவதற்கு ஏற்ப நான் நோன்பிருப்பேன். நீ முன்பே இத்தகைய நோன்பினை நோற்றனை போலும் என்ற குறிப்புடன் அவ்விடம் விட்டு அகன்றாள்.

**சுரமஞ்சரி சீவகன் நினைவிலேயே**

**கன்னி மாடத்தில் ஒடுங்கியிருத்தல்**

**பள்ளிகொள் களிறுபோலப் பரிவுவிட்டு உயிர்த்தென் பாவை**
**உள்ளிய பொருள்மற்று அ.்.தேல் ஓபெரிது உவப்பக் கேட்டேன்**
**வள்ளிதழ்க் கோதை மற்றும் நகரொடும் கடியு மேனும்**
**வெள்ளநீள் நிதியின் இன்னே வேண்டிய விளைப்பல் என்றான்.**

உறக்கம் கொள்ளும் யானை போல குபேரதத்தன் வருத்தம் தோன்றப் பெருமூச்சு விட்டு என் மகள் நினைத்த பொருள் வேறெதுவும் இன்றி இது தான் என்றால் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைவேன். வளமிக்க மலர்மாலை சூடிய என் மகள் இத்தெருவில் மட்டு மின்றி இந்நகர முழுவதும் உள்ள ஆண்களை நீக்க விரும்பினால் வெள்ளம் போலப் பெருகியுள்ள என் செல்வத்தினால் அவள் விரும்பியதை இப்போதே நிறைவேற்றி வைப்பேன் என்றான்.

**குணமாலை வருந்தியிருத்தல்**

**இன்பக் காரண மாம்விளை யாட்டினுள்**
**துன்பக் காரண மாய்த்துறப் பித்திடும்**
**என்ப தேறினைந் தீர்மலர் மாலைதன்**
**அன்பினால் அவ லித்து அழு திட்டாள்**

இன்பம் விளையக் காரணமாக இருக்கும் விளையாட்டே துன்பம் விளையக்காரணமாய் அமைந்து இன்பத்தைப் போக்கி விடுகிறதே என்பதை எண்ணி குளிர்ந்த மலர் மாலை போன்ற குணமாலை தன் அன்புற நெஞ்சத்தால் அழுது புலம்பினாள்.

**குணமாலை அருக தேவனை வணங்குதல்**

**தண்ணந் தீம்பனல் ஆடிய தண்மலர்**
**வண்ண வார்தளிர்ப் பிண்டியி னான் அடிக்கு**
**எண்ணி ஆயிரம் ஏந்துபொன் தாமரை**
**வண்ண மாமலர் ஏற்றி வணங்கினாள்**

தங்கள் நட்பினைப் பிரித்த தீவினை நீங்கும் வழியை எண்ணியும் குளிர்ந்த இனிய நீர் விளையாட்டை விரும்பியும் குளிர்ந்த மணமலரும் நீண்ட இளம்தளிரும் உடைய அசோகமர நீழலில் அமர்ந்த அருகப்பெருமான் திருவடிகளுக்கென்று ஆயிரம் பொற்றாமரை மலர்களையும் பிற வண்ணமலர்களையும் வைத்துக் குணமாலை வணங்கினாள்.

**ஒழுக்க நெறிகெடாத இன்பநீர்**
**விடையாட்டைக் காணச் சீவகன் செல்லுதல்**

**விடாக்களி வண்டுண விரிந்த கோதையர்**
**படாக்களி யிளமுலை பாய விண்டதார்க்**
**கடாக்களிற்று ஏறுழ்வலிக் காளை சீவகன்**
**அடாக்களி அவர்தொழில் காண ஏகினான்.**

நீங்காத வண்டுகள் தேன் பருக விரிந்த மாலையணிந்த மங்கையின் சாயாத களிப்பூட்டும் இளமுலைகள் மோதுவதால் மலர்ந்த மலர்மாலை அணிந்த மதயானை போன்ற பெருவலிபடைத்த காளையாகிய சீவகன் ஒழுக்க நெறிகெடாத அவ்வின்ப நீர்விளையாட்டைக் காணச் சென்றான்

**இழிந்த நாயொன்றைச் சீவகன் தேவனாக்குதல்**

**இவை இன் னனவும் பிறவும் எரிபொன் ஆரமார்பன்**
**கவிஞர் மதியின் அகன்று காட்சிக்கு இனிய விழவின்**
**சுவையின் மிகுதியுடைய சோர்வில் பொருளொன் றதுதான்**
**நவையின் அகல நோக்கி நயந்த வண்ணம் மொழிவாம்**

இத்தனமையான காட்சிகளையும் இவை போன்ற பிற காட்சிகளையும் உடைய கவிஞரின் அறிவிலும் கற்பனையினும் மேம்பட்டுக் காண்பதற்கு இனிய நீர் விழாவிலே இனிதுயர்ந்த அழிவற்ற பொருளால் (பஞ்ச நமஸ்கார மந்திரத்தால்) ஒருயிரை (நாயினை)க் குற்றம் நீங்குமாறு பார்க்க அவ்வுயிர் அப்பொருளை விரும்பி அடைந்த விதத்தை இனிக் கூறுவோம்.

**அந்தணர்க்கு ஆக்கிய சோற்றுக் குவாலினை**
**வந்தொரு நாய்கது விற்றது கண்டவன்**

**உயர்த்தினிப் போதி யெனக் கனன்று ஓடினர்**

**சிந்தையி னின்று ஒளிர் தீயன நீரார்**

அந்தணர்க்குச் சமைத்த சோற்றுக் குவியலை ஒரு நாய் வந்து கௌவியது. அதனைக் கண்டு அந்தணர்கள் இனி நீ பிழைத்துப் போவாய் (தப்பிப்பழைக்க முடியாது என்ற உண்மைப் பொருளில்) என்று கூறித் தீயைப் போன்ற கோபமுடையவராய் அந்நாயை அடித்துக் கொல்ல ஓடி வந்தனர். அவர்கள் கல்லையும் உறுதியான தடியையும் கையிலே கொண்டவராய்க் காற்றினும் விரைந்து ஓடி அதனை வளைத்துக் கொண்டு கொல்லுந்தன்மையுடைய இயமனுக்கு மேலாக அந்நாயை அடித்துக் கொல்லத் தொடங்கினர். அந்நாயும் அக் கொடியோர் கையில் அகப்பட்டுக் கொண்டது.

**வேள்வியின் உண்டி விலக்கிய நீவிர்கள்**

**ஆள் எனக்கு என்று அது அறைவதும் ஓரார்**

**தாளிறு மூர்க்கர் அதுக்கலின் தண்டுறை**

**நீள்கயம் பாய்ந்து அது நீந்துதல் ஓடும்.**

வேள்வியில் எனக்கு உணவின்றித் தடுக்கின்ற நீங்கள் மறுபிறவியில் எனக்கு அடிமையாவீர்கள் என்று கூறுவது போல் அந்நாய் கதறுவதையும் உணரமாட்டாதவர்களாய் அக்கொடிய அந்தணர்கள் அதன் காலொடிய அடிக்கவும், அந்த அடியினைப் பொறுக்கமாட்டாது அந்நாய் அருகிலிருந்த குளத்தில் பாய்ந்து நீந்திச் செல்லலாயிற்று.

**நாயுடம்பு இட்டு இவண் நந்திய பேரொளிக்**

**காய்கதிர் மண்டலம் போன்றொளி காலவதோர்**

**சேயுடம்பு எய்துவை செல்கதி மந்திரம்**

**நீயுடம் பட்டு நினைமதி என்றான்.**

அந்நாயிடத்து இரக்கம் கொண்ட சீவகன் அதனை அணுகி நீ உன் நாயுடலை இங்கு விட்டு மிக்க பேரொளியுடைய சந்திர மண்டலம் போல ஒளி வீசும் ஒரு பெரிய உடம்பை அடையும்பேறு அடுத்த பிறவியில் பெறுவாய். எனவே நான் கூறும் செல்கதி மந்திரத்தை ஒருமனப்பட்டு நினைப்பாய் என்று கூறினான்.

**என்றலும் தன்செவி ஓர்த்திரு கண்களும்**

**சென்றுகு நீரொடு செம்மலை நோக்கி**

**ஒன்றுபு வால்குழைத்து உள்ளுவப் பெய்தலும்**

**குன்றனை யான்பதம் கூற வலித்தான்.**

சீவகன் இவ்வாறு கூறியவுடன் நாய் தன் காதினால் கூர்ந்து கேட்டு இருகண்களிலும் நிறைந்து வழிகின்ற நீருடன் சீவகனை நோக்கி மனம் ஒன்றுபட்டு வாலைக்குழைத்து மகிழ்ந்து நிற்கின்ற அளவில் குணக்குன்றாகிய நம்பி சீவகன் ஐம்பதமாகிய அரியமந்திரத்தைச் சொல்லத் துணிந்தான்.

**உறுதிமுன் செய்த தின்றி ஒழுகினேன் என்று நெஞ்சின்**

**மறுகல் நீ பற்றொடு ஆர்வம் விட்டிரு மரண அச்சத்து**

**இறுகல் நீ அறைவன் சொன்ன ஐம்பத அமிர்தம் உண்டால்**

**பெறுதிநற் கதியை என்று பெருநவை அகற்றி னானே**

சீவகன் முற்பிறப்புக்களில் நல்வினை ஒன்றும் செய்யவில்லையே என்று நினைத்து நீ மனம் வருந்த வேண்டா. ஆசையையும் பாசத்தையும் விடு விடு மரணபயத்தில் ஆழ்ந்து துன்புறுதல் வேண்டா நீ இவ்வாறிருந்து அருகப்பெருமான் அருளிய ஐம்பதமாகிய அமுதத்தை உட்கொண்டால் நல்லதியை அடைவாய் என்று கூறி அதன் பெருந்துயரைப் போக்கினான்.

**மனத்திடைச் செறும்பு நீக்கி மறவலை யாகி ஐந்தும்**

**நினைந்திடு நின்கண் நின்ற நீல்நிற வினைவின் நீங்கி**

**எனைப்பகல் தோறும் விள்ளா் இன்பமே பயக்கும் என்றாற்கு**

**அனைப்பதம் அமிர்தம் நெஞ்சின் அயின்று விட்டு அகன்றது அன்றே**

உள்ளத்தில் உள்ள காமம் வெகுளி மயக்கம் முதலான குற்றங்களை நீக்கி மறவாமல் ஐம்பத மந்திரத்தை நினைப்பாயாகில் அது உன்னிடமுள்ள தீவினையிலிருந்து உன்னை விடுபடச் செய்யும். எப்போதும் நீங்காத பேரின்பத்தைத் தரும் என்று உபதேசித்த சீவகன் சொல்லை ஏற்று ஐம்பதமாகிய அமிழ்தத்தை மனத்தால் உட்கொண்டு நாய் தன் பொய்யுடம்மை விட்டு நீக்கம் பெற்றது.

**பாடு பாணி முகமெனும் பான்மையின்**

**ஓடி யாங்குழா் உயர்வரை உச்சிமேல்**

**கூடிக் கோலங் குயிற்றிப் படங்கள் ஐந்து**

**ஆடு கூத்தரின் ஐயெனத் தோன்றினான்**

அருகன் ஆகமத்தில் கூறப்பட்ட பாணிமுகம் என்னும் தன்மையில் (சுட்டுவிரலும், பெருவிரலும் நீங்கிடை இடமான ‘ட’ போன்ற வடிவில்

முதலில் நேராகவும் பின் வளைந்தும்) நாயுடம்பை நீத்து அதன் உயிர் ஓடிச் சென்றது. ஊடிய பின் அங்கு உயர்ந்த வெள்ளிமலையின் உச்சியில் தேவனாகி பொருந்திய அணிகலன்களை அணிந்து திரை விலக்கி வந்து ஆடும் கூத்தரைப் போல யாவரும் வியக்கும் வண்ணம் தோன்றினான்.

**சுதஞ்சணன் சீவகனை வணங்கித்**

**தான் யார் எனக்கூறல்**

**ஓசனை நறும்புகை கமழ ஒண்ணிலா**
**வீசிய கதிர்பரந்து இமைக்கு மேனியன்**
**மாசறு மணிமுடி மிடைந்து மாலையன்**
**பூசுறு பகுதியில் பொலிந்து தோன்றினான்**

ஒரு யோசனை தூரத்திற்கு வாசநறும் புகையின் மணம் கமழ வெண்ணிலவைப் போலச் சுடர் வீசித்திகழும் அழகு மேனியுடனும் குற்றமற்ற மணிமுடியில் புனைந்த மாலையுடனும் விளக்கமுறத்தோன்றும் செஞ்ஞாயிறு போலச் சுதஞ்சணன் சீவகன் முன்வந்து நின்றான்.

**குன்றெனத் திரண்ட தோளான் குறுகலும் குமரன் நோக்கி**
**நின்றவன் நெடுங்கண் ஒன்றும் இமைப்பில் நிழலில் யாக்கை**
**அன்றியுங் கண்ணி வாடாது அமரனே என்று தேறி**
**நன்றவன் வாவு கேட்பான் நம்பி நீ யாரை? என்றான்**

மலைபோலத் திரண்ட தோளுடைய சுதஞ்சணன் அங்ஙனம் நெருங்கி வந்து நிற்கவும் சீவகன் அவனைப் பார்த்தான். வந்து நின்றவனுடைய நீண்ட பெருங்கண்கள் இமைக்காமலும் உடல் நிழலில் படியாமலும் அவனணிந்த மாலை வாடாதிருத்தலையும் கண்டு வந்த அவன் தேவமகனே என்று தெளிந்து அவன் வரவை நன்கு அறியவேண்டி நம்பியே நீ யார் என்று கேட்டான்.

**குங்குமம் குவட்டின் வீங்கிக் கோலம் வீற்றிருந்த தோளாய்**
**இங்கு நின் னருளில் போகி இயக்கருள் இறைவ னாகிச்**
**சங்கவெண் மலையின் மற்றுச் சந்திரோ தயத்தின் உச்சி**
**அங்கியான் உறைவால் எந்தை அறிகமற்று என்று சொன்னான்**

குங்கும மலை போலப் பருத்து அழகு குடி கொண்டிருக்கும் தோள்களையுடையவனே இங்கிருந்து நினது அருளால் சென்று இயக்கர்களுக்குத் தலைவனாகி சங்க வெண்மலையின் மேல் உள்

சந்திரோதயம் என்னும் நகரில் வாழ்பவன் நான். என் தந்தை போன்றவனே இதனை அறிக என்று கூறினான் சுதஞ்சணன்.

**வாளோடு வயர் ஈண்டி வாரணத் தொழுவின் முற்றி**

**மீளிமை செய்யின் செய்ய நண்பநின் நினைப்ப தல்லால்**

**நாளொடு பக்க நைந்து வீழினும் வீழ்தல் இல்லாக்**

**கோளுடைக் கிழமை ஒப்பாய் குறைவிலன் பிறவி என்றான்.**

சுதஞ்சணன் கூற்றைக் கேட்டதும் சீவகன் வாளொடு வீரர்கள் சூழ்ந்து யானைக் கூட்டத்துடன் என்னை வளைத்து வன்மை செய்தால் என் இனிய நண்பனே அப்போழுது உன்னை நினைப்பேன். நாட்களும் பக்கங்களும் கெட்டு வீழ்ந்தாலும் தான் அழிந்து வீழாத வானுலவும் கோள்கள் போன்ற தன்மையுடையவனே எனக்கு இப்பொழுது எந்தக் குறையுமில்லை என்று கூறினான்.

**அசனி வேகம் என்னும் பட்டத்து யானை**

**குமணமாலை மேல் பாய அவள் நடுங்கி நிற்றல்**

**கடலெனக் காற்றெனக் கடுங்கண் கூற்றென**

**உடல்சின உருவென ஊழித் தோன்றியது**

**தொடர்பிணி வெளில்முதல் முருக்கித் தோன்றியது**

**அடலருங் கடாக்களிற் றசனி வேகமே**

பின்றலால் கடல் போலவும் விரைந்து செல்வதில் காற்றுப் போலவும் கொடுமை செய்வதில் எமன்போலவும் வருந்தும் கோபத்தில் இடிபோலவும் ஒருசேர அழித்தலில் ஊழித்தீ போலவும் காலைச் சங்கிலியால் பிணித்த கட்டுத்தறியை முறித்துக்கொண்டு கொல்லுதற்கரிதாகிய அசனிவேகம் என்னும் பட்டத்து யானை கிளம்பியது

**“பொருதுஇழி அருவி போன்று பொழிதரு கடாத்த தாகிக்**

**குருதிகொள் மருப்பிற் றாகிக் குஞ்சரம் சிதைந்தது என்னக்**

**கருதிய திசைகள் எல்லாம் கண்மிசைக் கரந்த மாந்தர்**

**பருதியின் முன்னர்த் தோன்றா மறைந்தபன் மீன்கள் ஒத்தார்”.**

கொல்லுதற்கரிய அசனி வேகம் என்னும் அப்பட்டத்து யானை மலையினின்று வழிகின்ற அருவியைப் போலச் சொரியும் மதமுடையதாக செங்குருதி

தோய்ந்த தந்தக் கொம்புகளுடன் தோன்ற அது தன் நிலைகுலைந்துள்ளது என்று அஞ்சி அவ்யானை நோக்கும் திசைகளில் எல்லாம் அதன் பார்வையில் படாமல் மறைந்த மக்கள் காலைக் கதிரவன் உதயமானவுடன் அதன் முன் தோன்றாது மறைந்த பல நட்சத்திரங்களைப் போன்று விளங்கலாயினர்.

**கருந்தடங் கண்ணி தன்மேல் காமுகர் உள்ளம் போல**
**இருங்களிறு உய்த ஓடச் சிவிகைவிட்டு இளையர் ஏக**
**அரும்பெறல் அவட்குத் தோழி ஆடவர் இல்லை யோஎன்று**
**ஒருங்குகை உச்சிக் கூப்புக் களிற்றெதிர் இறைஞ்சி நின்றாள்**

கரிய பெரிய கண்களையுடைய குணமாலையின் மேல் ஓடும் காமுகர் உள்ளம் போல் அம்மதயானை அவளை நோக்கி ஓட, பல்லக்கைச் சுமந்து வந்த பணியாளர் பயந்து அதனை விட்டுவிட்டு ஓடிவிட்டனர். பெறுவதற்கரிய அவளின் தோழியான மாலை என்பவள் ஆண்கள் யாரும் இங்கு இல்லையோ என்று கூவி தலைமேலே கைகளைக் குவித்து பாய்ந்து வரும் யானையின் எதிரில் நின்று வணங்கிநின்றாள். இம்மதயானை என்னைக் கொன்று பின் இவளைக் கொல்ல ஓடும் சமயத்திலாவது ஒருவன் வந்து இவளது இனிய உயிரைக் காக்க வேண்டும் இல்லையெனில் என் கண் மூடியதற்கு பின் நடப்பது நடக்கட்டும் என்று எண்ணிய தோழி வருந்தி நிற்க மான் போன்ற மருண்ட பார்வையும் பூத்துக் குலுங்கும் பூங்கொம்பு போன்ற மேனியும் உடைய குணமாலை துன்பத்தால் மின்னலைப் போலத்துவண்டு நின்றாள்.

**யானையிடமிருந்து குணமாலையைச் சீவகன் காப்பாற்றுதல்**

**மணியிரு தலையும் சேர்த்தி வான்பொனின் இயன்ற நாணால்**
**அணியிருங் குஞ்சி யேறக் கட்டியிட்டு அலங்கல் சூழ்ந்து**
**தணிவரந் தோழர் சூழத் தாழ்குழை திருவில் வீசுப்**
**பணிவருங் குரிசில் செல்வான் பாவையது இடரைக் கண்டான்**

இருமுனைகளிலும் மணியைக் கோத்துக் சிறந்த பொன்னால் செய்யப்பெற்ற கயிற்றினால் அழகிய கரிய தலைமுடியைச் சேர்த்துக் கட்டி மாலையை அதன் மேல் சுற்றி அன்பு குறைந்தறியாத தோழர்கள் சூழ்ந்துவர தொங்கும் காதுக் குழைகள் வானவில்போல ஒளிவீச பிறர் கண்டு பணியச் செல்கின்ற சீவகன் குணமாலைக்குற்ற துன்பத்தைக் கண்டான். பாய்ந்து ஓடிய சீவகன் காதுக் குண்டலத்தைக் கையில் கொண்டு மலையின் மேல் வீழும்

மின்னலைப் போல பெரு வலிபடைத்த யானையின் நெற்றியில் வீச அந்த வேகத்தில் தோடு ஒலியுடன் கீழே வீழ்ந்தது அதனால் முத்து வடமும் மார்பில் அணியும் மலர்மாலையும் நெற்றிமாலையும் தலைமாலையும் பொங்கி நிற்க முறுக்கவிழ்ந்த மலர்க் கண்ணிகள் சிதற மின்னலைப் போல விரைவாக அந்த யானையை அடைந்தான்.

**கூற்றென முழங்கிக் கையால் கோட்டிடைப் புடைப்பக் காய்ந்து**
**காற்றென உரறி நாகம் கடாம்பெய்து கனலிற் சீறி**
**ஆற்றலங் குமரன் தன்மேல் அடுகளிறு ஓட அஞ்சான்**
**கோற்றொடி பாவை தன்னைக் கொண்டுயப் போமின் என்றான்**

கொல்லுகின்ற இயமனைப் போலச் சீவகன் முழக்கம் இட்டுக் கையால் அதன் தந்தங்களிடையே இருந்து கொண்டு தாக்க யானை கடுங்கோபங்கொண்டு புயலெனச் சீறி மதம் பொழிந்து நெருப்பெனக் கனன்று வலிவும் பொலிவும் மிக்க அச்சீவகன் மேல் பாய்வதற்கு அக்கொல் யானை ஓடி வர, அதற்கு அஞ்சாதவனாய்த் திரண்ட வளையல் அணிந்த குணமாலையை உயிர்பிழைக்கக் கொண்டு போங்கள் என்று அருகில் இருந்தோரிடம் கூறினான்.

வெண்ணிலவை விழுங்கச் சென்று வேகமிக்க மணி உடைய கருநாகம் விரைந்து தன்இடம் விட்டு போகும் ஞாயிற்றின் மேல் படம் விரித்துக் கொண்டு ஓடியது போல கொத்து அலர்ந்த மலர்மாலை அணிந்த குணமாலை மேல் பாயச் சென்ற மதயானை அவளை விட்டுவிட்டு பொன்மாலை அணிந்த தோள்களையுடைய சீவகனைத் தன் துதிக்கையால் பற்றியது.

**அசனி வேகத்தைச் சீவகன் அஞ்சாது அடக்குதல்**

**கையகப் படுத்த லோடும் கார்மலை மின்னின் நொய்தா**
**மொய்கொளப் பிறழ்ந்து முத்தார் மருப்பிடைக் களித்துக் காற்கீழ்**
**ஐயென அடங்கி வல்லான் ஆடிய மணிவட்டு ஏய்ப்பச்**
**செய்கழல் குரிசில் ஆங்கே கரந்துசேண் அகற்றினானே**

கைப்பற்றியவுடன் வீரக்கழல் அணிந்த சீவகன் கார் மேகத்திடைத் தோன்றும் மின்னலைக் காட்டிலும் விரைந்து தன் வலிமை தோன்ற உடம்யை முறுக்கி முத்தினையுடைய தந்தங்களிடையே புகுந்து வல்லவன் உருட்டி விட்ட மணிவட்டைப் போல அதன் காலின் கீழே காண்பவர் வியப்புற அடங்கி

மறைந்து அதனைத் தொலைவில் அகற்றிச் சென்றான். யானையின் கால்களில் இடையில் மறைந்திருந்தே அதனை அப்பால் ஓட்டிச் சென்றான் சீவகன்

**மல்லல் நீர் மணி வண்ணனைப் பண்டொர் நாள்**
**கொல்ல வோடிய குஞ்சரம் போன்றது அச்**
**செல்வன் போன்றனன் சீவகன் தெய்வம் போல்**
**பில்கு மும்மத வேழம் பெயர்ந்ததே.**

தெளிவுரை : வளமார்ந்த கருநீலக்கடல் போன்றும் நீலமணி போன்றும் மேனி வண்ணம் உடைய கண்ணபிரான் முன்பு ஒரு நாள் கொல்ல ஓடிய யானையைப் போன்று துளிர்க்கும் மும்மதங்களையும் உடைய அசனிவேகம் என்னும் அப்பட்டத்து யானையும் அச்சீவகனைக் கண்டு சினம் நீங்கித் திரும்பியது.

**சீவகன் பூம்மொழிலை அடைதல்**

**“ஒருகை இருமருப்பின் மும்மதத்தது ஓங்கு எழிற் குன்றனைய வேழம்**
**திருகு கனைகழற்கால் சீவகன் வென்று இளையாட்கு உடைந்து தேனார்**
**முருகு கமழ் அலங்கால் முத்திலங்கு மார்பினன் ஐஞ்ஞூற்று நால்வர்**
**அரகு கழல் பரவத் தனியே போய் உய்யானம் அடைந்தான் அன்றே”**

ஒரு துதிக்கையும் இருதந்தங்களும் மும்மதமும் உடைய உயர்ந்த அழகிய குன்று போன்ற அசனிவேகம் என்னும் யானையை முறுக்கிய ஒலியுடன் கூடிய வீரக்கழல் அணிந்த கால்களையுடைய சீவகன் வெற்றி கொண்டு குணமாலையிடம் தன் அறிவு முதலியவற்றில் தோற்று வண்டுகள் நிறைந்து மொய்க்கும் மணம் வீசும் மாலையும் முத்துவடமும் விளங்கும் மார்புடையவனாய் ஐநூற்று நான்கு தோழர்களும் அருகிருந்து அடி போற்றிப் புகழ பின் அவர்களைப் பிரிந்து (தன் வேறுபாட்டை தத்தை அறியாதவாறு) தனியே போய்ப் பூம்பொழிலை அடைந்தான்.

**குணமாலை சீவகனை எண்ணி வருந்தியிருந்தல்**

**குமரி மாநகர்க் கோதையம் கொம்பனாள்**
**தமரின் நீங்கிய செல்வியுள் தாமரை**
**அமரர் மேவரத் தோன்றிய அண்ணல் போல்**
**குமரன் ஆக்கிய காதலின் கூறுவாள்**

கன்னிமாடத்தில் மலர்மாலை அணிந்துள்ள பூங்கொம்பு போல் ஊண் உறவு வெறுத்து தனிமையில் குணமாலை இருந்த போது வானவர் வேண்டத் தாமரை மலரில் வந்து தோன்றிய முருகப்பெருமானைப் போன்ற சீவகன் தன்னுள் உண்டாக்கிய காதலால் சில கூறுலானாள்.

கொடியமலரம்பு ஐந்தினையும் உடைய மன்மதன் வில் பயிற்சியைத் தொடங்குகின்ற காலத்தில் அதனைப் பயிலும் இடமாக என்னைக் கருதி என் முலைக்குவட்டின் நடு இடத்தை எருக்குவியலாகவும் என் உயிரைக்குறி வைத்த இலக்காகவும் கொண்டு அம்புகள் எய்து வருத்துகின்றானே இனி என்ன செய்வேன் எனக் குணமாலை ஏங்கினாள்.

குணமாலை அகழ்வாரைத் தாங்கும் பொறுத்தலில் சிறந்த பூமியும் பொறுத்துக் கொள்ள முடியாதவாறு நேர்ந்த துன்பத்தால் வேள்வித் தீயில் இட்ட தாமரை மலர் போல என் உள்ளம் வெந்து வாடுகின்றது. எனவே தேவர்களே மாலையணிந்த மார்புடையவனை என சிவகாமியை காமனைப் போன்ற கட்டழகனை நீங்களாவது எனக்குத் துணைபுரிந்து விரைவாகக் கொண்டு வந்து தாருங்கள் என்று கூறித் தவித்தாள்.

**கையினால் சொலக் கண்களில் கேட்டிடும்**
**மொய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேன்**
**செய்த வம்புரி யாச்சிறி யார்கள் போல்**
**உய்ய லாவதொர் வாயிலுண்டாங் கொலோ**

வாயினால் பேசமுடியாது கையினால் சாடைகாட்ட அதனைக் கண்டு தெளிந்திடும் பிறர்க்கு வெளிச்சொல்ல இயலாத துன்பம் நிறைந்த உள்ளத்தினால் நான் இப்போது ஊமையும் ஆயினேனே. மேலும் செய்ய வேண்டிய தவங்களைச் செய்யாது விட்ட அறிவற்றவர் போலும் ஆயினேன். இனி நான் உயிர்பெற ஏதேனும் ஒருவழியுண்டோ எனப்புலம்பினாள் குணமாலை.

**கண்ணும் வாளற்ற கைவளை சோருமால்**
**புண்ணும் போன்று புலம்புமென் நெஞ்சரோ**
**எண்ணில் காமம் எரிப்பினும் மேற்செலாப்**
**பெண்ணின் மிக்கது பெண்ணல்லது இல்லையே**

மேலும் குணமாலை, கண்கள் ஒளியிழந்தன கை வளையல்கள் கழன்றன. என் நெஞ்சமும் புண்பட்டது. போல் வருந்துகின்றது. அளவற்ற காமத் தீ

பற்றினாலும் அதை வெளிச் சொல்ல இயலாது. வாழும் பெண்ணினத்தினும் மிகக் கொடியது அப் பெண்ணினம் தவிர வேறு இல்லை என்று கூறி வருந்தினாள்

**குணமாலை சீவகனிடம் கிளியைத் தூதனுப்புதல்**

**உய்யு மாறுஉரை உன்னை அலால் இலேன்**
**செய்ய வாய்க்கிளி யேசிறந் தாய்என**
**தைய நங்கைஇந் நாட்டகத்து உண்டெனின்**
**தைய லாய்சம மூதுஉரை என்றதே**

மாமடலூர்தலைக் கருதிய குணமாலை அதனைக் கைவிட்டுப் பின்னர் தான் வளர்க்கும் கிளியைப் பார்த்து ''சிவந்த வாயினையுடைய கிளியே சிறந்த பச்சைப் பசுங்கிளியே உன்னைத் தவிர வேறொரு துணை எனக்கில்லை. நான் பிழைக்கும் வழியைக் கூறுக'' என்றாள். அதனைக் கேட்ட கிளி நங்கையே வருந்தாதே நீ விரும்பியது இந்நாட்டகத்தில் இருப்பின் பெண்ணே வருந்தாது உடனே கூறுவாயாக என்றது. தெளிந்த நீருடைய பதுமை என்னும் பொய்கையில் உள்ள தாமரை மலரில் விளங்கும் திருமகளைக் காட்டிலும் எழிலும் அழகும் உடைய ஒப்புவமையற்ற குணமாலை மையலூட்டும் காமத்தால் செயலற்று வருந்தித் தானுற்ற வருத்தத்தை வெளிப்படையாகக் கூறித் தன் கிளியைத் தூது போக விடுத்தாள்.

**கிளியினுடைய தூது பற்றிக் கூறுதல்**

**துனிப்புறு கிளவியால் துணைவி ஏகலும்**
**இனிப்பிறர்க்கு இடமிலை எழுவ ஈங்கு எனாக்**
**கனிப்பு அறு சொல்லளைஇ பறந்து காளைதன்**
**பனிக்கதிர்ப் பகைமலர்ப் பாதம் சேர்ந்ததே.**

சீவகனது வெறுப்பூட்டும் சொல்லால், ஊடல் கொண்டு காந்தருவதத்தை சென்றதும், கிளி, ''இனி இங்குப் பிறர்க்கு இடமில்லை: எனவே இனிச் சீவகனைக் காணலாம்'' என இனிமையான மொழிகளைத் தனக்குள் கூறிக் கொண்டு, பறந்து சென்று, காளையாகிய சீவகனது குளிர்ந்த நிலவைப் பழிக்கின்ற தாமரை மலர் போன்ற பாதங்களைப் பணிந்தது.

**மையலங் களிற்றொடு பொருத வண்புகழ்**
**ஐயனைச் செவ்விகண்டு அறிந்து வம்எனப்**

**பையரவு அல்குல்எம் பாவை தூதொடு**

**கையிலங்கு எ.்.கினாய் காண வந்ததே.**

கையில் விளங்கும் வேலினையுடையவனே! மதங் கொண்ட யானையொடு போரிட்டு வென்ற மிகு புகழுடைய ஐயனைக் கண்டு அவன் நிலையுணர்ந்து வருக’ என்று சொல்லியனுப்பிய, படம் உடைய பாம்பு போன்ற அல்குலையுடைய எம் தலைவி குணமாலையின் தூதேற்று, நினைக் காண வந்தேன்’’ என்று கூறியது.

**பணித்தகு கோலமும் பந்தும் பார்ப்புறாள்:**

**மணிக்கழங்கு ஆடலள்: மாமை தான் விளர்த்து**

**அணித்தகை யாழினொடு அமுதம் விட்டொரீஇத்**

**துணைப்பெரு மலர்க்கணில் துயிலும் நீங்கினாள்.**

பிறர் வந்து தாழ்ந்து வணங்கத் தக்க கோலத்தையும் புனைந்து கொள்ளாள்: பந்தும் ஆடாள்: மணிக்கற்களால் ஆன கழங்கும் ஆடாதொழிந்தாள்: அவளது பொன்னிறம் விட்டு நீங்கிப் பெரிய இருமலர் போன்ற கண்களில் தூக்கத்தையும் கைவிட்டாள்.

பூ பொருந்திய பூங்கொம்பு போன்ற உவமை கூற இயலாத மேன்மையுடைய என்தலைவியாகிய குணமாலை, திருத்தமுறச் செய்த வேலேந்திய சீவகசாமியே என்பாள்: கருங்கடலில் பிறந்த வெண்மையான சங்கு வளையல்கள் கழன்று விழுகின்றனவே என வருந்துவாள்: நின்னுருவம் வெளிப்பட்டுத் தோன்ற, அதனைப் பலமுறை நான் தழுவியும் அது என்னைத் தழுவாமையின் நான் வருந்தினேன் இனி நீ வந்து என்னை மார்புறத் தழுவிக் கொள்’’ என்பாள் என்றது அக்கிளி.

**பொற்குன் றாயினும் பூம்பழ னங்கள்சூழ்**

**நெற்குன் றாம்பதி நேரினும் தன்னையான்**

**கற்குன் றேந்திய தோளினை கண்ணுறீஇச்**

**சொற்குன் றாபுணர் கேன்சொல்லு போ’’ என்றான்.**

கிளி கூறியதைக் கேட்ட சீவகன், ‘‘குணமாலையின் பெற்றோர் விரும்புவது பொன்மலை எனினும் அழகிய வயல்கள் மூழ்ந்து நெற்குன்றுகள் நிறைந்த நகரம் எனினும் அவற்றை ஈடாகத் தந்து, நான் என் கற்குன்று போன்று

நிமிர்ந்த இருதோள்களால் அவளை அனைத்துத் தழுவிக் கொள்வேன். இச்சொல் தவறாது. இதனைப் போய்க கூறுக'' என்று கூறினான்.

**கிளியின் மூலம் சீவகன் விடுத்த செய்தியைக்**
**குணமாலை படித்து இன்புறல்**

**கண்டாள் நெடிதுயிர்த்தாள் கை தொழுதாள் கையகத்தே**
**கொண்டாள்: தினைக்குரல் தான் சூடினாள்: தாழ்குழல் மேல்**
**நுண்தார்ப் பசுங்கிளியை நோக அகட்டொடுக்கி**
**வண்தாரான் செவ்விவாய்க் கேட்டாள்தன் மெய்ம்மகிழ்ந்தாள்.**

தன்னைச் சார்ந்த கிளியைக் கண்டதும் என்ன சேதி கொண்டு வந்திருக்குமோ என்ற அச்சத்தால் பெருமூச்செறிந்தாள். கையால் வணங்கினாள்: தினைக்கதிரைக் கண்டு அதனைக் கையிலே வாங்கித் தன் நீண்ட கூந்தலில் சூடிக் கொண்டாள். பின் நுண்ணிய செவ்வரி படர்ந்த அப்பசுங்கிளி வருந்த அதைத் தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, வளப்பம் மிக்க மாலை அணிந்த சீவகனின் நிலையை அக்கிளியின் வாய் மொழியாகக் கேட்டறிந்து மிகுந்த துன்பம் உற்றாள்.

**பாலவியும் பூவும் புகையும் படுசாந்தும்**
**காலவியாப்பொன்விளக்கும் தந்தும்மைக் கைதொழுவேன்**
**கோலவியா வெஞ்சிலையான் சொற்குன்றான் ஆக எனவே**
**நூலவையார் போல் நீங்கள் நோக்குமினே என்றான்.**

குணமாலை அவ்வோலையைத் தெய்வமாகவே எண்ணி, அதனைப் பார்த்து, ‘‘பாற்சோறும், மலரும், அகிற்புகையும், அரைத்த சாந்தும் காற்றில் அணையாத மணிவிளக்கும், தந்து உம்மைக் கை கூப்பி வணங்குகிறேன். குறிதவறாமல் அம்பு எய்கின்ற வில்லினையுடைய சீவகன் உரைத்த சொல் பழுதின்றி நிறைவேறுமாறு அறநூலுணர்ந்த சத்சங்கத்தில் உள்ளார் போல் உம்முடைய சொற் பொருள் இடையூறின்றி நிறைவேறுவதாகுக. அவ்வாறே நோக்குக'' என்று கூறினாள்.

**சீவகன் - குணமாலையின் திருமணத்தை உறுதிப்படுத்துதல்**

**கற்றார் மற்றும் கட்டுரை வல்லார் கவியென்னும்**
**நற்றோர் மேலார் நால்வரை விட்டாற்கு அவர் சென்றார்**
**கற்றார் வல்வில் சூடுறு செம்பொன் கழல் நாய்கன்**

**பொற்றார் மார்பீர்! போதர்மின் என்றாங்கு எதிர்கொண்டான்.**

பின் குபேரமித்திரன், கல்விகேள்வியில் சிறந்தோர், புனைந்துரைப்பதில் வல்லவர், கவிஞர் என்னும் முத்திறத்திலும் வல்லோராகிய நால்வரை நல்லதோர் தேர்மேல் ஏற்றி, அவர்களைச் சீவகனிடம் மணம் பேச அனுப்ப, அவர்களும் விருப்பத்தோடு சீவகன் இல்லம் அடைந்தனர். அவ்வாறு சென்ற அவர்களை வலியவில்லையும், பொற்கழலையும் உடைய கந்துக்கடன், ''பொன் மாலை அணிந்த மார்பீர்! வருக'' எனக் கூறி அவர்களை வரவேற்றான்.

### சீவகன் குணமாலையை மணத்தல்

**கரைகொன்று இரங்கும் கடலில் கலி கொண்டு கல்லென்**
**முரசம் கறங்க முழவிம்மவெண் சங்கம் ஆர்ப்பப்**
**பிரசம் கலங்கிற் றெனமாந்தர் பிணங்க வேட்டான்**
**விரைசென்று அடைந்த குழலாளை அவ்வேனி லானே.**

கரையோடு மோதி முழங்கும் கடல் அலை போல் முழக்கமிடும் 'கல்' என்ற ஒலி எழுப்பும் - முரசம் முழங்க, முழவு ஒலிக்க வெண் சங்கம் ஊத, வண்டுகள் மொய்த்தது போல மக்கள் கூட்டம் நெருங்க இளவேனிற் காதலனாகிய மன்மதனைப் போன்ற சீவகன், மணம் நிறைந்து பொருந்திய மலர்க்கூந்தலுடைய குணமாலையை மணந்தான்.

### கந்துக்கடன் கட்டியங்காரனிடம் வேண்டுதல்

**மன்னவர் அருளிக் கேண்மோ மடந்தையோர் கொடியை மூதூர்**
**நின்மதக் களிறு கொல்ல நினைக்கது வடுவென்று எண்ணி**
**என்மக னிதனை நீக்கி இன்னுயிர் அவளைக் காத்தான்**
**இன்னதே குற்ற மாயிற் குணமினி யாது வேந்தே?**

''மன்னவனே! அருள் கூர்ந்து நான் கூறுவதைக் கேட்பாயாக கொடி போன்ற ஒரு பெண்ணை, இப்பழம்பதியில் நின் மதயானை கொன்றால் அது உனக்கே பழியாகும் என நினைத்து, அம்மத யானை, அப்பெண்ணைக் கொல்லாமல் தடுத்து அவளின் இனிய உயிரைக் காத்தான்: இத்தகைய பெண்பாவத்தில் இருந்து நின்னையும் நின்மூதூரையும் காத்ததே குற்றம் ஆயின் இனி நன்மை என்பது தான் என்ன? வேந்தே கூறுவாயாக'' என்று கந்துக்கடன் கட்டியங்காரனிடம் கூறினான்.

## சீவகனுடைய எண்ணம்

**கச்சற நிமிர்ந்து மாந்தர்க் கடாவிடு களிறு போல**
**உச்சியும் மருங்கும் பற்றிப் பிளந்துயிர் பருகிக் கோண்மா**
**அச்சுற அழன்று சீறி ஆட்டினம் புக்க தொப்பக்**
**குச்சென நிரைந்த யானைக் குழாம் இரித் திடுவல் என்றான்.**

''கட்டிய வார்க்கச்சுகள் அறுந்துவிழ, நிமிர்ந்து நின்று பாய்கின்ற போர்யானை போல வீரர்களின் தலையையும் இடையையும் பற்றிப்பிளந்து உயிரைக் குடித்துக் கொல்லுகின்ற திறமுடைய புலி ஒன்று அச்சம் உண்டாகக் கோபத்துடன் சீறி ஆட்டுமந்தையில் புகுந்தாற் போல, பாவாற்றி என்னுமாறு நெருங்க வளைந்த யானைத்திரளையும் நான்புகுந்து அழித்து விடுவேன்'' என்று சீவகன் எண்ணினான்.

## சுதஞ்சணனைச் சீவகன் நினைக்க அவன் சீவகனைத் தன் நகரான சந்திரோதயத்திற்கு வான் வழியாக எடுத்துச் செல்லுதல்

**மின்னிலங்கு எயிற்று வேழல் வேழத்தால் புடைத்துத் திண்தேர்**
**பொன்னிலங்கு இவுளித் தேரால் புடைத்துவெங் குருதி பொங்க**
**இன்னுயி ரவனை யுண்ணும் எல்லைநாள் வந்த தில்லை**
**என்னையிக் கிருமி கொன்றுஎன் தோழனை நினைப்பல என்றான்.**

அப்போது மழையினால் விண் அளவும் மண் அளவும் வேற்றுமை தெரியாமல் விலங்குகளும் மக்களும் கண்களையும், வாயையும் இழந்து ஏங்க, ''ஊழிக்காலத்தில் உடையும் கடல் இப்போதே உடைந்து விட்டது. பாருங்கள்'' என்று ஆணும் பெண்ணும் ஏங்கி இரங்க, மாமன்னன் சச்சந்தன் மகனான சீவகனைச் சுதஞ்சணன் மார்புறத் தழுவிக் கொண்டு வானில் பறந்து சென்றான்.

## பயிற்சி வினாக்கள்

**குறுவினா:**

1) சுரமஞ்சரி, குணமாலையை என்னி நகையாடிய திறம் யாது?
2) சுரமஞ்சரி, சீவகனையே எண்ணி நோன்பிருந்த விதம் யாது?
3) சுதஞ்சனன் தான் யார் எனக் கூறியதனை விளக்குக?

4) அசனிவேகம், குணமாலை மேல் பாயச் சென்ற வேகத்தினை விவரிக்க?
5) குணமாலை சீவகனிடம் கிளியைத் தூதனுப்பிய திறம்?

**நெடுவினா:**

1) சீவகன், சுண்ணப் பொடிகளில் எது சிறந்தது என்று நிரூபித்தனை கட்டுரைக்க?
2) இழிந்த நாயினை சீவகன் தேவரைக்கியதனை விவரிக்க?
3) அசனிவேகத்திடமிருந்து குணமாலையை சீவகன் காப்பாற்றியதனை விளக்கி வரைக?
4) குணமாலை, சீவகனை எண்ணி வருந்தியிருந்ததனை விளக்குக?
5) சீவகன் விடுத்த செய்தியினைப் படித்து இன்புற்ற குணமாலையின் நிலையினை விவரிக்க?

# கம்பராமாயணம்

கம்பர் மகாகவி பன்னீராயிரம் கவிதைகளால் இராமாயணத்தைப் பாடியவர். கம்பராமாயணம் இந்து மத அதிலும் வைணவ சமயக் காப்பியந்தான் என்றாலும் சமயங் கடந்த நிலையில் இந்துக்கள் இஸ்லாமியர் கிறித்துவர் ஆகிய எல்லோராலும் போற்றப்படும் பொதுக் காப்பியமாகி விட்டது.

கம்ப நாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கிதயம் களியாதே இது பண்டிதர் போற்றும் பாடல் மொழி விருத்தப் பாவுக்குத் திருத்தக்க தேவர் என்பது பழமொழியாயினும் அந்தத் திருத்தக்க தேவரையும் வென்று விருத்தப் பாவின் வேந்தன் என்று சொல்லத்தக்க பெருமையைக் கம்பர் பெற்றுவிட்டார்.

கம்பனைப் பற்றிய பழமொழிகள் கூடப் பிறந்து விட்டன. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது பழமொழி கவிதையின் சிறப்பைப் பற்றி விவாதிக்கும் போது அது என்ன கம்ப சூத்திரமோ? என வினா எழுப்புவது வழக்கமாகி விட்டது.

இந்திரசித்தனை வீழ்த்திய இலக்குவனைப் பார்த்து தம்பி உடையான் பகைக்கு அஞ்சான் என்ற உரை நாட்டிலுள்ள கல்வி வாசனையற்ற பாமரர்களும் சொல்லும் பழமொழியாகி விட்டது. இப்படி எத்தனை எத்தனையோ பழமொழிகள் கம்பன் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

தமிழுக்குள்ள பெருமைக்குத் தலைக் காரணம் கம்பன்தானே? என்று கேட்கிறார் கவிமணி

**பாரில் பெயரோங்கு**

**பன்மொழிக்கும் நாணாது**
**நேரில் நிமர்ந்து தமிழ்**
**நிற்பது தான் சீருயர்ந்து**
**ஏறுபுகழ் கம்பன்**
**இராமகதை யால்வந்த**
**வீறுகொண்டென்று விளம்பு**
**அம்புவிக்கு வாய்த்த**
**அருட்கவி ஐயமின்றி**
**உம்பரமு தொத்த**
**உயிர்க்கவி கம்பனந்தன்**
**மந்திரச் சொல்லை**
**வனைந்தகவி என்றெனும்**
**வெந்திடுமோ தீயால் விளம்பு**

இந்தக் கவிதையிலே வரிக்கு வரி கவிமணியின் இதயம் பேசுகிறது. கம்பராமாயணத்தில் பாடப்பகுதியாக கிட்கிந்தா காண்டம் அமைந்துள்ளது.

**கிட்கிந்தா காண்டம்**

**சீதையைத் தேடி மேலும் ஏகுதல்**

**காலையே கடிது நெடிது ஏகினார் - கடல்கவினு**
**சோலை ஏய் மலை தழுவு கானநீள் நெறி தொலைய**
**ஆலையேய் துழனி அக நாடர், ஆர் கலியமிழ்து**
**போலவே உரைசெய் புனம் மானை நாடுதல் புரிஞர்.**

கரும்பு ஆலைகள் விளங்கும் அகன்ற கோசல நாட்டுக்கு உரிய இராம இலக்குவர் திருப்பாற்கடலின் அமிழ்தம் போன்று உரை செய்யும் இனிய சொற்களைப் பொழியும் சீதாப்பிராட்டியைத் தேடுபவராகிக் கடல்சூழ்ந்த மலையும் கோசலையும் காடும் ஆகியவற்றில் தோன்றும் பாதைகளின் வழியாக அன்று காலை எழுந்தவடன் மிக விரைவுடன் ஏகினார்கள்.

**அனுமன் அறிமுகம்**

**அஞ்சனைக்கு ஒருசிறுவன் அஞ்சனக் கிரி அனைய**

**மஞ்சனைக் குறுகி, யொரு மாணவப் படிவமொடு**
**வெஞ்சமத் தொழிலர், தவ மெய்யர், கைச் சிலையரென**
**நெஞ்சயிர்த்து அயல் மறைய நின்று கற்பினின் நினையும்**

அஞ்சனா தேவி பெற்ற மைந்தனான அனுமன், நீல மலை போன்று, விளங்கும் மைந்தராகிய இராம இலட்சுமணரை அணுகி அவர்கள் கண்களுக்குப் புலப்படாதவாறு தன்னை மறைத்துக் கொண்டு ஒரு பிரமசாரி வடிவத்தொடு நின்றிருந்து, கொடுமை விளங்கும் வீரத்தொழில் செய்பவர்களாகவும் தவ வேடத்தைக் கொண்டவர்களாகவும், கைகளில் வில் ஏந்தியவர்களாகிய இவர்கள் யாராக இருத்தல் வேண்டும் என்று, தன் அறிவுக்கண் கொண்டு சிந்திக்கலானான்.

**உருவு கொண்டது தருமம்**

**காய்எரி கனலும் கற்கள்**
**கள்ளுடை மலர்களேபோல்**
**தூயசெங் கமல பாதம்**
**தோய்தொறும், குழைந்து தோன்றும்,**
**போயின திசைகள் தோறும்**
**மரனொடு புல்லும் எல்லாம்**
**சாய்வுறுத் தொழுவ போல இங்கு,**
**இவர்களோ தருமம் ஆவார்?**

வெயிற் கடுமையால் நெருப்புப் போன்று சுடுகின்ற பருக்கைக் கற்கள் தேன் விளங்கும் மலர்கள் போன்று விளங்கி இராம இலட்சுமணர்களின் செந்தாமரைப் பாதங்கள் தரையில் தோயும்போது குழைந்து தோன்றின. இவர்கள் செல்கின்ற வழிகளில் உள்ள மரங்களும் புல் முதலானவைகளும் சாய்ந்து வணங்குவன போன்று விளங்கின. ஆதலால், தரும தேவர்கள் இவர்களோ?

**அனுமனை நீ யார் என இராமன் வினாவுதல்**

**இவ்வகை எண்ணி ஆண்டுஅவ்**
**இருவரும் எய்தலோடும்**
**செவ்வழி உள்ளத்தானும்**

**தெரிவுற எதிர்சென் றெய்திக்**
**கவ்வை இன்றாக நுங்கள்**
**வரவு எனக் கருணையோனும்**
**எவ் வழி நீங்கியோய் நீ**
**யார் என, இயம்பலுற்றான்**

இவ்வாறு நன்கு ஆராய்ந்து கொண்டிருந்த அனுமன், இங்கு வந்துகொண்டிருந்த இராம இலட்சுமணர்கள் முன்னால் நன்கு தெரியுமாறு வெளிப்பட்டு எதிர் சென்று 'உங்கள் வருகை துன்பம் இல்லாமல் செய்து நன்மை தருவதாக விளங்கட்டும்' என உரைத்தான். இதனைக் கேட்டதும் கருணையுடைய இராமன் அவனைப் பார்த்து, 'எவ்விடத்திலிருந்து வருகின்றனை? நீ யார்?'' என வினவினான்.

**அனுமன் அறிமுகம்**

**மஞ்செனத் திரண்ட கோல**
**மேனிய! மகளிர்க் கெல்லாம்**
**நஞ்செனத் தகையவாகி,**
**நளிர் இரும் பனிக்குத் தேம்பாக்**
**கஞ்சம் ஒத்து அலாந்த செய்ய**
**கண்ண! யான் காற்றின் வேந்தர்க்கு**
**அஞ்சனை வயிற்றின் வந்தேன்**
**நாமமும் அனுமன் என்றான்.**

அப்போது ஆங்கு எதிர்நின்ற அனுமன் ''திரட்சியான முகில் போன்ற எழில் கொண்ட வண்ணம் உடையோய்! மகளிர்க்கு நஞ்சு போன்று விளங்கும் நாயகனே! குளிர்ச்சியுடைய பனிக்கு வாடாத தாமரை மலரைப் போன்ற சிவந்த விழியுடையவனே! யான் காற்றுத் தேவனுக்கு அஞ்சனாதேவியின் வயிற்றில் பிறந்தவன். என் பெயர் அனுமன்'' என உரைத்தான்.

**'இம்மலை இருந்து வாழும்**
**எரி கதிர்ப் பரிதிச் செல்வன்**

**செம்மலுக்கு ஏவல் செய்வேன்**

**தேவ! நும் வரவு நோக்கி**

**விம்மல் உற்று அனையான் ஏவ,**

**வினவிய வந்தேன் என்றான்,**

**எம்மலைக் குலமும் தாழ,**

**இசை சுமந்து எழுந்த தோளான்.**

மேலும், இந்த மலையில் வாசம் புரியும் சூரியனுடைய புதல்வனான சுக்கிரீவன் என்னும் அரசனுக்கு நான் ஏவல் புரிபவன். தேவர்களைப் போன்று விளங்கும் தேவரீர் வருவதைக் கண்டு கலங்கியவனாகி அம் மன்னன் என்னை அனுப்ப நான் இங்கு வந்தேன்'' என்று உயர்ந்து விளங்கும் மலையும் தாழுமாறு, உயர்ந்த புகழும் வீரமும் உடைய அனுமன் கூறினான்.

**'இல்லாத உலகத்து எங்கும்**

**இங்குஇவன் இசைகள் கூரக்**

**கல்லாத கலையும் வேதக்**

**கடலுமே' என்னும் காட்சி**

**சொல்லாலே தோன்றிற்றன்றே!**

**யார்கொல் இச் சொல்லின் செல்வன்?**

**வில்லார் தோள் இளைய வீர**

**விரிஞ்சனோ? விடைவல்லானோ?**

இராமன் இலக்குவனை நோக்கி, ''வில் பொருந்திய தோளையுடைய இளையவனே! இங்கு வந்துள்ள இவன் புகழ்மிகுந்த கலைஞானங்களைக் கற்றவனாய்க் கல்லாதது எதுவும் இல்லை, என்று சொல்லுமாறு உடையவன். இவன் கற்று விளங்கும் வேதங்கள் கடல் போன்று பரந்தது என்பதனை இவன் சொற்களே விளக்குவனவாகும். இத்தகைய இனிய சொற்களைப் பேசும் இச்செல்வன் பிரமனோ இடப்பவாகனம் கொண்டுள்ள சிவனோ! வேறு யாரோ! என்று மேலும் உரைக்கலானான்.

### அனுமனின் முகமன் உரை

**ஒடுங்கவில் உலகம் யாவும்**

**உலந்தன உதவி வேள்வி**

**தொடங்கின, மற்றும் முற்றத்**

**தொல்லறம் துணிவர் அன்றே:**

**கொடுங்குலப் பகைஞனாகிக்**

**கொல்லிய வந்த கூற்றை**

**நடுங்கினர்க்கு அபயம் நல்கும்**

**அதனினும் நல்லது உண்டோ?**

"ஒடுங்குதல் இல்லாத இந்த உலகத்தில் உள்ள உயிர்களுக்கெல்லாம் தானம் செய்து, வேதத்தில் உரைத்தவாறு வேள்விகளைப் பிரிந்து தவம் முதலானவற்றைச் செய்வது தொன்று தொட்டு ஆற்றிவரும் அறமாக மேலோர்கள் உரைப்பார்கள். அவற்றுள் கொடுமையுடைய குலப் பகைவர்களானாலும் கொல்லுமாறு வந்த எமன் போன்ற பகைவனுக்கு அஞ்சியவனாய் ஒருவன் அடைக்கலம் ஆனால் அதனை நல்கி அபயம் அளித்துப் பாதுகாப்பது முன்சொன்ன அறங்களினும் மேம்பட்டதாகும். இத்தகைய அறத்தினும் மிக்கது வேறு உண்டோ? என அனுமன் இராமனை நோக்கி மேலும் கூறினான்.

### அனுமனை இராமன் வியத்தல்

**'நல்லன நிமித்தம் பெற்றோம்**

**நம்பியைப் பெற்றோம் நம்பால்**

**இல்லையே துன்பமானது**

**இன்பமும் எய்திற்று இன்னும்**

**வில்லினாய்! இவனைப் போலாம்**

**கவிக் குலக் குரிசல் வீரன்**

**சொல்லினால் ஏவல் செய்வான்**

**அவன் நிலை சொல்லாற்பாற்றோ?**

இராமன் மேலும் தம்பி இலக்குவனை நோக்கி, "இப்போது நமக்கு நல்ல அறிகுறி கிடைக்கப் பெற்றுள்ளது. அதனால் இவ் அன்பான அனுமனை நாம் பெற்றோம். இனித் துன்பம் இல்லை. இன்பமும் எய்திற்று எனலாம். மற்றும் வில்லையுடையவீரனே! இவ் அனுமனைப் போன்று ஒருவனைத் தனக்கு ஏவல் புரிபவனாகப் பெற்ற வானரக் குலத்தலைவனான

சுக்கிரீவனுடைய பெருமையும் சொல்லால் எடுத்து உரைக்கும் அளவுடையதோ!'' என உரைத்தான்.

**சுக்கிரீவனை அழைத்துவர அனுமன் செல்லல் வரவேற்றல்**

**என்று அகம்உவந்து, கோல**
**முகமலர்ந்து இனிதின் நின்ற**
**குன்று உறழ் தோளினாரை**
**நோக்கிய குரக்குச் சீயம்**
**சென்றவன் தன்னை இன்னே**
**கொணர்கின்றேன், சிறிது போது**
**வென்றுயிர்! இருத்திர் என்று**
**விடைபெற்று விரைவிற் போனான்.**

இராமனும் இலக்குவனும் தமது துன்பத்தை ஒழித்து முகமலர்ச்சியுடன் விளங்க அனுமன் அவர்களை நோக்கி, ''வெற்றியுடையீர்! நீவிர் இங்கேயே இருங்கள். நான் சென்று சிறிது நேரத்தில் சுக்கிரீவனை அழைத்து வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

**இருவரும் ஒருங்கு இருந்த காட்சி**

**தவாவலி அரக்கர் என்னும்**
**தகாஇருட் பகையைத் தள்ளிக்**
**குவாலறம் நிறுத்தற் கேற்ற**
**காலத்தின் கூட்டம் ஒத்தார்**
**அவாமுதல் அறுத்த சிந்தை**
**அனகனும் அரியின் வேந்தும்,**
**உவாவுற வந்து கூடும்,**
**உடுபதி இரவி ஒத்தார்**

இலகுவாக அழிதல் இல்லாத வலிமையுடைய அரக்கர் என்னும் எளிதில் தீராத இருள்போன்ற பகையை ஒழித்துத் திரண்ட அறத்தை நிலை நிறுத்துவதற்கு ஏற்ற காலத்தின் சேர்க்கை போன்று, குற்றமில்லாத இராமனும் வானரக் கூட்டங்களின் தலைவன் சுக்கிரீவனும் விளங்கினார்கள். இவர்கள் இயைந்த தன்மை சூரியனும் சந்திரனும் ஒன்று சேரும் அமாவாசை என்னும் புண்ணிய காலத்தை ஒத்து விளங்கியது.

**இராமன் சுக்ரீவன் உரையாடல்**

**‘மையறு தவத்தின் வந்த**
**சவரி, இம் மலையில் நீ வந்து**
**எய்தினை இருந்த தன்னை,**
**இயம்பினள், யாங்கள் உற்ற**
**கையறு துயரம், நின்னாற்**
**கடப்பது கருதி வந்தேம்,**
**ஐய! நின் தீரும் என்ன,**
**அரிக்குலத்து அரசன் சொல்வான் .**

சுக்கிரீவன் சொன்னதைக் கேட்ட இராமன், ‘‘ஐய! குற்றமில்லாத சபரி என்கிற மூதாட்டியானவள் நீ இந்த ருசிய மூக மலையில் இருப்பதாகக் கூறி அவ்வரலாற்றையும் தெரிவித்தாள். யாங்கள் உற்ற பெருந் துயரம் நின்னால் நீங்குவது கருதி வந்தோம்’’ என உரைத்தான். இவற்றைக் கேட்டதும் சுக்கிரீவன் மேலும் சொல்ல முற்பட்டான்.

**மற்றினி உரைப்பது என்னே?**
**வானிடை, மண்ணில் நின்னைச்**
**செற்றவர் என்னைச் செற்றார்,**
**தீயரே எனினும் உன்னோடு**
**உற்றவர் எனக்கும் உற்றார்,**
**உன்கிளை எனது என் காதல்**
**சுற்றம் உன் சுற்றம் நீ என்**
**இன்னுயிர்த் துணைவன், என்றான்.**

இராமன் தொடர்ந்து, ‘‘மீளவும் உரைப்பது யாது உள்ளது! விண்ணுலகத்தினாலும் மண்ணுலகத்தினாலும் உன்னைப் பகைத்தவர் என்னைப் பகைத்தவர்க்கு ஒப்பாவர். குணத்தால் தீயவர்களேயானாலும் உனக்கு நண்பராக உள்ளார்களானால் அத்தகையோர் எனக்கும் உற்ற நண்பர்களே யாவர். உன்னுடைய உறவினர்கள் எனக்கும் உறவினர்கள் ஆவர். என்னுடைய அன்புக்குரிய சுற்றமும் உனக்குச் சுற்றமாகும். நீ என்னுடைய உயிர்த் துணைவன் ஆவாய்’’ என உரைத்தான்.

### வாலியின் பகைமை உரைத்தல்

**'அடல் கடந்த தோள் அவனை அஞ்சி, வெம்**
**குடல் கலங்கி, எங் குலம் ஒடுங்க, முன்**
**கடல் கடைந்த அக் கர தலங்களால்**
**உடல் கடந்தனன், இவன் உலைந்தனன்.**

கொடுமையான மொழிகளால் ஏசிய பின்னும் வலிமைமிக்க தோள்களையுடைய வாலியைக் கண்டு அஞ்சிய சுக்கிரீவன் குடல் கலங்குமாறு, பாற்கடலைக் கடைந்த தன் பெரிய கைகளால் தாக்கி அவனைப் பெரிதும் வருத்தித் துன்புறுத்தினான். வானரக்குலம் முழுவதும் இச்செயலைக் கண்டு குடல் கலங்கி ஒளிந்தன.

### வாலிக்கு அஞ்சி சுக்ரீவன் மலையில் வாழ்தல்

**'உருமை என்று இவற்கு உரிய தாரமாம்**
**அரு மருந்தையும் அவன் விரும்பினான்:**
**இருமையும் துறந்து இவன் இருந்தனன்,**
**கருமம் இங்கு இது எம் கடவுள் என்றனன்.**

அனுமன் மேலும் இராமனை நோக்க, "எம் கடவுளே! தேவாமிழ்தம் போன்று விளங்கும் உருமை என்பவள் சுக்கிரீவன் மனைவியாவள். இவளை வாலி விரும்பினான். எனவே, இவன் அரசுக்குரிய செல்வத்தையும் தன் மனைவியாகிய அமுதத்தையும் இழந்து இந்த இடத்தில் வந்துள்ளான்" என்று உரைக்கலானான்.

### இராமன் சினமும் சூளுரையும்

**பொய் இலாதவன் வரன்முறை இம் மொழி புகல,**
**ஐயன் ஆயிரம் பெயருடை அமலர்கரும் அமரன்,**
**வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது, மலர்க் கண்**
**செய்ய தாமரை ஆம்பலம்போதெனத் திகழ்ந்த**

பொய்யுரை நவிலாத அறநெறியில் விளங்குபவனாகிய அனுமன், சுக்கிரீவன் தன் மனைவியைப் பிரிய நேர்ந்த வரலாற்றை இவ்வாறு மொழியலானாள். ஆயிரம் திருநாமங்களை உடையவனும், தேவர்களுக்கெல்லாம் மேலான தலைவனும், முன்னர் உலகத்தை விழுங்கித் தன் வயிற்றுக்குள் வைத்த திருமால் எனவும் விளங்கும் இராமனின் பவள

வாயிதழ் சினத்தால் துடித்தது. அவன் செநதாமரைக் கண்கள் செவ்வாம்பல் மலர் போன்று மேலும் சிவந்தது.

**வாலியைக் கொல்வதாகக் கூறல்**

**‘உலகம் ஏழினோடும் ஏழும் வந்து அவன்உயிர்க்கு உதவி**
**விலகும் என்னினும், வில்லிடை வாளியின் வீட்டித்,**
**தலைமையொடு நின் தாரமும் உனக்கின்று தருவேன்,**
**புலமையோர்! அவன் உறைவிடம் காட்டென்று புகன்றான்.**

இங்ஙனம் வாலியைச் சினந்த இராமன் சுக்கிரீவனை நோக்கி, “அறிவுடையவனே! பதினான்கு உலகத்தில் உள்ளவர்களும் வந்து வாலியின் உயிர்க்கு உதவி செய்வதாக வந்து என்னைத் தடுத்தாலும் இந்த வில்லில் அம்பைப் பூட்டி அவ்வாலியை அழித்து, உன்னுடைய அரசையும் உன் மனைவியையும் உனக்கு இப்போதே மீட்டுத் தருவேன். அவன் உறையும் இடம் எங்கே இருக்கிறது? காட்டு!” என உரைத்தான்.

**மராமரம் ஏழு துளைத்தல்**

**ஏழு மா மரம் உருவிக் கீழ் உலகம் என்று இசைக்கும்**
**ஏழும் ஊடு புக்கு உருவிப் பின் உடன்அடுத்து இயன்ற**
**ஏழு இலாமையால் மீண்டது, அவ் இராகவன் பகழி,**
**ஏழு கண்டபின், உருவுமால் ஒழிவதன்று, இன்னும்**

இராமன் தொடுத்த அந்த அம்பானது, ஏழு மராமரங்களைத் துளைத்துக்கொண்டு ஊடுருவிச் சென்று அடுத்துள்ள கீழே ஏழு உலகங்களையும் ஊடுருவி மீண்டும் இராமன்பால் திரும்பி வந்தது. மேலும் ஏழு பாதாள உலகம் இல்லாமையால் அது திரும்பி வந்தது.

**இராமனைச் சுக்கிரீவன் புகழ்தல்**

**‘வையம் நீ வானும் நீ மற்றும்நீ மலரின்மேல்**
**ஐயன் நீ ஆழிநீ ஆழிமேல் வாழ் அமலன் நீ**
**செய்ய தீ அனைய தேவும் நீ நாயினேன்,**
**உய்ய வந்து உதவினாய், உலகம் முந்து உதவினாய்**

இராமனுடைய ஆற்றலைக் கண்டு பெரிதும் வியப்பும் அச்சமும் கொண்ட சுக்கிரீவன் ஏத்தித் துதிக்கலானான். இராமனை நோக்கி, ‘இந்நிலவுலகமும் நீயே! ஆகாயமும் நீயே மற்றும் உள்ள நீர், நெருப்பு,

காற்று ஆகிய பூதங்களும் நீயே! பாற்கடலில் பள்ளிகொண்டு விளங்குகின்ற நாராயணனும் நீயே! தீய வினைகளை ஒழித்து உயிர்களுக்குச் செம்மை விளங்கும் நன்மைகளைப் புரியும் பரம்பொருளும் நீயே! முற்காலத்தில் இவ்வுலகத்தை அரக்கனுடைய பிடியிலிருந்து காத்தருளிய பரம்பொருளாகிய நீயே இன்று நாய்போன்று இழிந்த குணமுடைய என்னையும் உய்யுமாறு வந்து அருள்செய்தனை” என உரைத்தான்.

## இராமன் வாலி மீது அம்பெய்தல்

**காருண்வார் சுவைக் கதலியின்**
**கனியினைக் கழியச்**
**சேரும் ஊசியிற் - சென்றது**
**நின்றதென், செப்ப?**
**நீரும் நீர்தரு நெருப்பும் வன்**
**காற்றும் கீழ் நிவர்ந்த**
**பாரும் சார் வலி படைத்தவன்**
**உரத்தை அப் பகழி.**

நீர், நெருப்பு, வன்மையான காற்று, பரந்து மேவும் நிலம் என்று சாரும் ஐந்து பூதங்களின் வலிமை படைத்தவனான வாலியின் மார்பினை இராமன் செலுத்திய அம்பு சுவைமிக்க வாழைப் பழத்தில் ஊசி நுழைவது போன்று மிக எளிதாகத் துளைத்துச் சென்றது.

**மோடு தெண் திரை முரிதரு**
**கடல் என முழங்கி,**
**ஈடு பேருலகு இறந்துள**
**தாம் எனற்கு எளிதோ?**
**காடு மா நெடு விலங்கல்கள்,**
**கடந்தது அக் கடலின்.**
**ஊடு போதலுற்றதனை யொத்து**
**உயர்ந்துளது உதிரம்**

பெருவெள்ளமானது காடுகளையும் நெடிது உயர்ந்த மலைகளையும் தாண்டிக் கடலில் சென்று சேர்வது போன்று வாலியின் உடலிலிருந்து

இராமபாணத்தை வெளியே இழுத்ததால் பெருகிய இரத்த வெள்ளம், உயர்ந்த அலைகளைக் கொண்ட பெருங்கடல் என முழங்கிக் கற்பாந்த காலத்தில் பெருகும் வெள்ளம் போன்று பெருகிச் சென்றது.

### அம்பினில் இராமன் பெயர்

**மும்மைசால் உலகுக்கெல்லாம்**
**மூல மந்திரத்தை முற்றும்**
**தம்மையே தமர்க்கு நல்கும்**
**தனிப் பெரும் பதத்தைத், தானே**
**இம்மையே, எழுமை நோய்க்கும்**
**மருந்தினை, இராமன் என்னும்**
**செம்மை சேர் நாமம் தன்னைக்**
**கண்களில் தெரியக் கண்டான்.**

மூன்றுவகை எனப்படும் உலகங்களுக்கெல்லாம் மூலமந்திரமாக விளங்குவதும், தன்னுடைய அடியவர்களுக்குத் தன்னையே முழுமையாக நல்கும் தனிப்பெரும் சொல்லாக விளங்குவதும், ஏழு வகையான பிறவிப் பிணிக்கு மருந்தாக விளங்குவதும் ஆகிய இராமன் என்கிற செம்மையுடைய திருப்பெயரை வாலி தன் கண்களால் கண்டான்.

### இராமனை வாலி இகழ்தல்

**வாய்மையும் மரபும் காத்து**
**மன்னுயிர் துறந்த வள்ளல்**
**தூயவன், மைந்தனே நீ**
**பரதன்முன் தோன்றினாயே!**
**தீமைதான், பிறரைக் காத்துத்**
**தான்செய்தால் தீங்கு அன்றாமோ?**
**தாய்மையும் அன்றி, நட்பும்**
**தருமம் தழுவி நின்றாய்!**

“தான் செய்ய வேண்டிய வாய்மையையும் தன் குலப்பெருமைகளையும் காக்கும் வகையில் போற்றுதற்குரிய பெருமையுடைய உயிரைத் துறந்த வள்ளலும், தூய மனத்தினனும் ஆகிய தசரதனின் புதல்வனே! நீ தாய்மையும் நட்பும் தருமமும் விளங்கப் பற்றி நின்றனை. பிறரைக் காக்க வேண்டும் என்று கருதிய ஒருவன் அறத்திற்கு மாறாக உள்ள செயலைத்

தானே செய்தான் என்றால் அது தீய செயலல்லாது நல்லறம் ஆகிவிடுமோ! நீ அறத்தின் பண்பே அனைய பரதனுக்குத் தமையனாகத் தோன்றினையே! நின் செயல்தான் பெருமைக்குரியதோ! என வாலி கூறித் தொடர்ந்து மேலும் உரைக்கலானான்.

**கோ இயல் தருமம், உங்கள்**

**குலத்து உதித்தோர்கட்கு எல்லாம் -**

**ஓவியத்து எழுத வொண்ணா**

**உருவத்தாய்! – உடைமை அன்றோ?**

**ஆவியைச், சனகன் பெற்ற**

**அன்னத்தை, அமிழ்தின் வந்த**

**தேவியைப், பிரிந்த பின்னைத்**

**திகைத்தனை போலும் செய்கை!**

வாலி மேலும் “ஓவியம் வரைவதற்கும் அரியதொரு வடிவம் கொண்ட அழகனே! அரசர்கள் இத்தகைய அறநெறியைக் காத்தல் வேண்டும் என்ற கடப்பாட்டினை, உங்கள் குலத்தின் மூதாதையர்கள் கடைப்பிடித்து வந்த உரிமைப் பாங்கல்லவா! உன்னுடைய உயிர் போன்றவளும் சனகன் பெற்ற அரிய அன்னம் போன்றவளும், பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்தின் நிலையாய் வந்தவளுமான நின் மனைவியாகிய சீதாப்பிராட்டி நின்னைப் பிரிந்ததால் நீ அறத்தின் தன்மை இன்னதென்று அறியாது திகைப்புற்று இவ்வாறு செய்தனையோ!” என்று கூறினான்.

**அரக்கர் ஓர் அழிவு செய்து**

**கழிவரேல், அதற்கு வேறோர்**

**குரக்கினத்து அரசைக் கொல்ல,**

**மனு நெறி கூறிற்றுண்டோ?**

**இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்**

**எப்பிழை கண்டாய், அப்பா?**

**பரக்கழி இது நீ பூண்டால்**

**புகழை யார் பரிக்கற்பாலார்?**

“அரக்கர்கள் உன் மனைவி சீதையைக் கவர்ந்து சென்று ஒரு தீமையை உனக்குச் செய்தனர் என்றால், அதற்காக வேறோர் இனமாக

இருக்கின்ற குரங்கினத்தின் அரசனைக் கொல்ல வேண்டும் என்று அரசர்களுக்குரிய மனு நூலில் கூறப்பட்டுள்ளதோ? இரக்கம் என்பதனை இயல்பாக உடைய நீ, அதனை எங்கே ஒழித்தாய்? என்னிடம் எத்தன்மையான பிழையக் கண்டாய்? அறநெறி பிறழாது ஒழுகத் தகும் நீயே இத்தகைய பழியுடைய செயலைச் செய்வாயானால், பெரும் புகழுடன் உலகில் விளங்கக் கூடியவர் என்று யாரைக் காண்பது?" என, வாலி உரைத்தான்.

**கூட்டொரு வரையும் வேண்டாக்**

**கொற்றவ! பெற்ற தாதை**

**பூட்டிய செல்வம் ஆங்கே**

**தம்பிக்குக் கொடுத்துப் போந்து**

**நாட்டொரு கருமம் செய்தாய்,**

**எம்பிக்கு இவ் அரசை நல்கிக்**

**காட்டொரு கருமம் செய்தாய்,**

**கருமம்தான் இதன்மேல் உண்டோ?**

தன் வெற்றிக்குப் போர்க்களத்தில் பிறிதொரு துணை வேண்டாத ஆற்றல் உடையவனே! உனக்கு என்று நிலவப் பெற்ற அரசாட்சியை ஆங்கு நின் தம்பி பரதனுக்குக் கொடுத்துப் பின்னர்க் கானகத்திற்கு வந்தாய். மக்கள் வாழும் நாட்டில் இத்தகைய செயலைச் செய்த நீ, குரங்குகள் வாழும் கானகத்தில் என்னைக் கொன்று என் தம்பி சுக்கிரீவனுக்கு அரசை அளிக்கும் புதுமையைச் செய்தாய். இதனினும் உயர்ந்ததாகிய செயல் வேறு உண்டோ!

**தாரம் மற்றொருவன் கொளத் தன் கையில்**

**பார வெஞ்சிலை வீரம் பழுதுறு,**

**நேரும் அன்று, மறைந்து, நிராயுதன்**

**மார்பின் எய்யவோ வில் இகல் - வல்லதே?**

இராமா! உன்னுடைய மனைவியை மாற்றான் ஒருவன் கவர்ந்து செல்ல அவ் அரக்கனை அழித்தற்கு இயலாத நிலையில் சுமை தரும் கொடிய வில்லின் ஆற்றலைப் பழித்தலைப் போல, மறைந்து நின்று ஆயுதம் இல்லாத என்மீது பகைகொண்டு அம்பு எய்தனையே!

**வாலியின் மனமாற்றம்**

**‘தாயென உயிர்க்கு நல்கித்**

**தருமமும், தகவும், சால்பும்**

**நீயென நின்ற நம்பி!**

**நெறியினின் நோக்கும் நேர்மை**

**நாயென நின்ற எம்மால்,**

**நவையற உணரலாமே?**

**தீயன பொறுத்தி’ என்றான்**

**சிறியன சிந்தியாதான்.**

சிறுமை தரும் இழிவும் பழியும் சற்றும் சிந்திக்காது தன் மனப்போக்கில் வாழ்ந்த வாலி இராமனை நோக்கி, ‘‘எல்லா உயிர்களுக்கும் தாய் போன்று விளங்கிப் பாதுகாத்து அபயம் அளித்த அறமும், நற்பண்பும், ஒழுக்கமும் மேவும் சீலமும் நீயே என்னும் சிறப்புடன் விளங்கும் இராமா! நாய் போன்று இழிந்த நிலையில் உள்ள எங்களைப் போன்றவர்களால் குற்றங்கள் ஏதும் இல்லாது நன்மைகளை அறிந்து ஒழுகுவதற்குக் கைகூடுமோ! நான் செய்த தீய செயல்களைப் பொறுத்தருள்க!’’ என வேண்டினான்.

**அனுமனின் ஆற்றலை வாலி கூறல்**

**‘மற்றிலேன் எனினும் மாய**

**அரக்கனை வாலின் பற்றிக்**

**கொற்றவ! நின்கண் தந்து**

**குரக்கியல் தொழிலும் காட்டப்**

**பெற்றிலேன், கடந்த சொல்லின்**

**பயனிலைப், பிறிதொன்றேனும்,**

**‘உற்றது செய்’ கென்றாலும்**

**உரியன் இவ் அனுமன் என்றான்.**

வாலி மேலும் இராமனை நோக்கி, ‘‘வெற்றியுடைய இராமா! நான் வலிமையைக் கொண்டு நின்னை வஞ்சித்த அரக்கனாகிய இராவணனை என் வாலால் இறுகப் பற்றி உன் முன்னே கொண்டு வந்து கொடுக்கும் பேறு பெற்றிலன். எனவே கடந்துபோன செயலைப் பற்றி உரைப்பதால் எத்தகைய பயனும் இல்லை. ஆயினும், இச்செயலைப் பிரிக என்றாலும் வேறொரு

செயலைச் செய்க என்று கூறினாலும் அவ்வாறே செய்வதற்கு உரியவன் இவ் அனுமன் ஆவன்’’ என்று அனுமனைக் குறித்து உரைக்கலானான்.

**‘பஞ்சின்மெல் அடியாள் பங்கன்**

**பாதயுகம் அலாது யாதும்**

**அஞ்சலித்து அறியாச் செங் கை**

**ஆணையாய்! அமரர் யாரும்**

**எஞ்சலர் இருந்தார் உன்னால்,**

**இன்னமுது ஈந்த நீயோ,**

**துஞ்சினை, வள்ளியோர்கள்**

**நின்னின் யார் சொல்லற் பாலார்?**

‘‘என் தந்தையே! உமையை இடங்கொண்டு விளங்கும் சிவபெருமான் திருப்பாதம் அல்லாது வேறு ஒருவரை வணங்கியறியாத சிவந்த கைகளையுடையோய்1 பாற்கடலிலிருந்து கடைந்தெடுத்துத் தேவரமிழ்தத்தை நீ அளிக்க, அதனை அருந்திய தேவர்கள் யாவரும் குறைவற்றவர்களாகி அழியாது இருந்தார்கள். ஆனால், இனிய அமிழ்தத்தை அளித்த நீயோ இறக்கும் நிலையில் உள்ளனையே! நின்னைவிட வள்ளல் தன்மையுடையவர்கள் யாரைக் கூற இயலும்!’’ என்று அங்கதன் தந்தையைப் பற்றிப் புகழ்ந்துரைத்துப் பொருமினான்.

**தேற்றினன் மொழிந்தான்**

**‘தோன்றலும் இறத்தல் தானும்**

**துகள் அறந் துணிந்து நோக்கின்,**

**மூன்றுலகத்தினோர்க்கும்**

**மூலத்தே முடிந்த அன்றே?**

**யான் தவம் உடைமையால் இவ்**

**இறுதி வந்து இசைந்தது, யார்க்கும்**

**சான்றென நின்ற வீரன்**

**தான் வந்து வீடு தந்தான்.**

இப்பொழுது வாலி, ‘‘அங்கத! உலகில் பிறத்தலும் இறத்தலும் மூன்று வகையான உலகிலும் தோன்று தொட்டு எத்தகைய ஐயம் இல்லாது நடைபெற்று வரும் செயலாகும். இதனை மாற்ற முடியாது. யான் முன்னர்ச்

செய்த தவத்தின் பயனாகவே இத்தகைய இறுதி எனக்கு வந்து வாய்க்கப் பெற்றது. அதனால் யாவருக்கும் சாட்சியாய் விளங்கும் நாராயணன் என்னும் பரம்பொருள் இப்போது இராமனாகத் திருவிரக்கம் செய்து எனக்கு முத்திப்பேற்றை அருளினான்'' என மேலும் உரைத்தான்.

**பாலமை தவிர் நீ, என் சொல்**

**பற்றுதி யாயின், தன்னின்**

**மேலொரு பொருளும் இல்லா**

**மெய்ப்பொருள், வில்லும் தாங்கிக்**

**கால்தரை தோய நின்று,**

**கட்புலனுக்கு உற்றது அம்மா**

**'மால்தரும் பிறவி நோய்க்கு**

**மருந்து' என வணங்கு மைந்த!**

வாலி அங்கதனை நோக்கி, ''மைந்த! நீ இளமைப் பருவத்திற்குரிய விளையாட்டுத்தனத்தை விட்டொழி. என் சொல்லைக் கவனத்துடன் கேட்டு அதன்படி ஒழுகுவாய். தனக்கும் மேலான ஒரு பொருள் என்று சொல்லப்படாதவாறு விளங்குகின்ற பரம்பொருளாகிய நாராயணன், வில்லைத் திருத்தோளில் தாங்கித் தரையில் கால்படிய நின்று, நம் கண்கள் முதலான அறிவுக்கும் தெளிவாகக் காண உற்ற நிலையில் இராமனாக வந்துள்ளான். மயக்கத்தைத் தரும் பிறவி என்கின்ற பிணிக்கு அரிய மருந்தாக உள்ள அப்பெருமானை நீ வணங்கு'' என உரைக்கலானான்.

**'என்னுயிர்க்கு இறுதி செய்தான்**

**என்பதை இறையும் எண்ணாது**

**உன்னுயிர்க்கு உறுதி செய்தி,**

**இவற்கு அமர்உற்றது உண்டேல்,**

**பொன்னுயிர்த்து ஒளிரும் பூணாய்!**

**பொது நின்று தருமம் நோக்கி**

**மன்னுயிர்க்கு உறுதி செய்வான்**

**மலரடி சுமந்து வாழ்தி**

பசும்பொன் திரள விளங்கும் ஆபரணத்தை அணிந்த மைந்தனே! இராமன் என் உயிர்க்குக் கெடுதி செய்தான் என்று சிறுதும் எண்ணாதே! நீ

அப்பெருமானை நாடிச் சரண் அடைந்து உன்னுடைய உயிர்க்கு நன்மையைத் தேடிக் கொள். இவனுக்காகப் போர்க்களத்திற்குச் சென்று போர் செய்ய வேண்டும் என்றாலும், நீயும் உடன் சென்று போர் புரிக. மன்னுயிர்க்கெல்லாம் அவ்வவற்றின் பக்குவமறிந்து தன்மை செய்பவனாகிய அவன் பாத மலர்களைத் தலைமேற்கொண்டு இனிது வாழ்வாயாக!

**வீடுற்றான் விறலோன்**

**தன்னடி தாழ்தலோடும்,**
**தாமரைத் தடங்கணானும்,**
**பொன் உடைவாளை நீட்டி,**
**'நீ இது பொறுத்தி என்றான்,**
**என்னலும், உலகம் ஏழும்**
**ஏத்தின. இறந்து வாலி,**
**அந்நிலை துறந்து வானுக்கு**
**அப்புறத்து உலகன் ஆனான்.**

இவ்வாறு வாலி இராமனிடம் கூறி அங்கதனை அடைக்கலமாகச் சேர்க்க, அவனும் இராமனுடைய பாதங்களை வணங்கி நின்றான். உடனே தாமரை போன்ற செங்கண்களையுடைய இராமன் தன்னிடமிருக்கும் பொன் மயமாக ஒளிரும் உடைவாளை அங்கதனிடம் நீட்டி, ''இதனைப் பெற்றுக்கொள்'' என்று ஆணையிட்டான். அங்கதன் இராம கைங்கரியத்தில் ஈடுபட்டமையறிந்து ஏழுலகமும் ஏத்தின. வாலியின் உயிர் உடலிலிருந்து நீங்கி வானுலகத்தினையும் கடந்து போன உலகத்தை அடைந்தது.

**"சுக்ரீவனுக்கு முடிசூட்டுதல்**

**மறையோர் ஆசி வழங்க, வானுளோர்**
**நறை தோய் நாள்மலர் தூவ, நன்னெறிக்கு**
**இறையோன்தன் இளையேன் அவ் ஏந்தலைத்,**
**துறையோர் நூல் முறை மௌலி சூட்டினான்.**

வேதங்களைக் கற்ற அந்தணர் வாழ்த்துகளை வழங்கவும், தேவர்கள் நறுந்தேன் கற்பக மலர்களைத் தூவவும், நன்னெறியின் காவலர்களாக விளங்கும் முனிவர்கள் முன்னிருந்து ஆற்றவேண்டிய கடமைகள் செய்யவும்

அறநூல்களில் விதிக்கப்பட்டபடி இலக்குவன் பெருமைக்குரிய சுக்கிரீவனுக்கு அரச மகுடத்தைச் சூட்டினான்.

**இறத்தலும் பிறத்தல் தானும்**
**என்பன இரண்டும், யாண்டும்**
**திறத்துளி நோக்கிற், செய்த**
**வினைதரத் தெரிந்த அன்றே?**
**புறத்து இனி உரைப்பது என்னே?**
**பூவின் மேல் புனிதற்கேனும்,**
**அறத்தினது இறுதி, வாழ்நாட்கு**
**இறுதி, அ.்.து உறுதி அன்ப!**

ஒருவன் பிறப்பதும் இறப்பதும் ஆகிய இரண்டு செயல் தன்மையும் நன்கு ஆராய்ந்து நோக்கும் போது, இவை அவரவர்களுடைய வினையைக் கொண்டே அமைவது என்று அறியலாம். இதனைவிட வேறு ஒன்றினை உரைத்தற்கு யாது உள்ளது? தாமரை மலரில் விளங்கும் நான்முகன் ஆனாலும் அறநெறியிலிருந்து தவறுவானாயின் வாழ்நாள் அழிவுறும். அத்தகைய அறநெறியைக் காத்து ஒழுகுவானாயின் வாழ்நாள் உறுதிபெற்று நன்கு விளங்கும்.

**இசை அருவியும் தாமரையும்**

**களிக்கு மஞ்ஞையைக், கண்ணுளர்**
**இனம் எனக் கண்ணுற்று,**
**அளிக்கும் மன்னரிற் பொன்மழை**
**வழங் கின அருவி,**
**வெளிக்கண் வந்த கார் விருந்தென,**
**விருந்து கண்டு உள்ளம்**
**களிக்கு மங்கையர் முகம் எனப்**
**பொலிந்தன கமலம்**

நன்கு தோகையை விரித்துக் களிப்புடன் ஆடுகின்ற மயில்களைக் கழைக் கூத்தாடிகள் என்று எண்ணிப் பரிசுப் பொருள்களை வழங்குகின்ற அரசர்களைப் போன்று மலையிலிருந்து பெருகும் அருவிகள் பொன்னை வாரிக் குவித்த வண்ணம் விளங்கின. வானத்திலிருந்து வந்த மேகங்களை நல்விருந்து என்று கருதி மகிழ்ந்து மனம் மகிழ்கின்ற மங்கையர் வரவேற்கும்

நிலையில், பொய்கையிலிருந்த தாமரைக் கொடிகள் நீரிலிருந்து எழுச்சி பெற்றுப் பொலிவுடன் விளங்கின.

**அஞ்சிய இலக்குவனுக்கு தாரை ஆறுதல்**

**அந்தமில் காலம் நோற்ற**

**ஆற்றல் உண்டாயின் அன்றி,**

**இந்திரன் முதலினோரால்**

**எய்தலாம் இயல்பிற்று அன்றே?**

**மைந்த நின் பாதம் கொண்டு எம்**

**மனை வரைப் பெற்று, வாழ்ந்தேம்,**

**உய்ந்தனம், வினையும் தீர்ந்தேம்,**

**உறுதி வேறு இதனின் உண்டோ?**

“மைந்த! அளவில்லாத காலம் தவம் செய்தால் மட்டுமே நின் வருகையானது இந்திரன் முதலான தேவர்களுக்கும் வாய்க்கும் இத்தகைய சிறப்பின் மிக்க தன்மையினை நாங்கள் இயல்பாகப் பெற்றோம். நின் பாதங்கள் எங்கள் இருப்பிடத்தில் பதிந்ததால் இனிது வாழல் உற்றவர்களானோம். நாங்கள் தீவினையாகிய துன்பம் தீர்ந்து நற்கதியைப் பெற்றவரானோம். இதனைக் காட்டிலும் இந்நிலவுலகத்தில் அடையத்தக்க பேறு வேறு உண்டோ?

**இலக்குவன்தன் தாயரை நினைந்து அழுங்கல்**

**‘ஆர்கொலோ உரைசெய்தார்? என்று**

**அருள்வரச் சீற்றம் அ.்.கப்,**

**பார்குலாம் முழு வெண் திங்கள்,**

**பகல் வந்த படிவம் போலம்,**

**ஏர்குலாம் முகத்தினாளை,**

**இறைமுகம் எடுத்து நோக்கித்**

**தார்குலாம் அலங்கல் மார்பன்**

**தாயரை நினைந்து நைந்தான்.**

இவ்வாறு உரைக்க கேட்ட மலர்மாலை தரித்து மேவும் இலக்குவன், சினம் தணிந்து, இவ் உரையைச் சொன்னவர் யாவர் என்று அறியத் தன் தலையை மேலே சிறிது உயர்த்தி நோக்கினான். ஆங்கு வெண்மையான

முழுநிலவு ஒன்று பகற் பொழுதில் ஒளி குறைந்து விளங்குதல் போன்று அழகு விளங்கும் முகத்தினளாகிய தாரையைக் கண்டதும், அவனுக்குத் தன் தாயாராகிய சுமித்திரை முதலானவர்களுடைய நினைவு தோன்ற மிகவும் வருந்தினான்.

**தாரையின் மறுமொழி**

**சீறுவாய் அல்லை – ஐய!**
**சிறியவர் தீமை செய்தால்**
**ஆறுவாய், நீய அல்லால், மற்று**
**ஆர்உளர்? அயர்ந்தான் அல்லன்,**
**வேறு வேறு உலகம் எங்கும்**
**தூதரை விடுத்த அவ் எல்லை**
**ஊறுமா நோக்கித் தாழ்ந்தான்,**
**உதவிமாறு உதவி உண்டோ?**

இலக்குவன் விளம்பியதைத் தொடர்ந்து தாரை, ‘‘ஐயனே! சினம் கொள்ள வேண்டா. சிறியவர் தீமை செய்தால் உன்னைத் தவிர பொறுமையைக் கொள்ளக் கூடியவர்கள் வேறு யாவர் உள்ளார்? ஆதலார் பொறுமை காட்டுவாய். சுக்கிரீவன் உனக்குத் தந்த வாக்குறுதியை மறைக்கவில்லை. வெவ்வேறு இடத்தில் உள்ள வானர வீரர்களை அழைத்துப் பின்னர் வந்து சேரும் காலத்தை எதிர்நோக்கித் தாமதித்து உள்ளான். நீ அவனுக்குச் செய்த உபகாரத்திற்கு ஈடாகத் திருப்பிச் செய்வதற்கும், உதவி என்று ஒன்று உள்ளதோ!’’ என்று உரைக்கலானாள்.

**வானரப் படையின் வன்மைச் சிறப்பு**

**தோயின், ஆழி ஓர் ஏழும் நீர்**
**சுவறி வெண் துகளாம்,**
**சாயின் அண்டமும் மேரவும்**
**ஒருங்குடன் சாயும்**
**ஏயின், மண்டலம் எள்ளிட**
**இடம் இன்றி இரியும்**
**காயின் வெங் கனற் கடவுளும்**
**இரவியும் கரியும்**

ஆங்கு வந்து சேர்ந்த வானரச் சேனையானது நீரில் அமிழ்ந்து எழுந்தால் ஏழு பெருங்கடல்களும் நீர்வற்றிப் புழுதியை உண்டாக்கிவிடும். அச் சேனை முழுமையும் ஒரு பக்கமாகச் சென்றடைந்தால் இந்த அண்டம் மட்டும் அல்லாது நிலை பெயராத மேரு மலையும் ஒருங்கே ஒருபுறத்தில் சாய்ந்துவிடும். அச் சேனையானது எழுந்து சஞ்சாரம் செய்தால் எள் இடுவதற்கும் இடம் இன்றிப் போகும். அது சினம் கொண்டு எழுந்தால், கொடிய வெம்மையைத் தரும் கடவுளான சூரியனும் எரிந்து கரியாகும். இத்தன்மையில் சுக்கிரீவனுடைய வானரச் சேனை விளங்கிற்று.

**ஓடிக்குமேல், வட மேருவை**
**வேரொடும் ஓடிக்கும்,**
**இடிக்குமேல், நெடு வானக**
**முகட்டையும் இடிக்கும்**
**பிடிக்கு மேற், பெருங் காற்றையும்**
**கூற்றையும் பிடிக்கும்**
**குடிக்கு மேற், கடல் ஏழையும்**
**குடங்கையிற் குடிக்கும்**

அவ் வானரச் சேனை ஒடிக்க வேண்டும் என்று கருதினால் மேருமலையை வேருடன் ஒடித்துவிடும். இடிக்க வேண்டும் என்று கருதினால், வான் முகட்டையும் இடிக்கும் ஆற்றல் உடையது. ஒன்றைப் பற்றிப் பிடிக்க வேண்டும் என்று கருதினால் காற்றை மட்டும் அல்லாது கொடிய கூற்றுவனையும் பிடித்து அழிக்கும். அச்சேனை குடிக்க வேண்டும் என்று நினைத்தால் ஏழு பெருங்கடல்களில் உள்ள நீரைத் தன் உள்ளங்கையில் முகந்து குடித்துவிடும்.

### அனுமன் அங்கதன் தென்திசையில்

**தென் திசைக்கண் இராவணன் சேண் நகர்**
**என்று இசைக்கின்றது. என் அறிவு இன்னணம்**
**வன் திசைக்கு இனி மாரதி நீ யலால்**
**வென்று இசைக்கு உரியார் பிறர் வேண்டுமோ?**

அனுமனே! தென்திசையில் இராவணன் விளங்கும் பெரிய நாடான இலங்கை நகரம் உள்ளது என்று சொல்லப்படுகின்றது. இத்தகைய

அரக்கர்கள் வாழும் வலிமையான இடம் நோக்கிச் செல்வதற்கு வெற்றிக்கு உரியவனாகிய நீ யன்றி வெறு பிறர் தேவையோ?

**வள்ளல் தேவியை வஞ்சித்து வெளவிய**

**கள்ள வாள் அரக்கன் செலக் கண்டது,**

**தெள்ளியோய் அது தென்திசை என்பதோர்**

**உள்ளமும் எனக்கு உண்டென உன்னுவாய்**

அனுமனே! வள்ளலாகிய இராமன் தேவியாகிய சீதையை வஞ்சனை செய்து கவர்ந்து சென்ற கள்ளம் உடைய அரக்கனாகிய இராவணன் செல்லக் கண்டதும் நினைத்துப் பார்ப்பாயாக! என் மனத்திலும் அது தென்திசை என்கிற எண்ணம் ஒன்று உள்ளது என்று கருதுவாயாக.

**தென்தமிழ் நாட்டு அகல் பொதியில் திரு முனிவன்**

**தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்**

**என்றும் அவன் உறைவிடமாம், ஆதலினால்**

**அம் மலையை இறைஞ்சி ஏகிப்,**

**பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை எனும்**

**திரு நதியின் பொழிய, நாகக்**

**கன்று வளர் தடஞ் சாரல் மகேந்திர மா**

**நெடு வரையும் கடலும் காண்டிர்**

தென் தமிழ்நாட்டில் நன்கு விளங்கும் அகன்ற பொதியமலையில் தமிழ்முனிவனாகிய அகத்திய முனிவன் விளங்கும் தமிழ்ச்சங்கத்தை அடைவீர்கள். அதுவே அவனுடைய இருப்பிடம். அந்த மலையை வணங்கிப் பெருமையும் அழகும் நிறைந்த தூய நீர் பெருகும் தண் பொருனை என்னும் தெய்வத்திரு ஆற்றை அடைவீர்கள். அங்கிருந்து சென்றதும் யானைக் கன்றுகள் விளங்கும் தாழ்ந்த மலைச்சாரல்களையுடைய நெடிய மகேந்திர மலையையும் கடலையையும் காண்பீர்கள்.

**சீதையை அறியச் செல்வழி**

**பாற்கடல் பிறந்த தெய்வப்**

**பவளத்தைப், பஞ்சி ஊட்டி**

**மேற்பட மதியம் சூட்டி**

**விரகுற நிரைத்த மெய்ய,**

**கால்தகை விரல்கள் ஐய!**

**கமலமும் பிறவும் எல்லாம்**

**ஏற்பில என்பதன்றி,**

**இணை அடிக்கு உவமை என்னோ?**

சீதையைத் தேடிச் செல்லும் அனுமனை நோக்கி இராமன், ‘‘அன்பனே! பாற்கடலில் தோன்றிய தெய்வத்தன்மை பொருந்திய சிவந்த பவளமணியைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மேலும் சிவப்பாக்கி, அதன்மீது ஒளி திகழும் முழுமதியின் பதினாறு அமுதகலைகளையும் அணிவித்து, நன்கு திறமை விளங்குமாறு வரிசைப்பட வைத்தால் எத்தகையதாக இருக்குமோ அவ்வாறு பிராட்டியின் கால் விரல்கள் எழிலோடு விளங்கும் மேலும் செந்தாமரை மலரும் மற்றும் உள்ள பொருள்கள் யாவும் அவள் பாதங்களுக்கு உவமையாகாது என்றால் அப்பாதங்களுக்கு உவமையாக உரைப்பதற்கு யாது உள்ளது? என்று கூறினான்.

**கொண்டலின் குழலி ஆம்பல்**

**குனி சிலை வள்ளை கொற்றக்**

**கெண்டை ஒண் தரளம் என்று இக்**

**கேண்மையின் கிடந்த திங்கள்**

**மண்டலம் வதனம் என்று**

**வைத்தனன் விதியே நீஅப்**

**புண்டறி கத்தை உற்ற**

**பொழுது அது பொருந்தித் தேர்வாய்**

கரிய மேகத்தின் கொழுந்தும் சிவந்த அல்லி மலரும் வளைந்த வில்லும் வள்ளைக் கொடியின் இலையும் சிறப்புடைய கெண்டை மீனும் ஒளி திகழும் முத்தும் மற்றும் இதற்கு உறவாக விளங்கும் ஏனையவும் திகழ்கின்ற மதி மண்டலத்தைச் சீதைக்கு முகம் என்று பிரமன் படைத்தனன். நீ அத்தகைய தாமரை போன்ற முகம் உடையவளைக் காணப்பெறும் போது நான் கூறியவற்றை நன்கு உறுதி செய்வாய்

**மங்கையர்க்கு ஓதி வைத்த**

**இலக்கணம் வண்ண வாசப்**

**பங்கயத்தவட்கும் ஐயா**

**நிரம்பல பற்றி நோக்கின்**

**செங்கயற் கருங்கண் செவ் வாய்த்**
**தேவரும் வணங்கும் தெய்வக்**
**கொங்கை அக் குயிலுக்கு ஒன்றும்**
**குறைவில குறியும் அ.்.தே**

அன்ப! நன்கு ஆராய்து பார்க்கும்போது மகளிர்க்கு உரைக்கப்பட்ட உடலழகு இலக்கணம் யாவும் வண்ணமுடன் நறுமணம் உடைய தாமரையில் விளங்கும் திருமகளுக்கும் நிரம்பப் பெறவில்லை. கயல் மீன் போன்ற கண்களும் செவ்வாயும் கொண்டு விளங்குபவள் தேவர்களும் வணங்கும் மேன்மை பொருந்திய தனங்களும் குயில் போன்ற இனிய சொல்லும் உடைய சீதைக்கு அத்தகைய உத்தம இலக்கணங்களில் ஒரு குறைவும் கிடையாது. இதுவே அடையாளமும் ஆகும்

**இராமன் புகன்ற அடையாளம்**

**முன்னை நான் முனியோடும் முதிய நீர் மதிலைவாய்ச்**
**சென்னி நீள் மாலையான் வேள்வி காணிய செல**
**அன்னம் ஆடும் துறைக்கு அருக நின்றாளை அக்**
**கன்னிமாடத்திடைக் கண்டதும் கழறுவாய்**

முன்பு நான் விசுவாமித்திர முனிவரொடு நீர் வளம் திகழும் மிதிலை நகரின் வீதியில் தலையில் நீண்ட மாலை தரித்த சனக மன்னன் செய்த வேள்வியைக் காணும் பொருட்டுச் சென்று கொண்டிருக்குப் போது அன்னப் பறவைகள் மகிழ்ந்து விளங்கும் நீர்த்துறையின் அருகே உள்ள கன்னிமாடத்தில் சீதை நின்று கொண்டிருந்தபோது நான் பார்த்த நிகழ்ச்சியை உரைப்பாய்

**முன்பு நான் அறிகிலா முளி நெடுங் கானிலே**
**என் பினே போதுவாய் நினைதியோ ஏழை நீ?**
**இன்பமாய் ஆருயிர்க்கு இனியை ஆயினை இனித்**
**துன்பமாய் முடிதியோ என்றதும் சொல்லுவாய்**

முன்னர் நான் அறிதற்கு இயலாத முட்களையுடைய காட்டிலே என் பின்னால் வருவதற்கு எண்ணுகின்றனையோ என்னுடைய உயிர்க்கு இனிமையாய் இங்கேயே இரு நீ வருவதால் எனக்குத் துன்பம் செய்தவள் ஆகுவையோ என்று நான் அப்பொழுது உரைத்ததையும் உரைப்பாய்.

**மல்லல் மா நகர் துறந்து ஏகும் நாள் மதி தொடும்**
**கல்லின் மா மதிள் மணிக் கடை கடந்திடுதல் முன்**
**எல்லை தீர்வ அரிய வெங் கானம் யாதோ எனச்**
**சொல்லினாள் அஃது எலாம் உணர நீ சொல்லுவாய்**

வளமுடைய பொயி நகரமான அயோத்தியைக் கடந்து வரும்போது சந்திரனைத் தீண்டுகின்ற மிகவும் உயர்ந்து விளங்கும் பாறாங்கற்களால் ஆகிய மதிலைத் தாண்டியதும் கொடுமை நிறைந்த காடு எவ்விடத்தில் உள்ளது என்று என்னை வினவினாள் என்பதையும் சீதையின் பால் பொருந்தத் கூறுவாயாக!

**இனையவாறு உரைசெயா இனிதன் ஏகுதி எனா**
**வனையும் மா மணி நல்மோதிர மளித்து அறிஞ நின்**
**வினையெலாம் முடிகெனா விடைகொடுத்து உதவலும்**
**புனையும் வார் கழலினான் அருளொடும் போயினான்**

இவ்வாறு இராமன் அனுமனை நோக்கி உரைத்ததும் இனிதே செல்வாய் என்று கூறி இரத்தின மணிகளால் இழைத்துச் செய்யப்பட்ட கணையாழியை அளித்துப் பின்னர் அறிஞனே இனி ஆக வேண்டியதைச் செய்க என்று வாழ்த்தி விடைகொடுத்தான். அனுமனும் வீரக் கழலையணிந்த இராமன் திருவருளைத் துணை கொண்ட வனாகி அங்கிருந்து ஏகினான்.

### இலங்கையில் வானர்

**புக்க நகரத்தினது நாடுதல் புரிந்தார்**
**மக்கள் கடை தேவர்சிலை வானுலகின் வையத்து**
**ஒக்க உறைவோர் உருவம் ஓவியம் அலால் மற்று**
**என் குறிபின் உள்ளவும் எதிர்ந்திலர் திரிந்தார்**

வானர வீரர்கள் அந்த நகரத்துள் புகுந்து இனிது சீதையைத் தேடத் தொடங்கினார்கள். தேவலோகத்திலும் மற்றும் நிலவுலகத்திலும் விளங்கும் தேவர்கள் முதலாக மனிதர்கள் ஈறாக விளங்கும் வடிவத்துடன் ஓவியத்தின் வகையால் உணர்வு அற்றவராக ஆங்கு நிலவினார்கள்.

### சம்பாதி சீதை இடம் தெரிவித்தல்

**பாகொன்று குதலையாளைப்**

**பாதக அரக்கன் பற்றிப்**

**போகின்ற பொழுது கண்டேன்**

**புக்கனன் இலங்கை புக்கு**

**வேகின்ற உள்ளத் தாளை**

**வெஞ் சிறையகத்து வைத்தான்**

**ஏகுமின் காண்டிர் ஆங்கே**

**இருந்தனன் இறைவி இன்னும்**

வெல்லப் பாகுபோன்ற இனிய மழைச் சொல்லுடைய சீதாப்பிராட்டியைத் தீயவனான இராவணன் என்னும் அரக்கன் கவர்ந்துசெல்லும் போது நான் கண்டேன். அவன் இலங்கையை அடைந்து உள்ளம் வேகின்ற தன்மையில் உள்ள அப் பிராட்டியை வெம்மையுடைய சிறையில் வைத்துளான். இப்போதும் அவள் அங்குதான இருக்கிறாள் நீங்கள் சென்றால் காணலாம் எனச் சம்பாதி கூறினான்.

## கிட்கிந்தா காண்டம் - மகளிர்

கம்பராமாயண கிட்கிந்தா காண்ட மகளிர் பற்றி ஆராயப் புகுமுன், கம்பரின் பொதுவான படைப்பு நோக்கத்தைத் தெளிவுப்படுத்திக் கொள்ளுதல் நலம். கம்பரின் பாத்திரப் படைப்புகள் குறிக்கோள் நோக்கினவை. தமிழ் மரபு சார்ந்தவை. தலைமைப் பாத்திரமாயிருந்தாலும், துணைமைப் பாத்திரமாக இருந்தாலும், கம்பர், ஒவ்வொரு பாத்திரப் படைப்பிலும் தனிக் கவனம் செலுத்தி, தம் முத்திரையைப் பதித்துள்ளார். தமிழ் மரபுக்கு ஒத்துவராத பாத்திர இயல்புகளை, அ∴து சிறுபாத்திரமாக இருந்தாலும், மாற்றம் செய்துள்ளார். மேலும் தேவையான இடங்களில் பாத்திரங்களின் மூலம் மனித நேயத்தினை, உலகத்தினா் பேண வேண்டிய ஒழுக்கக் கோட்பாடுகளை எடுத்துரைத்துள்ளார்.

கிட்கிந்தா காண்டம் கதைத் தலைவியான சீதை நேரடியாகப் பங்கு பெறாத ஒரே காண்டமாகும். ஆரணிய காண்டத்தில் இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதையை மீண்டும் சுந்தர காண்டத்தில் தான் காண

முடிகிறது. இடைப்பட்ட கிட்கிந்தா காண்டத்தில் சீதை பற்றிய செய்திகள் மட்டும் பேசப்பட்டுள்ளன.

கிட்கிந்தா காண்டத்தைப் பொறுத்தவரை பெண் பாத்திரங்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட பெண் பாத்திரங்கள் இக்காண்டத்தின் கதை ஓட்டத்தில் அறவே இடம் பெறவில்லை. தாரை, சுயம்பிரபை என்ற இரு மாதர்கள் இக்காண்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். இக்காண்டத்திலேயே அவர்களின் பங்கும் முற்றுப் பெற்றுவிடுகிறது. 'உருமை' என்ற பாத்திரம் (சுக்கிரீவன் மனைவி) கதையோட்டத்தில் நேரடியாகப் பங்கு பெறவில்லை. அவள் பற்றிய செய்திகள் மிகச் சிலவாக இக்காண்டத்தில் பேசப்பட்டுள்ளன.

தாரை என்பவள் வாலியின் மனைவி. மையக் கதையோட்டத்தில் அவளின் பங்கு குறிப்பிடத்தக்கது. 'தாரை' பாத்திரத்தைக் கம்பர் கையாண்டுள்ள விதமும், வான்மீகத்திலிருந்து மாற்றம் செய்த விதமும் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக அமைந்துள்ளது.

சுயம்பிரபை, கிளைக்கதையில் வரும் பாத்திரம், காப்பிய மையக் கதை ஓட்டத்தில் அவளுக்குப் பங்கில்லை என்றாலும், அப்பாத்திரப் படைப்பின் மூலம் கட்பர் 'இணை' என்ற காப்பிய உத்தியைக் கையாண்டுள்ளார். இனி, இம்மகளிர் பற்றியும், அவர்கள் பாத்திரப் படைப்பில் கம்பர் காட்டியுள்ள அக்கறை பற்றியும் விரிவாகக் காண்போம்.

சீதை :

சீதையைப் பற்றிய செய்திகள், கிட்கிந்தா காண்டத்தில் பம்பைப் படலம், கலம் காண் படலம், கார்காலப் படலம், நாட விட்டப் படலம் என்பவற்றுள் இடம் பெற்றுள்ளன. இக்காண்டங்களில் சீதை பேசப்படும் அனைத்து இடங்களிலும் சீதையின் புற அழகே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. சீதையைப் பிரிந்த இராமன் பிரிவுத் துயரால் நலிவுறுகிறான். அம் மனநிலையில் அவனுக்குப் பார்க்கும் பொருள்களெல்லாம் தேவியை நினைவூட்டுகின்றன. அதன் காரணமாக அவன், அவளைப் பற்றி அனுமன், சுக்கிரீவன் இவர்களிடம் பேசும் போதும், அவள் அணிந்திருந்த நகைகளைக்

கண்ட போதும், அனுமனிடம் சீதையின் அடையாளங்களைச் சொன்ன போதும் அவளுடைய தோற்றப் பொலிவையே, புற அழகையே முன் நிறுத்திப் பேசுவதாகக் கம்பர் காட்டியுள்ளார். ஏனெனில், அடுத்துவரும் சுந்தர காண்டத்தில் சீதையின் மன அழகு பேசப்பட இருக்கிறது. தன் உள்ளத்தில் கணவன் நாமத்தையும் உருவத்தையும் நிலைநிறுத்தி மாதவமாற்றிய சீதையின் புற அழகைப் பேச வரும் காண்டங்களில் இடமில்லை என்று நினைத்து, கிட்கிந்தா காண்டத்தில் சீதையின் புற அழகிற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசிவிட்டார் கம்பர்.

சீதையின் மன அழகைப் பேசும் போதெல்லாம் கம்பர் ஒரு மானுடனாய் நின்று வயந்தார் என்றால், அவள் புற அழகைப் பேசும் இடமெல்லாம் ஒரு கலைஞனாய் நின்று கவி புனைந்துள்ளார் என்று துணிந்துரைக்கலாம். கம்பரின் கலை உள்ளம், சீதையை,

**'மலர்சுகொம் பனைய மடச்சீதை' (1.31)**

**'பஞ்சு பூத்த மழையனைய குழலாள்' (1:32)**

**'மின்னிடைச் சனகி' (6:18)**

**'ஓவியமே என ஒளி கவின் குலம் தேவி' (9:1)**

**'தூவி அன்னம் அன்னாள்' (9:51)**

என்றெல்லாம் வர்ணித்துள்ளார்: பொய்கையில் விரிந்த குவளைகள் சீதையின் கண்கள் என்றும், விரை தாமரை முகம் என்றும், கொடி வள்ளி இலைகள் செவி என்றும், வரால் மீன்கள் கணைக்கால் என்றும், ஆமை புறவடிகள் என்றும் (1:26) உவமித்து நயம் கண்டது. ஆனால், சீதையை எப்படி வர்ணித்தாலும் அச்சொற்கள் அவள் அழகின் கண பரிணாமத்தைக் காட்டவில்லை என்றுணர்ந்து, 'உவமை காட்டப் பெற்றிலேன்' (12:57) என்று துணிந்து,

**'மங்கைய ரிவளை யொப்பார் மற்றிலர்' (12:51)**

என்ற முடிவுக்கு வருகிறார் கம்பர். சீதையை அவர் தம் கவிக்குள் அடங்கா அழகுப் பெட்டகமாக இக்காண்டத்துள் இனம் காட்டியுள்ளார்.

‘தாரை’ வாலிவதைப் படலத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படுகிறாள். இக்காண்டத்தில் மூன்று இடங்களில் அவள் பேசப்பட்டுள்ளாள். இராமன் துணையுடன் சுக்கீரவன் வாலியை எதிர்த்துப் போர் முழக்கம் செய்கிறான். அதைக் கேட்ட வாலி வெகுண்டு எழுந்தான். ஆப்பொழுது வாலியைத் தடுக்கும் முகமாக, அவன் மனைவியான தாரை அறிமுகம் பெறுகிறாள்.

**‘அமுதில் தோன்றிய வேய் இடை தோளினாள்’ (1:22)**

என்று அவளின் அழகை வர்ணிக்கும் கம்பர் அவளை மதிநுட்பம் உடையவளாகவும், சிந்தித்துச் செயல்படும் திறத்தவளாகவும் அறிமுகப் படுத்தியுள்ளார். சுக்கிரீவன் வாலியிடம் போர் செய்து தோற்றோடியவன். வாலியின் முன்நிற்கத் தைரியமில்லாதவன். வாலிக்குப் பயந்து, அவன் தனக்குக் கிடைத்த சாபத்தினால் நுழைய முடியாத ருசியமுக மலையில் வாழ்பவன் அப்படிப்பட்டவன், திரும்பப் போருக்கு அழைக்கிறான் என்றால், அவனுக்கு ‘நெடுந்துணை’ (7:24) ஒன்று கிடைத்திருக்க வேண்டும் என்பதை நுட்பமாக எண்ணிப் பார்த்து வாலிக்கு, அது பற்றி உரைக்கிறாள். அத்துடன், சுக்கிரீவனுக்கு இராமன் என்பவன் உயிர்த் துணையாகிய செய்தியையும் (தூதர்கள் மூலம் தாம் அறிந்து வைத்திருப்பது) உடன் எடுத்துரைப்பதை நோக்கும்போது, தாரை அரசியலறிவு மிக்கவளாகவும் கம்பரால் படைத்துக் காட்டப்பட்டுள்ளது விளக்கம் பெறுகிறது.

வாலி இறந்தபின், அச்செய்தி கேட்ட தாரை போர்க்களத்திற்கு வந்து அவன் மீது விழுந்து புரண்டு பல சொல்லி அழுகிறாள். கணவனை இழந்த ஒரு பெண்ணின் இயல்பான துயரங்கள் அவள் அழுகையில் வெளிப்பட்டுள்ளது. வாலியின் சிவபக்தியும், அவன் பாற்கடல் கடைந்து அமுதம் எடுத்த பராக்கிரமும் அவள் புலம்பலில் வெளிப்பட்டு நிற்கின்றன.

இறுதியாகத் தாரை கிடகிந்தைப் படலத்தில் இடம்பெற்றுள்ளாள். இலக்குவன் கிட்கிந்தைக்குச் சினத்துடன் வந்து நின்றபொழுது, தாரையானவனள் அச்செய்தி கேட்டு, பயந்து செய்வதறியாது நிற்கும் வானர வீரர்களை அகற்றி இலக்குவனை தைரியத்துடன் சந்திக்கிறாள். எதையும் நேர் நின்று எதிர் நோக்கும் அவள் பண்பு இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது.

கம்பர், இப்படலத்தில் தாரையை, வான்மீகி படைத்த போக்கிலிருந்து வேறுபடுத்தி படைத்துள்ளார். வான்மீகி படைத்த தாரை வானரப் பெண்ணிற்குரிய இயல்புகளுடன் காணப்படுகிறாள். அதாவது, அந்தந்த நேர உணர்ச்சிகளின் வழி செயல்படுபவளாக இருக்கிறாள். வாலி இறந்தவுடன் இறக்க முயல்வாள். பின் அனுமன் தடுக்க மனம் மாறுவாள். ஆதன்பின், இராமனைக் கண்டவுடன் நெகிழ்ந்து அவன் கைவில்லாக இறக்க விரும்புவாள். பின் இராமன் தேற்ற சமாதானம் அடைவாள். கணவன் மீது மிகுந்த பற்றுடையவளாக இருக்கும் அவள், சிறிது காலத்திற்குப் பின் சுக்கிரீவனுடன் புணர்ச்சியில் ஈடுபட்டு, மனம் மகிழ்கிறாள். கம்பர் படைத்த தாரையோ மனித இயல்புடையவளாக, பண்பாடு பேணுபவளாகக் காட்சியளிக்கிறாள். செய்வதைத் தெரிந்து, ஆராய்ந்து செய்கிறாள். வாலி இறந்தவுடன் தன் மகன் அங்கதனுக்காக உயிர் வாழ எண்ணுகிறாள். கைம்மைக் கோலம் பூண்டு, தன்னை நெறிப்படுத்திக் கொள்கிறாள். இதைக் கம்பர், தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் எடுத்துரைப்பதாகவும் கொள்ள வாய்ப்புண்டு.

கணவனை இழந்த தாரை,

**‘மங்கல வணியை நீக்கி**
**மணியணி துறந்து வாசக்**
**கோங்கலர் கோதை மாற்றிக்**
**குங்குமஞ் சாந்தக் கொட்டா**
**போங்குவெம் முலைகள் பூகக்**
**கழுத்தோடு மறையப் போர்த்த நங்கை (10:51)**

யாகக் கைம்மைக் கோலம் பூண்டு காட்சியளிக்கிறாள்.

அவளின் கோலம் இலக்குவனுக்குத் தன் தாயரை நினைவூட்டியது. மேலும், அக்கோலம் அவனின் சினத்தையும் சிறிது தணித்தது. துாரை இலக்குவனிடம் கோபத்தைக் தணிக்கும் விதத்தில் இதமாகவும்,அதே சமயத்தில் அறிவுப் பூர்வமாகவும் பேசத் தொடங்குகிறாள். அவளின் பேச்சாற்றல் அதில் வெளிப்படுகிறது. தவறு செங்தவர்கள், தவறை உணர்ந்து அதை ஒத்துக்கொள்ளும்போது, எதிராளியை அதில் பணிய

வைத்துவிட முடியும் என்ற உத்தியைத் தெரிந்து, சுக்கிரவனிடம் தவறுள்ளது என்று கூறி,

**'சீறுவா யல்லை யைய**
**சிறியவர் தீமை செய்தால்'**

என்று அவனை ஆற்றுவிக்கிறாள்.பின், அடுத்தக் கட்டமாக, சுக்கிரீவன் முழுவதுமாக தான் ஒத்துக் கொண்ட வேலையைப் புறக்கணிக்கவில்லை என்ற செய்தியையும் வெளிப்படுத்துகிறாள். சிதறிக் கிடைக்கும் வானர வீரர்களைத் தொகுத்து வர தூதர்களை அனுப்பிய செய்தியைச் சொல்லி, சுக்கிரீவன் நன்றி மறந்தானில்லை என்பதையும் பக்குவமாக எடுத்துரைத்து இலக்குவனை முழுவதுமாக அமைதி அடைய செய்கிறாள்.

தாரை பாத்திரம், காப்பியத்தில் இன்றியமையாப் பாத்திரம் இல்லை என்றாலும், அதையும் கம்பர், ஒரு ஈடுபாட்டோடு செம்மைப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. 'உணர்வு சென்றபடி எல்லாம் சென்று ஒழுகும்' வானர குலத்துள்ளும் தம் செய்கையால் மேம்பாட்டாள் தாரை என்று காட்டியுள்ளார். இஃது கம்பர்.

**.. .. .. எக்குலத் தியாவர்க்கும்**
**வினையினால் வரும் மேன்யையும் கீழ்மையும் (7:118)**

என்று மற்றொரு சந்தர்ப்பத்தில் (இராமன், வாலி,தன்னைக் குற்றம் சாற்றும் போது கூறியது) கூறிய கருத்துக்கு வலுவூட்டுவதாக, காப்பிய ஒருமை பேணுவதாக அமைந்துள்ளது,

**சுயம்பிரபை**

சுயம்பிரபை 'பிலம்புக்கு நீங்கு' படலத்தில் கிளைக்கதை ஒன்றில் வரும் சிறு பாத்திரமாவாள். சீதையைத் தேடி வானர வீரர்கள், ஒரு பிலத்தில் செல்ல, அங்கு தனிக்கோலத்தில் ஒரு பாத்திரமாவாள். சீதையைத் தேடி வானர வீரர்கள், ஒரு பிலத்தில் செல்ல, அங்கு தனிக்கோலத்தில் ஒரு பெண்ணைச் சந்திக்கின்றனர். 'சீதையோ' எனச் சந்தேகித்து, அனுமனிடம் அது பற்றி வினவுகின்றனர். அனுமன் அவளைப் பற்றி ஆராய்ந்து, அவள்

சீதை முத்துமணி மாலை போன்றவள் என்றும் கூற, இரண்டு மாலைகளும் வெண்ணிறத்தன என்றாலும், முத்துக்கு சங்கு ஈடாகாது என்று வானர வீரர்களிடம் கூறுகிறாள்.

இவ்வாறு, சுயம்பிரபையை அறிமுகப்படுத்தும் போதே, கம்பர் சீதையோடு ஒப்பிட்டு, பின் அவளுக்கு நிகராக மாட்டாள் என்று வேறுப்படுத்திக் காட்டியுள்ள போக்கு ஆன்மீகத்துள் காணப்படவில்லை. கம்பர் இதைப் புதிராகப் படைக்க வேண்டிய காரணம் என்ன? என்று ஆராயும்போது, அப்பாத்திரம் மூலமும் அவள் வரலாற்றின் மூலமும் ஏதோ ஒன்று உணர்த்த விரும்புகிறார் என்பது புலனாகிறது அதுபற்றிப் பின்னர் காணலாம்.

சுயம்பிரபை மேருஸாவர்னியின் மகளாவாள் 'ஏழை' என்ற தேவமகளின் தோழியுமாவாள்.தன் தோழி சுயம்பிரபையின் துணையோடு ஏமை என்பவள் மயனுடன், பிரமன் அவனுக்குப் பரிசாகத் தந்த நகரில் இன்புற்று இருந்தாள். தேவமகளான ஏழை மயனோடு வாழ்வது குறித்து கோபமுற்ற இந்திரன், அவளை அதுபற்றி வினவ, அவள் இச்செயலுக்குத் தன் தோழியைக் காட்டிக் கொடுக்க விரும்பாது, தண்டனையை ஏற்றுக் கொள்கிறாள். பின் இந்திரனை வணங்கி, தன் தண்டனை தீரும் நாள் பற்றி வினவ, அவனும், இராமனால் ஏவப்பட்ட வானரர்கள் இங்கு வரும் நாள் விடுதலை என்று குறித்துச் சென்றான்.

சுயம்பிரபை, சிறை இருந்த நகரத்தில் உண்ண, பூச, சூட, அணிய என்ற பல சுகபோகங்கள் இருந்தாலும், சுயம்பிரபை அவற்றை வெறுத்து ஒதுக்கி, தவம் மேற்கொண்டாள். அனுமனிடம் தன் தண்டனை கழிந்து, உய்தி அடைந்து, பிலம் விட்டு நீங்கிச் செல்ல வழிகேட்டு நிற்கிறாள். அனுமனும் வேறுரு எடுத்து, பிலத்தைப் பிளந்து, அதனுள் இருக்கும் சுயம்பிரபையை வெளியேற்றுகிறான்.

ஆன்மீகத்துள், சுயம்பிரபை சிறை இருப்பதாகக் காட்டப்படவில்லை.அவள் தோழி ஏமை வேண்டிக் கொள்ள மாளிகை காப்பவளாக விளங்குகிறாள். அனுமன் உள்ளிட்ட வானர வீரர்கள் சுயம்பிரபை இருப்பிடத்திற்கு வந்து வழி தெரியாமல் திணறிப் போக அவள்

உதவியால் அங்கிருந்து மீண்டதாகவே ஆன்மீகம் கூறும் கம்பர், சுயம்பிரபை விரும்பி வசித்ததைச் சிறை இருப்பாகவும், வானரங்களுடைய மீட்சியை சுயம்பிரபை மீட்சியாகவும் மாற்றிப் படைத்துள்ளார்.

சுயம்பிரபை பாத்திரம் சீதையோடு வேறு படுததிக் காட்டப்பட்டாலும், சுயம்பிரபை வரலாற்றை சீதை வரலாற்றோடு ஒப்பிட்டுக் காணத் தக்கதாக கம்பர் படைத்துள்ளார். சுயம்பிரபை சிறைப்படுத்தப்பட்டாள். சீதையும் சிறைப்படுத்தப்பட்டாள் சுயம்பிரபை சிறையில் மனத்தை ஒருமைப்படுத்தி தவமியற்றி, மீட்சிக்காகக் காத்திருக்கிறாள். சுயம்பிரபைக்கு அனுமன் மீட்சி நல்கியது. இனி சீதைக்கு நடக்கவிருக்கும் சிறை மீட்சியை உணர்ந்தும் காப்பிய உத்தியாக அமைந்துள்ளது. (பிரேமா. இரா. இராமயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு – கம்பர் - வான்மீகி – துளசிதார், பக். 151, 152).

**உருமை :**

உருமை என்பவள் சுக்கிரீவன் மனைவி, சுக்கிரீவனுடன் நட்பு கொண்ட இராமன் அவன் மனைவியைக் காண இயலாத நிலையில் 'நீயும் பொருந்து நன் மனைக்குரிய பூவையைப் பிரிந்துள்ளாய் கொலோ' (3:35) என்று வினவுகிறான். அப்பொழுது அனுமன் இடைமறித்து, சுக்கிரீவன் மனைவியைப் பிரிந்த வரலாற்றைக் கூறுகிறான். உருமை என்பவள் தேவாமிர்தம் போன்ற இயல்பினள் (3:88) என்று மிகச் சுருக்கமாக அவள் இயல்பு கூறி, அவளை வாலி அபகரித்துச் சென்றான் என்றும் கூறுகிறான்.

தானை காண் படலத்தில், வானர வீரர்களை அறிமுகப்படுத்தும் போது உருமையின் தந்தை தாரன் என்பவன் அறிமுகப்படுத்தப்படுகிறான். அவ்விடத்தும் அவள்,

**"அமுதின் மாறிலாமொழி யுருமை" (11:3)**

என்றே சுட்டப்படுகிறாள். இவ்விரண்டிடத்தைத் தவிர கிட்கிந்தா காண்டத்தில் அவள் பற்றிய செய்தியில்லை. சுந்தர காண்டத்துள் அனுமன் இராவணனிடம் இராமன் பொருட்டு தூது சென்ற பொழுது, இராமன் என்பவன் யார்? என்று சுக்கிரீவனுக்கு, அவன் மனைவி உருமையை மீட்டுத் தந்தவன் என்று

அறிமுகம் செய்கிறான். இப்படி கம்பராமாயணத்தில் பெயரளவில் உருமை இடம் பெற்றுள்ளாள்.

**முடிவுரை :**

படைப்பில் வல்ல கம்பர் கெட்டவரிடத்தும் நல்லதைக் காணும் இயல்பினர். யாரையும் பழிப்பிற்கிடமாகப் படைக்க அஞ்சுபவர். அதனால் தான், தாரையைக் கற்பு நெறி பேணுபவளாகப் படைத்து, பாத்திரச் செப்பம் செய்ய அவரால் முடிந்தது. அவரின் முயற்சி, தாரையை, தமிழ் வாசகர் மனங்களில் அழியா இடம் பெற வைத்தது. அதன் காரணமாக, அவள் தலை சிறந்த கற்புக்கரசிகளின் வரிசையிலும் இடம் பெற்றுவிட்டாள். இவ்விதத்தில், கிட்கிந்தா காண்டம், பெண்மையைப் போற்றிப் பெண்ணுக்குப் பெருமை சேர்த்த காண்டமாகத் திகழ்கிறது.

## பயிற்சி வினாக்கள்

**குறுவினா:**

1) சீதையின் புற அழகைக் கம்பர் கலைஞனாய் நின்று கவிபுனைந்த அழகினைக் கூறுக?
2) சுயம்பிரபையின் பாத்திரப் படைப்பு பற்றி எழுதுக?
3) இராமனும் சுக்ரிவனும் ஒழுங்கிழுந்த காட்சி எப்படிப்பட்டது?
4) கம்பர் சித்தரிக்கும் அருவியும்இ தாமரையும் குறித்தெழுதுக?
5) வானரப் படையின் வன்மைச் சிறப்பினைக் கூறுக?

**நெடுவினா:**

1) இராமன் சுக்ரீவன் உரையாடலை விளக்கி வரைக?
2) இராமன் சிதையும், சூளுரையினையும் விரித்துரைக்க?
3) வாலி, இராமனை இகழ்ந்துரைத்ததனை விவரிக்க?
4) சிறியன சிந்தியாதன் மனமாற்றத்தினை விளக்குக?
5) சீதையைத் தேடிச்செல்லும் அனுமனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்துரைக்க?
6) கம்பராமாயணத்தில் வரும் மகளிர் பற்றி கட்டுரைக்க

# பெருங்கதை

பிருகத்கதா என்பதே பெருங்கதையாயிற்று (பிருகத் -பெரிய, கதா – கதை) சமணக் காப்பியம். உதயணன் கதை, கொங்கு வேளிர் மாக்கதை என்றும் கூறுவர். முதல் நூல் துர்விந்தனின் பிரகத் கதை என்பர். காலம் ஏழாம் நூற்றாண்டு. ஆசிரியப்பாவால் இயன்றது. குணாட்டியர் பைசாச மொழியில் யாத்த 'பிரகத்கதா' வின் மொழிபெயர்ப்பே பெருங்கதை.

கௌசாம்பி நாட்டு அரசன் சதானிகன் மகன் உதயணன். அரசி மிருகாவதி இவள் சிம்புட் பறவையால் விபுலகிரி மலைக்குத் தூக்கிச் செல்லப்பட்டு அங்கே உதயணன் பிறக்கிறான். அங்கு மிருகாவதி தன் தந்தை துறவியாய் இருப்பதைக் காண்கிறாள். அவர் உதயனை ஊர் அந்தணத்துறவியிடம் ஒப்படைக்க அவர்தன் மகன் யூகியுடன் அவனையும் வளர்க்கிறார். யூகியும், உதயணனும் சிறந்த நண்பராயினர். தன் தாத்தா (தாய் மிருவாதியின் தந்தை) வின் நாட்டை ஆண்ட மாமன் துறவியாக விரும்பிக் காட்டிற்கு வந்த போது தன் தமக்கையின் மகன் உதயணன்

என்பதை அறிந்து தன் வைசாலி நாட்டை அவனிடம் ஒப்படைக்கிறான். சிறிது காலத்தில் உதயணன் தந்தை நாடாகிய கௌசாம்பியும் கிடைக்கப்பெற்று இருநாட்டிற்கும் அரசனாகிறான்.

யானையைக் கட்டுப்படுத்தும் தந்திரம் அறிந்தவன் உதயணன். முனிவரிடமிருந்து அவனுக்குக் கிடைத்த யாழ் எப்படிப்பட்ட மதயானையினையும் அடக்கிவிடும் தன்மையது. இவனோடு இருந்த தெய்வயானைக் காணாமல் போய்விட அதைத் தேடி அலைகிறான் உதயணன். அப்போது உச்சியினியை ஆண்ட பிரச்சோதன மன்னன் ஒரு எந்திர யானையை அனுப்பி அதனுள் வீரர்களை வைத்து உதயணனைச் சிறைப்பிடிக்கிறான். இதையறிந்த யூகி உச்சயினி சென்று தன் வருகையை உதயணனுக்கு இரகசியமாய் அறிவிக்கிறான். பட்டத்து யானை நளகிரிக்கு மதம் பிடிக்கச் செய்கிறான். யாராலும் அடக்க இயலா நிலையில் பிரச்சோதனன் உதயணனை அழைத்து யானையை அடக்கினால் விடுதலை செய்வதாகக்கூறுகிறான். யானையை இசையால் அடக்கி மன்னன் மகளுக்கு இசை கற்றுக்கொடுத்து அவள் காதலைப் பெற்று ஒரு யானை மீது அவளை அழைத்துச் சென்று விடுகிறான். இதற்கு யூகி பெரிதும் உதவுகிறான். பின்னர். பதுமாவதி, மானனீகை, விசரிகை ஆகிய பெண்களை மணக்கிறான். இறுதியில் நான்கு மனைவியரில் பதுமாவதியின் மகனிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு பிற சமணக் காப்பியங்களைப் போன்று உதயணன் துறவு மேற்கொள்கிறான். இந்நூலில் பாடப்பகுதியாக சாங்கியத்தாயுரை அமைந்துள்ளது.

**சாங்கியத்தாயுரை**

வாசவதத்தைக்கும் உதயணகுமரனுக்கும் சாங்கியத்தாய் என்னும் தவமுதாட்டி கூறிய ஆறுதல் மொழிகளைக் கூறும் பகுதி

மின்னிழை பொருட்டா மேலவன் கொண்ட
துன்னரும் பெரும்பழி நன்னகர் கழுமக்
கம்பலை மூதூர் வம்பல ரெடுத்த
படுசொ லொற்றர் கடிதவ ணோடி
வானுற நிவந்த வசையின் மாணகர்த்

தாம்பெறு செல்வியுட்டலைமகற் குணர்த்த

வாசவதத்தைக்குப் பழிச்சொல் தோன்றாமைப் பொருட்டு உயர்குடித் தோன்றலாகிய உதயணகுமரன் மேற்கொண்ட கிட்டுதற்கரிய பெரிய பழிச்சொல் அவ்வுஞ்சை என்னும் சிறந்த நகரமுழுதும் பரவா நிற்ப, ஆரவாரமிக்க அப்பழைய ஊரின் கணுள்ள வம்பமாக்கள் தூற்றிய அப்பழிமொழிகளைக் கேட்ட ஒற்றர்கள் விரைந்து அரண்மனைக்கட் சென்று வானத்தைத் தீண்டும் படி உயர்ந்துள்ளதும் பண்டு பழிச்சொல் ஏற்றறியாததும் மாண்புடையதுமாகிய அவ்வரண்மனையிலே தாம் மன்னவனைக் காண்டற்கு வாய்த்த செவ்வியிலே அம்மன்னனை எய்தித் தாம் ஒற்றிவந்த செய்தியை அறிவித்தான் என்க

அது கேட்ட மன்னவன் உதயணகுமரனது பருவங்காரணமாக அவனது காமப்பண்பு முதிர்வதனை நினைந்து நகையும் நாணமும் ஒருசேர எய்தி உள்ளூர உதயணன் தன் உயர்குடிப் பிறப்பிற்கு ஒவ்வாத சிறுமைத்தொழிலையே மேற்கொண்டனன் என்று அவனை இகழ்கின்ற நெஞ்சையுடையனாயிருந்தும் பிறர்பழி தூற்றாத பெருந்தகைமையை இயல்பாகவே உடையவன் ஆதலின் அவனைப்பிறர் அறியத்துணையாய் இஃது இளமையின் இயல்பு போலும் என்று கருதித்தனது கூர்த்த எயிறு சிறிது விளங்கும்படி புன்முறுவல் பூத்துத் தான் கேட்ட இப்பழியைத் தன் னெஞ்சின்கண்ணேயே மறைத்துக் கொண்டு உதயணகுமரனுக்குத்தான் விரும்பியவற்றை மேற்கொள்ளுதற்குரிய காலம் இஃதன்று என்பதோர் குறையேயல்லது அவன் செயல் அவன் நாட்டில் தக்கதோர் காலத்தே நிகழ்ந்திருப்பின் அதுவும் ஓர் அழகாகவே பிறர் நோக்குமிடத்துத் தோன்றியிருத்தல் கூடும்.

மன்னவன் தொன்று தொட்டு நடைபெற்று வருகின்ற தன் அரசவைக்கண் வீற்றிருந்து அவையோர் அறியும் படியாம் ஆடன்மகளிரொடு நீர்விளையாட்டயரும் பொழுதும் தெய்வத்திற்குச் செய்யும் திருவிழா நிகழ்ச்சியில் யாம்தேரின் பிற்செல்லும் பொழுதும் எம்மோடு நகர் கடந்துவரும் தனது கடமையை நருமதை இற்றைநாள் தொடங்கி ஒழிவாள் என்றும் மேலும் வளைந்த குழை யணிந்த அந்நருமதை நாடோறும்

அரண்மனையின் கண் ஆடும் கூத்தாகிய கடமையையும் இன்று தொடங்கி ஒழிவாளாக என்றும் கூறி இன்னோரன்ன நன்மையை அவள் திறத்திலே அருளிச் செய்து பின்னரும் இச்செய்திகளை வளமிக்க அந்நகரமக்கட்கு அறிவித்தான்.

ஓலையுட் பொருளு முரைத்த மாற்றமும்
நூலிய லாளரொடு நுண்ணிதிற் கேட்டு
நன்று மென்னா னன்றென மறாஅன்
மரனிவர் குரங்கின் மகக்கோட் போல
நிலைமையொடு தெரிதரு நீதிய னாகி
ஆவது துணிதுணை யாசையி னிறீஇத்
தார்கெழு வேந்தன் றமர்களை விடுத்தபின்

வெற்றிமாலை சூடிய பிரச்சோதன மன்னன் அத்தூதுவர் கொணர்ந்த ஓலைகளையும் அவர் கூறிய மொழிகளையும் கற்று வல்ல சான்றோரோடியிருந்து நுணுக்கமாகக் கேட்டருளி அவ்வரசர் வேண்டுகோளை நன்றென்று பாராட்டி உடன்படுதலும் நன்றன்று என்று இகழ்ந்து மறுத்தலும் இலனாய் மரத்தின்மேல் ஏறாநின்றகுரங்கு தன்குட்டியினைக் கொண்டுங் கொள்ளாமலும் இருத்தல் போன்று இருப்பானாகி அவற்றை ஆராய்ந்து நன்மை தீமை தெளியுந்தனையும் அம் மன்னர்களைத் தத்தமக்கு மகட்கொடை வழங்குவன் என்னுமொரு அவாவின்கண் நிறுத்துமியல்புடைய மாற்றங்களைக்கூறிப் போக்கிய பின்னர்,

மன்னன் உதயணனைத் தன் மகட்கு யாழாசிரியனாக்கக் கருதிய செயலையே முதலாகக் கொண்டு அவன் உதயணனை மருமகனாகக் கொள்ளக் கருதுகின்றான் என்று சாங்கியத்தாய் தன் நெஞ்சினுள்ளே ஊகித்துக்கொண்டு இந்நிகழ்ச்சியில் வாசவதத்தையின் கருத்து யாது எனத் தெரிந்து கோடல்பொருட்டு அவள் பால் மேற்கூறிய தூதர் வருகையைக் கூறாநிற்ப

வாசவதத்தை உடனே அஞ்சிப் புதிய தொரு மரப்பாவை பொறியற்றற் போன்று மனம் பதைத்தலாலே உண்டான மெய்ந்நடுக்கத்தோடு விம்மி அழுபவளாய் அன்னாய் மன்னனுடைய இக்கருத்து வாய்மையேயாயின் யான்

பாலாவிபோன்று நுண்ணிய துகிலை என் கழுத்திற் சுருக்கிட்டுத் தொங்கியேனும் சாவது உறுதிகாண். எந்தக் கருத்திற்கு உடன்பட்டு உயிர் வாழ்தலையே விரும்பி வாழும் பிற மகளிர் உளராயின் அவரைக் கொண்டு தன் கருத்தினை நிறைவேற்றிக்கொள்க. யான் இறந்து பட்ட பின்னர் எந்தை என் பிணத்தைக் கொண்டு தனது குறையைத் தீர்த்துக் கொள்வானேற் கொள்க என்று உதயணன்பாற் கொண்ட அன்பு காரணமாக மேற்கொண்ட புலம்பலோடு கூடிய மொழிகளாக கூறினாள்.

சாங்கியத்தாய் தழுவிக்கொண்டு தனது துடையின் கண் இருத்தி அவள் கண்ணினின்றும் விழுகின்ற கண்ணீரைத் தன் விரலால் துடைத்து அங்ஙனம் பிரச்சோதனன் பிற மன்னனுக்கு மகட்கொடை நேரார் என்பதற்குரிய காரணங்களை எடுத்துக்காட்டி என் பாவாய் அழாதே கொள் நீ கருதுமாறு நின்னைப்பிற மன்னனுக்கு வழங்கும் செயல் உண்டாகுமோ? அவ்வாறு நிகழுமாயின் நின் நற்றாயும் நீயும் யானும் நம்பால் அன்புடைய ஏனோருமாகிய எல்லாரும் மன்னனைத் துறந்து போய்க்காடு புகுந்து தவம் புரிவது ஒருதலைகாண் என்று தேற்றுரை கூறினாள்.

அதுகேட்ட கடவுட்டன்மையுடைய கற்புடைய வாசதத்தை அதுகாறுந் துயரத்தாலே கவிழ்ந்திருந்த தனது திருமுகத்தை உயர்த்திக் தனது நெடி யவெள்ளிய முன்றானையால் தனது வடித்தவேல் போன்ற மையுண்டகண்களிற் பெருகும் நீரைத் துடைத்துக் கொண்டவளாய்ச் சாங்கியத்தாயின் முகத்தைநோக்கி அன்னாய் தோற்றத்திற்குத் தன்னை ஒப்பவர் யாரும் இல்லையாகப் பெற்றவனும் ஆற்றலின் கூற்றுவனையே ஒப்பவனும் உலகத்தின் கண் குற்றமின்றிப் பெருகிய பெரிய புகழையுடையவனும் ஒப்பற்ற கல்வி கேள்விகளையுடையவனும் காம வின்பந்துய்த்திற்குக் கருதும் மகளிர்க்குக் கிட்டுதற்கரிய தெய்வம் போன்றவனும் உயிர்களைப்பாதுகாத்தற்குக் கவிழ்ந்த வெள்ளியகுடையையுடைய ஏயர்குடித்தோன்றலும் ஆகிய உதயணன்பால் வாசவதத்தை இவ்வுலகம் அறியத் தனியிடத்தே அவன் பக்கத்தே மேவியிருந்து அவன் மட்டும் அறிந்திருந்த சிறந்த அவனுடைய யாழ் நரம்பின்கண் இசையெழீஇப்பயிலா நின்றனள்.

பலவாகிய மலர்மாலையணிந்த வாசவத்தாய் நீதான் கழிந்த இரவின்கண் பசிய தொடியணிந்த நின் தோழியர் குழாத்தோடு கூடிப் பலவாகிய நொடியும் பிசியும் பேசி நள்ளிர வினும் கண் படை கொண்டிலையல்லையா ஆதலால் கல்வியால் வரும் பெருமிதத்தைச் செலுத்துபவனாகிய நின் ஆசான் உதயணன் ஈண்டுக் கற்பிக்க வருந்துணையும் நீ பாயல் கொண்டு துயில்வாயாக என்று அறிவுறுத்தி மலராலாய மெல்லிய படுக்கையின்கண் வாசவதத்தையைக் கிடத்திப் பின்னர்க் காஞ்சனமாலையை நோக்கித் தோழீ யான் இங்குமீண்டு வருமளவும் இங்கு வருவோர் யாவரே யாயினும் வாராமல் தடுத்துக் காவல் செய்வாயாக என்றாள்.

சாங்கியத்தாய் உதயண குமாரனை நோக்கி உலகங் காக்கும் மன்னர் பெருமான் சதானிகரும் கோப்பெருந்தேவி மிருகாபதியும் செய்த தவப்பயனாக அவர்தம் திருவயிற்றிற் றோன்றிய பெரிய வெற்றியையும் பொலிவினையும் உடைய பெருமானே நீ இவ்வாறு வேற்றரசன் சிறை யிடைப்பட்டு இத்தன்மையுடையை ஆவதற்குக் காரணம் எம்மனோர் செய்த தீவினையே காண் என்றாள்.

மன்னவன் மகனே இப்பொழுது நீ என்னை நன்கு அறிவாயல்லை ஆகலின் யான் யார் என்பதனை நீ அறியும் பொருட்டு யானே என் வரலாற்றைக் கூறுவேன் கேட்டுத் திருவுளங்கொண்டருள்க என் இளம்பருவத்தே என்கணவன் என்னைத் தனியே விட்டுப் போய்விட்ட காரணத்தால் யானும் அவனை விட்டு என்மனம்போல் ஒழுகி இவ்வாழ்க்கைக்குணவ்வாதேன் ஆகிவிட்டமை யால் தலைசான்று செங்கோன்மையுடைய நின் தந்தையாகிய சதானிக மன்னர் அரசவைக்கண் கணவனுக்குப் பிழை செய்தமையாலுண்டாகும் தண்டனையே ஆராய்ந்தென்க.

புனற்கரைப் படீஇயர் புதல்வரொ டார்க்கும்
தோணி யரவஞ் சேணோய்க் கிசைப்பத்
தழூஉப்புணை யாயமொடு குழு உத்திரை மண்டி
ஆவி நுண்டுகில் யாப்புறுத் தசைத்துப்

பாகவெண் மதியிற் பதித்த குடுமிக்
களிற்றொடு புக்குக் கயங்கண் போழ்வோய்
அவ்வயி னெழுந்த கல்வை யென்னென

என்னை ஏற்றிய தோணியியங்கிய பொழுது அந்த யமுனை யாற்றங்கரைக்கண் இந்நிகழ்ச்சியைக் காண்டதற்கு வந்து குழுமிய மாந்தர் இளஞ்சிறாரொடு ஆரவாரிக்கும் ஆரவாரம் அவ்விடத்தினின்றுந் தொலைவின்கண் இருந்த நின் செவியின்கண் புக்கதாக அவ்வமயம் பாலாவி போன்ற நுண்ணிய வெள்ளிய துகிலி விட்டுக் கட்டி வைத்த தோட்டியினையுடைய மத்தகத்தையுடைய யானையோடு நீர் விளையாடுமாற்றால் அப்பேரியாற்றின் மடுக்களை ஊடறுத்துச் செல்லுகின்ற நீ ஆங்கு எழுந்த ஆரவாரம் என் கொலோ? என்று அண்மையினின்றோரை வினவ

நீ கட்டளை யிட்டருள நின் ஏவலராகிய பிரப்பங் கோல் ஏந்திய மறவா்ட காற்றெனக் கடுகி வந்து அவையோா் ஆணைக்கு மாறுபட்டு நடத்தற்கு அஞ்சாதே கொண்மின் நம்மன்னன் மகனாகிய உதயண நம்பி இவளைக் காண்டற்கு விரும்பிகின்றனன். தோணியைத் திருப்பிக் கொடுவாருங்கோள் என்று கூற அதுகேட்ட தோணி யியக்குநர் அதனை மீட்டுக் கொணா்ந்து அதனினின்றும் என்னை நின்திருமுன்னா் இறக்கிய பொழுது அத்தோணித்தடுப்புக்கடி திற்புடைத்தமையானே என் நெற்றியிற் பட்ட புண் போன்றதுவாகும்.

அம்மையீா் நீயிா் விரும்பியதனைக் கேட்பீராக இவ்விடத்தேயே யான் வழங்குவேன் என்று அறிவித்தனையாக அதுகேட்ட யான் மன்னவன் மகனே நின்னகரத்தே வாழ்வேனாகிய யான் தீயநிலையினையடைந்து அதன் பயனாக நெய்தற்புலைமகன் ஊா்முழுவம் பறையறைந்து அறிவிப்ப இவ்வாறு ஆரவாரமுண்டாக வந்தேன். இனியேனும் நல்லதொரு நிலைமையை எய்தவிரும்பி நற்றவஞ் செய்தலே என் துணிவாகும் என்று அறிவேன்.

நிமித்திகன் நிமித்த நூற்பொருளை நுண்ணிதின் ஆராய்ந்து மன்னவன்மகனே இப் பார்ப்பனி இப்பொழுது நினது களிற்றுயானையின் அழகிய நிழலிலே நிற்றலாலே இனி இவள் இப்பொழுது மேற்கொண்டு

செல்லும் தவநெறியினின்றும் பின்னொருகாலத்தே நீங்கிப் படைப் பெருக்கமுடைய ஓர் அரசன் ஆதரவு பெற்று அவன் அரண்மனையிற்றங்கி அவ்வரண்மனைக் கண் வாழும் நிறைந்த அணிகலன் மகளிர்க்குப் பாதுகாப்பாக அமைகுவள் காண் என்று கூறினன்.

பார்ப்பன மூதாட்டியாகிய சாங்கியத்தாய் வேண்டும் உதயணனை நோக்கிக் கூறுவாள் கொற்றவன் மகனே இன்னுங் கேட்டருள்க அற்றை நாள் ஞாயிற்று மண்டிலமுதலிய கோணிலை நுனிந்துணர்ந்த நின் கணிமகன் எனக்குக் கூறிய எதிர்காலச் செய்கை யனைத்துங்குறைவின்றி எய்தி யான் இந்த உஞ்சை நகரத்தையடைந்து ஈண்டுப் பழகி மேலும் இங்ஙனம் வாசவதத்தைக்குச் செவிலியாகும் நிலையும் எய்தினன் எதனால் இந்நிலை வந்தது என்று கேட்பாயாயின் எனது பின்வரலாறு கூறுவல் கேட்டருள்க தொன்றுதொட்டுப் பிறந்து வரும் யான் இவ்வாக்கையின் கண்ணே முன்னர்த்தீவினை யாலே இளிவரவு பெற்றுப்பின்னர் நின்திருவருடம் பேறு காரணமாகப் புதுவதாக இவ்வியாக்கையிலேயே பிறந்தயான் இனி எதிர்காலத்தே காண்டற்கரிய எனது நல்வினைப் பயனை நுகர்தற்குச் செல்க என்னுந் துணிவோடு கூறினாள்.

சாங்கிய நெறித் தவத்தையே யானும் மேற்கொண்டு ஆறுவகைப்பட்ட சமயத் தத்துவங்களையும் அம்முனிவன் கூறிய பொருள் பொதிந்த உரை வாயிலாய் நுணுகியுணர்ந்தேனாகி அக்குழுவோடு இமயமலைச்சாரலிலே இரண்டாண்டுக்ள இனிதினுறைந்திருந்த பின்னர்ச் செயற்கரிய தவத்தை மேற்கொண்ட அறங்கூறுமாசான் ஆகிய அத்துயவன் தென்றிசைக் குமரித் தீர்த்தத்தே ஆடும் வேட்கையினாலே அறயாத்திரை செய்வல்

குமரியாத்திரை யொழிந்து இந்நகரத்தே உறைதலாலே கையின் கண்ணதாகிய அரும்பொருள் நழுவிப்போய்விட்ட பொழுதினால் கணவனை நினைத்து கைதொழுதலன்றிக் கடவுளை நினையாத தெளிந்துணர்ந்த காட்சியினையும் சிறந்த நோன்பாகிய கற்பினையும் உடைய பலராகிய அரசியருள் வைத்துத் தொடியணிந்த வாசவதத்தையின் தாயாகிய கோப்பெருந்தேவி தன் முன்னோர் இச் சாங்கிய மதத்தினராதலின் அக்குடிவழியாகத் தானும் மேற்கொண்ட இச்சாங்கியக் கொள்கையள்

ஆதலாலே பெரியோர் கேண்மைகொள் யான் மேற்கொண்ட இந்த தவத்தைப் பெரிதும் விரும்புமொரு பத்தினியாகலின் இத்தவமே சார்வாக என்னோடு பயிலுதலைப் பெரிதும் விரும்பி ்னைத் தன் தோழியாகக் கொண்டு என்பாற் பேரன்பு செய்தருளுதலாலே யானும் அவள் விருப்பத்திற் கியைந்து பிரச்சோதன மன்னனும் அறியவே அவட்கு இனிய உசாத்துணைத் தோழியும் ஆகினேன் என்றாள்.

இவ்வாறு சாங்கியத்தாய் கூறவும் பண்டைக் காலத்தே ஒருவரை யொருவர் அறிந்ததுண்டு என்னும் ஏதுவினாலேயே பல்லாண்டு பகைவர் நாட்டிலே வதிந்த பெண்டிரைத் தெளிந்து பெரிய அரிய மறைச் செய்திகளைக் கூறுதல் நுண்ணிய துறைகளையுடையோர் நூலுக்கு ஏற்ப ஒழுகும் ஒழுக்கம் ஆகாது என்று கருதி ஒருவகையால் தெளிந்தும் மற்றொரு வகையாற் றெளி யாதும் குழப்பமெய்தித் தான் மனம் பற்றிய மறைச் செய்தியை வெளிப்படுத்திக் கூறாமலே தன்னுளடக்கிக் கொண்டு பின்னரும் இவள் கூற்று ஒரோவழி வஞ்சமுடையதாகவுங் கூடும் என்று அஞ்சினால் இந்தக் காரியத்தை முடிப்பதற்கு வேறு துணையும் இல்லையே என்று கருதி ஒருவாறு துணிந்து தான் வாசவதத்தைபாற் கொண்டுள்ள காமம் ஆகிய தனது துன்பத்தின் காரணத்தை அச்சாங்கியத் தாயின் முன்னிலையிலேயே வெளிப்படுத்திக் கூறினான்.

அது கேட்ட சாங்கியத்தாய், அரசே இனி வாசவதத்தைக்கு ஒருபால் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறு வேன் கேட்டருள்க அயல் நாட்டு மன்னர் விடுத்த தூதுவர்கள் மகட்பேசித் தன் தந்தையின் பால் வந்ததே தனக்கெரு பழியாகும் என்று உட்கெண்டு, அவள் பெரிதும் நாணி, அத்தூதுவரை ஏற்றலும் உபசரித்தலும் செய்த தன் தந்தையோடு ஊடிக் கெண்டு, தன் தந்தையின் செயல் அறத்துவழிபட்டதன்று அங்ஙனமே நிகழ்ந்த முறையின் தூய உதயணன்பொருட்டு யான் உயிர்நீத்தல் ஒருதலை என்று துணிந்த துணிவோடு தந்தையின்பால் வெறுப்புடையளாகினாள்.

நின்பாலே அவட்கெய்திய காமவெப்பம் முதிர்ந்து பின்னரும் ‘‘யான் சாதலைத் துணியும் அளவிற்கு எவ்வாற்றானுஞ் சிறுமையுடைய ஏதிலார் மணம்பேசி வருகின்றனர் என்னும் பழியோடு விரவிச்சிறிதும் மாண்பில்லாத சொற்களாகிய மொழியைச் சிறிதும் என் செவிகள் கேளாதனவாகுக என்று

தனது அங்கை யாலேதன் செவிகளைப் பொத்திக் கொண்டு மேனியொளி மழுங்கிய வாசவதத்தையை யான் தழுவிக்கொண்டு அவளுடைய நல்ல நுதலைத் தடவி, அவள் மனங்கொள்ளத்தகுந்த காரணங்களை அவள் வியக்கும்படி கூறி ஒருவாறு தேற்றித் தோழியரும் இல்லாத ஒரு பக்கத்தே படுக்கையிற் கிடந்து சிறிது துயில் கொண்ளேனும் அவள் துயரும் சிறிது தீர்க என்று கருதி மிகவும் இனிதாக மலர் மிகுந்த படுக்கையிலே அவளைப் புகுத்தி யான் ஈங்கு வந்தேன் காண் என்று கூறினாள்.

அண்ணலே நீ தானும் அவன் நிலைமைக்கேற்ற அறத்தைக் கடைப்பிடிப்பாயாகி நினது தலைமைத்தன்மைக்கேற்ற திருமண செயல் நிகழு வழியை ஆராய்வாயாக என்றும் கூறி மேலும் குற்றம் இல்லாத இயல்போடு கூடிய ஒழுக்கங்களையும் ஒம்படைக்கிளவியோடு கூறினாள்.

அது கேட்ட முத்துமாலையணிந்த உதயணகுமரனும் அவிவடத்தினின்றுஞ் செல்ல எழுந்து காஞ்சனமாலையை நோக்கி தோழி வாசவதத்தை இற்றை நாள் யாழ் பயின்றிலளே என்று யாரும் கவலுதல் வேண்டா அவள் மேற்கொண்ட யாழ்க் கேள்வியின்கண் நன்கு பயின்று முதிர்ந்தனள்காண் இனி சக்கரவர்த்தி புதல்வர்கள் தாமும் யானை ஏற்றமும் கொடியணிந்த தேரிலேறிச் செல்லும் செலவும் மிக்க பிடரிமயிரையுடைய குதிரைப் பயிற்சியும் போரியற்றும் வில் முதலிய படைப் பயிற்சியும் போர் அறங்களும் இன்னோரன்ன பிறவும் என்று கூறப்பட்ட எல்லாத் துறைகளையும் கற்றுத் தத்தம் துறையிலே நன்கு தேர்ச்சி யுற்றனர்.

### பயிற்சி வினாக்கள்

**குறுவினா**

1. பிரச்சோதனன் தூதுவர் கூறிய மொழி கேட்டு நடந்து கொண்ட விதம் யாது?
2. உதயணன் மேற்கொண்ட அன்பு காரணமாக வாசவத்தை புலம்பிய திறம் யாது?
3. வாசவதத்தையைப் பிறமன்னனுக்கு வழங்கும் செயல் உண்மையாயின் என்ன நிகழும் விளக்கு.
4. நிமித்திகன் கூற்று யாது?

**நெடுவினா**

1. சாங்கியத்தாய் உதயணனிடம் கூறிய தன் வரலாற்றினை விளக்குக.
2. சாங்கியத்தாய் கூறிய பின் வரலாற்றினை விவரிக்க
3. வாசவதத்தைக்கு ஒரு பால் நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் சாங்கியத்தாய் கூறுவனவற்றை விளக்கி வரைக.

# சூளாமணி

அணிகலனால் பெற்ற பெயர் சூளாமணி. தலையில் சூடும் அணி. சமணக்காப்பியம். விருத்தப்பாடலில் அமைந்தது. ஆசிரியர் தோலாமொழித்தேவர். 12 சருக்கங்களுடன், 2131 பாடல்களைக் கொண்டது. மண்ணையும் விண்ணையும் இணைக்கும் காப்பியம் இது. மண்ணுலக வேந்தன் திவிட்டன் விண்ணுலக மங்கை சுயம்பிரபையை மணந்த வரலாற்றைக் கூறும் நூல். இதில் பாடப்பகுதியாக குமாரகாலச்சருக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

### குமாரகாலச்சருக்கம்

### குமாரகாலச்சருக்கத்தின் சுருக்கம்

பயாபதி மன்னனின் மனைவியர் இருவரும் தக்க காலத்தில் கருவுற்றனர். செய்தியை அறிந்த பயாபதி மன்னன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். கருவானது முதிர்ச்சி அடைந்தது. உரிய நாட்களில் இருவருக்கும் ஒவ்வொரு ஆண் குழந்தை பிறந்தது.

ஒரு சமயம் விசாக பூதி, விசுவ நந்தி என்னும் பெயருடைய இருவர் அரசர்களாய் இருந்தனர். தேவலோகத்தில் அரசகட்சி செய்திருந்து இப்பொழுது நிலவுலகத்தையடைந்து விசாக பூதி மிகாபதியின் கருவில் கலந்து அவருக்கு மகனாகப் பிறந்தான். விசுவநந்தி சசியின் கருவில் சேர்ந்து அவளுக்கு மகனாய்ப் பிறந்தான்.

மிகாபதியின் மகன் கடலில் உள்ள சங்கு போன்று வெண்மையான நிறத்துடன் காணப்பட்டான். சசியின் மகன் மேகம் போன்று கடல் போன்று கருமையான நிறத்தைப் பெற்று விளங்கினான்.

வெண்மை நிறம் வாய்ந்தவனுக்கு விசயன் என்றும் கருநிறம் வாய்ந்தவனுக்குத் திவிட்டன் என்றும் பெயரிட்டனர். இக்குழந்தைகள் பிறந்தவுடன் நாட்டின் நல்ல சகுனங்கள் பல தோன்றின திசைகள் யாவும்

பிரகாசம் அடைந்தன பொன்னகரான அமராவதிப் பட்டணம் போன்று அந்நகரம் பொலிவுடன் காணப்பட்டது. பிச்சை ஏற்றுக் கொள்பவரின் ஆசையாவும் அவர்கள் வேண்டியதெல்லாம் கிடைத்தவுடன் அந்த ஆசை தானே அழிந்து போகும் அதுபோல் அந்நகர மக்களின் தீவினை யாவும் அழிந்தன. துந்துபி போன்ற இசைக் கருவிகளின் முழக்கம் ஆகாயத்தில் எழுந்தது.

அரசனும் அவன் மனைவியரும் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். குழந்தைகள் வளர்ந்து பெரியவராயினர். உரிய காலத்தில் பற்பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி அடைந்தனர். அவர்கள் காளைப் பருவம் அடைந்து மகளிரின் மனதைக் கவரும் கட்டழகு வாய்க்கப்பெற்றவர்களானார்கள்.

ஒரு நாள் காலை நேரம் மன்னன் தன் அரசு சபைக்குப் புறப்பட்டுச் சென்றான். திருவோலக்க மண்டபத்தை அடைந்தான். அங்கு அந்தணர்கள் அவனை வாழ்த்தினர். புலவர்கள் போற்றினர். தன்னிரண்டு பக்கங்களையும் இரண்டு தேவியர் அலங்கரிக்க அவன் கொலுவீற்றிருந்தான்.

உடனே வாயில் காப்போரின் தலைவனை அழைத்து காவல் இப்பொழுது முதல் ஏழு நாழிசை வரையிலும் எவர் வந்தாலும் என் முன்பாக அவரைத் தடையின்றி வர விடுக என்று கட்டளை இட்டான். காவலன் விடைபெற்றுச் சென்றான்.

தெளிவான அறிவு முதிர்ச்சி உடையவனும், சிறப்புடைய நூல்களைக் கற்றவனும் முக்காலத்தையும் ஆராய்ந்து அதனை உண்மையாக உரைக்கக்கூடிய நிமித்திகம் சொல்லும்தன்மையுடையதுமான ஒருவன் பயாபதியின் அவைக்கு வந்தான். வந்தவுடன் மன்னனையும் நாட்டையும் வாழ்த்தினான். அந்த நேரத்தில் மன்னன் அவனை நன்முறையில் வரவேற்றான். தக்க ஆசனம் கொடுத்து அமரச் செய்தான். உபகாரங்களையும் செய்தான்.

அரசனின் உபசரிப்பு நிமித்திகனை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தன் திறமை முழுமையையும் மன்னனிடம் காட்ட விரும்பினான். எனவே அவன்

அரவே நேற்று இரவு தாங்கள் தூங்கும் பொழுது தூக்கத்தில் கனவு ஒன்றினைக் கண்டீர்கள். அக்கனவில் யானையொன்று வானத்தில் இருந்து இறங்கி வந்தது. உன் பிள்ளைகளில் கரியநிறம் உடைய திவிட்டனிடம் அது சென்றது. அது தன் துதிக்கையில் பற்றி இருந்த வெள்ளை மலர்களால் தொடுக்கப் பெற்ற மாலையை அவனுக்கு அணிவித்து விட்டுச் சென்றது என்று கூறினான்.

இதைக் கேட்ட பயாபதிமன்னன் பெரிதும் ஆச்சரியம் அடைந்தான். தான் நேற்று கண்ட கனவினை அப்படியே சொன்ன நிமித்திகனை மனதிற்குள் மனமாறப் பாராட்டினான். அவன் நிமித்திகனைப் பார்த்து உண்மைதான் அதன் பயன் என்ன என்று கூறுங ்கள் என்றான்.

உடனே நிமித்திகன் அரசே விஞ்சையர் உலக வேந்தன் ஒருவன் இங்கு வருவான் தங்கள் குமாரன் திவிட்டனைப் பெரிதும் பாராட்டுவான். தன் மகளை அவனுக்கு மணம் செய்து கொடுப்பான். இது உண்மை புட்பமா கரண்டகம் என்னும் பொழில் இந்நகரில் அருகில் உள்ளது. இன்னும்ஏழு நாட்கள் சென்ற பின்னர் அப்பொழிலின்கண் அவ்விஞ்சையர் வேந்தனிடம்இருந்து தூதுவன் ஒருவன் கையில்ஓலையுடன் வந்து இறங்குவான். அவன் வரவைக் கண்டு நான் சொன்னதின் உண்மையை அறிந்து தெளிவுபொருங்கள் என்று கூறினான்.

நிமித்திகன் உரையைக் கேட்ட மன்னன் மகிழ்ந்தான்.இருப்பினும் மற்றவர்களின் கருத்து யாது? என்பது அறிய அவையினரைப் பார்த்தான். உடனே அமைச்சர் போன்றோர் அரசே நம்முடைய திவிட்டன் இத்தகைய சிறப்புகளுக்கு உரியவனே உலகமெல்லாம் ஒரு குடை நிழலில் காப்பாற்றுவான். நிமித்தகன் கூறியது உண்மையே என்றனர்.

நிமித்தகனுக்குத் தக்க உபகாரம் அளித்து சன்மானம் வழங்கி அவனை அனுப்பி வைத்தான். பின்னர் நேரே மந்திரசாலையை அடைந்தான். நிமித்திகன் கூற்றை நூல்வல்ல அறிஞர்களுடன் ஆராய முற்பட்டான்.

அவர்கள் அரசனிடம் அரசே நம்முடைய இளைய நம்பி நற்றவமுடையவன் சங்கு ரேகையும் சக்கர ரேகையும் அவன் கைகளில் காணப்படுகின்றன.

சங்கைக் கையில் ஏந்திய திருமாலே அவன். அவனும் திருமாலைப் போன்றே ஆணைச் சக்கரத்தைத் தன் கையில் ஏந்துவான் என்பதில் சந்தேகம் இல்லை. விஞ்சையர் வேந்தனே தன் திருக்குமாரத்தியைநம் திவிட்டனுக்கு அளிக்க முன் வருகிறான் என்றால் அவர்கள் நமக்கு அஞ்சியே தம்ஆட்சியை நடத்தி வருகின்றான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எனவே அந்த நிமித்திகன் கூறியபடி அந்தப் பொழிலில் ஒரு பளிங்கு மேடையை அமைப்போம். அடுத்தவாரம் அங்கு வந்து இறங்கும் தூதனை வரவேற்கும் பொருட்டுஅங்கு நம்முடைய துருவகாந்தனை வைப்போம் என்று கூறினார்.

உடனே மன்னன் அதனை ஏற்றுக் கொண்டான். அங்கு பளிங்கால் ஆன சிவதலம் ஒன்றை அமைக்க ஆணைப் பிறப்பித்தான். பின்னர் துரவ காந்தனை புட்பமா சுரண்டகத்துக் காவலாகச் செல்லுப்படிக் கட்டளை இட்டான். பிறகு அங்கிருந்து தன் அரண்மனைக்குத் திரும்பினான். நிமித்திகன் கூறிய செய்தியை மனதில் எண்ணி எண்ணிஅந்த மகிழ்ச்சியிலேயே இருந்தான்.

### தேவர்கள் இருவர் மண்ணுலகில் தோன்றுதல்

ஆங்கவர் திருவயிற் றமரர் கற்பமாண்
டீங்குட னிழிந்துவந் திருவர் தோன்றினும்
வாங்குநீர்த் திறைவாளர் வளையு மக்கடல்
ஓங்குநீர் நிழலுமொத் தொளிரு மூர்த்தியார்.

சுரமை நாட்டு மன்னனாகிய பயாபதிக்கு மனைவியர் ஆயிரம் பேர், அவர்களுள் முக்கியமானவர்கள், மிகாபதிதேவி, சசிதேவி. தேவலோகத்தில் அரசாட்சி செய்திருந்த விசாகபூதி, விசுவநந்தி, ஆகிய இருவரும் இப்பொழுது நிலவுலகினையடைந்து, மிகாபதி, சசி என்பவர்களின் திருவயிற்றிலே பிறந்தார்கள்.

பெண்ணிலாந் தகைப்பெருந் தேவி பேரமர்க்
கண்ணிலாங் களிவள ருவகை கைம்மிகத்
தண்ணிலா வுலகெலாந் தவழ்ந்து வான்கொள

வெண்ணிலாச் சுடரொளி விசயன் றோன்றினான்.

பயாபதி மன்னன் முதல் மனைவியான மிகாபதி மிக்க மகிழ்ச்சியடையுமாறு, விசயன் பிறந்தான். குளிந்த நிலவொளி நிலவுலகெங்கும் பரவித் தேவருலகத்தையுந் சென்றடையுமாறு விளங்கும் வெண்திங்களின் பேரொளியைத் தன்னிடத்தே கொண்டு விசயன் தோன்றினான் என்கிறார் ஆசிரியர்.

**சசி திவிட்டனைப்பெறுதல்:**

ஏரணங் கிளம்பெருந் தேவி நாளுறச்
சீரணங் கவிரொளித் திவிட்டன் றோன்றினுன்
நீரணங் கொளிவளை நிரந்து விம்மின
ஆரணங் கலா் மழை யமரர் சிந்தினார்.

திருமகளையொத்த இனம் பெரும் தேவியாகிய ‘சசி’, கருக்கொண்டு உயிர்க்கும் நாள் வந்தபோது, சிறந்த தெய்வத்தன்மை பொருந்தி விளங்குகின்ற ஒளியையுடைய திவிட்டன் என்பவன் பிறந்தான். அப்பொழுது நீரால் அலைக்கப்படும் ஒளிமிக்க சங்குகள் மிகுந்து முழங்கின தேவா்கள் பூமாரி பொழிந்தார்கள்.

**மைந்தர்கள் இருவரின் தோற்றப்பொலிவு:-**

மூத்தவன் விசயம் வெண்மை நிறத்தவன். வாடாத மாலையைப் பெற்றவன், முழங்கால் வரை தொங்கும் கைகளைக் கொண்டவன் மலைகளைப் போன்ற தோள்களை உடையவன் வீர நடைக்குச் சொந்தக்காரன். இளையவன் திவிட்டன், காயாம்பூவைப்போன்ற கரியநிறத்தவன். தாமரை மலா் போன்ற கண்களைக் கொண்டவன் அவன் இதழோ, ஆம்பல் மலா் போன்று சிவந்திருந்தது. அவனது அகன்ற மார்பில் திருமகள் தங்கியிருந்தாள். ஒருகையில் வலம்புரிச்சங்கு மறுகையில் சக்கரம் ஆகியன வீற்றிருந்தன. திவிட்டனுக்கு இளமை மிக்க ஆண்யானையைப் போன்ற நடை வாய்த்திருந்தது. திவிட்டனையும், விசயனையும் பார்த்தோர் கண்ணனும் பலராமனும் இவா்கள்தாமோ என வியந்தனா்.

**காதல் தீவளர்க்குங் காளைப்பருவம்**

திருவாளர் செல்வர்மேற் சென்ற சிந்தைநோய்
ஒருவரி னொருவர்மக் குடைய ராதலால்
உருவளர் கொம்பனா ருள்ளங் காய்வதோர்
எரிவளர்த் திடுவதோ ரிளமை யெய்தினார்.

விசய திவிட்டரைக் கண்ட மங்கையர்கள் கொண்ட காமநோய் ஒருவரைப் பார்க்கினும் மற்றொருவருக்கு மிகுதியாக இருந்தது. ஆகவே விசய திவிட்டர்கள் அம்மங்கையரின் காதல் தீயை வளர்த்திடற்குரிய நல்ல இளமைப் பருவத்தையடைந்தார்கள். அரிய மகன்களைப் பெற்ற மன்னன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். காளைப் பருவம் எய்திய இருவரும் வனப்பும் வலிமையும் ஒருங்கே பெற்றார்கள். வழக்கம் போல் அரசவை கூடியது. மன்னருக்கு இருபுறமும் மகன்கள் இருவரும் அமர்ந்தனர்.

**நிமித்திகன் வரவு:-**

ஆயிடை யலகின் மெய்ந்நூ லளவுசென் றடங்கி நின்றான்
சேயிடை நிகழ்வ தெல்லாஞ் சிந்தையிற் றெளிந்த நீரான்
மேயிடை பெறுவ னாயின் வேந்துகாண் குறுவன் கொல்லோ
நீயிடை யறிசொல் லெனன்றோர் நிமித்திக னெறியிற்சொன்னான்.

அச்சமயத்தில, தெளிவான அறிவு முதிர்ச்சி உடையவனும், எண்ணிறந்த உண்மை நூற்பொருள்களைக்கற்றவனும், அவற்றிற் கேற்ப அடக்கத்தை மேற்கொண்டு நிற்பவனும், முக்காலத்தையும் ஆராய்ந்து அதனை உண்மையாக உரைக்கக்கூடிய, அறிவினை உடைய ஒருவன், பயாபதியின் அவைக்கு வந்தான். வந்தவன் மன்னனையும் நாட்டையும் வாழ்த்தினான். வந்த நிமத்திகனைக் கண்ட அரசன், மலர் பிடித்த தனது கையினால் ஓர் இருக்கையைக் காட்டி அதில் அமருமாறு பணித்தான். அரசனின் உபசரிப்பு நிமித்திகனை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தன் திறமை முழுமையும் மன்னனிடம் காட்ட விரும்பினான்.

**அரசன் கனாக்கண்டதை திமித்திகன் கூறுதல்:**

கயந்தலைக் களிற்றி னாயோர் கனாக்கண்ட துளது கங்குல்
நயந்தது தெரியி னம்பி நளிகடல் வண்ணன் றன்னை
விசும்பகத் திழிந்து வந்தோர் வேழம்வெண் போது சேர்ந்த
தயங்கொளி மாலே சூட்டித் தன்னிட மடைந்த தன்றே.

பெருமை வாய்ந்த தலையையுடைய யானையை உடையவனே இரவிலே நீ ஒரு கனவினைக் கண்டுள்ளாய். அக்கனைவினை ஆராய்ந்து பார்த்தால், ஒரு யானை, விண்ணிடத்தினின்றும் இறங்கி வந்து, ஆண்மக்களிற் சிறந்தவனும், பெரிய கடல் போன்ற கருநிறத்தையுடையவனுமாகிய திவிட்டனுக்கு, வெள்ளை மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிவித்து விட்டுச் சென்றது என்று கூறினான்.இதனைக் கேட்ட பயாபதி மன்னன் பெரிதும் ஆச்சரியம் அடைந்தான். தான் கண்ட கனவினை அப்படியே சொன்ன திமித்திகனை மனதிற்குள் மனமாறப் பாராட்டினான். திமித்திகனிடம் கனாவின் பயன் என்ன? என்று கூறுங்கள் என்றான்.

**கனவின் பயன்:-**

மன்மலர்ந் தகன்ற மார்ப மற்றதன் பயனுங் கேண்மோ
நன்மலர் நகைகொள் கண்ணி நம்பி தனாம மேத்தி
மின்மலர்ந் திலங்கு பைம்பூண் விஞ்சைவேந் தொருவன்வந்து
தன்மக ளொருத்தி தன்னைத் தந்தனன் போகு மென்றான்.

மற்போர் செய்தரால் விரிந்த மார்பினையுடையவனே, அக்கனாவின் பயனைக் கேட்பாயாக எனக்கூறினான் மின்னலைப் போன்று ஒளி வீசும் அணிகலன்களை அணிந்த விஞ்சயைர் உலக வேந்தன் ஒருவன் வருவான். வந்தவன் தங்கள் குமாரன் திவிட்டனைப் பெரிதும் பாராட்டி தன் மகளை அவனுக்கு மணம் செய்து கொடுப்பான். இது உண்மை. இந்நகரின் அருகில் புட்பமாகரண்டகம் என்னும் பொழில் உள்ளது. இன்னும் ஏழு நாட்கள் சென்ற பின்னர் அப்பொழிலின்கண் அவ்விஞ்சையர் வேந்தனிடமிருந்து தூதுவன்

ஒருவன் கையில் ஓலையுடன் வந்து இறங்குவான். அவன் வரவைக்கண்டு நான் கூறியதன் உண்மையை அறிந்து தெளிவு பெறுங்கள் என்று கூறினான். நிமித்திகன் கூறியவற்றைப் பற்றி அமைச்சர்கள், அரசனுடன் கலந்து ஆராய்ந்தனர். நிமித்திகன் உண்மையே என்று கண்டனர். எனவே வித்தியாதரத் தூதுவன் வந்திறங்கப் போகிற புட்பமாகரண்டப் பொழிலுக்கு அழகூட்ட முடிவு செய்தனர்.

பயாபதி மன்னன் புட்பமாகரண்டகம் என்னும் பொழிலில் துருமகாந்தன் என்பவனைக் காவல் வைத்தற்கு முழுமனதுடன் இணங்கி அவ்வாறே செய்யுமாறு பணித்துவிட்டுத்தன் அந்தப்புரத்தையடைந்தான்.

## பயிற்சி வினாக்கள்

**குறுவினா:-**

1. மிகாபதி விசயனைப் பெற்ற நிலை யாது?
2. சசிதேவி திவிட்டனைப் பெற்ற நிலை யாது?
3. தேவர்கள் இருவர் யார்? அவர்கள் யாராக மண்ணுலகில் பிறந்தார்கள்?
4. நிமித்திகன் வரவினைப் பற்றிக் கூறுக?
5. நிமித்திகன் கூறிய செய்தி யாது?

**நெடுவினா:-**

1. மைந்தர்கள் இருவரின் தோற்றப் பொலிவினை விளக்குக?
2. காதல் தீ வளர்க்கும் காளைப்பருவங் குறித்து கட்டுரைக்க?
3. அரசன் கண்ட கனவினை விளக்கி வரைக?
4. கனவின் பயனாக நிமித்திகன் கூறியவற்றறை விரித்துரைக்க?
5. புட்பமாகரண்டகப் பொழிலின் அமைப்பும் சிறப்பும் யாது?

# சீறாப்புராணம்

சீறாப்புராணம் இயற்றியவர் உமறுபுலவர். தந்தை முகமது நயினார் பிள்ளை. காலம் 1640-1703. அரேபிய நாட்டில் பிறந்த நபி அவர்களின் வாழக்கை வரலாறு எனினும் கம்பனைப் போல் தமிழக் களத்தையே தனக்குரியதாக எடுத்துக்கொண்டார். தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளை மீறாது காப்பியத்தை அமைத்துள்ளார். இவரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி. எழுத உதவியவர் சதகத்துல்லா அப்பா அவர்கள்.

இந்நூல் விலாதத்து காண்டம், நுபவத்து காண்டம், ஹிஜ்றத்துக் காண்டம் என மூன்று காண்டங்களையும், 92 படலங்களையும், 5027 பாடல்களையும் கொண்டது. விலாதத் என்றால் பிறப்பு என்று பொருள். இதில் நபிகளின் பிறப்பு குறிப்பிடப்படுகிறது. நுபவத்து என்றால் தீர்க்க தரிசனம். நபிகளின் வாழ்க்கையில் (38 வயது முதல் 50 வயது வரை) நடந்த முக்கிய நிகழ்வுகள் விளக்கப்படுகின்றன. ஹிஜ்ரத் நல்லவைக்காக இடம் பெயர்தல் என்பது பொருள். மெக்காவை விட்டு நபிகள் மெதினா சென்ற வரலாறு விளக்கப்படுகிறது. இந்நூலில் பாடப்பகுதியாக நகரப்படலத்தில் மானுக்குப் பிணை நின்ற படலம் அமைந்துள்ளது.

**மானுக்குப் பிணை நின்ற படலம்**

**அரியினஞ் செறிந்த போன்ற அறபிகள் குழுவி னாப்ப**
**ணொருதனிச் சீய மொப்ப வுடையவன் றூதர் செல்வத்**
**திருநகர்ப் புறத்து நீங்கிச் செழுமுகின் முடியிற் றாங்கி**
**மருமலர் செறியுஞ் சோலை சூழ்ந்ததோர் வரையைச் சார்ந்தார்.**

செம்மறி யாட்டுக் கூட்டம் நெருங்கியதை நிகர்த்த அறபிகளின் கூட்டத்தினது மத்தியில் மிகவும் ஒப்பற்ற சிங்கத்தைப்போன்று யாவற்றையுஞ் சொந்தமா யுடையவனான ஜல்ல ஜலாவகு வத்த ஆலாவின் தூதுவராகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வளத்தைக் கொண்ட அழகிய அந்த மக்கமா நகரத்தினது எல்லையை விட்டு மகன்று செழிய மேகங்களைத் தனது சிகரத்தின்கண் சுமந்து வாசனை தங்கிய புஷ்பங்கள் சூழப் பெற்ற சோலைகள் வளைந்த ஒருமலையிற் போய்ச் சார்ந்தார்கள்.

**மானின் முறையீடு :**

**அருளடை கிடந்த கண்ணு மழகொளிர் முகமுஞ் சோதி**
**சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன்முகிற் கவிகை யோடும்**
**வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப்**
**பருவர லுழக்கு முள்ளத் தொடும்பிணை பகரு மன்றே**

அவர்கள் அவ்வாறு போக அந்த மானானது காருண்யமான தடையாகக் கிடக்கப் பெற்ற கண்களும், அழகு பிரகாசிக்கின்ற வதனமும், ஒளிவு சிந்துகின்ற கஸ்தூரி வாசனை கமழும் காத்திரமும், சூலைக் கொண்ட மேகக் குடையுமாகிய இவைகளோடும் இங்கு வருவது பரிசுத்தனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதராகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தாமென்று மனசின்கண் தேற்றமுற்றுத் துன்பத்தைத் தாங்கி நிற்கும் இருதயத்தோடும் சொல்ல ஆரம்பித்தது.

**நெடியவன் றூதர் வந்தார் வேடனா னிலத்தி னந்த**
**முடலுயிர்க் கிறுதி யில்லை யுழையினத் தோடுஞ் சேர்ந்து**
**கடிதனிற் கன்றுங் காண்போ மெனமுகம் மதுவைக் கண்ணா**
**னொடிவரை யிமைமூ டாம னோக்கியே கிடந்த தன்றே**

இவ்விடத்தில் நெடியவனாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவர் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வந்தார்கள். இனிப் பூமியின் கண் இவ்வேடனால் நமது உடலுக்கும் உயிருக்கும் யாதொரு முடிவில்லை. நாம் நமது கன்றையும் கண்களினாற் பார்ப்போமென்று அந்நபிகட் பெருமானவர்களை ஒரு நொடி நேரம் வரையிலாவது தனது இமைகளை மூடாமல் கண்களினாற் பார்த்துக் கொண்டே கிடந்தது.

**ஏட்டலர் நறவ மாந்தி யிருஞ்சுரும் பிசைக்குந் தோற்றம்**
**வாட்டமின் முகம்ம திங்ஙன் வருந்து மானை**
**மீட்டனர் வேட னீமான் விரும்பினன் பயங்க டீர்த்தார்**
**கூட்டுறைந் தொளித்தன் மாற்று மெனப்பல கூய போலும்**

அன்றியும் சிறந்த வண்டுகளானவை இதழ்களைக் கொண்ட புஷ்பங்களினது தேனை யருந்திப் பாடுகின்ற தோற்றமானது, இவ்விடத்திற்கு வாட்ட மற்ற நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தப றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வந்தார்கள். துன்பப்படுகின்ற அம்மானை மீட்பார்கள். அந்த வேடனும் ஈமானை ஆசிப்பான் மற்றும் பயங்களை நீக்குவார்கள். நீங்கள் உங்கள் கூடுகளில் தங்கி ஒளிப்பதை மாற்றுங்க ளென்று பலவாய்க் கூவியதைப் போன்றிருந்தது.

**நிறைவளஞ் சுரந்த கானி னின்றநந் நபியை நோக்கிக்**
**குறியவா லசைத்து நீண்டகொழுங்கழுத் துயர்த்தி நீட்டி**
**மறைபடா மதியே வண்மை முகம்மதே யென்னப் போற்றித்**
**தறுகிடா தெவர்க்குங் கேட்பச் சலாமெடுத் துரைத்துக் கூறும்**

நிறைந்த செல்வ மானது அதிகரிக்கப் பெற்ற அக்காட்டினிடத்து நின்ற நமது நாயகம் நபி காத்திமுல் அன்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை அந்த மானானது பார்த்துத் தன் குறிய வாலை யாட்டி நீட்சியுற்ற செழித்த கழுத்தை யுயரச் செய்து நீட்டி ஒரு காலத்தி லாயினும் மறையாத சந்திரனானவரே! அழகிய முகம்ம தென்னும் திருநாமத்தையுடையவரே! என்று சொல்லித் துதித்து யாவருக்கும் கேட்கும் வண்ணம் சலா மெடுத்துச் சொல்லிக் கூறத் தொடங்கியது.

**வல்லவ னுண்மைத் தூதே மன்னுமா நிலத்தின் மாந்த**
**ரல்லலை யகற்றி வேதத் தறநெறி பயிற்றிச் சொர்க்கத்**
**தில்லிடைப் புகுத்தப் பூவி னிடத்தினி லுதித்த கோவே**
**யொல்லையி னெனது சொற்கேட் டுவந்தரு ளளிக்க வேண்டும்.**

வல்லவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் சத்திய தூதுவரே! பொருந்திய மகத்தான இப்பூமியினது மாந்தர்களின் துன்பங்களை யொழித்துப் புறக்கானுல் அலீமென்னும் வேதத்தின் வீட்டின்கண் புகுத்தும்படி இவ்வுலகத்தில் அவதரித்த அரசரே எனது வார்த்தைகளை விரும்பிக் கேட்டு விரைவில் கிருபை யருளல் வேண்டும்.

**தனியனென் னுயிருங் காக்குங் கலையுயிர் தானு மொன்றா**
**யினிதினொன் றாய தென்ன விளங்கன்றொன் றீன்றே னின்ப**
**நனிகளி கடலி லாழ்ந்து நறுமலை யிடத்திற் சேர்ந்து**
**துனிபல வகற்றி னேன்முன் சூழ்வினை யறகி லேனே.**

ஏகனாகிய எனது ஜீவனும் என்னைக் காக்கா நிற்கும் கலையினது ஜீவனும் ஒருங்கு சேர்ந்து இனிமையுடன் ஓர் ஜீவனானதைப் போல நான் ஒரு இளங்கன்றைப் பெற்றேன். அதனால் இன்பமிகுந்த சந்தோஷ சாகரத்தி லமிழ்ந்து வாசனை தங்கிய மலையினிடத்துச் சேர்ந்து பல துன்பங்களையும் ஒழித்தேன். ஆதியில் சூழ்ந்திருக்'கும் செயலை இன்னதென்று அறிந்தேனில்லன்.

**உள்ளுயி ரனைய கன்று மொருத்தலு மியானு மோர்நாள்**
**வெள்ளமொத் தனைய மானி னினமுமோர் வெற்பின் சார்பி**
**னிளிலை யள்ளி வாய்க்கொண் டரும்பசி தடிந்து நீருண்**
**டெள்ளள வெனினு மச்ச மின்றுநின் றுலவு நேரம்.**

ஓர் நாள் எனது சரீரத்தினகம் பொருந்தி யிருக்கும் ஜீவனையொத்த குட்டியும் ஆண்மானும் நானும், சமுத்திரத்தை நிகர்த்த மான் கூட்டங்களும் ஓர் மலையினது சார்பில் வாயினால் நெருங்கிய இலைகளைக் கவ்வி யெடுத்து அரிய பசியைக் குறைத்துத் தண்ணீர் குடித்து எவ்வளவாயினும் பயமில்லாமல் நின்று உலாவுகின்ற சமயத்தில்,

**அத்திசைக் கெதிரின் மேல்பா லடுத்தொரு குவட்டின் கண்ணே**
**மத்தகக் கரியு மாய்க்கும் வரிப்புலி முழக்க நீண்ட**
**குத்திரத் தசனித் தாக்கின் குவலய மதிரக் கேட்டுத்**
**தத்தியெத் திசையுந் திக்குந் தனித்தனி சிதறி னேமால்.**

நாங்கள் நின்றிருந்த அந்தத் திசைக்கு முன்னாற் சமீபித்து மேற்பக்கத்தில் ஒரு மலையின்கண் மத்தகத்தைக் கொண்ட யானையையும் வதை செய்யா நிற்கும் இரேகைகளையுடைய ஓர் புலியினது முழக்கத்தை! குரூரமமைந்த இடியினது தாக்கத்தைப் போல இவ்வுலகமானது அதிரும்படி காதுகளினாற் கேள்வியுற்றுச் சாடி எந்தத் திசைகளிலும் தனித்தனி சிதறலாயினோம்.

அவ்வாறு அந்தக் காட்டின்கண் போய்ச் சேர்ந்த சமயத்தில் அவ்விடத்தில் இந்த அரபி வேடன் ஒளித்துக் கயிற்றினால் உண்டாகிய தனது வலையைச் சுற்றி சுருக்கப் புலியின் வாயில் நின்றுந் தப்பி வலிமையைக் கொண்ட சிங்கத்தினது இடத்திலகப்பட்டு வருத்தமடைந்தாற் போலும் வருத்தமடைந்து அழகிய தேகமும் ஆவியும் பதைக்கும் வண்ணம் அழுது அறிவழிந்து ஒடுக்கமுற்றேன்.

**கவைமுனைக் கொட்டுச் செவ்விக் கலையுட லுயிரு மீன்ற**
**நவியுட லுயிரு மோர்மா னுடன்கொண்டு நடப்ப தொத்துச்**
**சவிபுறந் தழுவங் கோட்டுச் சார்பிலிவ் வசனத்தின் கண்ணே**
**சுவையற மொழியா னென்னைச் சுமந்திவ ணிறக்கி வைத்தான்.**

இரசமற்ற வார்த்தைகளை யுடையவனான இவ்வேடன் அவ்விதம் எடுத்துக் கவரைக் கொண்ட முனையினது கொம்புகளையுடைய அழகிய என் கலைமானின் சரீரத்தையும் ஜீவனையும் யான் பெற்ற கன்றினது சரீரத்தையும் ஜீவனையும் ஒரு மானுடன் கொண்டு செல்வதை நிகர்த்து என்னைச் சுமந்து வந்து சூரியனானவன் விலகிப் பக்கத்தில் தவழா நிற்கும் அம்மலையினது சார்பில் இச்சோலையினிடத்து இறக்கி வைத்தான்.

**கட்டுடன் கிடந்து நெஞ்சிற் கவலையள் ளழிந்த மாறா**
**நெட்டுயிர்ப் பெறழந்து சோர்ந்து நிலத்திடைக் கிடக்கு நேரம்**
**வட்டவெண் கவிகை வள்ளல் முகம்மது நபியே யும்மைத்**
**திட்டியிற் றெரிக் கண்டேன் றிடுக்கமுந் தீர்ந்த தன்றே.**

அந்த அறபி வேட்டுவன் அவ்வாறு கட்டிய கட்டோடு நானிருந்து மனசினது விசாரத்தினால் நெஞ்ச மகிழ்ந்து நீங்காத பெருமூச்சு விட்டு மெலிந்த பூமியின்கண் கிடக்கின்ற சமயம், வெள்ளிய சந்திரவட்டக் குடையினது வள்ள லாகிய முகம்மதென்னுந் திருநாமத்தையுடைய நபிகட்பெருமானே உங்களை எனது கண்களில் தெரியும்படி பார்த்தேன். எனது நடுக்கமும் நீங்கிற்று.

**எனவிவை யுரைத்துப் பின்னு மெழினபி முகத்தை நோக்கி**
**மனநிலை வாக்கி னோடு முகம்மதே யென்னப் போற்றிப்**
**புனமுறை விலங்கின் சாதி யாயினுந் தமியேன் புன்சொற்**
**றனையருட் படுத்திக் கேட்பீ ரென்றுரை சாற்றிச் சாற்றும்**

என்று இவைகளைக் கூறிப் பின்னரும் அழகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு மலைகிவசல்ல மவர்களின் வதனத்தைப் பார்த்து மன நிலைமையைப் பெற்ற வாக்குடன் முகம்மதென்னும் அபிதானத்தை யுடையவரே என்று சொல்லித் துதித்து யான் கொல்லைகளில் தங்கா நிற்கும் மிருகச் சாதியானாலும் தமியேனாகிய எனது கீழ்மையான வார்த்தைகளைக் கிருபை வைத்துக் கேட்பீர்களாக வென்று கூறிச் சொல்லத் தொடங்கினது.

**அடவியிற் கிரியில் வீணி லவதியுற் றிறந்தி டாமல்**
**வடிவடைக் குரிசி லேனும் மலர்ப்பதச் செல்வி நோக்கிப்**

**படுபரற் கானில் வேடன் பசிப்பிணி தீர்ப்ப தாக**
**வுடலிறத் திடுக லெவ்வெவ் விறப்பினு முயர்ச்சி மேலோய்**

அழகையுடைய குரிசிலே மேன்மையைக் கொண்ட முகம்மதென்னும் அபிதானத்தை யடைந்த நபிகட்பெருமானே காட்டி னிடத்தும் மலையினிடத்தும் வீணாகத் துன்பப்பட்டு இறந்து போகாமல், உங்களது தாமரை மலரைப் போன்ற திருவடிகளின் சிறப்பைப் பார்த்து மிகவும் பரற்கற்களையுடைய கானத்தினது வேட்டுவன் பசி யாகிய நோயைத் தீர்ப்பதற்காகச் சரீரத்தை இறக்க எந்தெந்த இறப்பைப் பார்க்கிலும் மிக உயர்ந்தது.

ஆயினும் இரேகைகள் படர்ந்த புலியினது முழக்கத்தைக் காதுகளினாற் கேள்வியுற்று மான் கூட்டமானது சிதறுதலடைந்து தத்தம் இருப்பிடத்தை யுணராமலும் ஒன்றுக் கொன்று கூடப் பொருந்தாமலும் சொல்லுதற் கரிதென்று எவ்விடத்தும் போனதினால் எனது ஆண்மான் என்னைத் தேடி ஒலியானது மாறப் பெறாத நெடிய காட்டினிடத்திற் சென்று சென்று தங்கி யிருந்ததோ? அல்லது இறந்து போயிற்றோ?

அன்றியும் அவ்வாறு அம்மானானது இன்று முழுவதும் விரைவிலோடிப் பிரியாமலும் புற்களை மணத்திப் பற்களினாற் கறியாமலும் தண்ணீருங் குடியாமலும் தங்கியிருந்து என்னைத் தேடித் துன்பமுற்று அழுது கண்களின் அருவியாகிய நீரானது சிந்தும் வண்ணம் மெலிந்து நெருப்பினகம் விழுந்த தளிரைப் போலும் சரீரமானது பதையா நிற்கும்.

**பிடிபடு மிதற்கு முன்னே மூன்றுநாட் பிறந்து புல்லின்**
**கொடிநுனை மேய்ந்து நீருங் குடித்தறி யாது பாவி**
**மடிமுலை யிரங்கிப் பாலும் வழிந்தது குழவி சோர்ந்தது**
**படிமிசை கிடந்தென் பாடு படுவதோ வறிகிலேனே**

அன்றியும் மட்டுக் கட்டா நிற்கும் இதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் பிறந்து புல்லினது கொடியான நுனியைச் சாப்பிட்டுத் தண்ணீரும் அருந்தத் தெரியாத கன்றானது வாட்டமுற்றுப் பூமியின் மீது கிடந்து என்ன துன்பப் படுகின்றதோ பாவி யாகிய யான் அறிகிலேன். எனது மடிப்பைக் கொண்ட முலைகளானவை இறங்கிப் பாலும் வழிகின்றது.

**கோட்டுடைக் கலையி னோடுங் கூடிற்றோ வலதோர் பாலின்**
**மீட்டதோ வினத்தைச் சேர்ந்து விம்மிநின் றேங்கிற் றோகான்**
**காட்டிடைப் புலிவாய்ப ட்டுக் கழிந்ததோ வென்னைத் தேடி**
**வாட்டமுற் நலறி யோடி மறுகிற்றோ வறிகி லேனே**

அன்றியும் கொம்புகளையுடைய ஆண்மானோடும் சேர்ந்ததோ அல்லது ஓரிடத்தில் திரும்பினதோ? தனது கூட்டத்தைப் பொருந்தி நின்றி விம்மி அழுததோ? ஆற்றைக் கொண்ட காட்டினிடத்துப் புலியின் வாயி லகப்பட்டுக் கழிந்து போயிற்றோ என்னைத் தேடி மெலிவடைந்து சத்தித்து ஓடி மறுகுகின்றதோ? ஒன்றும் அறியேன்.

பொருந்திய கலிமாவென்றும் ஒழுங்கினது நிலைமையினால் ஜனங்க ளனைவர்களையும் சொர்க்கலோகத்தின் கண் போய்ச் சேரச் செய்கின்ற புண்ணியத்தைப் பெற்ற கீர்த்தியினது மேன்மையமைந்த முகம்மது நபியே. யான் பிராணிகளைக் கொல்லா நிற்கும் நிலைமையைக் கொண்ட வில்லைத் தாங்கிய கையையுடைய இந்த வேட்டுவனது கொடியபசியைத் தணியும் படி செய்வேன் எனது பாதங்களிற் பின்னிய கட்டையொழித்து எனக்காகத் தங்கள் பிணையென்று சொல்லி என்னை விடுவித்தல் வேண்டும்.

**விடுத்திரேற் கலையைச் சேர்ந்து விழைவுறுங் கவலை தீரப்**
**படுத்தியென் னினத்துக் கோதிப் பறழினுக் கினிய தீம்பால்**
**கொடுத்தரும் பசியை மாற்றிக் குலத்தொடுஞ் சேர்த்து**
**வல்லே யடுத்தொரு கடிகைப் போதி லடைவனேன் றறைந்த தன்றே**

அவ்வாறு தாங்கள் என்னை விடுவிப்பீர்களேயானால் யான் எனது ஆசைப் பெருக்கமற்ற ஆண் மானைச் சேர்ந்து அதன் விசாரங்களை யொழித்து என் கூட்டத்திற்கும் சொல்லி மிகவும் இனிமையமைந்த பாலைக் கன்றுக் கீந்து அரிதான அதன் பசியை அகற்றி அக்கூட்டத்தோடும் சேர்த்துவிட்டு விரைவில் ஒரு நாழிகை நேரத்தில் இவ்விடத்தில் வந்து சமீபித்துச் சேருவேனென்று கூறிற்று .

**மானுரை வழங்கக் கேட்டு மனத்தினிற் கருணை பொங்கிக்**
**கானவேட்டுவனை நோக்கிக் கன்றிடை வருத்தந் தீர்த்துத்**
**தான்வரு மளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்**

**தீனெனும் பயிரைக் காத்துச் செழும்புகழ் விளைக்குஞ் செம்மல்**

தீனுள் இஸ்லாமென்னும் மார்க்கப் பயிரைக் காத்து செழிய கீர்த்தியை விளைக்கா நிற்கும் செம்மலாகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் அலைகிவசல்ல மவர்கள் அவ்வாறு அந்த மானானது தனது சமாச்சாரத்தைக் கூறத் தங்களின் காதுகளினாற் கேள்வியுள்ள இருதயத்தின்கண் காருண்ணியம் அதிகரித்து அந்தக் காட்டினது வேடனைப் பார்த்து இந்த மானானது தனது குட்டியினிடத்துள்ள துன்பத்தை யொழித்து மீண்டு இங்கு வருமட்டும் அதற்கு பதிலாக யான் பிணையென்று கூறி நின்றார்கள்.

**கானிடைப் பிடித்த மானைக் கட்டவீழ்த் தவணிற் போக்கின்**
**மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்ன ருண்டோ**
**ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்யுளு நாட்டிற் றுண்டோ**
**வூனமிப் பிணைச்சொ லையா வோதுவ தொழிக வென்றான்.**

ஐயாவே காட்டின்கண் பிடித்த யானை அதன் கட்டுகளை யவிழ்த்து அந்தக் காட்டி னிடமாகப் போகச் செய்வதால் திரும்பியும் மாந்தர்களிடத்து வருவது ஆதியிலுளதா? ஞானத்தைக் கொண்ட மன்னுள்ள மூன்று வேதங்களையும் கற்றுத் தெளிந்தவர்கள் செய்யுள்களும் அவ்வாறு வருமென்று இவ்வுலகத்தின்கண் நாட்டிற்றுளதா? இல்லையே ஆதலால் இந்தப் பிணையென்று கூறும் வார்த்தை குற்றமானது. அதைக் கூறுவதை ஒழித்துப் போடுங்களென்று சொன்னான்.

வேடன் அவ்வாறு சொல்லப் புறக்கானுல் அலீமென்னும்வேதத்தினது அமிர்த வார்த்தைகளை யுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பொருந்திய எனது பிணையாகச் செல்லும் பெரிய பெண் மானானது ஒரு நாழிசை நேரத்தில் திரும்பி உனது பால் வந்து சேரும் அவ்விதம் வாராதிருக்குமானால் எனது பசியைத் தீர்ப்பதற் காகப் பின்னர் அன்புடன் ஒரு மானுக்கு இரண்டு மான் தருவேன் நீ உன் அறிவானது கலக்க மடைய வேண்டா மென்று அவனுக்குக் கூறினார்கள்.

ஓங்கிய மேன்மையைக் கொண்ட வள்ள லாகிய முகம்ம தென்னுந் திரு நாமத்தையுடையவரே திருட்டும் ஒளிப்பும் நீங்காத சிந்திப்பை யுடையவனும்

ஜீவப் பிராணிகளுக்கு எக்காலமும் எள்ளினது அளவாயினும் இரக்க மில்லாத வேடர்களின் குலத்தி லுள்ளவனுமான எனது இருதயத்தை யுணர்ந்தும் தாங்கள் இவ்வாறு கேட்டீர்கள். அதற்கு பதிலாக உரைப்பது யாது? ஒன்று மில்லை. உங்களது இனிமை தங்கிய வார்த்தைகளை யான் மறந்தவ னல்லேன். மானை விட்டு விடுங்களென்று சொன்னான்.

**வேட்டுவ னுரைப்பக் கேட்டு முகம்மது விருப்ப முற்று**
**வாட்டமுற் றிருந்த புள்ளி மானிடத் திருந்து பாரி**
**னீட்டிய காலிற் சேர்த்த துடரினை நெகிழ்த்துக் கானிற்**
**கூட்டுறாக் குழவிக் குப்பால் கொடுத்திவண் வருக வென்றார்.**

வேடனானவன் அவ்வாறு சொல்ல நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களின் காதுகளினாற் கேள்வியுற்று விருப்பமாய் மெலிவடைந்திருந்த அந்த புள்ளிகளை யுடைய மானினது இடத்தில் உட்கார்ந்து, பூமியின்கண் நீட்டிய காலிற் பொருந்திய கயிற்றை நெகிழும்படி அவிழ்த்துக் காட்டினகம் கூட்டுதலுறாத குட்டிக்கு அமுதமளித்து இவ்விடத்திற்கு வருவாயாக வென்று கூறினார்கள்.

அவ்வாறு கன்றுக்குத் தன் வயிறானது பருக்கும்படி பிரகாசத்தை யுடைய முறையினது பாலை யுண்பித்து அங்கு கூடி நின்ற தனது கூட்டத்திற் கெல்லாம் தான் நெறிபடா நிற்கும் கானகத்தின்கண் ஓடிக் கொடிய வலிமையையுடைய வேட்டுவன் கையில் அகப்பட்ட வரலாற்றையும், ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவரான நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வெற்றியைக் கொண்ட தமது பிணையினால் திருப்பி விட்டதையுங் கூறிற்று.

வாசனையைக் கொண்ட புஷ்பமாலையைக் தாங்கிய தோள்களையுடைய வள்ளலான நமது நாயகம் எம்மறைக்கும் தாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் குட்டியும் அப்பெண் மானும் தம்மிற் கூடி வருவதைக் குறிப்பாய்ப் பார்த்துச் சந்தோஷித்து அந்தகார மமைந்த அகத்தை யுடையவனாகிய அந்த வேட்டுவனை அன்பாக இனிமையுடன் அழைத்து உன்னிடத்தில் ஒரு மானுக்கு இரண்டுமான் வருகின்றனவென்று கூறினார்கள்.

குட்டியும் மானும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பாதங்களில் பணிந்து ஓதுகின்ற சலாமும் சொல்லிப் பாவியாகிய எனக்காக விரும்பிப் பொருந்திய தங்களின் பிணையை மீட்டிக் கொள்ளுங்களென்னும் வார்த்தைகளைக் கூறிற்று.

## வேடனின் மன மாற்றம்

மானானது பக்கத்தில் தங்கி இவைகளைச் சொல்ல நாயகம் முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் வில்லைத் தாங்கிய கையையுடைய அந்த வேட்டுவனை யழைத்து நமது பிணையைத் தள்ளி உனது துன்பத்தைக் கொண்ட பசியை நீக்கிப் பெருமையை யுடைய ஊருக்குப் போய்ச் சேர்வாயாக வென்று சொன்னார்கள். உடனே அவன் நான் சொர்க்கலோகத்தைப் பெற்று மேன்மையுற்று வாழ்ந்தேனென்று சொல்லி அந்நபிகட் பெருமானின் தாமரை மலரை யொத்த திருவடிகளில் வீழ்ந்தான்.

**மதிமுக மகிழ்ச்சி கூர முகம்மது கலிமாச் சொல்ல**
**விதயமுற் றோதி வேட னினிதினி னீமான் கொண்டு**
**புதியனை வணங்கிச் செய்யுஞ் செய்தொழில் பொருந்தக் கேட்டு**
**நிதிமனைக்குரிய னாகித் தீனிலை நெறிநின்றானே**

அவ்வாறு அந்த வேட்டுவன் கூற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களின் சந்திரனை நிகர்த்த முகத்தின்கண் சந்தோஷம் அதிகரிக்கும்படி லாயிலாஹ இல்லல்லாகு முகம்ம துற்ற குலுல்லாஹி என்னும் கலிமாவைச் சொல்ல வேட்டுவனும் தனது மனமானது பொருந்திச் சொல்லி இனிமையுடன் ஈமான் கொண்டு புதிய ஆலத்தை யுடையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவைத் தொழுது யுடையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவைத் தொழுது செய்யா நிற்கும் நித்தியச் செயல்களைப் பொருந்தும் வண்ணம் கேட்டுச் சொர்க்கலோகத்திற்கு உரியவனாய்த் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையினது ஒழுங்கில் நின்றனன்.

அவ்விதம் நின்ற வேட்டுவன் அந்த மானைப் பார்த்து நான் உன்னால் பெறா நிற்கும் மோட்சத்தை பெற்றுக் கொண்டேன். என் பெரிய பாவத்தை இல்லாமற் செய்தேன். ஆதியில் நீங்காத நெருங்கிய கொலையை விளைத்துச் செய்கின்ற தொழில்களையும் ஒழித்தேன். நீயும் உனது மறுகுதலை வீசி விட்டுக் தேறுகின்ற மனசினது பிரகாசத்தோடும், குட்டியோடும் பொருந்தி ஆண்மானிடத்திற் சென்று சேர்ந்து நடப்பதை முயல்வாயாக வென்று கூறினான்.

### பயிற்சி வினாக்கள்

**குறுவினா:**

1. மான் வேடனிடம் எவ்விதம் பிடிப்பட்டது?
2. மான் நபிகள் நாயகத்தை கண்டு நினைத்தது யாது?
3. நபிகள் நாயகம் மானை விடுவித்த முறை பற்றி எழுதுக

**நெடுவினா**

1. நபிகள் நாயகம் மானுக்கு பிணைநின்ற வரலாற்றை விளக்குக
2. வேடனின் மனமாற்றத்தை நும்பாடப்பகுதி கொண்டு கட்டுரைக்க

# இயேசு காவியம்

இயேசு காவியத்தை இயற்றியவர் கவியரசர் கண்ணதாசன். பிறவிக் கவிஞர் என்று போற்றப்படும் கவிஞர்களில் கண்ணதாசனும் ஒருவர். இவருடைய இயற்பெயர் முத்தையா என்பதாகும். 1927ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் சாத்தப்பச்செட்டியர், தாயார் விசலாட்சி அம்மையார். தென்றல், சண்டமாருதம், கண்ணதாசன், தென்றல்திரை, முல்லை, முதலிய இதழ்களை நடத்தி வந்தார் பாரதிதாசனுக்கு அடுத்தாற்போல் வைத்துப் போற்றப்படுபவர். இவரெழுதிய ‘சொர்க்கத்தில் அண்ணா’ என்ற கட்டுரைக்கு ஈடும் இல்லை, இணையும் இல்லை சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்த பாடல்கள் பலவற்றைப்பாடி தமிழக மக்கள் அனைவர் நெஞ்சங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றவர். அவருடைய ஆட்டனத்தி ஆதிமந்தியும், இயேசு

காவியமும் அழியாப் புகழ் பெற்றவையாகும். இவருடைய அர்த்தமுள்ள இந்து மதம் காலம் காலமாக இவருடைய பெயரைக் கூறுவதாகும். இதைப்போல் இயேசு காவியமும் இவருக்குப் பெரும்புகழ் சேர்த்தது. திரைப்படங்களுக்கு ஏராளமான பாடல்கள் எழுதிப் பெரும் புகழ்பெற்ற இவர் சில படங்களுக்கு வசனமும் எழுதியுள்ளார். கவியரசராகப் போற்றப்பட்டும் புகழப்பட்டும் வந்த கண்ணதாசன் உண்மையான கவி அரசராகவே வாழ்ந்து மறைந்தார் என்று கூறுவது மிகையல்ல

இறைமகன் இயேசு, இறைவன் உலகை எவ்வளவு அன்பு செய்தார் என்று காண்பிக்கவந்தவர். உலகை மீட்க அவர் வருவாரென உலகத்தோற்றத்தின் போதே முன்னுரைக்கப்பட்டார். காலம் நிறைவேறிய போது நம்மிடையே வந்தார். உலக மக்கள் அனைவரும் இறைமக்களாகும் வழியைக் காட்டிச் சென்றார். இயேசுவின் வாழ்வையும், வாக்கையும் சித்தரிக்கும் வகையில் கண்ணதாசனின் இயேசுகாவியம் உருவாகியுள்ளது.

இயேசுகாவியம் ஐந்து பகுதிகளைக் கொண்டது. நால்வர் அருளிய நற்செய்தியின் அடிப்படையில், இயேசுபிரானின் வாழ்வுடன் தொடர்புடைய 148 நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன. பாயிரமும், மங்களமும் முறையே முதலிலும் முடிவிலும் அமைந்துள்ளது. பிறப்பு, பொது வாழ்வில் சாதனைகள், பாடுகள், மகிமை ஆகிய உட்பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பிறப்பு:**

எருசலேம் நகரில் பெத்லகேம் என்னும் ஊரில் இயேசு பிறந்தார். மரியாள் என்ற கன்னிகைக்கு சூசையப்பர் வாழ்க்கைத் துணையாக நியமிக்கப்பட்டிருக்கையில் காபிரியேல் என்னும் தேவதூதன் மங்களத்தூது ஒன்றினைக் கொண்டு வந்தான். ஆண்டவர் குமாரன் உன்னிடத்தில் மகனாகத் தோன்றுவார். தேவகுமாரன் பிறப்பதற்கு நீ என்ன தவம் செய்தாயோ? என்று வாழ்த்திச் சென்றான். அதற்கு மரியாள் தான் கன்னிகையாக இருப்பதையும், எங்ஙனம் மகனைக் காண்பேன் எனவும் கூறினாள். மரியாள் கேட்ட கேள்விக்குத் தேவதூதன் விடை பகர்கிறான்.

“பரிசுத்த ஆவி என்மேல்
பரிவுடன் இறங்கி நிற்பார்
ஒரு பத்து மாதம் சென்று
உன்மகன் பிறப்பான் அந்தத்
திருமுகத்து விளக்கம் நாட்டில்
தேவகுமாரன் என்னும்
மருவற்ற பேரைப் பெற்று
வளம் பெறும்” என்றான் ஆங்கே!

தேவதூதன் இவ்வாறு கூறியதும் மரியாள், நான் ஆண்டவர் அடிமை’ என்று கூறி அடிபணிந்து நின்றாள். பின்னர் சூசையப்பருக்கு இச்செய்தி தெரிய வந்தது. அவர்கள் இருவரும் நாசரேத் ஊரிலிருந்து பெத்லகேம் சென்றனர். அங்கு அவர்கள் தங்குவதற்கு இடமில்லை யாதலால் மாட்டுத் தொழுவில் தங்கி இயேசுவைப்பெற்றெடுத்தனர். இயேசுவை ஆயர்களும், வானசேனையும் வாழ்த்தினர்.

**இளமைப்பருவம்:-**

சிறுவயதிலேயே இயேசுபிரான் தாய் தந்தையிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். பிறரிடத்தில் அன்புடனும், இல்லாதவர்களிடத்தில இரக்கம் கொண்டும், உறவினரிடத்தில் உள்ளன்புடனும் பழகினார். உயர்ந்தவர் தாழ்ந்தவர் பேதமின்றி குணத்தில் சீவனாக வாழ்ந்தார். தமது பன்னிரண்டாவது வயதில் தந்தையுடன் தச்சு வேலை செய்வதற்குச் சென்றார்.

**மலைப் பொழிவும் அதன் சிறப்பும்:**

இயேசு பிரான் சிறு வயதில் நன்கு பேசும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பன்னிரண்டு வயதிலேயே ஆலயத்தில் அமர்ந்து வேத வல்லுநர்களுடன் கேள்வி தொடுக்க ஆரம்பித்தார் - அருளப்பர் என்பவரிடம் திரு முழுக்கைப் பெற்றார். நாற்பது நாள் உண்ணா நோன்பிருந்து புடமிடப்பட்டார். தனக்கென்று பன்னிரண்டு சீடர்களைத் தெரிந்து கொண்டு, பொது வாழ்வில்

ஈடுபட்டார். ஒருமுறை ஒரு மலைப்பகுதியைத் தெரிந்து கொண்டு அங்கிருந்து அருளுரை ஆற்றினார்.

'எளிய மனத்தோர், துயரம் உறுவோம்,

சாந்தம் உடையோர், நீதியின் பாலே தாகங்கொண்டேன்,

அமைதி கொடுப்போர், நீதிக்காகத்துன்பம் உறுவோர்,

ஆகியோர்கள் மிகுந்த நன்மை பெற்றவர்கள் என்று

அருளுரை ஆற்றினார்'.

அத்திரு மொழியினைக் கண்ணதாசன் மக்கள் உயிர்காக்கம் அமுதம் என்று போற்றுகிறார்.

'விந்தை சேர் உலகில் இயேசு

வெடித்ததோர் புரட்சி ஓசை

சிந்திய முத்தோ மக்கள்

சீவனைக் காக்கும் பானம்'.

என்று கூறுகிறார்.

**சீடர்களை அனுப்புதல்:**

இயேசு கிறித்து தமக்கெனத் தெரிந்து கொண்ட பன்னிரண்டு சீடர்களிடம், அரசைக்குறித்து அருளுரை ஆற்றிய பின்னர், அவர்கள் அச் செய்தியை உலகெங்கினும் சென்று பெற வேண்டும் என அவர்களை இரண்டிரண்டு பேராக அனுப்பினார். மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல காணப்படும் மக்கள் மேல் மன முருகி அம்மக்கள் வாழ்வு பெற நற்செய்தி கூறினார்.

"காசு பணம் தங்காகை கையடக்கப் பெட்டி எதும்

தேவையில்லை உங்களுக்கென்றார்" - உங்கள்

சேவை தரும் ஊதியத்தில் வாழ்வதற்குச் சாப்பிடுங்கள்

வேறு வழி வேதனை என்றார்!

‘குள்ள ஓநாய்க் கூட்டத்தினில் தட்டு ஆடுபோல் உம்மை

விண்ணரசைக் காட்டச் சொல்கிறேன் -ஆக

கொஞ்சம் புறா போல நீங்கள் வஞ்சமின்றி நாகத்தின்

விவேகத்துடன் சென்று விடுங்கள்!

என்று அவர்களை அனுப்பினார்.

**அருளும் புகழும்:-**

ஒரு முறை இயேசு கிறித்துவும் அவரது சீடர்களும் வனாந்திரத்தில் அருளுரை ஆற்றிக் கொண்டிருந்தனர். ஆயிரமாயிரமாய் மக்கள் அருளுரை கேட்க வந்திருந்தனர். அங்கு அவர்களுக்கு உணவு கொடுக்க ஒன்றும் இல்லை. ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மட்டுமே ஒரு சிறுவனிடம் இருந்தன. இயேசு அதனை வாங்கி விண்ணகம் நோக்கி வேண்டி ஐயாயிரம் பேரை திருப்திபடுத்தினார். இதனைக் கண்ணதாசன் கூறும் போது,

‘நாயகம் மனது வைத்தால் எதுவும்

நாளுக்கு நாள் வளரும்

தூயவன் மகிமை எல்லாம் உலகில்

தோளுக்குத் தோள் மலரும்’

என்று விளக்கி இயேசுவின் விழிப்புணர்வையும் பொறுப்பையும் பற்றிக் கூறுகிறார்.

**பாடுகளின் பாதை:-**

மக்களுக்கு நல்வார்த்தைகளைக் கூறி ஆற்றி தேற்றி வந்த இயேசு பிரானுக்கு பாடுகளின் பாதையும் இருந்தது. அவரை கிராம மக்கள் சிலுவையில் அறைந்தனர். உடலில் கசையடிகளையும், தலையில் முள்

மகுடத்தையும் சூட்டி கைகளிலும், கால்களிலும் ஆணிகள் அடித்து சிலுவையிலறைந்தனர்.

“அக்கிரமம் வென்றதென ஓராணி கைகளிலே அறைந்திருந்தார். மக்களினம் தோற்றதென மறு ஆணிகால்களிலே அடித்து வைத்தார். கொக்கரித்தார் மண்டியிட்டார். குறும்பான வார்த்தை பல கூறிகின்றார். எக்களிப்பும் மகிழ்ச்சிகளும் இன்னொருநாள் வரும் வரைக்கும் இருப்பதன்றோ”

என்று கை கால்களில் ஆணி அடித்தமைக்கு புது விளக்கமே தருகிறார் கவிஞர். சிலுவையில் அறைந்த பின்னர் இயேசு பரலோகத் தந்தையிடம் ஆவியை ஒப்புவித்து விட்டு உயிரை விட்டார். அவரது உடலை சூசையப்பர் அடக்கம் செய்தார். மூன்றாம் நாளில் தாம் சொன்னபடி உயிர்த்தெழுந்தார். சீடர்களுக்குக் காட்சிகொடுத்து விட்டு மகிமையடைந்தார்.

**இயற்கையின் குமுறல்:-**

அன்புத் தந்தையே! ஆத்மாவை உன் அன்புக்கால்களில் இப்பொழுதே நான் ஒப்படைக்கின்றேன் என்றார் இயேசு: சென்றது உயிர். இந்நிலையில் இயற்கையே குமுறியெழுந்தது. அதனைக் கவிஞர்

“நீல்வானில் இடியெழுந்து சூரியன் மறைந்தது
நேரில் நின்ற பாறையோடு பூமியும் வெடித்தது
கோலமிக்க கல்லறைகள் கூவியே பிளந்தன
கோவிலில் இருந்த சிலை பாதியாய்க்கிழிந்தது!
பூவிருந்த பொன்மரங்கள் போய் விழுந்து பட்டன
பூமி தன்னை வானகத்து மீனினங்கள் தொட்டன”

என்று சித்தரிக்கின்றார்.

**பயிற்சி வினாக்கள்**

**குறுவினா:-**

1. கண்ணதாசனின் இயேசு காவியம் உருவாகிய விதம் குறித்து எழுதுக?
2. இயேசு பிரான் பிறப்பு குறித்து எழுதுக?
3. இளமைப்பருவத்தில் அவரது செயற்பாடுகள் எவ்வாறிருந்தன?
4. இயேசு காவியத்தின் அமைப்பும் சிறப்பும் யாது?
5. இயேசு அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரை திருப்திபடுத்தியதனை கவிஞர் எவ்விதம் குறிப்பிடுகிறார்?

**நெடுவினா:**

1. இயேசுவின் மலைப்பொழிவினை விளக்குக?
2. பன்னிருசீடர்களிடம் கூறியனுப்பிய செய்திகளைத் தொகுத்துரைக்க?
3. இயேசுபிரான் அடைந்த துயர நிலையினை விளக்குக?
4. இயேசு உயிர் பிரிந்த நிலையில் இயற்கையின் குமுறலை விளக்குக?

**பாடத்திட்டம் அமைத்தவர்**

**முனைவர்.கு.நீதா,**

உதவிப்பேராசிரியர்

தமிழ் உயராய்வு மையம்

ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரி

தூத்துக்குடி.